
District Branch Library,
Kasthurba Hospital,
Madras



இரா. நாகசாமி

# யாவரும் கேளிர்!

...ட்டம்

3478



இரா. நாகசாமி

**கோ**வை மாவட்டம், ஈரோடு தாலுகா, ஊஞ்சலூரில் 1930-ல் பிறந்தவர். மயிலை விவேகானந்தர் கல்லூரியில் படித்த இவர் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகிய தத்துவங்களையும், காப்பியம், அலங்காரம், தொனி ஆகிய சாஹித்யத் துறையையும் சிறப்புப் பாடமாகக் கொண்டு சம்ஸ்கிருத மொழியில் எம். ஏ. பட்டம் பெற்றவர். டெல்லி மாநகரில் மத்திய தொல்பொருள் ஆய்வுப் பள்ளியில் அகழ்வாய்வு, பண்டைய சின்னங்களைப் பழுது பார்த்தல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார். 1963-ல் பிரிட்டிஷ் கவுன்சிலின் அழைப்பை ஏற்று இங்கிலாந்து சென்று அங்குத் தொல்லியல் முறைகளை நேரில் கண்டறிந்தவர். பண்டைய கல்வெட்டுகளைப் படிப்பதிலும் வரலாற்றை எழுதுவதிலும் சிறப்புப் பெற்றுள்ள இவரது மாமல்லபுர ஆராய்ச்சி உலகப்புகழ் பெற்றுள்ளது.

ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்களைப் படைத்துள்ள இவர் நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவரது கட்டுரைகளில் சில அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய நாட்டுப் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன. டாக்டர் குரோ (Dr. Gros) என்னும் பிரஞ்சுப் பேராசிரியரும் இவரும் சேர்ந்து உத்தர மேரூரைப் பற்றிச் செய்த ஆராய்ச்சி பிரஞ்சு மொழியில் நூலாக வெளிவந்துள்ளது.

இதுகாறும் நடைபெற்றுள்ள மூன்று உலகத் தமிழ் மாநாடுகளிலும் பங்குகொண்டு ஆராய்ச்சியுரைகள் வழங்கியுள்ளார். இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, கிரீஸ், மலேசியா, சிங்கப்பூர், ஆகிய வெளிநாடுகளில் பயணம் செய்துள்ளார்.

# யாவரும்
# கேளிர்

இரா. நாகசாமி

வாசகர் வட்டம்
சென்னை - 17

வாசகர் வட்டப் பிரசுரம் - 35

இப் பதிப்பு "வாசகர் வட்டம்" — சிறந்த தமிழ்ப் புத்தகச் சங்கத்தின் அங்கத்தினர்களுக்கென — அதன் பதிப்பாளரான "புக்வென்சர்" (bookventure) நிறுவனத்தினரால் நெ. 14, தணிகாசலம் செட்டி ரோடு, தியாகராய நகர், சென்னை-17 — என்ற முகவரியில் வெளியிடப்பட்டது.

அச்சிட்டவர்கள் :
யுனைட்டெட் பிரின்டர்ஸ்
3/27, பிராட்வே, சென்னை-1

இந்நூல் அரசின் வெளியீடு அல்ல
அரசால் பணிக்கப்பட்டதும் அல்ல

©
உரிமைகள் :
ஆசிரியருடையவை

தனிப் பிரதி விலை : ரூ. 7-50

ஜூன், 1973

# அணிந்துரை

திருவாளர் இரா. நாகசாமி தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வல்லவர். வரலாற்றுத் துறையில் நேர்மையுடன் திறமையாக அரும்பணி ஆற்றிவருகின்றவர். தமிழக வரலாற்றுக்கு அடிப்படையாக உள்ள கல்வெட்டு, பட்டயம், சிற்பம், படிமம், கட்டடம், ஓவியம், இலக்கியம் முதலான கலைகளில் கருத்தூன்றி ஆய்ந்து பல அரிய சான்றுகளைப் புலப்படுமாறு வெளிப்படுத்தி வருகின்றவர்.

இத்தகைய தகுதிச் சிறப்புக்கள் மிக்க அவர் எழுதிய இந்நூலுக்கு "யாவரும் கேளிர்" என்று பெயர் சூட்டியுள்ளார். பழம்பொருள் ஆய்வுத் துறையினர் ஆதலால் நூற்பெயருக்கும் பழம் நூல்களை ஆய்ந்து பழமையான, புறநானூற்றில், கணியன் பூங்குன்றனார் அருளிய அருமைப் பாட்டொன்றில் காணப்பெறும் "யாவரும் கேளிர்" என்ற ஒரு சொற்றொடரைத் தேர்ந்து கொண்டது சாலப் பொருத்தமேயாகும்.

இந்நூலுள் பண்டைத் தமிழகத்துப் பல குடிமக்களும் நமக்குக் காட்சி தருகின்றனர். அவர்களின் நோக்கும், போக்கும் நுண்ணிதின் ஆய்ந்து புலப்படுத்தப் பெற்றுள்ளன. இவற்றால், பண்டைத் தமிழ் மக்களின் நாகரிகமும், பண்பாடும் தெள்ளிதின் விளங்குகின்றன.

இந்நூல் பல கட்டுரைகளாகப் பகுத்துத் தொகுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கட்டுரைக்கும் பழம்நூல்களில் கண்ட சொற்றொடர்களே தலைப்பாக அமைக்கப் பெற்றிருப்பது இந்நூலின் மற்றொரு சிறப்பு.

மன்னர்களின் வாழ்வும், பணியும், கொற்ற மும் மலர்கின்ற அழகை அருமையாக விளக்கு கிருர்; வணிகர் வாழ்வும் பணியும் சிறக்க ஒளி விடச்செய்திருக்கிருர்; அந்தணர் அறநெறி வாழ்வும் பணியும் மணக்கச் செய்கின்ருர்; உணவளித்து உயிர்காக்கும் உழவோர் அருமையும் பெருமையும் செவ்விதின் மிளிர வைக்கிருர்; மற்றும் பல தொழில் இயற்றுவோருள் தச்சர் சீர்த்தி தண்ணெளி பரப்பச் செய்கிருர். இறுதியில் தேவரடியார் என்னும் தெய்வப் பணிப் பெண்டிரின் சீர்த்தியைச் செம்மையாகப் புலப் படுத்துகின்ருர்.

இந்த முறையில் இது ஒரு புதிய முயற்சி. பயன் தரும் நல்ல முயற்சி. எத்தனையோ தவருன, பிழையான, கருத்துக்களை அகற்றி மெய்ந்நிலையை உணர்த்தக் கூடிய நல்ல முயற்சி. இம் முயற்சியில் திரு. நாகசாமி கணிசமான அளவு வெற்றி பெற்றுவிட்டார்.

எனவே, இந்த முறையில் இன்னும் பலப்பல தலைப்புக்களில், தமிழக வரலாற்றை மின்னிடச் செய்யும் கட்டுரைகளை எழுதி இதன் இரண்டாம், மூன்ரும், நான்காம் பகுதிகளாக வெளியிட வேண்டுமென ஆசிரியரைக் கேட்டுக் கொள்ளு கிறேன்-

இந்த நல்ல நூலுக்குத் தமிழகம் நல்வரவு கூறி, ஆதரவு தந்து, ஆசிரியர்க்குப் பேருக்கம் அளிக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐய மில்லை. வாழ்க; வளர்க இந்தப் பயனுள்ள பணி என மனமார, வாய் மணக்க வாழ்த்து கிறேன்.

அன்பன்,

கம்பன் அடிப்பொடி சா. கணேசன்.

# நூன்முகம்

பழந்தமிழர் சமுதாயத்தைப் பற்றி பல அடிப் படைச் சான்றுகளைத் திரட்ட முற்படும்போது எவ்வளவோ அரிய செய்திகள் நமக்குக் கிடைக் கின்றன. அவற்றைத் தொகுத்து எழுதும்போது எல்லையில்லா இன்பம் பெறுகிறோம். தமிழ் மக் களின் வரலாற்றில் ஈடுபாடுகொண்ட அனைவரும் அவ்வின்பம் பெறுதல் வேண்டும் என்ற நோக்கே இந்நூலின் தோற்றத்துக்குக் காரணம். அதை மனதில் கொண்டுதான் திரு. கிருஷ்ணமூர்த்தி தம்பதிகள் தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றை எழுத என்னைப் பேரன்போடு ஊக்கு வித்தபோது அதை உவகை கலந்த நன்றியுடன் ஏற்றுக்கொண்டேன். இந்நூல் உருவாக அவர் களின் அன்பே தொடக்கமாக அமைகிறது. இந் நூலின் தொடக்கம் முதல் இறுதிவரை என் முயற்சியில் பெரும் பங்கு கொண்டு என்னை இதில் ஈடுபடுத்திய பண்பாளர் திரு. சிட்டி அவர்களாகும். அவருக்கு என் உளமார்ந்த நன்றிகள்.

இந்நூல் எழுத என்னாலும் இயன்றது என்றால் எனக்கு முன் எவ்வளவோ சான்றோர் அரும்பாடுபட்டு எழுதி வைத்துள்ள நூல்களே அதற்கு உதவின. அச்சான்றோர்கள் அனைவரை யும் மனதால் வணங்குகின்றேன். இந்நூலில் உள்ள பல கருத்துக்கள் முன்னோர் கூறியவை தான். பல நூல்களில் வெளியான கருத்துக்களில்

சிலவற்றை விரிவு அஞ்சி விட்டும் உள்ளேன். சில கருத்துக்கள் என் மனத்து உதித்தவை. இவற்றையெல்லாம் ஓரளவு தொகுத்து இந் நூலாக்கியுள்ளேன். எழுதி முடித்த பின் தான் இன்னும் எழுதவேண்டியவை எவ்வளவு உள் ளன என்பது தெரிந்தது. ஒரு மாபெரும் சமு தாய வரலாற்றை ஒரு சிறு நூலில் அடக்கும் திறன் யாருக்கும் இல்லை என்பதற்கு இந்நூல் சான்று.

தமிழ் மக்களின் பேரன்பையும், பெரு மதிப்பையும் பெற்ற காரைக்குடி கம்பன் அடிப் பொடி திரு. சா. கணேசன் அவர்கள் இந்நூலுக்கு அன்போடு அணிந்துரை நல்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி. அவ்வணிந் துரையில் இதுபோன்று நான்கு பகுதிகள் வரவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆன்றோர் ஆசியும் ஆண்டவன் அருளும் பொய்ப்பதில்லை என்பர் பெரியோர்.

இந்நூலை யான் எழுதும்போது எழுத உதவிய திருமதி சத்யவதி, திரு. சிவசங்கரன், செல்வி பானுமதி ஆகியவர்களுக்கும் அச்சுத் திருத்துவதில் உதவிய திரு. நடன காசிநாதன் அவர்களுக்கும் என் நன்றி.

இந்நூலில் உள்ள குறை களைந்து குணம் கொள்ள வேண்டுகிறேன்.

இரா. நாகசாமி.

## பொருளடக்கம்


பக்கம்

1. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் ... 1
2. கொற்றம் எய்திய பெரியோர் மருக ... 25
3. அரசெனப்படுவது நினதே பெரும ... 54
4. அறவோர் புகழ்ந்த வாய்க்கோலன்னே. 66
5. மன்னுக பெரும நீ வாழும் நாளே ... 83
6. இவளொடு ஆயிரம் வெள்ளம் வாழிய பலவே ... ... ... 92
7. வேளிருள் வேளே விறற் போரண்ணல். 111
8. அம்பொடு வேல் நுழை வழியெல்லாம் தான் நிற்குமன்னே ... ... 127
9. உணவெனப்படுவது நிலத்தொடு நீரே. 144
10. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே ... ... ... 161
11. வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை. 179
12. அந்தணர் என்னும் அறவோர் பலரே ... 197
13. எம்முளும் உளன் வைகல் எண்தேர் செய்யும் தச்சன் ... ... 230
14. அணியரங்கம் ஆடுதுமோ தோழீ ... 253

# 1

# மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பது முதுமொழி. யானுயிர் என்பதறிகை வேல் மிகு தானை வேந்தற்குக் கடனே (புறம். 186). நாட்டின் வாழ்விற்கு இன்றியமையாத பல்வேறு அங்கங்களை சீராக இயங்க வைக்கும் உயிர்ச்சக்தியே அரசு என்று தமிழ் மக்கள் தொன்றுதொட்டே கருதினர். ஆதலின் தனி மனிதனைக் காட்டிலும் சிறப்பான சக்தி பெற்றவனாக தெய்வீகச் சக்தி நிறைந்தவனாக மன்னனை மக்கள் கருதினர். சங்க காலத்திலிருந்தே மன்னன் தெய்வத்தின் அம்சமாக கருதப் பெற்றான். சேரமன்னனை 'செஞ்சடை வானவன் அருளினில் விளங்கி வஞ்சி தோன்றிய வானவ' என சிலப்பதிகாரம் கூறுகிறது. பல்லவர்கள் திருமாலின் அம்சாவதாரம் என்று கசாக்குடி செப்பேடுகள் கூறுகின்றன. நேரில் விஷ்ணுவே தோன்றியதுபோல் நந்திவர்மன் பிறந்தான், என்பன போன்ற கருத்துகள் பல கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் காணப்படுகின்

றன. ஆதலின் அரசர் குலம் பரம்பொருளிடமிருந்து தோன்றியது என்றும், திருமாலிடமிருந்தும் நான்முக னிடமிருந்தும் உதித்தது என்றும் கல்வெட்டுகள் கூறு கின்றன.

**வம்சம் :**

மன்னர்கள் தங்களை சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றோ சந்திர குலத்தில் பிறந்தவர் என்றோ கூறிக்கொள் வது மரபு. சோழர்கள் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களது செப்பேடுகளும் கல்வெட்டுகளும் கூறும். தங்கள் குலமுதல் பரிதி என்று வீரராஜேந்திர னின் கல்வெட்டும், பாண்டியர் சந்திர குலத்தவர் என்று அவர்களது செப்பேடுகளும் ('சந்திரனது வழித்தோன்றி' என்று சிவகாசி செப்பேடுகளும்) கூறும். பாண்டிய மன்னன் பராங்குசமாறனை, 'மதிமரபாம் திருமரபிற் திகழ் மாறன்' என்றும் 'திங்கட்டிருக்குலத்துக் கொற்ற வன்' என்றும் பாண்டிக்கோவை குறிக்கும். ஆய்குல மன்னர்கள் தங்களை சந்திர குலத்தவர்கள் என்று கூறிக் கொண்டனர். கருநந்தடக்கன் என்னும் ஆய்குல மன்ன னின் பாலியத்து செப்பேடுகள், இவர்கள் சந்திர குலத் தைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் தோன்றியதால் சந்திரனின் களங்கம் நீங்கியது என்றும் கூறுகின்றன. இந்திய நாட்டில் பல அரசர்கள் தாங்கள் சந்திர குலத் தைச் சேர்ந்தவர் என்றும், சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறிக்கொண்டனர்.

**கோத்திரம் :**

இவர்களது கோத்திரம் தவத்திற் சிறந்த மக ரிஷிகளிடமிருந்து தோன்றியது என்றும் கொள்வர். சோழமன்னர்கள் காச்யப கோத்திரத்தைச் சேர்ந்தவர் கள் என்று அவர்களது செப்பேடுகளால் அறியலாம். காச்யபர், அத்ரி என்ற இரண்டு ரிஷிகளின் பெயர்கள்

அவர்களது குடி முதல்வர்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. பாண்டியர்கள் ஆத்ரேய கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களது செப்பேடுகள் கூறுகின்றன. பல்லவர்கள் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். பல்லவர்களது தொன்மையான செப்பேடுகள் மிகவும் சுருக்கமானவை. அச்செப்பேடுகளில் 'பாரத்வாஜ சகோத்ராணும்' என்று குறிக்கப்பட்டுள்ளது. சற்று பிற்பட்ட செப்பேடுகளில் இது விரித்து ஆங்கிரஸ், பிருஹஸ்பதி, பாரத்வாஜர் ஆகிய ரிஷிகளின் கோத்திரத்தைச் சார்ந்தவர் எனக் குறிக்கப் பெறுகிறது. மேலைக்கங்கர்கள் கன்வ மக ரிஷியின் (கான்வாயன) கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். பழுவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பழுவேட்டரையர் ஒருவர் மகரிஷி வம்சத்து க்ஷத்திரியர் எனப்படுகிறார். இது போன்று ஒவ்வொரு மன்னரும் தாங்கள் ஒரு தவமுனிவரின் வழிவந்தோர் என்று கூறிக்கொள்வது ஆரியர்களின் வழக்கத்தைப் பின்பற்றியது என்று கொள்ளலாம். சங்க காலத்தில் மன்னர்கள் ஒரு தனிப்பட்ட ரிஷியின் வழிவந்தவர் என்று கூறிக்கொண்டதாகச் சான்றுகள் இல்லை. இது கி. பி. 2-ம் நூற்றுண்டுக்குப் பிறகு அதிகரித்தது என்றுதான் கொள்ளவேண்டும்.

## புராண வீரர்கள் :

மக்கள் புராண இதிஹாசங்களில் குறிக்கப்பட்டுள்ள அருஞ்செயல் செய்த வீரர்கள் சிலரும் தன் குல முன்னோர்கள் எனத்தலைப்பட்டனர். பதினெண்குடி வேளிர்களும் ஒரு ரிஷியின் யாகத்தீயில் இருந்து தோன்றியவர்கள் எனக் கூறிக் கொள்வது இங்கு நோக்கத் தக்கது.

சோழ மன்னர்கள் திலீபன், அரிச்சந்திரன், மாந்தாதா, முசுகுந்தன், காகுத்தன், பகீரதன், தசரதர், இராமர் முதலியோர் தங்கள் குலத்தோர் என்று கூறிக்

கொள்வதை கன்யாகுமரிக் கல்வெட்டும் திருவாலங்காடு செப்பேடும், கலிங்கத்துப் பரணியும் மூவர் உலாக்களும், கூறுவதைக் காணலாம். 'மல்லன் மரபை ரகுவின் மர பென்று சொல்ல உலகளித்த தொல்லையோன்' என்று ஒரு சோழனை இராஜராஜன் உலா குறிக்கிறது. புரூரவஸ், நகுஷன் முதலியோர் தங்கள் குலத்தவர் எனப் பாண்டியர் கூறிக் கொள்வதை வேள்விக்குடி செப்பேட்டில் காணலாம். துரோணர் அச்வத்தாமா முதலியோர் தங்கள் குலத்தவர் என்று பல்லவர்கள் குறிக்கின்றனர். யாதவர் தாங்கள் விருஷ்ணி குலத்தவர் என்று கூறுகின்றனர். பாணர்கள் தாங்கள் மகாபலியின் வழிவந்தவர்கள் எனக் கூறிக்கொள்வதையும் காணலாம். நாட்டில் பல்வேறு கதைகளும் சிறப்படைந்து அவற்றில் வரும் வீரர்களையும் தங்கள் குலத்தவர்களாகக் கூறிப் பெருமையடையும் நிலையையே இது குறிக்கிறது. கி. பி. 5–ம் நூற்றாண்டிலிருந்து இம் முறை அதிகரித்து வருவது, இக் கதைகள் மக்களிடத்தே பரவி வருவதற்கு எடுத்துக் காட்டு என்றே கொள்ளலாம்.

### செயற்கரிய செய்தோர்:

சேரர், சோழர், பாண்டியர் முதலியோர் தங்கள் முன்னோர்களில் சிலர் செயற்கரிய செயல்களைச் செய்ததாகக் கூறுகின்றனர். அவற்றில் பல வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுறுத்துகின்றன. சில கற்பனையாகவும் உள்ளன. கற்பனையாக உள்ளவையும், ஏதோ ஒரு வரலாற்று நிகழ்ச்சியை முதலில் உவமை போல் மிகைபடக் கூற, அதையே பின்னோர் உண்மை என எடுத்து கொண்டுள்ளார்கள் என்று ஊகிக்க இடமுள்ளது. இமயத்தில் சின்னம் பொறித்தது போன்றவை மூவேந்தருக்கும் பொதுவானவை. பாரதப் போரில் பங்கு கொண்டதாக மூவேந்தர் குடிகளும் கூறிக் கொள்கின்றனர். உதியன் பாரதப்போரில் பெருஞ்சோறளித்தான் என்று சங்க

காலத்திலேயே குறிக்கப்பட்டுள்ளது. ஆதலின் அவன் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் எனவே அழைக்கப் பெற்ருன். பாண்டிய மன்னரில் ஒருவன் பாரதப் போரில் யானைப்படை ஓட்டியதாக குறிக்கப்படுகிருன். பாரதப்போரில் தருமனுக்கு உதவியதாக ஒரு சோழ மன்னன் போற்றப்படுகிருன்.

சில செயல்கள் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் பொதுவாக உள்ளன. இந்திரனின் ஆசனத்தில் சமமாக அமர்ந்ததாக சோழன் ஒருவனும் பாண்டியன் ஒருவனும் புகழப்படுகின்றனர். பௌத்த ஜாதகக் கதைகளில் இந்திரனுடன் சமாசனம் பெற்றதாக ஒரு கதை உள்ளது. இதிலிருந்து இக் கதை மிகவும் தொன்மை யானது என்று தெரிகிறது. அதே போன்று இரு மன்னர் களும் கடல் கடந்து அமுது கொண்டதாக கூறிக் கொள் கின்றனர். பூதங்களை ஏவல் கொண்டதாக பாண்டி யரும், பூதங்களில் ஒன்ருன காற்றை ஏவல் கொண்ட தாக சோழரும் போற்றப்படுகின்றனர். கரிகாலனின் முன்ஞேர்களில் ஒருவர் கடலில் நாவாய் ஓட்டுவதற்காக காற்றை ஏவல் கொண்டதாக சங்க காலத்திலேயே வரலாறு இருந்தது (புறம் 66).

இதேபோன்று பாண்டியரும் சேரரும் ஒரே செயல் செய்ததாக கூறிக்கொள்கிருர்கள். பாண்டியன் ஒருவன் வேல் எரிந்து கடலைப் பின் ஓட்டியதாகச் செப்பேடுகள் குறிக்கின்றன. குட்டுவன் என்ற சேரமன்னனும் இதே செயல் செய்து கடல் பிறக்கோட்டிய குட்டுவன் என்று பெயர் பெற்ருன்.

சோழமன்னன் ஒருவன் பிலமதினில் புகுந்து நாக கன்னியை மணந்தான் என்றும் பல்லவமன்னன் ஒருவன் நாககன்னியை மணந்து அரசு பெற்ருன் என்றும் குறிக் கப்படுகின்றனர்.

## சிறப்புக் கதைகள் :

சில கதைகள் ஒவ்வொரு குலத்திற்கும் தனிச் சிறப்பு அளிப்பவையாகவும் உள்ளன. சோழர் குலத்தில் பல கதைகள் உள்ளன. இவற்றில் மிகச் சிறப்புடயவை மனு நீதி சோழனுடைய கதையும், சிபிச் சக்கரவர்த்தியின் கதையுமாம். இவ்விரண்டும் சங்க காலத்திலிருந்தே சிறப்பாக இருந்தன. சிபிச் சக்கரவர்த்தியின் கதை பௌத்த ஜாதகக் கதைகளிலும் இடம் பெற்றுள்ளது. மாந்தாதா என்ற மன்னன் ஒரே துறையில் புலியும் மானும் நீருண்ணும்படி பகை நீக்கி ஆண்டான் என அறிகிறோம். இந்திரனை வாகனமாக்கினன் என்றும், இந்திரனைத் தன் கொடியில் புலியாக்கினன் என்றும், இந்திர விமானம் ஊர்ந்தான் என்றும் சில சோழர் குறிக்கப்படுகின்றனர். (பாண்டியர் இந்திரன் முடியை வீழ்த்தினர் என்றும், இந்திரனின் குலத்தைக் கைப்பற்றினர் என்றும் குறிக்கப்பெறுகின்றனர்). சோழர் கதைகளில், போகபுரியாகிய உத்தரகுருவை ஒரு சோழன் ஆண்டதாகவும் மேல்கடல் நீரை கீழ்கடலில் விட்டதாக ஒருவரும் குறிக்கப்படுகின்றனர். ஒரு மன்னன் கூற்றுக்கு வழக்குரைத்ததாக குறிப்புள்ளது.

## வரலாற்றுக் கதைகள் :

சில வரலாற்றுச் செய்திகளும் கதைகளில் இடம் பெறுகின்றன. ஒரு மன்னன் குடகுமலையை அறுத்து பொன்னியைக் கொணர்ந்தான் எனக் குறிக்கப் பெறுகிறன். இவனது அருஞ்செயலாலே தமிழகம் பொன்னி வள நாடாக மாறியது எனலாம். அதே போன்று ஒரு மன்னன் முதுமக்கட்சாடி வகுத்ததாக குறிப்பதும் வரலாற்று நிகழ்ச்சியாகவே படுகிறது. பொன்னிக்கு கரை கண்ட சோழன் என்பது வரலாற்று நிகழ்ச்சியே யன்றோ! இதே போன்று பாண்டியர்கள் வழியில்

இந்திரனது ஆரம் கொண்டது மிகவும் சிறப்பாகக் கூறப் படுகிறது. அவர்களில் ஒருவன் இந்திரனின் முடிமேல் வளையை எறிந்ததாகக் குறிப்பு உண்டு. பாண்டியர்களின் முன்னோர்கள் செய்த சிறந்த செயல்கள், மாபாரதம் தமிழ் படுத்தியதும் மதுரையில் சங்கம் வைத்ததுமாகும். "மாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்றும் செப்பேடு கூறுகிறது. இத்துடன் பாண்டியர் அகத்தியருடன் தமிழாய்ந்ததாகக் கூறுவதி லிருந்து இவர்களது தமிழ்த்தொண்டு நன்கு தெளி வாகிறது. சோழர்கள் நீர் வளம் பெருக்க வகைசெய் தனர். பாண்டியர் கல்விச் செல்வத்துக்கு வழி வகுத் தனர். அதியமான் குலத்தைச் சேர்ந்த முன்னோன் ஒருவன் தேவருலகத்திலிருந்து கரும்புப் பயிரைக் கொணர்ந்ததாகக் கூறப்படுகிறான். இதிலிருந்து முதன் முதலில் கரும்புப் பயிரை தமிழகத்தில் பயிர் செய்தவர் களே அதியமான் குலத்தோர் என்று ஊகிக்க இட மிருக்கிறது.

## மக்கட் பேறு:

குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டு இன் புறாதார் எதை எதையோ இனிது என்பர் என்பது முது மொழி. குழந்தைகள் அளிக்கும் இயற்கை இன்பத் துக்கு ஈடு இணையேதும் இல்லை என்று தமிழ் மக்கள் கருதினர். அவ்வின்பத்தைத் துய்ப்பதற்கே மக்களை விரும்பிப் பெற்றனர். மக்கட் பேற்றை மன்னர்கள் எவ்வளவு சிறப்பாகப் போற்றினர் என்பதற்கு பாண் டியன் அறிவுடை நம்பியின் பாட்டு ஒரு சிறந்த எடுத் துக் காட்டாகும். பெரும் செல்வராயினும் குறு குறு நடந்து, சிறுகை நீட்டி, இட்டும் தொட்டும், கவ்வியும், தன் உடலிலே அடிசிலை விதிர்க்கும் மயக்குறு மக்களை இல்லாதார் வாழ்க்கை பயனற்றது என்று அமைகிறது அப்பாட்டு. தங்கள் குலம் தொன்மைச் சிறப்பு வாய்ந்

தது. ஆதலின் தமக்குப் பின்னர் நாடாள, காதல் குல மைந்தன் தேவை என மன்னர்கள் வேண்டிப் பெற்றனர். தங்கள் குலம் தழைக்கவந்த செல்வர்கள் எனச் சீரும் சிறப்புமாகப் போற்றினர். தந்திவர்மன் என்ற பல்லவ மன்னன் பல்லவகுல திலகன் எனக் கூறப்படுகிறான்.

இலவந்திகைத் துஞ்சிய நன்மாறனை பேரிசாத்தன் "மன்ன பவழம் போன்ற வாயையும், இனிமையும் அணிந்த உன் புதல்வரைப் புகழ்கின்றேன். இவர்கள் உன்போல்வார்களாகுக. இவருக்கு பிறக்கும் குழந்தை களைக் கண்டு நீ அடையும் இன்பத்தை நானும் பெறு வேனாக" என மக்கட்பேற்றின் பெருமையை பாடு கிறார். காவற்கமைந்த அரசுதுறை போகிய வீறுசால் புதல்வனைப் பெற்றனை எனப் பதிற்று பத்து குறிக்கும் (பதி. பத். 74. 20).

தங்கள் முன்னோர்களின் கடனிறுப்பதற்கும் மக்கள் தேவை எனத் தமிழ் மன்னர் சங்க காலம் தொட்டே எண்ணினர். செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடிய கபிலர் இளம்புதல்வர்களைப் பெற்றதால் முதியோர் களின் தொல்கடனிறுத்தாய் என "வணங்கா ஆண்மை இளந்துணைப் புதல்வரின் முதியர் பேணி தொல்கட னிறுத்த வெல்போரண்ணல் (பதி. பத். 70. 20)" எனப் பாடுகிறார்.

குழந்தையில்லாத மன்னர் சிறப்பாக வேள்வி வேட்டு அதன் பயனாய் மக்களைப் பெற்றனர் என்றும் கருதினர்.

**தாய் வீட்டில் :**

அரசகுலப் பெண்கள் குழந்தைப் பேற்றுக்காகத் தன் தாயிருக்கும் இடம் வந்தனர். குலோத்துங்க சோழ னின் தாய் அம்மங்காதேவி இராஜேந்திர சோழ

னுடைய மகள். கீழைச்சாளுக்கிய மன்னன் இராஜ ராஜநரேந்திரனுக்கு மணம் செய்து கொடுக்கப் பட்டவள். அவள் குலோத்துங்கனைப் பெற்றபோது கங்கைகொண்ட சோழபுரத்தில் தன் தாயுடன் இருந் தாள் எனக் கலிங்கத்துப் பரணியிலிருந்து அறியலாம். அப்போது அவள் கணவன்வழி வந்தோரும் அங்கிருந் தனர். பிறந்த குழந்தையை குழந்தையின் பாட்டி, கங்கைகொண்ட சோழனின் தேவி மடியில் எடுத்து வைத்துக் கொண்டு, இவன் எங்கள் திங்கள் குலம் (சோழர்) செழிக்கவந்த செம்மல் என்றும், இவன் தந்தை யின் குலமாகிய சூரிய குலம் விளங்கத் தோன்றிய வள்ளல் என்றும், மாயக் கண்ணனே அவதரித்துள்ளான் என்றும் கூறி கொஞ்சி மகிழ்ந்ததாக ஜயங்கொண்டார் கூறுகிறார். குழந்தையின் பிறப்பை அவதாரம் என்றே ஜயங் கொண்டார் குறிப்பிடுவார். அரசர்களின் குழந்தை கள் தெய்வ அருள் நிரம்பியவை என்ற கருத்தை இது எடுத்துரைப்பதாயுள்ளது.

### தாயின் திருவயிறு விளங்கட்டும்:

சிறந்த குழந்தையைப் பெற்றெடுத்த தாயின் திரு வயிறு விளங்கட்டும் என்று பாடுவது தமிழ் மரபு. இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனை பாடிய குமட்டூர் கண்ணனார் அவன் தாய் வயிறு குறைவின்றி விளங்குவாளாக எனப் புகழ்கிறார். ‘வயிறு மாசிலீயள் அவனீன்ற தாயே’ (பதி. பத். 20-21). இம்மரபை கி. பி. 10ம் நூற்றாண்டிலும் காண்கிறோம். உத்தம சோழரின் தாயாகிய செம்பியன் மாதேவியாரை “உத்தமசோழரை திருவயிறு வாய்த்த பிராட்டியார் செம்பியன் மாதேவியார்’ என்று பல கல் வெட்டுகள் கூறும். குலோத்துங்கனை ‘அருள்திருவின் திருவயிறும் ஆல் இலையில் அவதரித்தான்’ என ஜயங் கொண்டார் பாடுகிறார்.

இவ்வாறு பிறந்த குழந்தைகள் இருவழிகளிலும் சிறந்த தொல் குடியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிப் பெருமை அடைந்தனர். தந்திவர்மன் பல்லவ மன்னன் என்பவன் தன்னை உபயகுல பரிசுத்தன் எனக்கூறிக் கொள்கிறான். இருவழியும் நன்றென்று சங்ககாலத்திலேயே உலகோர் உரைப்பது வழக்கம் என்பது 'இருவர் சுட்டிய பல்வேறு தொல்குடி' என்ற திருமுருகாற்றுப் படை அடிகளால் அறியலாம்.

நக்ஷத்திரம் கணித்தல் :

பிறந்த குழந்தையின் நக்ஷத்திரத்தை கணித்து வைத்தனர். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடிக்கிழார் "கொடித்தேர் செழிய நீ பிறந்த நாள் மீன் நிலைத்து நிற்பதாக" எனப்பாடுகிறார் (நின்று நிலை இய நின் நாள் மீன்). பல அரசர்களின் பிறந்த நக்ஷத்திரங்கள் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன. அந்நாட்களில் சிறப்பாக தெய்வங்களுக்கு வழிபாடு நடத்தினர். பிறந்த நாளன்று சிறந்த விழாக் கொண்டாடினர் என்றும் அறியலாம். நந்திவர்மன் ரோஹிணி நக்ஷத்திரத்தில் பிறந்தான் என அறிவோம். இராஜராஜன் சதயம் என்ற நக்ஷத்திரத்தில் பிறந்தவன். அவன் பிறந்த ஐப்பசித் திங்கள் சதயநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடினான். தான் வெற்றிகண்ட சேரர்நாட்டில் (உதியர் மண்டலத்தில்) சதயவிழாவை ஏற்படுத்தினான். இராஜேந்திரன் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிறந்தான். முதல் குலோத்துங்கன் திருப்புனர்பூசத்துள் பிறந்தான் (659/17). அரசர் குழந்தைகள் நல்லநாளில், நல்ல மீனில் பிறந்தால் புகழ் எய்துவர் என்று கருதினர். கோச்செங்கட் சோழனை அவன் தாய் மகவு பெறும் வேளையில், காலம் உணர் பழையவர்கள் இம்மகன் ஒரு நாழிகை கழித்துப் பிறப்பின் இம்மூவுலகும் ஆள்வான் எனக் கூறினர். ஆதலின் தாய் தன் உடல் நோயையும் கருதாது ஒரு நாழிகை

கழித்துப் பெற்றெடுத்தாள். ஆதலின் பிள்ளை பிறந்ததும் இறந்தாள் என சேக்கிழார் கூறுகிருர்.

கற்புடைய தேவி பெற்றெடுத்த செல்வர் ஆதலின் தாயின் பெயர் கூறியே மகன் பெயரைக் குறிப்பதும் பண்டைய வழக்கமா யிருந்தது. திருவிற்சேரலாதற்கு வேள்ஆவிக்கோமான் பதுமன்தேவி யீன்ற மகன் நார் முடிச்சேரல் எனவும் போன்றவும் வழங்கியுள்ளதை பதிற் றுப்பத்தில் காணலாம். தேர்மாறனுக்கு மழவநாட்டு பெண்ணிடம் பராந்தக நெடுஞ்சடையன் தோன்றினுன் என்று வேள்விக்குடி செப்பேடு கூறுகிறது. பரர்ந்தக வீர நாராயணன், ஸ்ரீகண்ட சோழரின் மகளான அக்களநிம் மடியிடம் பிறந்தவன், என்று குறிக்கப் பெறுகிருன். பல்லவ மன்னனுகிய தந்திவர்மனுக்கு கதம்பகுலப் பெண் ணுகிய அக்களநிம்மடி என்பாளிடம் தெள்ளாறெறிந்த நந்தி பிறந்தான். அத் தெள்ளாறெறிந்த நந்திக்கு ராஷ்டிர குலத்தில்கூட பிறந்த சங்கா என்னும் மெல்லியலாளிடம் நிருபதொங்கன் பிறந்தான் என்று செப்பேடுகள் குறிப் பதும் இம் மரபை ஒட்டியே.

பெயரிடல்:

குழந்தை பிறந்ததையும், அதை அருகில் இருந்தோர் கண்டதையும் சிம்மவர்மன் என்ற பல்லவமன்னனின் கல்வெட்டு கூறுகிறது. அச்வத்தாமா, மதனி என்ற பெண்ணைக் கானகத்தே காதலித்தான். அவனுக்கு உரிய காலத்திலே பிறந்த குழந்தையை தளிர்களால் ஆகிய விரிப்பில் விட்டனர். அக்குழந்தையைக் காணவந்த தந்தையாகிய அச்வத்தாமா பல்லவ விரிப்பிலே விளங்கும் குழந்தையைக் கண்டான். ஆதலின் அதை பல்லவன் என்று பெயரிட்டு அழைத்தான் என அக்கல்வெட்டுக் கூறுகிறது. அக்கல்வெட்டு ஆந்திரதேசத்தில் அமராவதி என்ற இடத்தில் கிடைத்தது. இதிலிருந்து தந்தை குழந் தைகக்கு பெயரிடுதல் மரபு என அறியலாம்.

## அரச குழந்தைகளின் பெயர்:

அரச குழந்தைகளின் பெயர் ஆற்றலையும், வலிமையையும், இனிமையையும், காவல் தன்மையையும் குறிக்கும் வகையில் இருக்கவேண்டும் என்பது மரபு. கரிகாலன், செங்கண்ணான், நெடுஞ்செழியன், இரும்பொறை முதலிய சங்ககால அரசர்களின் பெயர்கள் இவற்றைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளதைக் காணலாம். இராஜராஜ சோழனுக்கு இயற்பெயர் அருள்மொழி என்னும் இனிய பெயராகும்.

## குடிப் பெயர் :

மன்னர்கள் தங்கள் குடிப்பெயரையும் இணைத்து பெயரிட்டனர் என்று ஊகிக்க இடமிருக்கிறது. கிள்ளி சென்னி, வளவன் ஆகிய பெயர்களை சோழர்களும், இரும்பொறை, குட்டுவன், ஆதன் ஆகிய பெயர்களைச் சேரர்களும் செழியன், வழுதி ஆகிய பெயர்களைப் பாண்டியர்களும் இணைத்து சங்ககாலத்தில் பெயர் சூட்டினர். சங்ககாலத்தில் மன்னர்கள் குழந்தைகளாயிருந்தபோது ஒரு பெயரும், முடிசூட்டிக்கொண்டவுடன் ஒரு பட்டப் பெயரும் சூட்டிக்கொண்டார்களா என்பது தெரியவில்லை. ஆனால் கி. பி. 3, 4 நூற்றாண்டுகளில் பல்லவப் பேரரசு நிலை நிறுத்தப்பட்ட பிறகு சிறுவயதில் ஒரு பெயரும், முடி சூடும்போது ஒரு பட்டப்பெயரும் கொண்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. நந்திவர்மன் என 'அபிஷேக நாமம்' இடப்பட்டான் என காஞ்சி வைகுந்தபெருமாள் கோயில் கல்வெட்டு கூறுகிறது. மதுராந்தகன் என்ற இயற்பெயர் பெற்றிருந்தவனே பின்னர் முதல் இராஜேந்திர சோழன் என்னும் பெயர்பெற்ற பேரரசன். இராஜேந்திரன் என்னும் இயற்பெயர் பெற்றிருந்தவனே பின்னர் புகழ்பெற்ற முதல் குலோத்துங்கனுகும். இரண்டாம் இராஜேந்திர சோழன் தனக்கு பின்னவர்க்கு முடி

சூட்டும்போது, புதுப்பெயரளித்தான் என்பது "மானைச் சிலைக்கையோரானைச் சேவகனை நிருபேந்தர சோழன் என்றும் பருமணி சுடர்மணி மகுடஞ்சூட்டி" என்று குறிப்பதிலிருந்து அறியலாம்.

## தந்தை பெயருடன் :

தந்தையின் பெயருடன் மகனின் பெயரையும் இணைத்துக் கூறுவது பண்டைய மரபு. குட்டுவன் கோதை (புறம் 54) என்பது குட்டுவன் மகன் கோதை என்ற பெயரிலும், நலங்கிள்ளி சேட்சென்னி (புறம் 61) என்பது நலங்கிள்ளி மகன் சேட்சென்னி என்ற பொருளிலும், மாறன் மகன் வழுதி என்ற பொருளில் மாறன் வழுதி (புறம் 51, 52) என்றும் சங்க காலத்தில் வழங்கப்பட்டது. பிற்காலத்திலும், பல மன்னர்களின் பெயரோடு அவர் தந்தையின் பெயர் இருந்ததைக் காண்கிறோம். பல்லவர்களில் தந்தி நந்தி என்றும் நந்தி கம்பன் என்றும் பெயர் உள்ளோர் குறிக்கப்பட்டுள்ளனர். சோழ மன்னர்களிலும் இதுபோன்ற மரபைக் காணலாம். ஆதித்த சோழனின் மகனுக்கு ஆதித்தன் கன்னரதேவன் என்ற பெயரும், மதுராந்தக உத்தம சோழனின் மகனுக்கு மதுராந்தகன் கண்டராதித்தன் என்றும் பெயர் விளங்கின.

## தந்தையின் பெயர் :

தந்தையின் பெயரையே மகனுக்கு இடுவதும் சங்க காலத்தில் இருந்து காணப்படும் ஒரு வழக்கமாம். கடுங்கோனின் மகன் கடுங்கோன் என்றே அழைக்கப்பட்டான். ஆயினும் தந்தையையும் மகனையும் பிரித்து அரிய 'பெரும்' என்றும் 'இளம்' என்றும் குறிப்பிட்டு அழைத்தனர். பெருங்கடுங்கோ மகன் இளங்கடுங்கோ என்று புகளூர் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளான். பெருஞ்சேரலிரும்பொறை மகன் இளஞ்சேரல் இரும்பொறை

என்பதும் இதையே குறிக்கும். முதல் இராஜேந்திர சோழனின் இரண்டாம் மகனுக்கு இராஜேந்திரன் என்றே பெயர் விளங்கியது.

## பாட்டன் பெயர் :

பாட்டன் பெயரை மகனுக்கு வைப்பதும் பெரும்பாலும் கையாளப்பட்ட மரபு என்று அறிவோம். சங்க காலத்தில் இம்மரபு நிலவியதைக் குறிக்க தக்க சான்றுகள் இல்லை. பல்லவ மன்னர்களில் பலர் இம்மரபைப் பின்பற்றினர். பெயர்கள் மாறி மாறி வருவதிலிருந்து இதை நன்கு அறியலாம். நரசிம்மவர்மனாகிய மாமல்லன் தன் தந்தையின் பெயராகிய மகேந்திரவர்மன் என்பதையே தன் மகனுக்கும் இட்டான். அதுபோல் இராஜசிம்மனும், தந்தி வர்மனும், தங்கள் தந்தை பெயரை மக்களுக்கும் இட்டு மகிழ்ந்தனர். சோழர்களில் பராந்தக சோழன் தன் தந்தையின் பெயரான ஆதித்தன் என்பதை இணைத்து தன் இரு மக்களுக்கும் ராஜாதித்தன் என்றும் கண்டராதித்தன் என்றும் பெயரிட்டான். விக்கிரமசோழன் தன் மகனுக்குக் குலோத்துங்கன் எனத் தந்தையின் பெயரையே சூட்டினான்.

## தாய்வழிப் பாட்டன் பெயர் :

எவ்வாறு தந்தை வழிப் பாட்டன் பெயரை மக்களுக்கு இட்டனரோ அதுபோன்று தாய்வழிப் பாட்டன் பெயரையும் மக்களுக்கு இடுதலும் வரலாறு அறிந்ததே. சிறப்பாகத் தாயின் தந்தை வலிமையும், சிறப்பும் மிக்கவனாயிருந்தால் அவன் பெயரை குழந்தைகள் பெறுவது மரபு. பாண்டிய மன்னன் இராஜசிம்மன் என்பவனின் தாய் பல்லவ இராஜசிம்மனின் மகள் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். பல்லவர்களில் தந்திவர்மனும், நிருபதொங்கனும் இராஷ்டிரகூடப் பெண்களிடம் பிறந்தவர்

கள். ஆதலின் இராஷ்டிரகூட மன்னர்கள் தந்திதுர்க் கனின் பெயரையும், நிருபதொங்கனின் பெயரையும் கொண்டு விளங்கினூர்கள். சோழர்களில் முதல் இராஜ ராஜனின் மகள் கீழைச்சாளுக்கிய மன்னனை மணந்தாள். அவள் மகன் இராஜராஜன் என்று அழைக்கப்பெற்ருன். அதே போன்று முதல் இராஜேந்திரனின் மகள் அம் மங்காதேவி, கீழைச்சாளுக்கிய மன்னன் இராஜ ராஜநரேந்திரனை மணந்திருந்தாள். அவள் மகன் இராஜேந்திரன் என்று பெயரிடப்பட்டான். பின்னர் அவனே குலோத்துங்கன் என்று பெயர் சூடியவன்.

### பேரரசன் பெயர் :

இவை தவிர மன்னர்கள், தங்கள் அரசை நிலைநிறுத்த உதவிய பேரரசர்களின் பெயரையே தங்கள் மக்களுக்கு இடுவதும் ஒரு மரபாகும். பல்லவ வரலாற்றில் இரண்டு சான்றுகள் கிடைக்கின்றன. மேலைக் கங்கர்களது ஆட்சி யையும், கதம்பர்களது ஆட்சியையும் நிலைநிறுத்த மிகவும் உதவியர்கள் பல்லவர்கள். பல்லவர்களின் சிற்றரசர் களாக, கங்கர்களும், கதம்பர்களும் ஆண்டிருக்கிருர்கள். சிம்மவர்மன் என்ற பல்லவ மன்னன், ஆர்யவர்மன் என் னும் கங்க மன்னனை கங்க அரியாசனத்தில் அமர்த்தி முறைப்படி அபிஷேகம் செய்து முடிசூட்டினுன். அதனுல் ஆர்யவர்மன் தன் மகனுன மாதவவர்மன் என்பவனுக்குச் சிம்மவர்மன் என்றே மறுபெயர் சூட்டினுன். கங்க மன்னனுக்கு முடிசூட்டிய பல்லவ சிம்மவர்மன், கதம்ப மன்னன் விஷ்ணுவர்மன் என்பவனுக்கும் முடிசூட்டினுன். கதம்ப மன்னன் தன் மகனுக்கு சிம்மவர்மன் என்றே பெயர் சூட்டினுன்.

### மாற்றரசன் பெயர் :

இது தவிர போரில் தோற்ற மன்னன், வெற்றி பெற்ற மன்னனின் முன் தன் மகவை வைத்து அதற்கு

வெற்றி கொண்ட மன்னனின் பெயரைச் சூட்டுவதும் உண்டு. மூன்றும் ராஜராஜசோழன் மாறவர்மன் சுந்தர பாண்டியனிடம் தோற்றான். சுந்தர பாண்டியன், சோழன் இழந்த நாட்டை அவனுக்கே திருப்பிக்கொடுக்க அவனைப் பொன்னமராவதிக்கு அழைத்தான். அப்போது சோழன் தன் மகனை சுந்தரபாண்டியனிடம் நின் பேரென்று காட்டினான் என்பதை "போன வளவன் உரிமையொடும் புகுந்து பெற்ற புதல்வனை நின் பேரென்று முன்காட்டி" என்று கல்வெட்டு குறிக்கிறது.

ஐம்படைத் தாலி :

சிறு குழந்தைகள் எழுந்து நின்று நடைபயிலும் முன்னரே ஐம்படைத்தாலி அணிவது வழக்கம். சங்கம், ஆழி, வில், வாள், கதை ஆகிய ஐந்து படைகளைப்போல் பொன்னாலும், விலை உயர்ந்த ரத்தினங்களாலும் சிறிய அளவில் செய்து, குழந்தையின் அரையிலே கட்டுவதையே ஐம்படைத்தாலி என்பர். குலோத்துங்க சோழன் குழந்தையாய் இருந்தபோது ஐம்படைத்தாலி அணிவிக்கப் பட்டான்.

பூணூல் :

உரிய வயது வந்தவுடன் அரசிளங்குமரர்களுக்கு பூணூல் அணிவிக்கப்பட்டது. இது எந்த வயதில் என்று அறிய முடியவில்லை. தருமசாத்திரங்கள் அரச மக்களுக்கு பதினெறு வயதில் பூணூல் அணிவிக்கலாம் எனக் குறிக்கின்றன. பூணூல் அணிவித்ததும் அவன் இருபிறப் பாளனாகக் கருதப்படுகிறான். அரசர், வணிகர், அந்தணர் முதலிய குலத்தைச் சேர்ந்த சிறுவர்கள் கல்வி கற்கும் வயது வந்ததும் பூணூல் அணிவிக்கப்படுவர். இதிலிருந்து இவர்கள் நான்மறைகளையும் பிற கல்விகளையும் கற்கும் தகுதிபெறுவர். இவ்வழக்கம் சங்ககாலத்தில் இருந்ததா எனத்தெரியவில்லை. ஆனால் பல்லவர் காலங்

தொட்டு இருந்திருக்க வேண்டும். குலோத்துங்கன் பூணூல் அணிந்து கொண்டான் என்பதை ஐயங்கொண் டார் "முந்நூல் பெருமார்பில் சிறந்து ஒளிர, இண்டாவது பிறந்து சிறந்த பின்னர், மாண் உருவாய்-வேதங்கள் நான் கினையும் வேதியர்பால் கேட்டருளி, வில்வித்தை, வாள் வித்தை, குதிரை ஏற்றம், யானை ஏற்றம் முதலிய கற்றான் எனப் பாடுவர். இவ்வாறு கல்வியிற் சிறப்பெய்திய பின்னரே அரசாளும் பொறுப்பில் சிறப்பர் என்பது அக்காலத்தோர் கருத்து.

சிறு வயதில் அரசு :

ஆயினும் ஒரு சில நேரங்களில் அரசிளங்குமாரர்கள் சிறுவர்களாக இருக்கும்போது நாடாளும் மன்னராக முடிசூட்டும் நிலை ஏற்படுவதும் உண்டு. கரிகால்வளவன் சிறுவனாக இருந்தபோது மன்னனாகப் பொறுப்பேற்றான் என்று அறிவோம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் சிறுவனாக இருந்தபோதே அரசனான். பல்லவமன்னன் நந்திவர்மன் பல்லவ மல்லன் தனது 12 ம் ஆண்டிலேயே காஞ்சி அரியணை ஏறும் சூழ் நிலை ஏற்பட்டது. அவனுக்கு முன்னர் ஆண்ட இரண் டாம் பரமேச்சுரவர்மன் இறந்த பிறகு, நாடாளும் தகுதி வாய்ந்த அரச குலத்தவன் யார் என நாட்டார் ஆராய்ந் தனர். ஐந்து தலைமுறைகளுக்கு முன்னர் ஆண்ட மன்ன னின் தம்பி வழிவந்தவன் நந்திவர்மன் எனக் கண்டு அவ னுக்கு முடிசூட்டினர் என்று கல்வெட்டுக் கூறுகிறது.

அரசிளங்குமாரர்கள் சிறுவயதிலேயே முடிசூட்டப் பட்டபோது அல்லல்களை எதிர்த்து நிற்க வேண்டி வந்தது. கரிகாலன் மாற்றார்களின் கரத்தில் சிக்காமல் தப்பிப் பின்னர் தன் நாட்டைக் காவல் பூண்டதை அறிவோம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண் டியன் நெடுஞ்செழியன் இளயன் என்ற காரணத்தால்

சேரனும், சோழனும், ஐம்பெரும் வேளிர்களும் அவன் மீது போருக்கு எழுந்தனர். அவன் அவர்கள் அனை வரையும் ஒருங்கே தோற்கடித்து வாகை சூடினுன். நந்திவர்மன் பல்லவமல்லன் முடிசூடியதும் பல போர் களைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

அரசிளங்குமாரர்கள் சிறு வயதிலேயே முடிசூடும் நிலை ஏற்பட்ட போது பகைவர்களிடமிருந்து மட்டுமல்ல, அரசர் குலத்தவரிடமிருந்தே தங்களைக் காத்துக் கொள்ளும் நிலையும் ஏற்பட்டது. கரிகாலன் முடிசூடத் தகுந்தவன் என்று அறிந்ததும் சிறையில் வைக்கப் பட்டான் என்றும், தன் வலியாலேயே தப்பி வந்து மாற்ருரை அழித்து முடிசூடினுன் என்றும் அறிகிருேம். சோழமன்னன் இரண்டாம் இராஜராஜன் இறக்கும் போது அவனுக்கு இரு மக்கள் இருந்தனர். ஒருவனுக்கு ஓராண்டும், மற்றவனுக்கு ஈராண்டுமே நிறைந்திருந்தன. அதனுல் எதிரிலிப்பெருமாள் என்பவனுக்கு முடிசூட்டி இராஜராஜன் இறந்தான். ஆனுல் அவனது இரண்டு சிறுவர்களுக்கும் மனைவியருக்கும் ஆபத்துச் சூழ்ந்தது. அவர்களைத் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பி என்பவன் ஆயிரத்தளியிலிருந்து (தாராசுரத்துக்கு)இராஜ ராஜபுர அரண்மனைக்கு அழைத்து வந்து கண்ணெனக் காத்தான் என அறிகிருேம். பின்னர் முடிசூடிய மூன்ரும் குலோத்துங்கன் அம்மக்களில் ஒருவனே (சதாசிவ பண் டாரத்தார் – பிற்காலச் சோழர் வரலாறு.)

## இளங்கோப் பருவம்:

அரசிளங்குமாரர்கள் தக்க பருவம் அடைந்ததும் இளங்கோ என முடிசூட்டப்பட்டனர். இப்பருவத்தை இளங்கோப்பருவம் என்றே அழைத்தல் மரபு. முதல் குலோத்துங்கசோழனுடைய கல்வெட்டுகள் இளங்கோப் பருவம் எனக் குறிக்கின்றன. ஆயினும் இளங்கோப்

பருவம் என்பது எந்த வயதிலிருந்து எந்த வயதுவரை எனத்தெளிவாகத் தெரியவில்லை. அரசனுக்கு அரியணை ஏறும் உரிமை பெற்ற மகன் மட்டும் இளங்கோ என முடிசூட்டப்பட்டானா அல்லது அரசமாதேவியரிடம் பிறந்த மக்கள் அனைவரும் முடி சூட்டப்பெற்றார்களா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. அரசமாதேவிய ரிடம் பிறந்தோர் அனைவரும் உரிய பருவத்தில் இளங்கோ வாக முடிசூட்டப்பெற்றார்கள் எனக்கொள்ள ஏது விருக்கிறது. செங்குட்டுவனுடைய மைத்துனன் வளவன் கிள்ளியுடன் அவன் குடிப்பிறந்தார் ஒன்பதின்மரும் தங் களுக்கு இளவரசு கொடுத்ததையும் வேண்டாம் என்றனர். வளநாடழிக்க முனைந்து வளவன் கிள்ளி யோடு போரிட்டு மடிந்தனர். அவர்களை இளங்கோ வேந்தர் என சிலம்பு குறிக்கிறது (சிலம்பு 27-120). மூத்த மகன் செங்குட்டுவன் இருக்க இளவல் இளங்கோ எனக் கூறப்படுவது இதையே குறிக்கிறது எனக்கொள்ளலாம். முதல் ராஜாதிராஜனின் மெய்கீர்த்தி அவன் தம்பியரை இளங்கோக்கிளை எனக் கூறுகிறது. ஆதலின் இளங்கோ என்பது அரசமக்கள் அனைவரும் அடையும் ஒரு நிலை எனக்கொள்வதில் தவறில்லை. இது பெரும்பாலும் அவர்களது பிறந்த நாளையும் மீனையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்க வேண்டும். இதை ஒரு பெரும் விழாவாக நடத்தியிருக்க வேண்டும். இவ்விழாவில் என்ன சடங்குகள் செய்யப்பட்டன எனத்தெரியவில்லை.

யுவமகாராஜா :

பல்லவமன்னன் விஜயஸ்கந்தவர்மன் ஆண்டபோது புத்தவர்மன் என்பவன் யுவமகாராஜா என்று குணபதேய செப்பேடுகளில் குறிக்கப்படுகிறான்.

கி. பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டில் காஞ்சியிலி ருந்து ஆண்ட யுவமகாராஜா சிவஸ்கந்தவர்மன் தானே

ஆணத்தியாக நின்று ஒரு நில தானம் அளித்திருக்கிறான். பல்லவர்களின் சில செப்பேடுகளில் யுவமகாரஜா விஷ்ணு கோபவர்மன் என்பவன் குறிக்கப்படுகிறான். இவன் மகன் சிம்மவர்மன் என்பவன் தன் ஆட்சியாண்டில் பல தானங்கள் அளித்திருக்கிறான். பாட்டன், தந்தை, அரசன் என மூன்று தலைமுறைகளைக் குறிக்கும் இவனது செப்பேடுகள் பாட்டனையும் அவனையும் மகாராஜா என்று குறிக்கின்றன. ஆனால் அவன் தந்தையை மட்டும் யுவமகாராஜா விஷ்ணுகோபன் எனறே குறிக்கின்றன. விஷ்ணுகோபனுக்கு சிம்மவர்மன் என்ற ஒரு முன்பிறப்பு உண்டு. அவன் நாட்டை ஆண்டான். விஷ்ணுகோபன் தன் வாழ் நாள் முழுவதும் யுவமகாராஜா என்றே அழைக்கப்பெற்றான். வீரராஜேந்திரசோழனுக்கு அதி ராஜேந்திரன் என்று ஒரு மகன் இருந்தான். அவனே வீரராஜேந்திரனுக்குப் பிறகு முடிசூடினான். ஆயினும் வீர ராஜேந்திரன் குலோத்துங்கனை இளவரசாகச் செய்தான் என்று கலிங்கத்துப்பரணி கூறுகிறது. இது வேங்கி நாட்டின் இளவரசாக முடி சூட்டப்பெற்றதைக் குறிக் கிறதா அல்லது ஏனைய அரசிளங்குமரர்களைப் போல் இவனுக்கு இளங்கோ விழாவை நடத்த அதையே பின்னர் முடிசூடப் போவதைக் குறிக்கும் வகையில் இலக்கிய நயம் சிறக்க ஜயங்கொண்டார் பாடினாரா என்பது தெளிவாயில்லை.

**பட்டத்தரசியின் மகன் :**

அரசர்கள் தங்கள் மாதேவியரிடத்துப் பிறந்த மக்க ளனைவரையும் ஒரு குறிப்பிட்ட வயது வந்ததும் இளங்கோவாக்கினர் என்று கூறுகிறோம். இருப்பினும் தனக்குப் பின்னர் அரியணை ஏற மூத்த புதல்வனைத் தேர்ந் தெடுத்தனர். இம்மூத்த புதல்வன் மூத்த பட்டத்து முதலரசியின் தலைமகனா அல்லது அரசமாதேவியர்களில் அனைவரிலும் எவருக்கு முதலில் பிறந்தவனோ அவனா

என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. பட்டத்து முத லரசியின் மகனே நாடாளும் தகுதி உடையவனாயிருந் திருக்கக் வேண்டும். ஆயினும் வேறுபாடுகளும் உண்டு. முதல் ஆதித்த சோழனுக்கு இருமாதேவியர் இருந்தனர். முதல்வள் இளங்கோ பிச்சியென்பாள். இவள் மைந்தன் ஆதித்தன் கண்ணரதேவன் என்பவன். இரண்டாமவள் திரிபுவன மாதேவி என்னும் வயிரியக்கன் என்பவள். முதல் பராந்தக சோழன் இவளுடைய மகனாயிருக்கலாம். முதலரசியின் மகனான கன்னரதேவனுக்கு பட்டம் அளிக்கப்படவில்லை. பராந்தகனுக்கே அளிக்கப்பட்டது. இதிலிருந்து முதலரசியின் மகன் என்றல்லாமல் முதலில் பிறந்த மகனுக்கும் அரசு அளிக்கப்பட்டது என்றும் கொள்ள ஏது இருக்கிறது.

அரசாள்வதற்கு முதல் மகனே பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப் பட்டபோதிலும், அறிவிலும், ஆற்ற லிலும், சிறந்தவனே சில நேரங்களில் தேர்ந்தெடுக்கப் பட்டான்.

> ஒருகுடிப்பிறந்த பல்லோருள்ளும்
> மூத்தோன் வருக என்னாது அவருள்
> அறிவுடையோன் ஆறு அரசுஞ்செல்லும்
>
> (புறம். 183)

என்னும் புறநானூற்றுச் செய்யுளும் இதையே வலி யுறுத்துகிறது எனலாம். இரண்டாம் பரமேச்சுர பல்லவன் இறந்ததும், இரண்யவர்மனின் நான்கு மக்களில் முதல் மூவரும் இருக்க பட்டம் எய்தியவன் நான்காம் மகனான நந்திவர்மன் பல்லவமன்னனே. குலோத்துங்க சோழனுக்கு நான்கு மக்கள் இருந்தனர். அவர்களில் நான்காவது மகனான விக்ரமசோழனே அரியணை ஏறினான்.

ஆளுகின்ற அரசனின் மகன் குழந்தையாக இருப்பினும், முடி சூட்டப்படுவது மரபு என்று கண்டோம். ஆயினும் இளங்கோவான அரசனுக்கு முடி சூட்டும் போது மகனுக்கு யுவமகாராஜா என பட்டங்கட்டுதலும் உண்டு. அச்சுதராயர் சக்ரவர்த்தியாகப் பட்டம் கட்டப் பட்டபோது வேங்கடாத்ரி இளங்கோவனுர். கங்க மன்னன் கிருஷ்ணவர்மன் என்பவன் தன் தலைமகன் விஷ்ணுவர்மன் என்பானுக்குப் பட்டம் அளிக்காமல் இளையமகன் தேவவர்மன் என்பவனுக்கு நாடளித்தான். இது ஆற்றலின் அடிப்படையிலா, அல்லது அன்பின் அடிப்படையிலா என்று தெரியவில்லை.

வழி மாறல் :

அரசகுமாரன் சிறுவனாக இருக்கும்போது அரசனுக்குப்பின் அவன் தம்பியரும் அரசை ஏற்று ஆள்வதும் உண்டு. தம்பியருக்குப்பின் அவருடைய வழி வந்தவர்களே நாட்டை ஆளத்தலைப்பட்டனர். பராந்தக சோழரின் தலைமகன் இராஜாதித்தன், பராந்தகனின் ஆட்சி காலத்திலேயே போரில் மாண்டான். ஆதலின் பராந்தகனுக்குப்பின் அவன் இரண்டாம் மகன் கண்டராதித்த தேவர் பட்டத்துக்கு வந்தார். அவருக்கு மதுராந்தக உத்தமசோழன் என்று ஒரு மகன் உண்டு. அவன் சிறியவனயிருந்தான். ஆதலின் கண்டராதித்தரின் தம்பி அரிஞ்சயர் பட்டத்துக்கு வந்தார். அரிஞ்சயற்குப் பிறகு உத்தம சோழன் அரியணை ஏறவில்லை. அரிஞ்சயனின் மகன் இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன் ஆண்டான். அவனும் உத்தமசோழனை இளவரசனாக நியமிக்கவில்லை. தன் தலைமகனான ஆதித்தகரிகாலனையே இளவரசாக்கினான். இதிலிருந்து முடிசூட்டும் உரிமை உடைய சிறிய மகன் இருப்பினும், மன்னனின் தம்பி முடிசூடினால் அவன் வழிக்கே அரசு சென்றது என்று தெளிவாகிறது.

## இளங்கோவாகி அருஞ்செயல் :

அரசகுமாரர்கள் இவ்வாறு இளங்கோவாக முடி சூட்டப்பட்டபோது அவர்களுக்கு புதிதாகப் பெயர் ஏதாகிலும் இடப்பட்டதா என்று தெரியவில்லை. அவர்களுக்கு, அரசனுக முடிசூட்டப்படும்போது செய்யப்பெறும் செயல்கள் எல்லாம் சிறிய அளவிலே செய்யப்பெற்றன எனக் கொள்ளலாம். இளங்கோவான பிறகு அவர்கள் செயற்கரியசெயல் செய்து புகழ் தேட ஆரம்பித்தனர். சேர மன்னன் பெருங்கடுங்கோன் என்பவனின் மகன் இளங்கடுங்கோ என்பவன் இளங்கோ ஆனபோது யாற்றூரைச் சேர்ந்த செங்காயபன் என்னும் சமணத்துறவிக்கு ஒரு பாழி அமைத்துக் கொடுத்ததைக் "கோஆதன் செல்லிரும்பொறை மகன், பெருங்கடுங்கோன் மகன் இளங்கடுங்கோ இளங்கோ ஆகி அறுத்த கல்," என்று புகளூர் கல்வெட்டு குறிக்கிறது. இது கி. பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு. புண்ணியச் செயல் செய்ததை இது குறிக்கிறது. இளங்கோவாகப் பட்டம் ஏற்றவுடன் தன் வீரத்தை உலகோருக்கு அறிவிக்கும் வகையில் மாற்றூர் மீது படையெடுத்து அரும்பெரும் வெற்றிகளைப் பெற்றனர் என்றும் அறிகிறோம். பல்லவமன்னன் சிம்மவர்மன் ஆண்டபோது அவன் மகன் சிம்மவிஷ்ணு என்பவன் பல்லவராட்சியைத் தெற்கே காவிரிக்கரை வரை பரப்பினன் என்று பல்லன்கோயில் செப்பேடு கூறுகிறது. சோழப்பேரரசர்களின் மக்களில் பலர் இளவரசர்களாக இருந்தபோது பெரும் தண்டு கொண்டு போரிலே வெற்றிவாகை சூடியிருக்கிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக பராந்தகன் மகன் இராஜாதித்தன், சுந்தரசோழன் மகன் ஆதித்த கரிகாலன் முதலியோரை இங்கு குறிப்பிடலாம். இராஜராஜனின் மைந்தன்

இராஜேந்திரன் இளவலாக இருந்தபோது மகாதண்ட நாயகனுக வடதிசை சென்று வெற்றி முழக்கம் செய்தான். முதல் குலோத்துங்கனை இளவரசுப் பட்டத்தில் வைத்தவுடனே மாற்றரசர்களின் செல்வங்களைக் கவரப் போர் தொடுத்தான் எனப் பரணி ஆசிரியர் குறிக்கிருர்.

# 2

# கொற்றம் எய்திய பெரியோர் மருக

## முடிசூடல் :

அரசகுலத்துதித்தோன் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை நேர்முகமாக ஏற்றுக்கொள்வதைக் குறிக்கும் விழாவே முடிசூட்டுவிழா என்பதாம். கணிதவல்லுநர் குறித்த நல்ல மீனுடைய, நல்ல நாளில் நல்ல வேளையில் அரியணையில் அமர்த்தி முடி கவிப்பித்து, ஆட்சியின் அடையாளமான சின்னங்களை அணிவித்துப் பொறுப்பை அவனிடம் ஒப்படைப்பதே இதன் நோக்கம். இதைக் கொற்றம் எய்துதல் என்றும் குறிப்பர்.

## முடிபுனை விழா :

இவ்விழா எவ்வாறு நடைபெற்றது என்பது பற்றி ஒரு சில குறிப்புகளை கலிங்கத்துப்பரணி குறிக்கிறது. “மன்னன் அந்நாளில் வேதமந்திரங்கள் முழங்க திருமஞ் சனம் ஆடினன். பின்னர் அரியணை ஏறினன்; அரியணை யில் ஏறும் போது பிறர் அருகம்பில்லை ஏந்த அதன் மீது கால் வைத்து பின்னர் அரியணை ஏறினன். அப்போது

மறையவர்கள் விதிப்படி முடியைக் கவித்தனர். மனுநெறி தழைப்பதற்காகவே முடி தரிக்கப்பெற்றது. அம்முடியில் பலவிலையுயர்ந்த மணிகள் பதிக்கப்பெற்றிருந்தன. முடிகவிழ்க்கப்பட்ட பின்னர் புண்ணியநீர் எல்லாம் முடி மீது சொரியப்பட்டன. அரசனுக்குரிய கொடி கொடுக்கப்பட்டது. முத்துக்கள் அணிந்த வெண்மையான கொற்றக்குடை அரசனின் முடி மேல் பிடிக்கப்பட்டது. பின்னர் மன்னன் தீயில் வேள்வி வேட்டான். வேட்ட பின்னர் குழுமியிருந்த புலவர்களுக்கு ஏராளமான பரிசுகளை அளித்தான். மற்ற அரசர்கள் இறை கொணர்ந்து செலுத்தினர்," என்று ஜயங்கொண்டார் குறிக்கிறார். அருகம்பில், பில் வகைகளில் அரசு போன்றது. ஆதலின் "அருகே எவ்வாறு நீ பில்களில் சிறந்து விளங்குகிறாயோ அதேபோன்று நானும் மன்னர்களில் சிறந்தோனாகுக" என்று முடிசூடும் மன்னன் கூறி ஏறல் வேண்டும் என்று வடமொழி நூல்கள் குறிக்கின்றன. மிகவும் தொன்மையான உபநிடதங்களுக்கும் முற்பட்ட பிராம்மணங்கள் என்னும் நூல்களில் அரசனுக்கு முடிசூட்டும் விழாக்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

அங்கங்கள் :

அரசன் பொறுப்பை ஏற்றான் என இவ்விழாவில் எந்த ஒரு நிகழ்ச்சி குறிக்கிறது எனக் கூறுவது கடினம். முடிசூட்டுவிழா அல்லது மகுடம் புனைவிழா என்று கூறுவதிலிருந்து முடி அணிவதுதான் அரசனின் சின்னம் எனக்கொள்ளலாம். முடியுடைவேந்தர் மூவர் என்ற சங்க கால வழக்கும் இதையே குறிக்கிறது.

பாண்டியன் பராந்தக வீரநாராயணனைக் குறிக்கும் போது 'புனைமணிப் பொன்முடி சூடி' என்று சின்னமனூர் செப்பேடுகள் குறிக்கின்றன. முதற்குலோத்துங்கனை "குலமணிமகுடம் முறைமையிற் சூடி" என்று மெய்கீர்த்தி

கள் பாடுகின்றன. எனவே முடிசூட்டல் அரசு பொறுப் பேற்பதில் தலையாய அங்கம் எனக்கருதப்பெற்றது.

ஆயினும் இவ்விழாவின் அங்கங்கள் ஒவ்வொன்றும் அரசனுவதின் இன்றியமையாத சின்னங்கள் என்றுதான் கொள்ளவேண்டும். 'முரசு முழங்குதானை மூவர்' என்று கூறும் சங்ககால மரபும், செங்கோல் வேந்தன் என்பதும் இதையே நினைவுறுத்துகின்றன. தளவாய்புரம், செப் பேடுகள், செங்கோல் பிடித்த ஆண்டு என்னும் பொருளில் செங்கோலாண்டு எனக் குறிக்கிறது. திருவேங்கை வாசல் கல்வெட்டு "பரகேசரி செங்கோல் பற்றிய ஆண்டு அஞ்சில்" எனக் கூறுவது (136/19) இம்மரபையே குறிக்கும். 'சிம்மாசனத்து வீற்றிருந்தருளிய' என்று கூறும் கல்வெட்டுகளும் இன்னம் பிற மரபுகளும் இவ் விழாவின் எல்லா அங்கங்களும் சேர்ந்து, ஒரு முழுமை அளித்ததை குறிக்கின்றன. தாமம் நிறைந்த நெடுங் குடை, சக்கரம், புலிக்கொடி, செங்கோல், அணை, மணி நெடுமுடி முதலிய சின்னங்களை சோழர் மெய்கீர்த்திகள் குறிக்கின்றன.

"தாமநெடுங்குடை பொழிந்ததவள
வெண்ணிலா குளிர்பொதியச்
சுடர்சக்கரவெற்பில் தனதயிற்
சக்கரவெயிலெறிப்ப
சினிப்புலியுஞ் செங்கோலும்
அணைத்துயிர்க்குங் காவல் பூண
பணியணை மிசைப் பரஞ்சோதி
பாற்கடல் நின்றெழுந்தருளி
மணி நெடுமுடி கவித்து......"

என்று இரண்டாம் இராஜராஜனின் மெய்கீர்த்திகள் கூறுகின்றன.

முடி :

செம்பொற் திருத்தகு முடி (முதலாம் ராஜேந்திரன்), குலமணி உரிமையில் சிறந்த மணிமுடி (முதலாம் குலோத் துங்கன்), சுடர்மணி மகுடம், (விக்கிரம சோழன்) சீர்வளர்ந்த முடி (இரண்டாம் குலோத்துங்கன்), சோதி மணி முடி (இரண்டாம் ராஜாதிராஜன்), என்று பல வாறாக கல்வெட்டுகளில் முடி புகழப்படுகிறது. குலத் தின் தனம் என்றும் முடி குறிக்கப்படுகிறது. "கதிரவன். குலமுடி சூடி." (ராஜாதிராஜன் II) "கேரளன் முறை மையில் சூடும் குலதனமாகிய பலர் புகழ் முடியும்" என்றும் (முதலாம் இராஜேந்திரன்), குலமணிமகுடம் (முதலாம் குலோத்துங்கன்), என்றும் மெய்கீர்த்திகள் பாடுகின் றன. முடிபுனைவதை 'உரிமையில் சூடல், என்றும் முறைமையில் சூடல் என்றும் கல்வெட்டுகள் குறிக்கின் றன. "தினகரோதயமெனச் செழுங்கதிர் சொரியும் கனக மாமுடி கவின் பெறச் சூடி,' என்று (சடாவர்மன் சுந்தர பாண்டியனின்) ஒரு கல்வெட்டு அழகாக குறிக்கிறது. விசைய மாமணிமகுடம் மேய்ந்து (முதலாம் வீர ராஜேந் திரன்) என்றும் சோதிமணி முடி புனைந்து என்றும் குறிப் பதையும் காணலாம். மாறவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்கீர்த்தி சிங்காதனத்துடன் முடிசூடினன் என "மிடை கதிர் நவமணி வீரசிங்காதனத்துடன் முடி சூடி" என்று குறிக்கிறது. மற்றொரு மெய்கீர்த்தி "வெவ்வேறு வகுத்த முது நிலக்கிழமையின் முடிபுனை வேந்தர்க்கொரு தனி நாயகன் என்று உலகேத்த திருமுடி சூடி" (இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்) என்று குறிப்பது முடி சூடலின் பெருமையைக் குறிக்கிறது.

முடி குலமுடி என்றும் முறைமுடி என்றும் கூறப் பட்டது.

வழிவழியாக வந்த முடியை இவ்விழாவின்போது மன்னர் தலையில் அணிவித்தனர் என்று கொள்ளலாம். ஆயினும் தன் ஆட்சிக்காலம் முழுவதுமே இதை அணிந்திருந்தானு அல்லது ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்ப முடிகளை செய்து கொண்டனரா என்று தெளிவாயில்லை. ஒவ்வொரு மன்னரும் தங்களுக்கேற்ற முடிசெய்து பிற நாட்களில் தரித்தனர் என்று கொள்வதில் தவறில்லை.

முடி மகுடம் எனவும் கிரீடம் எனவும் வழங்கப்படும். இது பெரும்பாலும் பொன்னுல் செய்யப்பட்டு விலை உயர்ந்த மணிகள் இழைத்து சிறந்த வேலைப்பாடுடன் விளங்கியது என்று அறியலாம். இருப்பினும் வேறுசில முடிகளும் புனைந்து கொள்ளப்பட்டன. சங்ககாலச் சேர மன்னன் ஒருவன் களங்காயாலும் நார்முடியாலும் ஆன தொரு முடியைப் பூண்டான் என்றும் அதனுல் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் என்று பெயர் பெற்ருன் என்றும் அறிகிருேம். இது எதனுல் என்று தெளிவாகத் தெரியவில்லை. இம்முடி நாரால் ஆக்கப்பெற்றது என்றும் களங்காயால் ஆன கண்ணி ஆரம் அதன் அடியில் சுற்றப்பட்டிருந்தது என்றும் எண்ணலாம். இது வெறும் காயாலும் நாராலும் ஆன முடியா அல்லது பொன்னுல் இவ்வுருக்களில் செய்யப்பெற்ற முடியா என்பதில் ஆராய்ச்சியாளரிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. பொன்னுலேயே இவ்வுருவங்களில் செய்யப்பட்டிருந்தது என்று கொள்வதில் தவறு இல்லை. 'அரசிலை' 'மாங்காய் மாலை' என்பன மாங்காயால் ஆனமாலை என்பதில்லாமல் மாங்காய்போல் செய்யப்பட்டது என்று பொருள் கூறுவதுபோல, நார் போலும் களாங்காய்போலும் செய்யப் பட்ட பொன்முடி எனக்கொள்ளினும் தவறில்லை. அரி கேசரி பராங்குச மாறவர்மானின் முடி. "மகரிகை அணி மணி நெடுமுடி" என்று குறிக்கப்படுகிறது. இதிலிருந்து இவன் முடி நீண்டதாயிருந்தது என்றும் அதில் மகரம்

போன்ற வேலைப்பாடு இருந்தது என்றும் அறிகிறோம். மகரிகை அணி உடைய சில முடிகளை பண்டைய சிற்பங்களில் காணலாம். பாண்டியன் குலசேகரனுடைய கல்வெட்டுகளிலும் "ஆரும் வேம்பும் மணி இதழ் புடையாத் தாருஞ் சூழ்ந்த தடமணி மகுடம்" எனக் குறிப்பு உள்ளது.

சிற்பங்களில் :

பல்லவர்களது மகுடங்கள் உருளையாகவும் நெடியவையாகவும் இருந்தன என்பதை மாமல்லபுரத்தில் உள்ள இரு சிற்பங்களிலிருந்து அறியலாம். மாமல்லபுரத்தில். ஆதிவராஹ குகையில் சிம்மவிஷ்ணு, மஹேந்திரன் என்ற இரு மன்னர்களின் உருவங்கள் உள்ளன. அவற்றில் இரண்டிலும் உருளையான நெடிய முடிகளைக் காண்கிறோம். அவற்றின்மேல் தாமரை மொட்டு போன்ற அணியையும் காண்கிறோம். காஞ்சியில் வைகுந்த பெருமாள் கோயிலில் பல பல்லவ மன்னர்களின் சிலைகள் உள்ளன. அவற்றில் சிறந்த வேலைப்பாடு உடைய முடிகள் காண்பிக்கப் பட்டுள்ளன. சிலவற்றில் கண்ணியை போல் தடித்த மாலை போன்ற அணி, முடியின் அடியை அலங்கரிக்கின்றன. மேல் பகுதி கூர்முனையாக உள்ளது.

இவை தவிர காஞ்சி வைகுந்த பெருமாள் கோயிலில் நந்திவர்மனின் வரலாற்றைக் குறிக்கும் சிற்பங்கள் உள்ளன. அவற்றில் நந்திவர்மனுக்குச் சூட்டுவதற்காக மகாமாத்திரர் முதலானோர் ஒரு தட்டில் முடியை ஏந்தி வந்தனர் என்றும், நந்திவர்மனின் தந்தையால் அதை என்ன என்று அடையாளங் கண்டு கொள்ள முடியவில்லை என்றும் அது பல்லவர் முடி என்றும் யானையின் உருவில் இருந்தது என்றும் குறிப்பு உள்ளது. இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஆண்ட அரசர்கள் யானைத் தலை போன்ற முடிகளைப் பூண்டிருப்பது காண்பிக்கப்பட்டுள்ளது. வைகுந்தப் பெருமாள் கல்வெட்டு இவ்வாறு

குறிப்பினும் சிற்பத்தில் யானைத்தலை போன்ற முடி காணப்படவில்லை. யானைத் தலைபோன்ற முடி எங்கும் பல்லவர் சிற்பங்களில் காணக் கிடைக்கவில்லை என்பது இங்கே குறித்தல் வேண்டும்.

பாண்டிய மன்னருடைய சிற்பம் என்று கூறும் வகையில் திட்டவட்டமாக கூறக் கூடிய சிற்பங்கள் ஏதுமில்லை. எட்டாம் நூற்றுண்டில் பாண்டியர் செய்தளித்த கடவுளர் சிற்பங்களில் காணப்படும் முடிகளைப் போலவே அம் மன்னர்களது முடிகள் இருந்திருக்கக் கூடும். சோழ மன்னர்களது முடிகள் அதிகம் நீண்டோ அல்லது குறைந்தோ இன்றி, மேல் கூர்மையாக மிகவும் வேலைப் பாடுடன் திகழ்ந்திருக்க வேண்டும் என்று சில செப்பு படிமங்களில் இருந்து அறியலாம். விஜயநகர மன்னர்களது முடிகள் நீண்டு நான்கு புறங்களிலும் பட்டையான தங்க தகட்டுடன் திகழ்ந்திருந்தன என்று கிருஷ்ண தேவராய ருடைய சிற்பத்திலிருந்து காண்கிறேம். இவருடைய சிலைகள் தில்லையிலும் திருப்பதியிலும் உள்ளன. இது போன்று தான் பின்னர் வந்த நாயக்க மன்னர்களின் முடிகளிலும் காணப்படுகின்றன. இன்றும் ஸ்ரீரங்கத்தில் அரையர் என்பார் சூடும் முடிபோன்றவை அவை. இருப்பினும் திருமலை நாயக்கரின் முடி, மேல் நுனியில் ஒரு புறம் வளைந்து காணப்படுகிறது. மேலும் நல்ல பொன்னும் பட்டும், முத்துக்களும், இரத்தினங்களும் இழைத்துச் செய்யப்பட்டு விளங்குவதைக் காண்கிறேம். திருமலை மன்னர் தான் அணிவது போன்ற முடி ஒன்றை மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்திற்கு அளித்தது இன்றும் உள்ளது.

## மறையவர் முடி சூட்டினர் :

மன்னனின் புரோஹிதரே முடியை மன்னன் தலையில் சூட்டுவித்தார் எனக்கருத இடமிருக்கிறது. வேள்

விக்குடிச்செப்பேடு பாண்டியனுக்கு அவன் புரோஹி தரான அகத்தியர் தன் கரத்தால் முடி சூட்டினார் என "கும்பசம்பவ கரபிராப்த அபிஷேக கிரிய;" எனக் குறிக் கிறது. மறையவர் முடி எடுத்தனர் எனக் கலிங்கத்துப் பரணியும் கூறும். சோழர்களின் கல்வெட்டுகளில் மன் னர்கள் பின்னோருக்கு முடி சூட்டுவதை "முடிகவிப் பித்து" என்று கூறுவதும் இதையே குறிக்கிறது. "எதி ரிலிப்பெருமாளை மண்டை கவிப்பித்துபோந்தார்" என்று கல்வெட்டுக் கூறுகிறது. இரண்டாம் இராஜாதிராஜன் சிறுவனாக இருந்தபோது திருச்சிற்றம்பல முடையான் பெருமான் நம்பி என்பவன் அவனுக்கு முடிசூட்டியதை கல்வெட்டு "ராஜாதிராஜதேவர் என்று திரு அபிஷேகம் பண்ணுவித்து" என்று கூறுவதும் இதையே வலி யுறுத்துகிறது. மன்னன் முடி சூட்டினான் என்றும் சில கல்வெட்டுகள் குறிக்கின்றன. முன் கூறியவற்றிலிருந்து இது மன்னர்கள் புரோஹிதரைக் கொண்டு சூட்டிய தைக் குறிக்கிறதா அல்லது தாங்களே அணிவித்ததைக் குறிக்கிறதா என்று தெரியவில்லை.

## முடி கவிழ்ந்தால்

முடி, அரசன் என்பதைக் குறிக்கிறது என்றோம். அது கவிழ்ந்தால் அரசு வீழ்ந்தது என்று கருதப்படும். போரில் மன்னர்கள் மாற்றரசர்களின் முடியைக் கைப் பற்றுவது ஒரு குறிக்கோளாகவே கருதப்பட்டது. முடி கொண்ட சோழன் என்றே ஒரு மன்னர் பட்டம் பூண் டான். பாண்டியன் இராஜசிம்மன் என்பவன் சோழனி டம் தோற்று ஓடியபோது தன்முடியை ஈழத்தில் கொண்டு மறைத்தான். பின்னர் இராஜேந்திரசோழன் அம் முடியைக் கவர்வதற்காக ஈழத்தின் மீது படையெடுத்து ஈழத்தரசன் முடியையும், முன் அவர் பக்கல் தென்னவன் வைத்த சுந்தர முடியையும் கவர்ந்தான் என்று அவன் மெய்க்கீர்த்திகள் கூறுகின்றன. இராஜாதிராஜனுடன்

போர் புரிந்த சுந்தரபாண்டியன் என்பவன் தன் முடி விழத் தலை விரித்தோடினான் எனக் கல்வெட்டு கூறுகிறது. மன்னன் தன்னுடைய அடிகளில் மாற்றார்களின் முடியை வீழ்த்தல் தன் வீரத்துக்கும் மாற்றாரின் தாழ்வுக்கும் எடுத்துக்காட்டு எனக் கருதினான். இது சங்க காலத்திலிருந்தே இயங்கிவந்த மரபெனலாம். பல மன்னர்களின் அடியை மாற்றாரின் முடி அலங்கரித்தது எனப் புலவர் பாடுவர். மூன்றாவது குலோத்துங்கன் வீரபாண்டியன் என்பானை வென்றான். அவனை அழைத்து அவனது முடிமேல் தன் அடியை வைத்தான் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன.

முடியால் கழல் :

மாற்றரசரது பொன்முடியைக் கைப்பற்றிய மன்னன் அம் முடியைக் கழலாக்கி தன் காலில் அணிந்து கொள்ளுதல் மரபு. ''கடந்தட்டவர் முடிபுனைந்த பசும் பொன்னின் அடிபொலியக் கழல் தைஇய வல்லாள'' எனக் கிள்ளி வளவனை ஆவூர் மூலங்கிழார் பாடுகிறார் (புறம் 40). மாற்றரசரது முடிகளிலிருந்து ஆரம் செய்து மார்பில் அணிவதும் ஒரு மரபு என்பது 'எழுமுடி மார்ப' (சிலம்பு 28-169) என்னும் தொடரால் விளங்கும். ஏழு அரசர்களை வென்று அவர்களது ஏழு முடியாலும் ஆரம் செய்து அதனைத் தரித்தான்.

முரசு :

முடிபுனைவிழாவில் மூன்று முரசுகளும் முழங்கின. மூன்று முரசுகள் வீர முரசு, நியாய முரசு, தியாக முரசு என்பவை ஆகும். வீர முரசுக்கு கொற்ற முரசு என்றும் பெயர். அரசனுடைய பல்வேறு தொழில்களுக்கு தனித்தனி முரசு இருந்தது. முரசு ஒரு கட்டிலின் மேல் வைக்கப்பட்டிருக்கும்.

புலியையும் குத்திக் கொல்லும் ஆற்றல் வாய்ந்த கொல்லேற்றின் (காளையின்) பைந்தோலை சீவாது போர்த்தி முரசு கட்டப்படும். இதை மயிர்க்கண் முரசம் என்று இலக்கியங்கள் கூறும் (மதுரைக்காஞ்சி 732).

முரசு கரிய மரத்தால் செய்யப்பட்டிருக்கும். மேல் உள்ள தோல் வாரால் இழுத்துக் கட்டப்பட்டிருக்கும். இதனுடைய கண் பேயின் கண்ணை ஒத்திருக்கும் என்று கூறுவது மரபு. இதன் பக்கங்களில் மயில் பீலியும், தளிரோடு கூடிய உழிஞை என்னும் கொடியும் கட்டப் பட்டிருக்கும். முரசை அடிக்குங் குறுந்தடிக்குக் கடிப்பு என்று பெயர். முரசில் தெய்வம் உறைவதாகக் கொண்டு அதற்கு வழிபாடு செய்வர் (பலிபெறு முரசம் புறம். 362) ஏற்றுரி முரசின் இறைவன் (பெருங். 2-2: 29-30). முரசிற்கு நீராட்டி பலி கொடுப்பது வழக்கம். இம்முரச வழிபாட்டுக்குத் தனியாக ஒருவன் நியமிக்கப் பட்டிருந்தான். அவன் மந்திரங்கூறி இரத்தமும் கள்ளும் கலந்த பலியை, பிண்டமாக முரசிற்குப் படைத்தான் என்று சங்க கால நூல்கள் கூறுகின்றன. (புறம் 51; பதிற்றுப்பத்து 30). வீர முரசம் நீராட்டப் பெறுவதும் (பதிற்றுப்பத்து 19. 7) இரத்தத்தைக் கொண்டு பூசிப் பதும் (பதி. பத். 29) சங்க கால மரபு எனப் பதிற்றுப் பத்தில் காணலாம். முரசு கட்டில் மிகப் பெரியதாக இருந்தது. முரசு நீராட்ட எடுத்துச் செல்லப்பட்ட போது அது அரசனுடைய முரசு கட்டில் என்று அறி யாது மோசிகீரன் அதன்மீது படுத்து உறங்கி விட்டான். அரசனுடைய முரசு கட்டிலில் யாரும் ஏறக் கூடாது. இந்தத் தவற்றைப் பொறுத்ததோடன்றி கீரனுக்கு சாமரம் வீசினன் சேரன் இரும்பொறை. இந் நிகழ்ச்சி யால் ஒப்பற்ற பாடல் ஒன்று தமிழுக்குக் கிடைத் துள்ளது.

சேர சோழ பாண்டியரை 'முரசு முழங்கு தானை மூவர்' என்று இலக்கியங்கள் கூறும் (பொரு-54, பெரும் பாண். 33, புறம் 35). வெற்றி பெற போர் மீது செல்லும் அரசன் நல்ல நாளில் வாளோடும், குடையோடும், வீர முரசையும் வடதிசை பெயர்த்து வைத்தல் மரபு. போரில் பகைவர் நடுங்க முரசைச் சாற்றுவது வழக்கம். இடியென முழுங்கு முரசு என்று புறம் (17) கூறுகிறது. பல்லவ அரசன் பரமேச்வரவர்மனுக்கும், சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனுக்கும் நடந்த போரில் முரசொலி இடிபோல் முழங்கி மாற்றாரின் மனத்திலே பயத்தைத் தோற்றுவித்தது என்று கூரம் செப்பேடுகள் கூறுகின்றன.

முரசுகளுக்குப் பெயர்கள் உண்டு. பல்லவ மன்னன் நந்திவர்மனின் முரசுக்கு 'சமுத்திரகோஷம்' என்றும் 'கடுமுக வாதித்ரா' என்றும் பெயர் இருந்தது. கடல் போல முழங்கும் முரசு என்றும் கடுங்குரன் முரசம் என்றும் பதிற்றுப்பத்து (68, 69) குறிப்பதை இது நினைவூட்டுகிறது.

> ''கடல் போல முழங்கும் குரல்கடுவாய்
> பறையுடைப் பல்லவர் கோன்''

என்று திருமங்கை மன்னன் தன் பாடலில் குறிக்கிறார்.

மாற்றரசர்களின் கடுவாய் முரசைப் போரில் கைப்பற்றுவது சிறப்பாகக் கருதப்பட்டது. பல்லவ நந்திவர்மனுடைய முரசை சாளுக்கியன் கைப்பற்றிய செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது. மாற்றரசர்களின் முரசைக் கைப்பற்றி அதன் கண்ணைக் கிழிப்பது ஒரு மரபு. வெற்றி கொண்ட மன்னன் வெற்றி பெற்ற மறுநாள் போர்க்களத்தில் வீர முரசுக்குச் சிறந்த வழிபாடு நடத்தி, படை வீரர்களுக்குப் பெருஞ்சோற்று விழா அளித்தான்.

**செங்கோல்:**

அரசையும், காவலையும், நீதிமுறை செய்தலையும் குறிக்கும் சின்னமாகக் கோல் கருதப்பட்டது. 'ஆட்டை மேய்க்கும் இடையன் கையில் கோல் கொண்டுள்ளான். அதுபோல் குடிமக்களை மேய்க்க மன்னன் கொண்டது கோல்' என்று ஒரு பேராசிரியர் குறித்துள்ளார். மக்களை ஆடு மாடுகளாகவும், மன்னனை இடையனாகவும், செங்கோலை இடையன் கைக்கோலாகவும், தமிழ் இலக்கியங்களோ, கல்வெட்டுகளோ உவமிக்கவில்லை. குடியை மேய்த்தல் என்று இல்லாது அதற்கு நேர்மாறாக, குடியைத் தழுவி கோலோச்சும் மன்னனின் அடியை உலகம் தழுவும் என்று வள்ளுவர் குறித்துள்ளார். கோன்மையை, செங்கோன்மை என்றும் கொடுங்கோன்மை என்றும் இரு பிரிவுகளில் வள்ளுவப் பேராசான் தன் நூலில் சிறப்பாகக் குறித்துள்ளார். இவற்றில் நீதி முறை செய்தல், ஆட்சி, காவல் என்ற மூன்று பொருள்களையுமே அவர் கோன்மையின் இலக்கணமாக, "யார் மாட்டும் தேர்ந்து செய்வதே முறை", 'மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி' "அந்தணர் நூற்கும், அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்" என்றும் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறு தராசின் கோல், எடை எடுக்கும் போது சீராக நிற்குமோ, அதுபோன்று நீதிமுறை செய்வதில் நடுநிலை பிறழாது புரியும் சின்னமாகச் செங்கோல் கருதப்பட்டது. இப்பொருளில் 'அறம் துஞ்சும் செங்கோல்', என்று புறநானூறு குறிக்கிறது. செங்கோலில் அறத்தின் தெய்வம் தங்கி இருக்கும் என்று ஆன்றோர் நம்பினர் (புறம். 35). அரசன் தன் மக்களாயினும் நடுநிலை பிறழாது நீதி வழங்கினான் என 'நமரென கோல் கோடாது, எனப் புறநானூறு குறிக்கிறது (புறம். 53). இதனால் அறவோர் மன்னனைப் புகழ்ந்தனர் (புறம். 221).

ஏரை உடைய குடி மக்களுக்கு நிழல் தரும் வகையில் கோலோச்சப் பட்டது என்ற பொருளிலும் இலக்கியங்கள் கூறுகின்றன. நல்லியக்கோடனை, "ஏரோர்க்கு நிழன்ற கோலினை" என்று நல்லூர் நத்தத்தனர் பாடுகிருர் (சிறுபாணு–233).

காவல் என்ற சொல்லில் கல்வெட்டுகளில் செங்கோல் வழங்கப்பட்டுள்ளது. "சக்கரமும் செங்கோலுந் திக்கனைத்துங் காவல் கொள்ள" என்று ஒரு மெய்கீர்த்தி கூறுகிறது. சினப்புலியும் செங்கோலும் அனைத்துயிர்க்கும் காவல் பூண என்று இரண்டாம் இராஜராஜனின் மெய்கீர்த்திகளும் கூறும். பல இடங்களில் அரசு அல்லது ஆட்சி என்ற பொருளிலும் காண்கிறோம். வீர ராஜேந்திரனின் மெய்கீர்த்தி "இமையத்தோடும் கிடந்து சேது வரம்பாக செங்கோல் செலுத்தி" என்று கூறுகிறது. இதே கருத்தில் "முறையில் செங்கோல் திசைதொறும் செல்ல" (அதிராஜேந்திரன் மெய்கீர்த்தி) என்றும், சக்கரமும் செங்கோலும் திக்கனைத்தும் செல்ல (குலோத்துங்கன் மெய்கீர்த்தி) என்றும், 'செங்கோல் எண்டிசை நடப்ப' (சடையவன்மன் சுந்தர பாண்டியன் மெய்கீர்த்தி) என்றும், மெய்கீர்த்திகள் குறிக்கின்றன. அரசு செயல்படுவதை "கோலியங்குதல்" என்று இலக்கியங்கள் குறிப்பதும் இக் கருத்தை வலியுறுத்துகின்றது. முடி தரிப்பது எவ்வாறு அரசன் பொறுப்பேற்றதின் சின்னமாகக் கருதப்பட்டதோ, அதே போல் செங்கோல் ஏந்துதலும் ஆட்சி பொறுப்பேற்றதின் சின்னமாகக் கருதப்பட்டது. பாண்டிய மன்னன், பராந்தக வீரநாராயணன் தன் ஆட்சியாண்டை "செங்கோல் யாண்டு" என்று கூறுவது இதையே குறிக்கும்.

ஆயினும் மாற்ருன் முடியைக் கவர்ந்தால், அவன் அரசைக் கைப்பற்றியதாக முன்னோர் கருதினர். அது

போல் மாற்றானின் செங்கோலை மன்னன் கைப்பற்றிய தாகவோ வளைத்ததாகவோ குறிப்பு இல்லை.

இறைவனின் அருளால், இறைவனுக்காக மன்னன் நாட்டை ஆள்வதாக ஒரு கருத்து வழிவழி வந்துள்ளது. இதைக் குறிக்கும் வகையில் மதுரையில் திருமலை நாயக்கர் ஆண்டுதோறும், ஒரு விழா அங்கயற்கண்ணி ஆலயத்தில் நடத்துதல் வழக்கம். சித்திரைத் திரு விழாவில் எட்டாம் நாள், கோயிலில் அங்கயற்கண்ணி அம்மைக்கு சிறப்பாக வழிபாடு நடத்தி, அன்னையிட மிருந்து நவரத்தினங்கள் இழைத்த செங்கோலை மன்னன் பெற்று வீதி உலாவாகத் தன் அரண்மனைக்கு எடுத்துச் சென்று, அங்கே அரியணையில் அதை ஏற்று வது வழக்கம். ஒரு நாள் முழுவதும் செங்கோல் அரி யணையில் இருக்கும். அதற்கு சிறப்பு வழிபாடுகள் உண்டு. மறுநாள் அது கோயிலுக்கு எடுத்துச் செல்லப் படும். இதைச் செங்கோல் விழா என்பர். இதை திரு மலை நாயக்கர் ஆண்டுதோறும் நடத்தினார் என அறி கிறோம். இதையே அவருக்குப் பின் வந்த ராணி மங்கம்மாளும் பின்பற்றியிருக்கிறாள். இதைச் சித்தி ரிக்கும் ஓவியம் ஒன்று மதுரைக் கோயிலில் இன்றும் உள்ளது.

குடை :

மன்னன் என்பதைக் குறிக்க எவ்வாறு முடியும், செங் கோலும் திகழ்ந்தனவோ, அது போன்று குடையும் அரசச் சின்னமாகவே கருதப்பட்டது. அரசனின் முடி புனை விழாவில் வெண்மையான குடையும் கவிக்கப்பட்ட தென கலிங்கத்துப் பரணியிலிருந்து அறியலாம். அரண் மனையின் உள்ளே வீற்றிருந்தாலும், வெளியில் சென் றாலும், போர்க் களத்தில் இருப்பினும் அரசனின் தலை மீது குடை பிடிக்கப்பட்டது. குலோத்துங்க சோழன்

காஞ்சியில் செம்பொன்மாளிகையில் சித்திரமண்டபத்தில் அமர்ந்திருக்க, அவன் மேல் குடை கவிக்கப் பெற்றிருந்தது'' எனப் பரணி ஆசிரியர் “வெண்குடை ஒன்று நிழற்றவே'' என்று பாடுகிறார். குடை அரச உரிமையைக் குறிப்பது என்ற பொருளில் புறம் (367) “கொற்ற வெண்குடை'' என்று குறிக்கிறது. செங்குட்டுவனை “மாலை வெண்குடை மன்னன்'' என்று சிலம்பு கூறும்.

இக்காலத்தில் கோயில் திருவிழாக்களிலே எடுத்துச் செல்லப்படும் குடைகளைப் போலத்தான் அக்கால கொற்றக்குடைகள் திகழ்ந்திருக்க வேண்டும். காஞ்சியில் வைகுந்தநாதர் கோயிலில் பல்லவ வரலாற்றுச் சிற்பங்கள் இருக்கின்றன. அவற்றில் பல அரசர்களின் தலைமேல் கொற்றக்குடை கவித்துள்ளதைக் காண்கிறோம். இவை அனைத்தும் கோயில் குடைகளையே ஒத்திருப்பதைக் காணலாம். கொற்றக்குடைகள் நெடிய பொன்னணிந்த காம்புகள் கொண்டு வெண்மையாக விளிம்புகளில் முத்துதாமங்கள் தொங்க திகழ்ந்தன என்று பல குறிப்புகளில் இருந்து காணலாம்.

வெண்கொற்றக் குடையை புறநானூற்றுப் புலவர் வெள்ளைக்குடி நாகனர் இலக்கிய நயம் சிறக்கப் பாடியுள்ளார். “வளவ, நின்னுடைய குடை வெயில் மறைப்பதற்காக கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. வருத்தமுற்ற குடியை நிழற்செய்தல் காரணத்தால் கொள்ளப்பட்டது'' என்று “வியன் குடை வெயின் மறை கொண்டன்றோ அன்றே வருத்திய குடி மறைப்பதுவே கூர்வேல் வளவ'' என்று பாடுகிறார். மக்களுடைய வருத்தத்தைப் போக்கும் சின்னமாக இது கருதப்பட்டதால் குளிமை நிறைந்தது என்று புலவர்களால் பாடப்பெற்றது. ‘தொல்குல மாமதி போல் பனி முத்திலங்குங் குடை

மன்னன்' என்று நெடுமாறன் புகழப்படுகிறான் (பாண்டி. கோ-131). "அகில புவனமும் களிப்பதோர் புது மதி போல வெண்குடை மீமிசை நிழற்ற" என்று விக்கிரம சோழன் மெய் கீர்த்தியும், திங்கள் வெண்குடை திசைகளெட்டுந் தாங்கும் தனிக்கூடந்தான் என விளங்க" என்று இரண்டாம் இராஜராஜன் மெய்கீர்த்தியும் பாண்டியரது வேள்விக்குடி செப்பேடு "குளிர் வெண்குடை மண்காப்ப" என்றும் கூறுகின்றன. வெண்குடை இருநிலவளாகம் எங்கனும் தனது இருநிழல் வெண்ணிலாத்திகழ' என்று முதல் குலோத்துங்களின் மெய்கீர்த்தி குறிக்கிறது. இன்னுயிரைக் காப்பது என்னும் பொருளில் அதிராஜேந்திரசோழனின் கல்வெட்டு "திங்களேர் மலர்ந்து வெண்குடை மண்டிய மன்னுயிர் தோறும் இன்னருள் சுரந்து நிரைநிழல் பரப்பி" எனக் குறிக்கிறது. மக்களைப் பெற்ற தாயினும் சிறக்க காக்கவல்லது என்று "பண் மணிக் கொற்ற வெண்குடை நிழல் குவலயத்து உயிர்களைப் பெற்ற தாயினும் பேணி" என்று வீரராஜேந்திரனின் கல்வெட்டு கூறுகிறது.

மன்னனின் ஆட்சி எதுவரை பரந்து நின்றதோ அது வரையிலும் மன்னனின் குடை நிழல் அளித்தது என்று புலவர் சிறக்கப்பாடுவர். விக்கிரம சோழனின் மெய்கீர்த்தி, சந்திரன், சூரியன் வரையும் அவன் குடைநிழல் பரவியது என்று "இரு சுடரளவும் ஒரு குடை நிழற்ற" என்று குறிக்கிறது. மாறவர்மன் சுந்தர பாண்டியனின் மெய் கீர்த்தி "ஒரு குடை நிழல் இரு நிலங்குளிர" என்று குறிக்கிறது.

கடும் வெய்யில் காய்ந்தாலும், பெரும் மழை பெய்தாலும், கொடிய காற்று வீசினாலும் தடையின்றி மக்களைப் பாதுகாக்கவல்லது நெடுஞ்செரலாதனது குடை என்று பதிற்றுப்பத்து (17) கூறும்.

மன்னன் குடைக் கீழமர்ந்து அரசாண்டதை "வெண் குடை நிழற்கீழ் செங்கோலோச்சி" என்று குலோத்துங்க சோழனின் மெய்கீர்த்தி கூறுகிறது. முதற் குலோத்துங் கனின் மெய்கீர்த்தி "கொற்றக் குடைக்கீழ் கொடைக் கொடி ஏந்தினன்" என்று கூறுகிறது.

அரசனது குடை தெய்வக் கோயில்களை வலம் வரும் போது தாழ்த்திப் பிடிக்கப்பட்டது. பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதி சிவபெருமானின் கோயிலை வலம் வரும்போது அவன் குடை தாழ்த்திப் பிடிக்கப்பட்டது என்று "நின் குடை முனிவர் முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே இறைஞ்சுக பெரும' (புறம். 6) எனக் குறிக்கப் படுகிறது. தெய்வ வழிபாட்டைத் தவிர பிற இடங்களில் மன்னனின் குடை உயர்த்தி, அனைத்திற்கும் முன்னர் பிடிக்கப்பட்டது. சேர, பாண்டிய மன்னர்களது குடை கள் பின்னுற, சோழ மன்னனின் குடை உயர்ந்து முன் னின்றது என்று (புறம் 31) கூறும்.

மன்னன் மாற்றரசர் மீது படையெடுக்கப் புறப்படும் போது நல்ல நாளில் நல்ல முகூர்த்தத்தில் குடை, வாள், முரசு ஆகியவற்றை வடதிசையில் பெயர்த்து வைப்பது மரபு. 'வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க' என்பது செங்குட்டுவன் ஆணை (சிலம்பு 26-33). இதை 'குடைநிலை வஞ்சி' என்று சிலப்பதிகாரம் (25-141) கூறும். இதை குடைநாட் கோளல் என்றும் பிற இலக்கியங்கள் கூறும். குடையையும், வாளையும், முரசத்தையும் பெரிய யானையின்மேல் ஏற்றி புறநிலைப் புரிசையில் வைப்பர் (சிலம்பு-5, 91-92; 26. 44-5,).

போரில் மன்னனது குடை வீழ்ந்தால் அவன் தோற்றான் என்று கருதுவர். பல்லவ மன்னன் பரமேச் சுரவர்மன் சாளுக்கிய மன்னன் விக்ரமாதித்தனுடன் கடும் போரிட்ட போது, பல்லவன் இறுதியில் வெற்றி

பெற்றான். போர்க்களத்தில் மாற்றானின் குடை சிதறியது என்று கூரம் செப்பேடு குறிக்கிறது. மாற்றானின் குடையை போர்க்களத்தில் வீழ்த்துவது பேராண்மையாகக் கருதப்பெற்றது (சிலம்பு, 28-91). குடையை வீழ்த்துதல் மட்டுமல்ல, அதைக் கைப்பற்றுவதும் வீரரின் மரபு.

பெருஞ்சேரலிரும்பொறை இரு பெரு வேந்தரையும் வென்று அவருடைய முரசுங் குடையும் கலனும் கொண்டான் (பதி. பத். பதிகம் 8).

போரில் மாற்றரசர்களை வென்று அவர்களிடமிருந்து கவர்ந்த கொற்றக் குடையின் காம்புகளை தலைக்கோலாகச் செய்வது வழக்கம். தலைக்கோலின் கண்கள் தோறும் நவரத்தினங்களால் கட்டி இடைப் பகுதியை பொன் தகட்டால் கட்டுவர். இதை இந்திரன் மகன் சயந்தனைக் கொண்டு வழிபட்டு அரசனின் அரண்மனையில் வைப்பர். நாடகக் கணிகை தலைக்கோல் கொள்ளும் நாளன்று புண்ணிய நீர் கொணர்ந்து தலைக்கோலுக்கு நீராட்டி, மாலை சூட்டி, பட்டத்து யானைமீது அமர்த்தி அரசன், அமைச்சர் முதலியோர் தேரிடம் எடுத்துச் சென்று, தேரின்மீது அமர்ந்துள்ள பாடுவாரிடம் கொடுத்து, ஊர்வலமாக நாட்டிய அரங்கு சேர்ந்து தலைக்கோலை எதிர்முகமாக வைத்து நாட்டிய மகளை ஆடச் செய்து அவளுக்கு தலைக்கோலி என்னும் பட்டம் அளித்தல் மரபு என்று சிலம்பிலிருந்து அறிகிறோம். இது போன்று பிற்காலத்திலும் அரங்கேறிய நாட்டிய மகளுக்கு தலைக்கோலி என்னும் பெயர் கொடுத்துள்ளதை பல கல்வெட்டுகளிலிருந்து அறியமுடிகிறது.

**அரியணை :**

மன்னன் அரியணை ஏறுவது முடிபுனை விழாவின் ஒரு சிறந்த அங்கம். அரியணையை "அரிமான் ஏந்திய முறை

முதல் கட்டில்" என்று சிலப்பதிகாரம் (சிலம்பு - 529) குறிக்கும். மாற்றரசர்களின் பட்டத்து யானையை வீழ்த்தி அதன் தந்தங் கொண்டு அரியணை செய்வது ஒரு மரபென்று "அரசு வாவமைப்பக் கோடறுத்தி யற்றிய அணங்குடை மரபில் கட்டில்" என்று பதிற்றுப் பத்து (79) குறிக்கிறது. அரியணை என்பதிலிருந்து இக் கட்டில்களின் கால்கள் சிங்க உருவில் அமைக்கப்பட்டி ருந்தன என்பது தெளிவு. இதையே சிம்மாசனம் என்றும் சிங்காசனம் என்றும் குறிப்பர். அரசர்களின் கட்டில் மட்டுமின்றி கடவுளர்க்கும் இது போன்று அணைகள் அமைத்தனர் என்பதை "சிங்கம் சுமந்த மாசறு மணியணை மேய உரவோன்" என்று கூறும் திருப்பா மாலை (யாப்பருங்கலவிருத்தி - மேற்கோள்) அடிகளால் அறியலாம். காஞ்சி வைகுந்த பெருமாள் கோயிலில் பல பல்லவ அரசர்கள் அரியணைமீது அமர்ந்திருப்பதைச் சிற்பங்கள் சித்தரிக்கின்றன.

அரியணைகள் தந்தத்தால் மட்டுமின்றி பொன்னால் செய்யப்பட்டு பல விலையுயர்ந்த ரத்தினங்கள் இழைக் கப்பட்டிருந்தன என்பதையும் மெய்கீர்த்திகளில் இருந்து அறியலாம். சோழர்களின் மெய்கீர்த்திகள் அனைத்தும் அரியணையை 'செம்பொன் வீரசிம்மாசனம்' என்று குறிக்கின்றன. பிற்காலப் பாண்டியர்களின் மெய்கீர்த்தி களும் வீரசிம்மாசனம் என்றே குறிக்கின்றன.

அரசர்கள் தலைநகரில் அரண்மனையில் அமர்ந்து முடி சூட்டப்பட்டு கோலியற்றும் கட்டிலுக்கு மட்டும் இன்றி, அவன் நாட்டில் பல்வேறு இடங்களில் இருந்த அரண் மனைகளில் அமைக்கப்பட்ட அரச கட்டில்களுக்கும் அரியணை என்ற பெயர் இருந்தது. குலோத்துங்கன் கங்கைகொண்ட சோழபுரத்தில் அரியணை ஏறினான். அவனுக்கு காஞ்சியில் ஒரு அரண்மனை இருந்தது.

அதில் குலோத்துங்கன் வீற்றிருந்ததையும், சிம்மாசனம் என்று குறிக்கப்படுவதையும் கலிங்கத்துப் பரணியில் காணலாம் (கலிங். பரணி - 318).

அரியணையில் தெய்வம் உறையும் என்று பண்டையோர் கருதினர். அரியணைக்குப் பெயரிடுதலும் உண்டு என்று அறிகிறோம். "தோற்றுப் போன மாற்றரசர்களின் பெயரைத் தங்கள் அரியணைக்கு அரசர்கள் இடுவது பிற்கால வழக்கம் என்றும், இது சங்க காலத்தில் இல்லை" என்றும் ஒரு ஆசிரியர் குறிக்கிறார். இது ஏற்புடையதாக இல்லை.*

பாண்டியன் ஸ்ரீவல்லபனின் அரியணைக்குப் 'பாண்டிய ராஜன்' என்ற பெயர் இருந்தது என்பது "மதுரைக் கோயிலில் உள்ளாலை அழகிய பாண்டியன் கூடத்துப் பள்ளிக் கட்டில் 'பாண்டிய ராஜனில்' எழுந்தருளி. என்று வரும் (223 / 14) கல்வெட்டுகளால் அறியலாம். இதிலிருந்து மன்னன் தனக்கு மிகவும் உகந்த பெயரையே அரியணைக்குச் சூட்டினான் என்று கொள்வது பொருந்தும். இப் பாண்டிய மன்னனின் அரண்மனையில் பள்ளியறைக் கூடத்தில் கலிங்கத்தரையன் என்னும் கட்டில் இருந்தது (257 / 14). இம் மன்னனின் உயர்ந்த அதிகாரியின் பெயர் கலிங்கத்தரையன் என்பது. இதுவும் மேற் சொன்ன கருத்தையே வலியுறுத்துகிறது. மாறவர்மன் சுந்தர பாண்டியனின் ஆட்சியில் மதுரை அரண்மனையில் இருந்த கட்டிலுக்கு மழவராயன் என்றே பெயர் இருந்தது (431 / 4). பின்னர் வந்த சடையவர்மன் குலசேகரன் காலத்திலும் மதுரையில் இருந்த கட்டில் மழவராயன் என்றே அழைக்கப்பட்டது (301 / 4). இதே மன்னன் காலத்தில் கோட்டாற்றில் ஒரு அரண்மனை இருந்தது. அதில்

---

*Dr. N. Subrahmanian, Sangam Polity p. 75.

இருந்த கட்டிலும் மழவராயன் என்றே அழைக்கப்பெற்றது (428 / 4). இம்மன்னனின் காலத்தில் மதுரை அரண்மனையில் பள்ளியறையில் இருந்த கட்டிலுக்கு மழவ ராயன் என்றும், ஸ்ரீ வல்லபன் கூடத்தில் இருந்த கட்டிலுக்கு முனையதரையன் என்றும் பெயர் (293 / 4). இவ்வாறு பெயர் பெற்றவை அனைத்தும் 'பள்ளிக்கட்டில்' அல்லது 'பள்ளிப் பீடம்' என்று குறிக்கப்படுகின்றன. ஆதலின் இவை அரியணைகளா அன்றி பள்ளி கொள்ளும் கட்டில்களா என்னும் ஐயம் தோன்றலாம். ஆயினும் அரச ஆணைகள் இவற்றிலிருந்தபோது அளிக்கப்பட்டன என்று குறிக்கப் பெறுவதால் இவற்றை அரியணை என்று கொள்வதில் தவறில்லை.

**கொடி :**

முடி புனைவிழாவில் கொடி எடுத்தல் ஒரு அங்கமாகக் கருதப்பட்டது. குலோத்துங்கனுக்கு நடந்த முடிவிழாவில், புலிக்கொடி எடுக்கப்பெற்றது என்பதை "புலிவளர்க் கொடி எடுத்தலும் அதுமுதல் கொடி எடுத்தனர் அமரர் தம் விழவெடுக்கவே" என்னும் பரணி (266) அடிகளால் அறியலாம். இதிலிருந்து கொடியும் அரச சின்னங்களில் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்பட்டது என்பது தெளிவு. அரசனுடைய கொடியை விசைய வெண் கொடி (புறம். 462) என்றும், விசையம் வெல்கொடி (முல்லை. 91) என்றும், வென்றெழுகொடி (மலைபடு. 582) என்றும், வான்தோய் வெல்கொடி (பதி. பத். 67 - 1) என்றும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இதையே பிற்காலக் கல்வெட்டுகள் வீரக்கொடி என்று புகழ்கின்றன. மூன்றும் குலோத்துங்கனின் மெய்கீர்த்தி 'வீரக் கொடி தியாகக் கொடி எடுத்து' என்று கூறுகிறது. மன்னனின் நாட்டு எல்லையின் இறுதி வரை கொடி பறந்ததாகக் கூறுவது மரபு. 'செங்கோலும் கொடிப்

புலியுந்திகிரிவரை வரம்பளக்க' என்று மூன்றும் இராஜ ராஜனின் கல்வெட்டுகள் கூறுகின்றன.

சேரரும், சோழரும், பாண்டியரும் முறையே வில், புலி, மீன் கொடிகளைக் கொண்டிருந்தனர் என்பது அனைவரும் அறிந்ததே. பல்லவர் எருதைத் தங்கள் கொடியாகக் கொண்டிருந்தனர். 'அடலேறு வலத்துயர் வைத்தபிரான்' என்று தெள்ளாற்றெறிந்த நந்தி குறிக் கப்படுகிறான். 'விருஷத்வஜன்' என்று பல்லவர் கல் வெட்டுகள் கூறும். இவ்வாறு மன்னர்கள் தங்கள் குலக் கொடிகளைக் கொள்வதோடு, வேறொரு கொடியையும் தாங்கி நின்றனர் என்று அறிகிறோம். பரமேச்சுரவர்மன் 'கட்வாங்ககேது' என்று குறிக்கப்படுகிறான். நந்திவர்மன் பல்லவமல்லனும் கட்வாங்கக் கொடியைக் கொண்டி ருந்தான்*. நந்திவர்மனைத் தோற்கடித்த சாளுக்கிய மன்னன் விக்ரமாதித்தன், பல்லவனின் கட்வாங்கக் கொடியைக் கைப்பற்றியதாகக் குறிக்கிறான். கட்வாங்கம் என்பது கை எலும்பு ஒன்றில் மண்டை ஓடு பொருத்தி விளங்குவதாகும். இரண்டு அரசர்கள் கொண்டிருந்த தாகக் குறிப்பதால் இதை ஒரு குறிப்பிட்ட அரசரின் தனிக்கொடியாகக் கொள்வதற்கும் இல்லை. எருதுக்கொடி இருக்க இதையும் ஏன் பல்லவர்கள் தாங்கியிருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இதே போன்று மீன்கொடி கொண்ட பாண்டியன் அரிகேசரி பாராங்குச மாறவர்மன் இடியின் உருவை தன் கொடியில் கொண்டிருந்தான். கொடிக்கண் இடியுரு வேந்திய கோன் (பாண்டி. கோ. 242) என்றும், மழையேறு யர்த்த மன்னவன் (184) என்றும், வானேறணிந்த வென் றிக் கொடியன் என்றும் (138) பாண்டிக் கோவையில் இவன் குறிக்கப்படுகிறான்.

---

*Dr. Meenakshi — Administration & Social Life under the Pallavas Page 43.

**இலச்சினை:**

மன்னனுடைய கொடியில் விளங்கும் சின்னமே அவனுடைய இலச்சினையாகக் கருதினர். சோழனுடைய கொடி புலிக் கொடி என்று அறிவோம். அதே சின்னம் கோட்டைக் கதவிலும், ஏற்றுமதி இறக்குமதி செய்யப் படும் பொருள்கள் மீதும் இடப்பட்டது என்று சிலப்பதி காரத்திலிருந்தும், பட்டினப்பாலையிலிருந்தும் அறி கிறோம். தெள்ளாற்றெறிந்த நந்தியை "விடை மண் பொறி ஓலை விடேல் விடுகே" என்று கூறுவதிலிருந்து அவனுடைய இலச்சினை எருது என்று அறிகிறோம் பல்லவ மன்னர்களின் செப்பேடுகள் பல கிடைத் துள்ளன. அவற்றில் எருது இலச்சினையாகப் பொறிக் கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

சோழர்களுடைய சில செப்பேடுகளிலும், பாண்டியர் செப்பேடுகளிலும், வில், கயல், புலி மூன்றும் பொறிக்கப் பட்டுக் காணப்படுகின்றன. சோழனின் சில செப்பேடு களில் புலியும், மீனும் மட்டும் காணப்படுகின்றன. இது போன்ற செப்பேட்டு இலச்சினைகளில் இவ்வரச சின்னங் களைத் தவிர இவற்றின்மேல் ஒரு குடையும், இருபுறமும் கவரிகளும் காண்பிக்கப்பட்டுள்ளன. மேலும் புறத்துக் கொன்றாகக் குத்து விளக்குகள் காண்பிக்கப்பட்டுள்ளன சுற்றிலும் அரசனின் பெயர் பொறிக்கப்பட்டும் விளங்கும்.

வில், கயல், புலி மூன்றையும் இலச்சினையாகப் பொறிப்பது சங்க காலத்திலேயே தமிழகத்தில் நிலவி வந்த மரபு என்று அறிகிறோம். வளைந்த வில்லைப் பொறி யாக உடையவன் என்று புகழப்படும் செங்குட்டுவனை 'செருவிற்கயற் புலியான்' என்று சிலம்பு குறிக்கிறது (ஊசல்வரி - 25). இவற்றைச் செந்தமிழ் நன்னாட்டு இலச்சினை என்றே சிலம்பு கூறுகிறது (25-171). செங்

குட்டுவன் கல் கொண்டு வருவதற்காக, வடதிசைப் புறப் படுவதை வடநாட்டு மன்னருக்குத் தெரிவிப்பதற்காக ஓலை எழுதப்பட்டது. அதில் இம்மூன்றும் பொறிக்கப் பட்ட இலச்சினை இடப்பட்டது என்று "வடதிசை மருங்கின் மன்னர்க்கெல்லாம் தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி மண் தலை ஏற்க வரைக" (சிலம்பு. 25. 170-3) என்று கூறுகிறது. பாண்டிக்கோவை நெடுமாறனை "சிலைமிசை வைத்த புலியுங் கயலும் சென்று ஓங்கு செம் பொன்மிசை வைத்தபிரான்" என்று குறிப்பதிலிருந்து இவனும் இம்மூன்று சின்னங்களையும் கொண்டிருந்தான் என்று அறியலாம். இராஜராஜன், இராஜேந்திரன் ஆய சோழமன்னர்களின் செப்பேடுகளில் மூன்று சின்னங் களும் பொறிக்கப்பட்டுள்ளன என்று கண்டோம். சேர ரையும், பாண்டியரையும் வென்றதைக் குறிக்கவே அவர் களது சின்னங்களைத் தங்கள் சின்னங்களோடு பொறித் துள்ளனர் என்று ஆராய்ச்சியாளர் குறிப்பர். இதை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு சில செப்பேடுகளில் புலியும், மீனும் மட்டும் உள்ளன. இதிலிருந்து சோழன் பாண்டியரை மட்டும் ஜெயித்தான் என்றும், சேரரை வெற்றி காணவில்லை என்றும் கொள்ள வேண்டும். இது ஏற்புடையதாகக் காணப்படவில்லை. காரணம், முதல் இராஜேந்திர சோழனின் கரந்தைச் செப்பேட்டில் வில் பொறி இல்லை. இருப்பினும் அவன் தென்னகம் முழு வதையும் வென்றான் என்பதில் ஐயமில்லை. ஒரே மன் னனின் செப்பேடுகளில் உள்ள இலச்சினைகளிலும், சில மாறுதல்களைக் காண்கிறோம். ஆதலின் அந்தந்த மன்னர் களின் அவ்வப்போது ஏற்பட்ட மாற்றத்தையும் கொண்டு இலச்சினைகளில் சில மாற்றங்கள் இருந்தன என்று கொள்வது பொருந்தும்.

இலச்சினைகளில் மூவேந்தர்களின் சின்னங்களும் ஒருங்கே பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால்

இம் மூன்றும் ஒருங்கே கொடிகளில் பொறிக்கப் பட்டிருந்தனவா என்று தெரியவில்லை. மூன்று சின்னங் களும் ஒருங்கே ஒரு கொடியில் பொறிக்கப்பட்டதாகச் சான்றுகள் இல்லை.*

ஆதலின் அரசனுடைய இலச்சினைகளில் அவனது குலச் சின்னத்தைத் தவிர பிற சின்னங்களும் இருந் தன. ஆனால், அவனது கொடியில் குலச் சின்னம் மட்டும் இருந்தது என்று கொள்வதில் தவறில்லை.

அரசன் வீரக்கொடியோடு தியாகக் கொடி எடுத் தான் என்றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன (மூன்றாம் குலோத்துங்கனின் மெய்கீர்த்தி) "வீரத்தனிக்கொடி, தியாகக் கொடியொடும் ஏற்பவர் வருக" என்று வீர ராஜேந்திரனின் மெய்கீர்த்தி குறிக்கிறது. தியாகத்தைக் குறிக்கக் கொடி இருந்தது. ஆனால் அதில் என்ன சின் னம் பொறித்திருந்தது என்று தெரியவில்லை.

போரில் மாற்றரசர்களின் கொடியைப் பிடித்தல் ஒரு வெற்றியாக கருதப்பட்டது. நந்திவர்மனுடைய தானைத் தலைவன் உதயசந்திரன் என்பவன் உதயணன் என்னும் வேட அரசனை வென்று, அவனுடைய மயில் தோகை களால் செய்யப்பட்ட கண்ணாடிக் கொடியை கைப் பற்றினான் என்று உதயேந்திரம் செப்பேடுகள் கூறு கின்றன. (பல்லவர் செப்பேடுகள் பக். 136). இரண்டாம் இராஜேந்திர சோழன் சாளுக்கியரை வென்று அவரது வராக வெல்கொடியைக் கைப்பற்றினான் என்று அவன் மெய்கீர்த்தி குறிக்கிறது.

---

*Dr. N. Subrahmaniam. Sangam Polity. Page. 80.

பேராசிரியர் குறிப்பிட்டுள்ளது தவறு. மூன்று சின்னங்களும் கொடியில் குறிக்கப்பட்டிருந்ததாகக் குறிக்கிறார். ஆனால், நூலில் மூன்று சின்னங்களும், ஓலையில் குறிக்கப்பட்டதாகக் கூறப் பட்டுள்ளது.

அரசன் பட்டாபிஷேகம் செய்து கொண்டு முடி சூடும் போது, உடைவாள் அணிவதும் ஒரு அங்கமாகக் கருதப் பெற்றது. ராமபட்டாபிஷேகத்தின்போது அங்கதன் உடைவாள் ஏந்தினன் என்பதிலிருந்து, இதன் முக்கி யத்துவத்தை அறியலாம். நெற்றியில் பட்டம் கட்டு வதும் ஒரு அங்கம் போலும். மூன்றும் குலோத்துங்கன் பாண்டியனை வென்று மதுரையில் அவனுக்குப் பதிலாகப் பாணனைப் பட்டங் கட்டினன் என்று அவனுடைய கல்வெட்டுக் கூறுகிறது. பட்டம் கட்டுவதால்தான் அரசன் முடிபுனைவதைப் பட்டாபிஷேகம் என்று குறிப் பர். முடிசூட்டும் விழாவைப் பட்டாபிஷேகம் அல்லது மகுடாபிஷேகம் அல்லது மகாபிஷேகம் என்று வட மொழியில் குறிப்பர். "மணிமுடிகவித்து மகாபிஷேகம் மகிழும் நாளில்" என்று பாண்டியனின் செப்பேடு கூறுகிறது.

## முடிசூடும்போது புதுப் பெயர்

முடிசூட்டப்படும்போது புதிய பெயர் ஒன்று சூட்டப்படுவதும் மரபு என்றும் அதற்கு 'அபிஷேக நாம' என்று பெயர் என்றும் கண்டோம். அருள்மொழி வர்மன் என்பவனே முடிசூடும்போது இராஜராஜன் என்று பெயர் ஏற்று உலகப் புகழ் பெற்றான். சோழப் பேரரசர்கள், தாங்கள் வெற்றி கண்ட பல பகுதிகளை ஆளத் தங்கள் குலத்து உதித்தவர்களை நியமிப்பது வழக்கம். அக் காலங்களில் அவர்களுக்கு முடிசூட்டி, புதுப் பெயரளித்து, அப் பகுதிகளை ஆள நியமிப்பது வழக்கம். முதல் இராஜேந்திர சோழன் பாண்டிய நாட்டை ஆளத் தன் மகன் ஒருவனை நியமித் தான். அவனை சோழ பாண்டியன் என்று பெயரிட் டான். முதல் ராஜாதிராஜன் தன் குலத்தவர்களுக்கு வானவன், வில்லவன், மீனவன், கங்கன், பல்லவன் என்று பெயரிட்டு முடிசூட்டிவித்தான். இது போன்று

வெற்றி கொண்ட நாட்டுக் குலப் பெயரையே கொள்வது மிகவும் தொன்மையான மரபு என்று அறிகிறோம். “தென்ன வானவன் செம்பியன் சோழன்” என்றே ஒரு பாண்டிய மன்னன் அழைக்கப்பட்டான். அரிகேசரி பராங்குச மாறவர்மன் ‘வானவன் மாறன்’ என்று அழைக்கப்பட்டான் என்று பாண்டிக் கோவை கூறுகிறது. ‘வானவன்’ என்பது சேரரைக் குறிக்கும். இவன் சேரரைப் பலமுறை வெற்றி கண்டவன் ஆதலின் இப்பெயர் பூண்டான். மாற்று நாட்டு அரச குலத்தவர் தங்கள் நாட்டை ஆள்வதை மக்கள் விரும்பவில்லை. மக்களின் நன்மதிப்பைப் பெறவே இவ்வாறு அந்நாட்டு அரச குலப் பெயரை வெற்றி பெற்ற மன்னர் சூடிக் கொண்டனர்.

தங்கள் குலத்தவர்களுக்கு முடி சூட்டினார்கள் என்றும் அவர்களுக்குப் புதுப் பெயர்கள் சூட்டினர் என்றும் சில நேரங்களில் வெற்றி கண்ட நாட்டு அரச குலப் பெயரை ஏற்றனர் என்றும் கண்டோம். இரண்டாம் இராஜேந்திர சோழன் தன் சிறிய தாதை ஒருவருக்கும், தம்பியர் நால்வருக்கும், மக்கள் அறுவருக்கும், பெயரர்கள் இருவருக்கும் இவ்வாறு பெயர் சூட்டி மகுடஞ் சூட்டினான் என்று அவன் கல்வெட்டுக் கூறுகிறது.

சிறிய தாதை

கங்கை கொண்ட சோழனை ......

இருமுடிச் சோழன் என்றும்,

தம்பியரில்

மும்முடிச்சோழனை ...... சோழபாண்டியன் என்றும்,

வீரசோழனை ...... கரிகால சோழன் என்றும்,

மதுராந்தகனை ...... சோழகங்கன் என்றும்,
பராந்தகதேவனை ...... சோழ அயோத்திராசன் என்றும்,

காதலருள்

இராஜேந்திர சோழனை ...... உத்தம சோழன் என்றும்,
முடிகொண்ட சோழனை ...... விசயாலயன் என்றும்,
சோழ கேரளனை ...... சிலைச் சோழ கேரளன் என்றும்,
கடாரங்கொண்ட சோழனை ...... சோழ சனக ராஜன் என்றும்,
முடிகொண்ட சோழனை ...... சுந்தர சோழன் என்றும்,
இரட்டபாடிகொண்ட சோழனை ...... சோழ கன்னகுச்சியராசன் என்றும்,

காதலர் காதலர் தம்முள்

மதுராந்தகனை ...... சோழவல்லவன் என்றும்,
ஆனைச்சேவகனை ...... நிருபேந்திர சோழன் என்றும்

பருமணிச் சுடர்மணி மகுடஞ் சூட்டினுன் என்று கூறுவதிலிருந்து இவர்கள் முடி சூடும்போது புதுப்பெயர் ஏற்பது ஒரு அங்கம் என்பது தெளிவாகிறது.

முடிசூட்டப்பட்ட மன்னன் தன் குலத்தோர் அனைவரைக் காட்டிலும் சிறந்தோனுகிறுன். தனக்கு இளையவர்களுக்கு மட்டும் இன்றி தன்னைக் காட்டிலும் வயதில் மூத்தவர்களுக்கும் தலைவன் ஆனுன். தன்னிலும் பெரியவருக்கும் முடிசூட்டும் உரிமை பெற்றுன். முதல் இராஜாதி

District Branch Library
Madras-5.

ராஜன் தன் சிறிய தாதைக்கும், தன் [illegible]க்கும் முடிசூட்டினான். இரண்டாம் இராஜேந்திர சோழனும் தன் சிறிய தாதைக்கு முடிசூட்டுவித்தான் என்று அவர்களது மெய்க்கீர்த்திகள் கூறுகின்றன.

அரச பொறுப்பை ஏற்ற போதிலும் முடிசூட்டுவிழா நல்ல நாளில் நல்ல முகூர்த்தத்தில் நடைபெற்றது. விஜய நகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் ஆட்சிப் பொறுப்பை தான் ஏற்று சுமார் இரண்டு வாரங்கள் கழித்து ஸ்ரீ ஜயந்தி நாளில் முடிசூட்டிக் கொண்டார் என்று அறிகிறோம்.

அரசிக்கும் உடன் முடிசூட்டல் :

மன்னனுக்கு முடிசூட்டும் போது அவனது தேவிக்கும் உடன் முடிசூட்டுவிப்பது மரபு. இது சிறப்பாக விஜயநகரக் காலத்திலிருந்து காணப்படுகிறது, என்று ஒரு பேராசிரியர் தன் நூலில் குறிக்கிறார். இது விஜய நகர மன்னர் காலத்துக்கும் முன்னரே தமிழகத்தில் தொன்று தொட்டு நிலவிய மரபு என்று அறியலாம். "உலகுடைய பெருமாளுடன் ஒக்க முடிகவித்தான்" என்று மூன்றும் இராஜராஜனின் மெய்கீர்த்தி, தேவிக்கும் உடன் முடிசூட்டப்பட்டது என்பதைத் தெரிவிக்கிறது. முடிபுனைந்தவுடன் ஏராளமான பொருள்கள் கொடுக்கப்பட்டன. இதை அபிஷேகதக்ஷிணை என்று குடந்தை கீழ்க்கோட்டக் கல்வெட்டுக் குறிக்கிறது.

முடிபுனைவது கோயிலில் தெய்வத்தின் முன்னிலையிலும், சிறந்த மண்டபங்களிலும் நடைபெற்றது. சிறப்பாக அபிஷேகம் செய்வதற்காக எடுக்கப்பட்ட மண்டபங்கள் அபிஷேக மண்டபங்கள் என்று பெயர் பெற்றன. முடிபுனைந்த பின்னர் மன்னனும் மாதேவியும் நகர்வலம் வந்தனர்.

# 3

# அரசெனப்படுவது நினதே பெரும

**வர்மன் :**

சங்க காலத்திலேயே மன்னன் கடவுளுக்குச் சமமாகக் கருதப்பட்டான். அரசனைக் குறிக்கும் இறை, வேந்தன் கோ, முதலிய சொற்கள் அரசனின் கடவுள் தன்மையைக் குறிக்கின்றன என்பதில் தவறில்லை. ஆனால் அக்கால மன்னர்கள் தேவர் அல்லது வர்மர் என்ற சொற்களைத் தங்கள் பெயர்களுடன் இணைத்துக் கொள்ளவில்லை. கி.பி. 6ம் நூற்றாண்டிலிருந்து சிறப்பாக ஆண்ட பாண்டியப் பேரரசர்களில் பலரின் பெயர்களுடன் வர்மன் என்ற பெயர் இணைத்துக் காணப்படுகிறது. ஜயந்தவர்மன், மாறவர்மன், ஜடிலவர்மன், வரகுணவர்மன் என்று அவர்களின் செப்பேடுகள் குறிக்கின்றன. பிராம்மண குலத்தவர் சர்மன் என்ற சொல்லைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொள்வர். க்ஷத்திரியகுலத்தவர் தங்கள் பெயருடன் வர்மன் என்பதை இணைத்துக் கொள்வது மரபு. இதையே மேற்குறித்த பெயர்கள் குறிக்கின்றன. இவ்வழக்கம் கி.பி. மூன்றும் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தின் வடபகுதியை ஆண்ட பல்லவர்களிடத்தும் காணப்படுகிறது.

'பல்லவானும் சிவகந்த வம்ம' என்று பிராகிருத செப்பேடுகள் குறிக்கின்றன. மஹேந்திரவர்மன், நரசிம்மவர்மன், நந்திவர்மன், நிருபதொங்கவர்மன் என்று குறிக்கப்படும் இவர்களின் பெயர் அனைத்திலும் இச்சொல் இணைந்தே விளங்குவதைக் காணலாம்.

## தேவர் :

கி.பி. 850ல் நிலைநிறுத்தப்பட்ட சோழப் பேரரசின் முதலிரு மன்னர்களான விஜாயாலயசோழரும், ஆதித்த சோழரும், கல்வெட்டுகளில் பரகேசரிவர்மர் என்றும் ராஜகேசரி வர்மர் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களது கல்வெட்டுகள் அனைத்திலும் இப் பட்டப் பெயராலேயே அழைக்கப்படுகின்றனர். இப்பட்டங்களுடன் வர்மன் என்ற சொல்லை இணைத்துள்ளதைக் காணலாம். முதல் பராந்தக சோழர் (கி.பி.907) காலம் முதல் ஒரு மாற்றத்தைக் காண்கிறோம். பராந்தக சோழரின் கல்வெட்டுகளில் பெரும்பாலும் பரகேசரிவர்மர் என்றே குறிக்கப்பட்டபோதிலும் பெயருடன் தேவர் என்ற சொல்லை இணைத்தும் குறிக்கப்படுகிறார். சற்றேறக்குறைய பராந்தகரின் சமகாலத்தவனான நிருபதொங்கவர்மன், பாஹூர் செப்பேட்டில் நிருபதொங்கதேவர் என்று அழைக்கப்படுகிறான். பராந்தகதேவர் என்று உத்தரமேரூர் கல்வெட்டு குறிப்பதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். பின்னர் வந்த சோழமன்னர்கள் அனைவரும், இராஜகேசரி பரகேசரி பட்டங்களுடன் வர்மன் என்ற சொல்லையும், தங்களது பெயர்களுடன் தேவர் என்ற சொல்லையும் இணைத்தே வழங்கியுள்ளனர். இராஜகேசரிவர்மரான ஸ்ரீராஜராஜதேவர், என்றும் பரகேசரிவர்மரான இராஜேந்திர சோழதேவர் என்றும் வருவதைக் காணலாம். பின்னர் ஆண்ட சோழ மன்னர்கள் அனைவருமே இவ்வாறு வழங்கியுள்ளனர்.

கி. பி. 13ம் நூற்றாண்டில் சோழர் வலி குன்றத் தொடங்கிய போது பாண்டியர் தங்களது ஆட்சியை நிலை நிறுத்தினர். ஆயினும் சோழரது ஆட்சியில் ஏற்பட்ட மாறுதல்களையே இவர்களும் பின்பற்றினர். சடையவர் மரான சுந்தரபாண்டியதேவர், மாறவர்மரான குலசேகர தேவர், ஸ்ரீவல்லபதேவர் என்று இவர்கள் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. கி. பி. பதினைன்காம் நூற்றாண்டின் இறுதியில் விஜயநகரப் பேரரசு நிலை நிறுத்தப்பட்ட போது விஜயநகர மன்னர்களது பெயர்களுடன் ராயர், அல்லது மகாராயர் என்னும் சொல் இணைக்கப்பட்டது. கிருஷ்ணதேவ மகாராயர், பிரவுடதேவராயர் என்றும் பெயர்கள் வருவதைக் காணலாம். ராயர் என்ற சொல் வந்தபோதிலும் தேவர் என்ற சொல்லும் இணைந் துள்ளதைக் காணலாம்.

## மக்கள் தலைவன் மன்னனாகி தேவனாதல் :

இதிலிருந்து முதலில் மக்களின் தலைவர்களாக மன்னர்கள் கருதப்பட்டனர். பின்னர் தாங்கள் க்ஷத்திரிய குலத்தவர் என்று கூறிக்கொள்வதில் ஆர்வம் காட்டினர் என்பது வர்மன் என்ற சொல்லை வழங்குவதிலிருந்து வெளியாகிறது. சங்ககாலத்தில் சிறு சிறு பகுதிகளின் தலைவர்களாக மன்னர் ஆண்டனர். ஆனால் சுமார் கி. பி. ஆறும் நூற்றாண்டிலிருந்து தமிழகம் முழுதும் இருபெரும் பிரிவுகளின் கீழ் வந்தன. தெற்கே பாண்டியரும், வட புறத்தே பல்லவரும் தங்கள் குடைக்கீழ் கொண்டு வந்தனர். ஆதலின் அரசனின் ஆற்றலும், ஆணையும் பெரும் பகுதிகளில் நிலவ வேண்டியிருந்தது. ஆதலின் அவனிடத்து அதிகாரம் சங்ககாலத்தைக் காட்டிலும் மிகுந்திருந்தது. மக்களின் தலைவனாயிருந்தவன் மன்னர் குலத்தவனாய் கூறிக்கொள்ளத் தலைப்பட்டான் என்பதை இது குறிப்பதாகக் கொண்டால் தவறில்லை. அடுத்து வந்த சோழப் பேரரசர்களே தமிழகம் முழுவதையும் தங்கள் குடைக்கீழ்

கொணர்ந்து ஒன்றுபட்ட தமிழகத்தை ஏற்படுத்தியவர் எனலாம். இவர்களது ஆட்சி தமிழகத்தோடு மட்டு மின்றி ஆந்திர, கன்னட நாடுகளின் பகுதிகளிலும் ஈழம், கடாரம் போன்ற நாடுகள் வரையிலும் பரவின. அது மட்டுமின்றி கிழைச்சாளுக்கியர் முதலிய சில பேரரசு களுக்கும் இவர்கள் தஞ்சமாய் விளங்கினர். தங்களது புயவலியால் இம்மாபெரும் பேரரசைத் தோற்றுவித்த தோடு, நாட்டின் ஆட்சி முறையை என்றும் காணுத வகையில் சீராக அமைத்த இம்மன்னர்களிடத்தில் மதிப்பும், அதிகாரமும் என்றும் காணுதவகையில் குவிந்தது என்பது தெளிவே. இப்பின்னணியில் நோக் கும்போது[4] சோழப் பேரரசர்கள் தேவர்கள் என்று கூறிக்கொண்டது மிகப்பொருத்தமே. மக்கள் தலைவன், மன்னனுகி தேவனுவது படிப் படியாக அதிகரித்து வந்தது பொறுப்பாலும், ஆற்றலாலும் என்பதில் தவறில்லை.

### சக்கரவர்த்தி :

பேரரசன் என்ற கருத்து சங்க காலத்து நிலவி இருந் தது. சக்கரவர்த்தி என்று அவரை வடமொழி நூல்கள் குறிப்பிடுவதற்கு ஏற்ப தமிழில் அவரது திகிரி மேருவரை பரவி நின்றது என்ற கருத்துகள் சங்க நூல்களில் இடம் பெறுகின்றன. ஆயினும் சக்கரவர்த்தி என்னும் சொல், காணப்படவில்லை.

### ஆதிராஜன் :

வேள்விக்குடி செப்பேட்டில் பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதி என்பவன் பரமேச்வரன் என்றும் பாண்டி யாதிராஜன் என்றும் குறிக்கப்படுகிறுன். பாண்டி யாதிராஜன் என்று குறிக்கப்படும் கடுங்கோன் களப் பிரர்களை வென்றுன். முன் களப்பிரர் பல ஆதிராஜரை

வென்று அவரிடத்தைக் கைப்பற்றி யிருந்தனர் என்று அச் செப்பேடு குறிக்கிறது. ஆதிராஜர் என்ற பெயரால் பல தமிழக அரசர்கள் குறிக்கப்படுகின்றனர். மாற வர்மன் அவனிசூளாமணி என்னும் பாண்டியன் ஆதிராஜன் என்று அழைக்கப்படுகிறான். கோச்சடையன் ரணதீரன் என்பவனும், அவனுக்கு பின்வந்த ராஜ சிம்மன் என்பவனும் மன்னர் மன்னன் என்றழைக்கப் படுகின்றனர். சின்னமனூர் பெருஞ் செப்பேடுகள், ஆறும் நூற்றாண்டிற்குமுன் ஆண்ட பாண்டிய மன்னர் களை 'மகாராஜர் என்றும் சார்வபௌமர்' என்றும் அழைக்கின்றன. வரகுணன் மகாராஜர் என்று அழைக் கப்படுகிறான்.

கி.பி. மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சிவஸ்கந்தவர்மன் 'தர்ம மகாராஜாதிராஜன்' என்று அழைக்கப்பட்டான். அவனுக்குப் பின் ஆண்ட பல்லவமன்னர்கள் அனைவரும் தர்மமகாராஜாதிராஜன் என்று செப்பேடுகளில் அழைக் கப்படுகின்றனர். இதிலிருந்து இவர்கள் 'அறத்தின்' அடிச்சுவட்டில் மகாராஜாதிராஜன் என்று கருதிக் கொண்டனர் என்பது தெளிவு. சிலர் பெருமானடிகள் என்றும் அழைக்கப்பட்டனர். பல்லவ மன்னர்களில் சிம்மவிஷ்ணுவும், மஹேந்திரவர்மனும் ஆதிராஜன் என்று அழைக்கப்பட்டனர் என்று மாமல்லபுரம் கல் வெட்டுகளால் அறியலாம்.

**பெருமானடிகள் - உடையார் :**

சோழப் பேரரசர்களின் காலத்திலிருந்து சில புதிய சொற்றொடர்களைக் காண்கிறோம். முதலில் ஆண்ட ஆதித்தசோழர், பராந்தகர், ஆகியோரின் காலத்தில் பெருமானடிகள் என்ற சொற்றொடர் சிறப்பாக வழக்கில் வந்தது. சோழப்பெருமானடிகள் என்று ஆதித்தனும்,

பராந்தகனும் பல கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளனர். உத்தரமேரூர் கல்வெட்டில் பராந்தக சோழன், சக்கரவர்த்தி என்றே குறிக்கப்படுகிறான். பின்னர் ஆண்ட அரசர்கள் தங்கள் பெயருக்கு முன்னர் 'உடையார்' என்ற சொல்லை வழங்கிக் கொள்ளத் தலைப்பட்டனர். 'உடையார் ஸ்ரீராஜராஜதேவர்' என்றும் உடையார் 'ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்' என்றும் இவர்கள் அழைக்கப்பட்டனர்.

## திரிபுவனச்சக்கரவர்த்தி — கோனேரின்மை கொண்டான் :

முதல் குலோத்துங்க சோழனின் ஆட்சியிலிருந்து மூவுலகுக்கும் சக்கரவர்த்தி என்னும் பொருளில் 'திரிபுவனச்சக்கரவர்த்திகள்' என்ற பட்டத்தை ஒவ்வொரு சோழ மன்னரும் ஏற்றனர். இக்காலத்திலிருந்து இவ்வரசனுக்கு ஈடான மன்னன் யாரும் இல்லை என்ற பொருளில் "கோனேரின்மை கொண்டான்" என்ற பட்டமும் அதிகம் வழங்கலாயிற்று. பல மன்னர்களின் கல்வெட்டுகளில் அவர்களது பெயரே குறிக்கப்படாமல் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் என்றே வருவதைக் காணலாம்.

## மஹாமண்டலேச்சுரன் :

விஜயநகரமன்னர்கள் தங்களை 'மஹாமண்டலேச்சுரர்' என்றும் 'பூர்வ பச்சிம, தக்ஷிண, உத்தர சதுஸ் சமுத்ராதிபதி' என்றும் கூறிக் கொள்ளுவது வழக்கம். நாற்கடலுக்கும் நாயகர் என்ற பொருளில் இவ்வாறு இவர்கள் பட்டம் ஏற்றனர். இவருக்கும் முன்னர் ஆண்ட சோழரும், பாண்டியரும், "இரு கடல் நீரும் ஒரு பகல் ஆடி" என இலக்கிய நயம் சிறக்க கூறிக்கொள்வது மரபு. இருப்பினும் விஜயநகர மன்னரிடத்து சக்கரவர்த்தி என்று கூறிக்கொள்ளும் மரபு ஏனோ காணக்கிடைக்க

வில்லை. மகாராயர் என்று இவர்கள் கூறிக்கொண்டதே இதை குறித்தது போலும்.

## பல்லவர்களின் சில சிறப்புப் பட்டங்கள் :

எவ்வாறு நான்கு திசைகளையும் திசைக் காவலர்களாகிய இந்திரன், யமன், வருணன், சோமன் ஆகிய நால்வரும் காக்கின்றனரோ அதுபோல் நடுவுலகை காக்கும் காவலன் என்றும், ஐந்தாவது காவலன் என்றும் பல்லவர்களில் பலர் குறிக்கப்படுகின்றனர். 'லோக பாலாநும் பஞ்சமஸ்ய லோகபாலஸ்ய' என்றோ அல்லது லோகபாலாநும் மத்யமஸ்ய லோகபாலஸ்ய' என்றோ அவர்களின் செப்பேடுகள் குறிக்கின்றன.

தமிழகத்தைச் சார்ந்த பிறமன்னர்களும் தாங்கள் இந்த கோத்திரத்தை சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்ட போதிலும், பல்லவர்கள் மட்டும் பாரத்வாஜர் என்பதைத் தங்கள் பட்டமாகவே கொண்டிருந்தனர்.

## வானவரம்பன், இமயவரம்பன் பட்டங்கள் :

சங்ககாலச் சேர மன்னர்களில் சிலர் வானவரம்பன் என்றும், சிலர் இமயவரம்பன் என்றும் குறிக்கப்படுகின்றனர். இப்பட்டங்களை, சேரர் அரியணையில் ஏறியவர்கள் மாற்றி மாற்றி ஏற்றிருக்க வேண்டும்.* வானவரம்பன் எனப் பட்டம் பெற்றவர் ஆண்டபின், அரியணை ஏறியவர் இமயவரம்பன் என்று பட்டம் ஏற்றிருக்கக் கூடும். இவ்வாறு அரியணை ஏறுபவர்கள் ஒரு குறிப்பிட்ட பட்டங்களை மாற்றி மாற்றி ஏற்றுக் கொள்வது சங்ககாலத்தில் சேரர் குலத்தை மட்டும் நிலவியதாகக் கொள்ளலாம். சங்ககாலச் சோழரிடம் இதுபோன்ற ஒரு மரபு இருந்ததாகத் தெரியவில்லை.

---

* திரு மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் குறித்துள்ளது.

## மாறன் — சடையன் :

சங்ககாலப் பாண்டியர்களில் சிலர் மாறன் என்றும் சிலர் செழியன் என்றும் அழைக்கப்பட்டனர். ஆனால் இவை ஒருவருக்குப்பின் ஒருவர் அரியணை ஏறியபோது பட்டங்களாக மாறி மாறி ஏற்றுக் கொள்ளப்பட்டனவா என்று தெரியவில்லை. ஆனால் கி. பி. 6ம் நூற்றாண்டிலிருந்து ஆண்ட பாண்டிய மன்னரிடம் இம்மரபு காணப்படுகிறது. சிலர் மாறன் என்றும், சிலர் சடையன் என்றும் பட்டம் ஏற்றனர். இப்பட்டங்களை ஒருவருக்குப் பின் ஒருவர் மாறி மாறி ஏற்றனர். அதுமட்டுமின்றி சடையனின் மகன் சடையன்மாறன் என்றும், மாறனின் மகன் மாறஞ்சடையன் என்றுமே பட்டம் ஏற்றனர். அவரவர்களின் தனிப்பெயர்கள் குறிக்கப்படாமல் பெரும்பாலும் இப்பட்டப் பெயர்களாலேயே பல பாண்டிய மன்னர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக வரகுணன் என்னும் மன்னன் மாறஞ்சடையன் என்றே குறிக்கப்படுகிறான். அதேபோன்று ஸ்ரீமாறவர்மன் என்பவன், சடையன் மாறன் என்று கல்வெட்டில் குறிக்கப் பெறுகிறான்.

## இராஜகேசரி பரகேசரி :

சோழப்பேரரசு நிலைநிறுத்தப்பட்ட பிறகு சோழமன்னர்கள் இராஜகேசரி என்றும் பரகேசரி என்றும் பட்டம் ஏற்றனர். ஆனால் இப்பெயர்களைச் சங்ககாலச் சோழர் ஏற்றிருக்கவில்லை. கி. பி. 7ம் நூற்றாண்டில் ஆண்ட மாறவர்மன் என்னும் பாண்டியமன்னன் 'அரிகேசரி' என்ற சிறப்புப்பட்டம் பெற்றிருந்தான். கொடும்பாளூர் வேளிர்களில் நிருபகேசரி என்று ஒரு வேளிரும், விக்கிரமகேசரி என இருவரும் பெயர் கொண்டிருந்தனர். விஜயாலயனுக்கும் காலத்தால் முற்பட்டவர் நிருபகேசரி என்னும் வேளிர். சோழப்பேரரசை நிலைநிறுத்த முதலில் மிகவும்

உதவியவர் கொடும்பாளூர் இருக்குவேளிர்கள் ஆவர். கொடும்பாளூர் குலத்துக்கும், சோழர் குலத்துக்கும் இதனால் மிக நெருங்கிய உறவு இருந்தது. பல சோழப் பெண்களை கொடும்பை வேளிர்கள் மணந்திருந்தனர். இருக்குவேளிர் பெண்கள் சோழரின் தேவியராக விளங்கினர். ஆதலின் இப்பட்டம் ஏற்கும் மரபு சோழருக்கு கொடும்பாளூர்த் தொடர்பினால் ஏற்பட்டதோ என ஐயம் தோன்றுகிறது.

இராஜகேசரி, பரகேசரி என்று சோழர் மாறி மாறிப் பட்டம் ஏற்றதை கலிங்கத்துப்பரணி

"சுராதி ராசன் முதலாக வருசோழன் முனம் நாள்,
சோழ மண்டலம் அமைத்தபிறகு ஏழ் உலகையும்
இராஜகேசரி புரந்து பரகேசரிகளாம்
இருவர் ஆணை புலி ஆணை என நின்ற புகழும்"

என்று வருணிக்கிறது. ஆனால் இந்நிகழ்ச்சியை தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன், கிள்ளிவளவன் முதலியோருக்கும் முன்னரே ஆண்ட சோழர்களுக்கு பரணி அளிக்கிறது. இதை வரலாற்று அடிப்படையில் ஏற்றுக் கொள்ளச் சான்றுகள் இல்லை.

**கோவிசைய :**

சேரரையும், சோழரையும் பாண்டியரையும் போல பல்லவர்கள் மாற்றி மாற்றி குறிப்பிட்ட பட்டங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அனைவரும் தங்கள் பெயரின் முன்னர் "கோவிசைய" என்ற சொற்றொடரை இணைத்துக் கொண்டனர். வெற்றி விளங்கும் மன்னன் என்ற பொருளில் இவ்வாறு அவர்கள் அழைத்துக்கொண்டனர். கோவிசைய மஹேந்திர விக்கிரம வர்மர், கோவிசைய நந்திப் போத்தரைசர், கோவிசைய அபராஜித விக்கிரமவர்மர் என்று பெயர்கள் வருவதி

லிருந்து இதை அறியலாம். அது மட்டுமின்றி தங்கள் பெயருக்குப் பின்னர் "விக்கிரம" என்ற சொல்லையும் பலர் சூடிக் கொண்டனர்.

குலப்பெயர் :

சங்க காலத்தில் ஆண்ட அரசர் தங்கள் பெயர்களுடன், தங்கள் குலத்தைக் குறிக்கும் பல பெயர்களில் ஏதாவது ஒன்றை தங்கள் பெயருடன் இணைத்துக் கூறுவது வழக்கம். செம்பியன், வளவன், சோழன் என்னும் ஏதாவது ஒரு சொல்லைக் கொள்வது சோழர் வழக்கம். அதே போன்று பாண்டியர், மாறன், வழுதி, செழியன் ஆய பெயர்களில் ஏதாகிலும் ஒன்றைக் கொள்வது மரபு. சேரரும், ஆதன், குட்டுவன், சேரன் என்னும் குலப் பெயர்களில் ஏதேனும், ஒன்றைக் கொண்டனர்.

ஆனால், பிற்காலத்தில், ஒரே பெயரை மட்டும் மன்னர் சூடிக்கொள்ளத் தலைப்பட்டனர். சோழப் பேரரசர்கள் அனைவரும் சோழர் என்ற ஒரே குலப் பெயரைக் கொண்டனர். இராஜராஜ சோழர், இராஜேந்திர சோழர், குலோத்துங்க சோழர் என்றே இவர்கள் பெயர் உள்ளதே ஒழிய செம்பியன், என்றோ வளவன் என்றோ காணப்படவில்லை. அதே போன்று, "பாண்டியர்" என்ற ஒரு பெயரை மட்டும் பாண்டியர் கொண்டனர். வீர பாண்டியன், விக்கிரம பாண்டியன், சுந்தர பாண்டியன் என்றே பெயர்கள் காணப்படுகின்றன. பாண்டியர்களிலும் கி. பி. 6-லிருந்து 9-ம் நூற்றாண்டு வரை ஆண்டவர்கள் பாண்டியன் என்ற சொல்லை பெயருடன் இணைத்துக் கொள்ளவில்லை. மாறன், என்றும் சடையன் என்றுமே அழைக்கப்பட்டனர் என முன்பே கூறினோம்.

## போத்தரையன் :

பல்லவ மன்னர்கள் போத்தரையர் என்ற சொல்லை இணைத்துக் கொள்வது மரபு. மஹேந்திரப் போத்தரையன், நரசிங்கப் போத்தரையன், நந்திப் போத்தரையன் என்று இவர்கள் கல்வெட்டுகள் குறிக்கின்றன. மாமல்லபுரத்தில் ஆதிவராஹ குகையில் பல்லவ மன்னர்கள் இருவரின் உருவச் சிலைகள் உள்ளன. அவற்றின் மேல், அவர்கள் பெயர், மஹேந்திர போத்ராதிராஜன் என்றும் சிம்மவிண்ணப் போத்ராதிராஜன் என்றும் குறிக்கப் பட்டுள்ளன. போத்தரையன் என்பதின் வடமொழி ஆக்கமே இது. போத்து என்பது 'துளிர்' என்ற பொருளில் வரும். பல்லவர் 'பல்லவன்' 'அங்குரன்' என்று அழைக்கப்பட்டதால் அதன் ஈடான தமிழ்ச் சொல்லே 'போத்து' என்று ஆராய்ச்சியாளர் கொள்வர். 'போத' என்ற சொல் புத்ரன் என்ற சொல்லின் பாகதச் சிதைவு. சத்யபுத்ரன், கேரளபுத்ரன் என சில அரசு குலங்கள் குறிக்கப்படுகின்றன. ஆதலின் 'போத' என்ற சொல்லிலிருந்து போத்தரையன் என்னும் பெயர் தோன்றியதோ என்ற ஐயம் எழலாம். 'போத்ராதி ராஜன்' என்னும் பெயரிலிருந்து இவ்வையம் எழுகிறது. பல்லவர்களின் தோற்றத்தைப் பற்றி ஆராய்ச்சியாளரிடையே கருத்து வேறுபாடு உண்டு. பல்லவர் தோற்றம் பற்றிய கருத்து சான்றுகளோடு நிலைப்படும் போது 'போத்தரையன்' என்பதின் பொருளும் நிலைப் படும் என்பதில் ஐயமில்லை.

## மன்னர்களின் சிறப்புப் பெயர்கள் :

அரசர்கள் அவர்களது ஆட்சியில் பெற்ற செயற்கரிய செய்கையையோ அல்லது வெற்றியையோ அவர்களது பெயருடன் இணைத்துக் கொள்வது மரபு. இம்மரபு சங்க காலத்திலிருந்தே தமிழகத்தில் நிலவி இருந்தது. தலை

யாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், கடல் பிறக்கோட்டிய குட்டுவன், தகடூர் எறிந்த பெருஞ்சேர விரும்பொறை,முதலிய சங்ககாலப் பெயர்களைப் போன்றே வாதாபிகொண்ட நரசிங்கப்போத்தரையன், தொள்ளாற் றெறிந்த நந்திப்போத்தரையன், தொண்டைநாடு பாவிய இராஜகேசரி (ஆதித்தன்), மதிரைகொண்ட கோப்பர கேசரி (பராந்தகசோழன்), கங்கைகொண்டசோழன், கருவூரும் பாண்டியன் முடித்தலையுங்கொண்ட சோழன் (மூன்றும் குலோத்துங்கன்), எம்மண்டலமுங் கொண்ட ருளிய சுந்தர பாண்டியன் போன்ற பெயர்கள் அவர்கள் வெற்றியின் அடிப்படையில் அமைந்தவை.

சில மன்னர்கள் இறந்த இடத்தின் பெயரால் சிறப் பாக அழைக்கப்படுவதும் சங்ககாலத்திருந்தே வழக்கி லிருந்ததாகும். குராப்பள்ளித்துஞ்சிய பெருந் திருமா வளவன், குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன், வெள் ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி முதலிய பெயர்களைப் போலவே, ஆற்றூர்த் துஞ்சிய தேவர், பொன்மாளிகைத் துஞ்சிய தேவர், ஆனைமேல் துஞ்சிய தேவர் முதலிய பெயர்கள் பிற்காலத்திலும் காணப்படுகின்றன.

சில அரசர்கள் பிற சிறப்புப் பெயர்களாலும் அழைக் கப்பட்டனர். பெருஞ்சோற்று உதியஞ்சேரல், பாலை பாடிய பெருங்கடுங்கோ, இராஜசூயம் வேட்ட பெருநற் கிள்ளி, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போன்ற சிறப்புப் பெயர்களைப் போலவே மஹேந்திர பல்லவன், சித்ரகாரப்புலி என்றும், சிவசூடாமணி என்று இராஜசிம்மனும் மேற்கெழுந்தருளிய தேவர் என்று கண்டராதித்ததேவரும் சிவபாதசேகரன் என்று முதல் இராஜராஜனும் சுங்கந்தவிர்த்தருளின தேவர் என்று முதல் குலோத்துங்கனும் சுந்தரபாண்டியன் சோணாடு வழங்கியருளியவன் என்றும் சிறப்புப் பெயர் பெற்றனர்.

# 4

# அறவோர் புகழ்ந்த வாய்கோலன்னே

## அரசின் குறிக்கோள்

அரசின் குறிக்கோள் என்ன? அரசன் எத்தன்மை யனுய் இருத்தல் வேண்டும் என்பதை தெய்வ வள்ளுவர், தன்னூலில் சிறப்பாகவும் விரிவாகவும் கூறியுள்ளது அனைவரும் அறிந்ததே. அரசன் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதைக் குறிக்கும் இலக்கணங்களாக இவற்றைக் கொள்ளலாம். இவ்வாறு ஆன்ஞேர் வகுத்த இலக்கணம் இருக்க, தமிழக அரசு எவ்வாறு இயன்றது என்றும் அறிய பல சான்றுகள் உள்ளன. அரசர்கள் போரில் ஈடுபட்டு அடைந்த வெற்றி தோல்விகளும், அதனுல் நாடுகளுக்கு ஏற்பட்ட உயர்வும் அழிவுமே புறப் பாட்டுக்களிலும், மெய்க்கீர்த்திகளிலும் இடம் பெற் றுள்ளன என்று கருதக்கூடாது. அரசர்களுக்குள் ஏற் பட்ட போர்களுக்கும் வெற்றிகளுக்குமே வரலாற்று நூல்களில் அதிக இடம் அளிக்கப்பட்டுள்ளன. அவ் வளவுதான். மன்னர்களிடம் இருக்க வேண்டிய தன்மை களில் வீரம் சிறப்பாகப் போற்றப்பட்டது என்னவோ

உண்மை. ஆயினும் அவர்கள் குடிகளைப் புரந்ததும், குடிகளிடத்தில் கொண்ட அன்பும், அறத்தை நிலை நிறுத்திய செயல்களும், ஆன்றோர் பேணியதும், நாட்டின் வருவாயைப் பெருக்க அவர்கள் கொண்ட முயற்சிகளும் பெரும்பாலும் எல்லாப் பாக்களிலும், மெய்க்கீர்த்திகளிலும் இடம் பெற்றுள்ளன. தனிப்பட்ட அரசர்களைப் பற்றிய புறப்பாக்களும், பிற்காலத்தில் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணப்படும் மெய்க்கீர்த்திகளும், அந்தந்த அரசர்கள் எதைத் தங்கள் குறிக்கோளாகக் கொண்டு, அவை நிலவ ஆட்சி புரிந்தனர் என்று அறிய ஏதுவாகவுள்ளன.

**சங்ககால மன்னரின் குறிக்கோள் :**

சங்ககாலத்து வாழ்ந்த மன்னர்களின் தன்மையை புறநானூறும் பதிற்றுப்பத்தும், சிலம்பும் மேகலையும் சிறப்பாகப் பல இடங்களில் குறித்துள்ளன. அரசனது தொழில் கொடியவற்றை நாட்டிலிருந்து அகற்றி, அறத்தை நிலைநிறுத்தி, தன் காவலுக்குத் தேவையான பொருளை மக்களிடமிருந்து பெற்றுக் காத்தலாகும் என்பதை "கொடியது கடிந்து கோல் திருத்தி படுவதுண்டு பகலாற்றி" என்று மாந்தரஞ் சேரலிரும்பொறையை குறுங்கோழியூர்க் கிழார் கூறுவதிலிருந்து அறியலாம்.

கோப்பெருஞ்சோழனை போத்தியார் புகழ்வதும் அக்கால மன்னர்களது தன்மைக்கு எடுத்துக்காட்டாம். பாடுவாருக்கு புகழ் அளித்தான். ஆடுவாருக்கு அன்பு அளித்தான். மகளிருக்கு இன்பம் அளிப்பதில் வல்லவனையும், வீரரில் வீரனையும், கற்றறிந்தோர்களின் புகலிடமாயும், அறவோர் போற்றும் புகழ்மிக்கவனையும் வாழ்ந்தான் என்று :—

"பாடுநர்க்கீந்த பல் புகழன்னே
ஆடுநர்க் கீந்த பேரன்பின்னே
அறவோர் புகழ்ந்த வாய்கோலன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே
மகளிர் சாயல் மைந்தர்க்கு மைந்து
துகளறு சாயல் உயர்ந்தோர் புக்கில்"

எனப்பாடுவதால் அறியலாம். குடிமக்களுடைய நலனையே என்றும் மனத்தில் இருத்தி சங்ககால மன்னர் ஆண்டனர். தன் குடிமக்கள் தன்னைக் கொடியவன் என்று கூறுவதைத் தமக்கு மிகவும் இழிவு என மன்னர் கருதினர். பாண்டியன் நெடுஞ்செழியன் நான் மாற்றரை வெல்லா விட்டால் என் குடிமக்கள் கண்ணீர் விட்டு கொடியன் எம் இறை என்று தூற்றட்டும் என்று கூறும் புறப்பாட்டு (72) இதையே வலியுறுத்துகிறது.

என்னிழல் வாழுநர் சென்னிழல் காணது
கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேனுகுக

என்று அமைகிறது அப்பாட்டு.

செங்கோல் செலுத்தும் அரசர்க்கு (1) கோபம் (2) அளவிறந்து ஒருவரை உவத்தல் (3) பகைவருக்கு அஞ்சுதல் (4) பொருளிடத்தில் அளவுக்கு மிஞ்சிய பற்று, (5) அளவுக்கு மிஞ்சிய தண்டனை முதலிய வேண்டப் படாத குற்றங்கள் எனப் பதிற்றுப்பத்து கூறும் (பதி. பத். 22).

அந்தணர் கூறிய வழியில் செயல்களைச் செய்து நல்ல ஆசிரியரைப் பெற்று, கிடைக்காத அரும் பொருள்களை எல்லாம் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்து குடிகளின் செல்வத்தைப் பெருக்கி நல்ல நூல்களைக் கற்று, புகழை

நிலை நிறுத்தி வீரர்கள் எல்லாம் உன் மொழி கேட்க அழகிய மகளிர் அளிக்கும் மதுவுண்டு மகிழ்ந்து விளங்கு வாயாக என மாங்குடி மருதனார் பாண்டியன் நெடுஞ் செழியனைப் பாடியுள்ளது, சங்க கால மன்னர் எத் தன்மையைச் சிறப்பாகப் போற்றினர் என்பதற்கு எடுத்துக் காட்டாகும். (மதுரை. காஞ் - 765 - 780).

தன் ஆட்சியின் கீழ் வரும் மக்கள் பிறரை நலியா மலும், பிறர் பொருளை விரும்பாமலும், குற்றமற்ற அறிவினராய் அறநெறியில் ஒழுகி விரும்புகின்ற மனைவி யரைப் பிரியாமல் இல்லறம் நடத்தி, விருந்தினருக்குப் பகுந்து எஞ்சியதை உண்டு பிணியில்லாமல் வாழ வகை செய்தனர் செல்கெழு குட்டுவனின் முன்னோர் (பதி. பத். 22 - 79). பகைவர் செய்த குற்றத்திற்கு அவர் நாட்டை அகப்படுத்திய போதிலும், அப்பகைவரிடத்தும் கோபம் கொள்ளாத உன் குணத்தை என்னென்று போற்றுவேன் எனக் காப்பியனார் நார்முடிச் சேரலைப் போற்றுகிறார் (பதி. பத். 33 - 15).

## பல்லவரின் குறிக்கோள் :

பல்லவ மன்னர்கள் வெளியிட்ட பல செப்பேடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் சில சொற்றொடர்கள் பல மன்னர்களுக்குத் திரும்பத்திரும்ப குறிக்கப்படுகின்றன இதிலிருந்து இச்சொற்றொடர்களில் காண்பவற்றை இவர் கள் தங்களது குறிக்கோள்களாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது. ''கடவுளிடம் என்றும் நிறைந்த பக்தியினால் அனைத்து மங்கலங்களையும் அடைந்தவன்; ஐம்பொறிகளை அடக்கியவன்; முன்னோர் வழியைப் பின் பற்றுவதில் ஈடுபட்டவன்; முன்னர் திகழ்ந்த ராஜரிஷி களின் குணங்களையும் ஆற்றல்களையும் அடைந்தவன்; தன் குழந்தைகளிடத்தில் தோன்றும் அன்பை, தன் குடி களிடத்தில் எப்போதும் கொண்டவன்; கலி காலத்தின்

குற்றத்தால் தாழ்ந்த அறத்தை உயர்த்துவதிலேயே எப்பொழுதும் முனைந்து நிற்பவன்; ஆசையும் குரோதமும், கோபமும், காமமும், அச்சமும் அறவே அற்றவன்; தாழ்ந்த அரசகுலங்களை நிலைநிறுத்துவதைத் தொழிலாய்க் கொண்டவன்; அறிஞர்களுக்கு கல்பமரம் போன்றவன்; அறத்தினுக்கு இருப்பிடம்; செல்வத்தின் இருக்கை; இறையையும், த்விஜர்களையும், குரவர்களையும், முதியவர்களையும் போற்றுபவன்; வினயம் நிறைந்து நிற்பவன்; அமுதத்துக்குச் சமமான அன்பையும் விஷத்துக்குச் சம கோபத்தையும் உடையவன்; பிரபு சக்தி, மந்திர சக்திமான உத்ஸாஹ சக்தி என்ற மூன்று சக்திகள் நிறைந்தவன்; தன் புயவலியால் அடைந்த க்ஷாத்ர தபோநிதி; புயவலியால் அரசமண்டலங்களை வணக்கியவன்; சத்யபிரதிஞன்; ஒழுக்கம் நிறைந்தவன்; அறம்பெருக விரும்புவோன்; விதிக்கப்பட்ட எல்லா குணங்களையும் உடையவன்" என்று பல பல்லவ மன்னர்கள் குறிக்கப்படுகின்றனர். தாங்கள் ராஜரிஷிகளாகத் திகழவேண்டும் என்பது இவர்களது குறிக்கோள்.

### குடிகளிடம் அன்பு :

குடிகளிடத்தில் இவர்கள் கொண்ட அன்பைப் பலவாருகச் செப்பேடுகள் குறிக்கின்றன. மக்களை நன்கு பரிபாலிப்பதே தன் தொழிலாக, சத்யவிரதமாக, தீக்ஷை ஏற்றவன்; எல்லாக்குடிகளின் கண்களுக்கும் இதயங்களுக்கும் வசந்தமாதம் போல் இன்பம் அளிப்பவன்; தன் புயவலியால் புரக்கப்பெற்ற புரங்களிலும் ஜானபதங்களிலும் உள்ளோர் மகிழும் பேறு பெற்றவன்; குடிமக்களின் அன்புப் பெருக்கைப் பெற்றுள்ளதால் குறைவற்ற செல்வம் உடையவன்; தன் குழந்தைகளிடத்தில் தோன்றும் அன்பையே தன் குடிகளிடத்தில் எப்பொழுதும் கொண்டவன்; தனது நற்குணங்களால் குடி மக்களுக்கு இன்னல் ஏதுமின்றி போக்கடிப்பவன் என்று, பல்ல

வருக்கு குடிகள்பாலுள்ள அன்பு பல முறை குறிக்கப் பட்டுள்ளது.

இக்குலத்தில் பிரம்மணியம் இல்லாதவனோ, யாகம் செய்யாதவனோ, முறையற்ற வகையில் சேனையை விடுத்த வனோ, புலன்களை அடக்கியதாக நடிப்பவனோ, கொடை யாளி அல்லாதவனோ, பொய்பேசும் நாவை உடையவனோ போரைக்கண்டு அஞ்சுபவனோ யாரும் இருந்ததில்லை என ஒரு செய்யுள் அழகாகக் கூறுகிறது.

கல்வி :

நந்திவர்மன் பல்லவமல்லன் கவிதை இயற்றுவதில் வால்மீகிக்குச் சமமானவன் என்றும், அரசியலில் பிரஹஸ் பதி என்றும், மக்களை மகிழ்விப்பதில் யுதிஷ்டிரனுக்கு ஈடானவன் என்றும் குறிக்கப்படுகிறான். தெள்ளாற் றெறிந்த நந்திவர்மனை நந்திக்கலம்பகம் 'சினக்கலியின் வெஞ்சாயல் மறைத்த தனிக்குடையான்' என்றும் 'அறம் பெருகும் தனிச்செங்கோலன்' என்றும், 'பகை யின்றி பார் காக்கும் பல்லவர் கோன்,' 'செங்கை முகில் அனைய கொடைச் செம்பொன் பெய் ஏகத்தியாகி என்றும் 'ஏழைமார் துணை' என்றும் போற்றுவது குறிப் பிடத்தக்கது.

பல்லவ மன்னர்கள் கல்வியில் சிறந்த ஈடுபாடு கொண்டவர்கள். எல்லா சாத்திரங்களையும், சத்திரங்களை யும் (படைக்கலன்களையும்) கற்றறிந்தவர்கள் என்று அவர் கள் புகழப்படுகின்றனர். எல்லா சாத்திரங்களின் பொருளையும் அறுதியிட்டு அறிவதில் வல்லவன் என்று விஜயஸ்கந்தவர்மன் என்னும் மன்னன் புகழப்படுகிறான். காவிய நாடகங்களை இயற்றுவதில் வல்லவன் என்றும் கடினமான யாப்புடைய செய்யுட்களை இயற்றுவதில் சமர்த்தன் என்றும் நந்திவர்மன் போற்றப்படுகிறான். தொல்லை நூல் முழுதுங் கண்டான் என்பதும் நூற்கடற்

புலவன் என்பதும் தெள்ளாற்றெறிந்த நந்தி பெற்ற பெயர்களாம்.

**கலப்பை கொடுத்தல் :**

பல்லவர் அக்னிஷ்டோமம், வாஜபேயம், அச்வ மேதம் போன்ற வேள்விகள் பல செய்தனர். இதை அக்நிட்டோம, வாஜபேய அச்சமேதயாஜி என்னும் தொடர்களால் அறிகிறோம். 'பல அச்வமேதம் முதலிய வேள்விகளின் நீர் ஆட்டப்பெற்ற வல்லவர்களான பல்ல வர்கள்' என்று இவர்களை ஒரு செப்பேடு குறிக்கிறது. சிம்மவர்மன் என்ற மன்னன் பத்து அச்வமேதயாகங்கள் செய்ததாக சிவன்வாயில் கல்வெட்டுக் கூறுகிறது. பல வேள்விகள் புரிந்ததால் தங்களைப் பரமபிரும்மண்யர்கள் என்று இவர்கள் கூறிக்கொண்டனர். பலமுறை அளித்த கோதானம், (கோசஹஸ்ரம்) ஹிரண்ய கருப்பம், பூமி தானம் முதலியவற்றினால், நாள்தோறும் பெருகுகின்ற அறத்தை உடையவர்கள் என்றும் இவர்கள் குறிக்கப்படு கின்றனர். ஒரு மன்னனை கோடிப் பொன்னும், நூறுயிரம் பசுக்களும், நூறுயிரம் கலப்பைகளும் அளித்தவன் என்று ஹிரஹடஹல்லி செப்பேடு கூறுகிறது. கலப்பை களை தானம் செய்வது ஒரு சிறந்த வேள்வியாகக் கருதப் பட்டது என்பது இதிலிருந்து தெரிகிறது. பல்லவர்கள் காடுவெட்டிகள் என்று குறிக்கப்பட்டனர். காடுகளை அழித்து பல்லாயிரக்கணக்கான வேலி நிலங்களை விளை நிலங்களாகச் செய்வதற்கே இவர்கள் அளித்த கலப்பை கள் பயன்பட்டன என்பது தெளிவு. இது "நாஞ்சில் அல்லது படையும் அறியார்" என்னும் சங்க மரபையே நினைவுறுத்துகிறது.

**பாண்டியரின் குறிக்கோள் :**

பல்லவர்களைப் போலவே தமிழகத்தின் தென் பகுதியை ஆண்ட பாண்டியர்களும் தங்களது செப்

பேடுகளிலும், கல்வெட்டுகளிலும் குறித்துள்ளனர். மனுவிதித்த வழியிலே நின்று முன்னோரைப் போற்றி, பண்டித வத்ஸலனாக பராந்தக நெடுஞ்சடையன் ஆண்டான் என்று, "மனுதர்சித மார்க்கத்தினால் குருசரிதம் கொண்டாடி கண்டக சோதனை தான் செய்து கடல் ஞாலம் முழுதளிக்கும் பாண்டியநாதன் பண்டிதவத்ஸலன்" என்று அவனைப் புகழ்கின்றன ஸ்ரீவரமங்கலம் செப்பேடுகள். ஓராயிரம் வேள்விகளைப் பாண்டியர் செய்தனர் என்று சிறியச் சின்னமனூர் செப்பேடுகள் கூறுகின்றன (ஓராயிரம் க்ரது செய்தும்). மாறவர்மன் ஹிரண்யகருப்பம் இருமுறையும், கோசஹஸ்ரமும் துலாபாரமும் செய்து இந்திரன் போல் அமர்ந்திருந்தான் என சிறியச் சின்னமனூர் செப்பேடுகள் கூறுகின்றன. "தராசுரத்து இடரகல தனவர்ஷம் பொழிதற்கு வலாஹத்தின் விரதம் பூண்டு, துலாபாரம் இனிதேறி சரண்யனாய் உலகளித்து ஹிரண்யகர்ப்பமிருகால் புக்கு கோசஹஸ்ரத் துடக்கத்துக்கு குருதானம் பல செய்து வாஸவன் போல் வீற்றிருந்தான்" (சிறியச் சின்னமனூர்). கலியின் கல்மஷத்தை அறவே நீக்கி அற்பமில்லா திரவியம் கொடுத்தான் என்று மற்றொரு மன்னன் புகழப்படுகிறான். அவனி மண்டலமுடனோம்பி அருள் பயந்து கற்பகத்தின் விரதங் கொண்டு கலிகல்மஷமற நீக்கி அற்பமில்லா திரவியம் கொடுத்து அவனிசுரர் இடர் நீக்கினான் எனக் கூறுகின்றன.

பராந்தக வீரநாராயணன் "ஆறு பலதலைகண்டும் அமராலயம் பல செய்தும், எண்ணிறந்த பிரமதேயமும் எண்ணிறந்த தடாகங்களும் இருநிலத்தும் இயற்றுவித்தான்" என்று தளவாய்புரம் செப்பேடுகள் கூறுகின்றன. அரிகேசரி பராங்குசமாறவர்மனைப் போற்றி இயற்றப்பட்ட நூல் பாண்டிக்கோவை. அதில் மாறவர்மன் "தீந்தமிழின் பொருள்போல் இனிதாய் புகழ் மன்னன்"

என்றும், 'தொன்னூல் புலவர் ஆயும் தமிழ் அரிகேசரி' என்றும் 'கலிதேய செங்கோல் நடாவுவான்' என்றும் போற்றப்படுவதிலிருந்து அவனுக்குத் தமிழ் மொழியிடமிருந்த ஈடுபாடு விளங்குகிறது.

கி.பி. 13ம் நூற்றூண்டில் பாண்டியப்பேரரசு மீண்டும் நிலைபெற்றபோது ஆண்ட மன்னர்களின் மெய்க்கீர்த்திகளிலும், அவர்களது குறிக்கோள்கள் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். "மூவகைத்தமிழும் முறையில் விளங்க, நால்வகை வேதமும் நவின்றுடன் வளர, ஐவகை வேள்வியும் செய்வினை இயற்ற, அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ, எழுவகைப்பாடலும் இயலுடன் பரவ" மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆண்டான் என அறிகிறோம். மாபெரும் வீரனாக விளங்கிய சடாவர்மன் சுந்தரபாண்டியன், 'ஒருமை மனத்திருபிறப்பின் முத்தீயின் நால்வேதத் தருமறையோ ரைவேள்வி யாறங்கமுடன் சிறப்ப, அருந்தமிழும் ஆரியமும் அறுசமயத்தற நெறியும் திருந்துகின்ற மனு நெறியும் திறம்பாது தழைத்தோங்க" ஆண்டான் என அவன் மெய்க்கீர்த்தி கூறுகிறது. 'தென்கலை வடகலைத் தெளிவுறத் தெரிந்தவன்' பராக்ரம பாண்டியன். 'முத்தமிழும் மனு நூலும் நான்மறை முழுதும் எந்தவிச்சமயமும் இனிதுடன் விளங்க' ஆண்டவன் மாறவர்மன் குலசேகரன். வீரபாண்டியன் கல்வியிற் சிறந்தவனாக, நீதி நூல்கள், புரணங்கள், பாதஞ்சல யோக சூத்திரம் முதலியவற்றிலும் முத்தமிழிலும் சிறந்தவனாக இருந்தான்.

"தமிழ்கள் மூன்றும் வரிசையிலமைந்த வடநூல் வகையும், நீதி நூலையும் மேதகுபுராணமும், பாதஞ்சல முதல் பனுவற் பயன்களும் மெய்மை யுணர்ந்து" என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகிறது.

## சோழரின் குறிக்கோள் :

சோழப் பேரரசர்களின் மெய்க்கீர்த்திகளே மிகவும் நயம்பட இயற்றப்பட்டவை. சுமார் கி. பி. 850 ல் மீண்டும் நிறுவப்பட்ட சோழப் பேரரசர்களில் முதல்வர்களான விஜயாலயன், ஆதித்தன், பராந்தகன் முதலானோர்களின் மெய்க்கீர்த்திகள் இராஜகேசரி என்றும் பரகேசரி என்றுமே தொடங்குகின்றன. தமிழகத்தின் தவப்புதல்வன் இராஜராஜனே எழில் வாய்ந்த மெய்க்கீர்த்திகளை தொடக்கியவன். இராஜராஜனும் அவனது மகன் இராஜேந்திரனும் தங்களது வெற்றிகளையே மெய்க்கீர்த்திகளில் சிறப்பாகக் கூறியுள்ளனர். இராஜேந்திரனின் மகன் முதல் இராஜதிராஜனின் மெய்க்கீர்த்திகளில் இருந்து அரசர்கள் ஆண்ட முறையும் சிறப்பாகக் குறிக்கப் பெறுகின்றன. முதல் இராஜரதிராஜன் நாட்டில் ஆறில் ஒன்று வரியாகப் பெற்றான். மனுநெறி விளங்க ஆண்டான். நான்மறையவர்க்கு தானங்கள் அளித்தான்.

"ஆறில் ஒன்று அவனியுட் கூறுபொருள்களும்
உகந்து நான்மறையவர் முகந்து கொளக்கொடுத்து
விசுவலோகத்தும் விளங்க மனுநெறி நின்
றசுவமே தஞ்செய்தரைசு வீற்றிருந்தான்"

என அவனது மெய்க்கீர்த்தி கூறுகிறது.

## வேத நெறி :

அவனது தம்பி வீரராஜேந்திர சோழன் "வேத நீதியை விளக்கி மீதுயர் வீரத்தனிக்கொடி தியாகக்கொடியோடும், ஏற்பவர் வருக என்று நிற்கமேவரு மனுநெறி விளக்கினன்" என்று அவன் மெய்க்கீர்த்தி புகழ்கிறது மாப்புகழ் மனுவுடன் வளர்த்தவன் அதிராஜேந்திர சோழன். "தருமநெறி நிற்ப மனுநெறி நடாத்தியவன்"

இராஜமகேந்திரன். முதல் குலோத்துங்கனது மெய்க் கீர்த்தி :—

புகழும் தருமம் புவிதொறும் நிறுத்தி
வீரமும் தியாகமும் தானமும் கருணையும்
உரிமைச் சுற்றமாக .........
முன்னை மனுவாறு பெருக கலியாறு வறப்ப

ஆண்டான் எனக் கூறுகிறது. அவன் அருமை மகன் விக்கிரமன் மன்னுயிர்க் கெல்லாம் இன்னுயிர்த்தாய் போல் தண்ணளி பரப்பி மண்முழுதுங்களிப்ப மனுநெறி வளர்த்து தன் கோயிற்கொற்றவாசற்புறத்து மணி நாவொடுங்க முரசுகள் முழங்க விசையமும் புகழும் மென் மேலும் ஓங்க ஆண்டான். அவனுக்குப்பின் வந்த சிவ நெறிச்செம்மல் இரண்டாம் குலோத்துங்கன் பசிபகை யானது தீது நீங்க, மன்னுயிர் தழைப்ப, மனுவாறு விளங்க மாதவர் தவமும் மங்கையர் கற்பும் ஆதி அந்தணர் ஆகுதிக்கனலும் மீதெழு கொண்டல் வீசுதன் மேதினி வளருஞ்சாதி ஒழுக்கமும், நீதி அறமும் பிறழாது நிகர ஆண்டான் என்று அவன் மெய்க்கீர்த்தி குறிக்கிறது.

சோழர் மெய்க்கீர்த்திகளில், முத்தமிழுக்கும் தலைவன் என்று பெயர்பூண்ட இரண்டாம் இராஜராஜனுடைய மெய்க்கீர்த்திகளே, அரசனின் பண்பை மிகமிகத் தெளி வாகக் குறிக்கின்றன.

ஆதியுகங் கொழுந்துவிட்டுத் தழைத்தோங்க, மாரி வாய்த்து வளம் சுரக்க, தாரணியோர் பிணி நீங்க, நல்லோர் தன் கற்புயர, நான்மறையோர் தொழில் வளர, எல்லோருந் தனித் தனியே வாழ்ந்தனமென மன மகிழ்ந்து, ஒருவருடன் ஒருவருக்கும், ஒன்றினுடன் ஒன்றினுக்கும் வெருவரு பகைமை மனத்தின்றி விழைந்து

காதலுடன் சேர, இந்திரன் முதல் திசாபாலர் எண்மரும் ஒருவடிவாகி இந்த படிதர நின்று மனுவாணை நடாத்தினன் என்று கூறுகிறது. இவன் காக்கும் திருநாட்டில் இயல்பிது என்று நின்று, காவல் நெறிபூண்டு மேலும் மனுநெறியல்லது நினையாது தந்தையிலோர்க்குத் தந்தையாகியும், தாயிலோர்க்குத் தாயாகியும், மைந்தரிலோர்க்கு மைந்தராகியும் விழி பெற்ற பயன் எனவும் அமையப் பெற்ற அருள் எனவும், மொழி பொருளாம் இவனெனவும் முகம் பெற்ற பனுவல் எனவும், எத்துறைக்கும் இறைவன் எனவும், வரஞ்செய்யும் பெருந்தவமெனவும், முத்தமிழ்க்கும் தலைவன் எனவும், மூன்றுலகின் முதல்வன், எனவும் அரசியற்கை முறை நிறுத்தி, அல்லவை கடிந்து ஆறு உய்த்து, பொருகலியின் இருளகற்றி ஆண்டான் எனவும் அவன் மெய்க்கீர்த்திகள் பாடுகின்றன. இவன் மக்களோடு ஒன்றியவனாய் தந்தையாயும், தாயாயும், மைந்தனாயும் வாழ்ந்தான் என்பது குறிக்கத் தக்கது. நாட்டில் உட்பகையின்றி, எல்லோரும் தனித்தனியே வாழ்ந்தனம் என மனமகிழும்படி ஆண்டான் என்பது மக்களிடத்த இவனுக்கிருந்து அன்பையும், அவர்களது சுதந்திர வாழ்வில் இவன் கொண்ட ஆர்வத்தையும் வெளிப்படுத்துகிறது. முடியரசாயிருப்பினும் பண்டைத் தமிழரசு மக்களது சுதந்திரத்தை எவ்வாறு மதித்தது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

**மனு நெறி :**

இரண்டாவது இராஜாதிராஜனின் கல்வெட்டில் "சமயமாறும் தலை எடுப்பத் தருமமும் அருமறையுமோங்கி அமைவில்லா மனுவொழுக்கம் ஆதியாம் படி நிலைநிற்க, ஓர்ப்பினும் தம்முறுகனவிலும் ஒன்றேரொன்று பகையின்றிப் போர்ப்புலியும், புல்வாயும் புக்கொருதுறை நீருண்ண, பொன்னி நதியும் பொய்யாது,

புயலும் புனலோவாது, மன்னிய நதி வளம் பெருக்க விளை வயல் எவ்வளஞ் சுரக்கப் போக பூமி இது வென்னப் போகமெல்லாம் வந்தீண்டி, ஏகவாணை அர சுரிமை எழில் பொழில்களும் பெற்றதென்ன'' ஆண் டான் எனக் குறிக்கின்றன. மக்கள் போகமெல்லாம் பெற்று சுகவாழ்வு வாழ்வதே மன்னன் ஆற்றும் தொண் டென இவன் கருதியதை இது குறிக்கிறது. மூன்றும் குலோத்துங்கன் புயல் பெருக வளம் பெருக பொய்யாத நான் மறையின் செயல் வாய்ப்ப மனுவின் நெறிதழைத் தோங்க ஆண்டான். மூன்றும் இராஜராஜன் பொருவில் மனுநெறி வாழ நடுவுநின்று குடிகாத்து நன்றாற்றும் திறம் பெருகு கடிதிழைத்த உட்பகையும் புறப்பகையும் அறக்கடிந்து ஆண்டான்.

மேற்குறித்த சோழ மன்னர்களது மெய்க்கீர்த்திகள் ஒவ்வொன்றிலும் மனுநெறி சிறக்க ஆண்டனர் எனக் குறிக்கப்பட்டுள்ளது சிறப்புடையதாகும். சோழப் பேரரசர்கள் நான்மறையோரை சிறப்புடையோராகக் கருதினர் என்பதும் அவர்கள் வேள்வி செய்வதற்கு வேண்டிய உதவி செய்தனர் என்பதும், ஒவ்வொரு மெய்க்கீர்த்திகளிலும் குறிக்கப்படுவதால் தெரிகிறது. சாதி முறையை ஏற்று, சாதி ஒழுக்கத்தை நிலை நிறுத் தினர் என்பதும் தெளிவு. குடிமக்களிடையே உட்பகை ஏதுமின்றிக் காத்து எல்லாப் போகங்களும் மக்கள் பெற வகை செய்தனர்.

## அமரர்பேணியும் ஆவுதியருந்தியும்

அரசர்கள் இருவகை வேள்வி வேட்டனர். அறக்கள வேள்வி என்றும் மறக்கள வேள்வி என்றும் அவை அழைக்கப்பட்டன. போரில் வெற்றி கண்ட காலத்து துணித்த மாற்றானின் தலையை அடுப்பாக அமைத்து குருதியை உலையாகவும், துண்டிக்கப்பட்ட கரத்தை

துடுப்பாகவும் கொண்டு போர்க் களத்தில் வேள்வி செய்வது ஒரு மரபு. இதையே மறக்கள வேள்வி என்பர். பாண்டியன் தலையாலங்கானத்துச் சேருவென்ற நெடுஞ் செழியன் களவேள்வி வேட்டான் என்று மாங்குடிக் கிழார் கூறுவார். இதே நிகழ்ச்சியை மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனாரும் கூறியுள்ளார்.

## வேள்வி வேட்டல் :

தேவர்களை வேண்டி தீயில் வேட்பது அறக்கள வேள்வி. இவ்வாறு தீயில் வேட்டல் ஆரியரிடம் நிலவிய பண்பு. சங்ககாலத் தமிழகத்தில் ஆண்ட பேரரசர்கள் அனைவரும் வேள்வி வேட்டிருக்கின்றனர். சங்க காலத் திலேயே ஆரியம் தமிழுடன் இணைந்து ஒன்றாகி நின்றது என்பதை இது காட்டுகிறது. ஒரு மன்னனின் குடிகளில் பல்வேறு வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுவோர் இருப் பர். மன்னன் தனக்கென ஒரு சமயத்தைப் பின்பற்றிய போதிலும், தன் குடிகளின் சமயங்கள் அனைத்தையும் போற்றினான். அவற்றில் தானும் பங்கு கொண்டான். நான்மறையாளரைச் சுற்றமாகக் கொண்டு, அடிபணிந்த அரசர் ஏவல் செய்ய,தலையாலங்கானத்துச் செறுவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் அறக்கள வேள்வி செய் தான் என மாங்குடிக் கிழார் கூறுவார் (புறம். 29). பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி பலயாகங்களைச் செய்ததால் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனப் பெயர் பெற்றான் (புறம். 15). இதுபோன்று சங்ககாலப் பேரரசர்கள் அனைவரும் வேள்வி வேட்டனர். கரிகால் பெருவளத்தான் பருந்துவடிவில் செய்யப்பட்ட வேள்விக் குண்டத்தில் யூபத்தை நாட்டி வேத வேள்வித் தொழி லாகிய யாகத்தை முடித்தான். அப்போது குற்ற மற்ற அவனது குலமகளிர்கள் அவனருகே நின்றனர் (புறம் 224).

தூவியற் கொள்கை துகளறு மகளிரொடு
பருதியுருவிற் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வி தொழில் முடித்த தூஉம்

(புறம். 224)

இவனது குலத்தில் வந்த பெருநற்கிள்ளி, இராஜ சூயம் என்னும் அரசர்க்குரிய சிறந்த வேள்வி வேட்டு 'இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி' எனப் பெயர் பெற்றான்.

பல சேர மன்னர்கள் வேள்வி வேட்டனர். பல்யானை செல்கெழு குட்டுவன் கௌதமனாருக்காக பார்ப் பாரில் பெரியோரைக் கேட்டு பத்துப் பெருவேள்வி வேட் பித்தான். (பதி. பத் - பதிகம் 3) பெருஞ்சேரல்இரும் பொறை வேள்விக்குரிய விதிகளைக் கேட்டு வேள்வி வேட் பதற்கு முன்பு தான் இருக்க வேண்டிய விரதங்களை முறைப்படி முடித்து வேள்வி முடித்தான் (பதி. பத். 74-1. 2). இளஞ்சேரல்இரும்பொறை முறைப்படி சாந்தி வேட்டான். சேரன் செங்குட்டுவன் வஞ்சிமா நகரின் வெளியில் குளிர்ந்து பொழில்கள் சூழ்ந்த இடத்தில் வேள்விச்சாலை அமைத்தான். வேள்விமாக்களைக்கேட்டு உரிய முறையில் இராஜசூயம் வேட்டான். அதை ஒட்டி சிறையிலிருந்த எல்லாக் கைதிகளையும் விடுவித்தான். வந்திருந்த மன்னருக் கேற்ப வரிசை முடித்தான். ''பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்து தாழ் நீர் வேலி தண் மலர்பூம் பொழில் வேள்விக்கான மாளிகை கட்டி நன் பெரு வேள்வி முடித்தபின்'' எனச் சிலம்பு (28 – 196. 199) கூறுகிறது. அதியமான் நெடுமானஞ்சியின் முன்னோர் கள் "அமரர் பேணியும் ஆவுதி அருத்தியும்'' சிறப் பெய் தினர் (புறம். 99). வேளிர்கள் வேள்விக் குண்டத்தில் தோன்றியவர் என்ற வரலாறு உண்டு. சங்ககாலத்தில் அரசர் வேள்வி வேட்டலை மிகச்சிறப்பாகக் கருதினர்.

சங்ககாலத்திற்குப்பின் வந்த பல்லவரும் பாண்டியரும் வேள்வியில் ஈடுபாடு நிறைந்து விளங்கினர். ஒரு பாண்டிய மன்னன் காலையிலும் மாலையிலும் அக்னியில் ஹோமம் செய்தான் என்று தளவாய்புரம் செப்பேடு கூறுகிறது. பாண்டியர்களில் அரிகேசரி மாறவர்மன் ஹிரண்யகருப்பம், துலாபாரம், பகுசுவர்ணம் என்பவற்றை செய்தான். தேர்மாறன் என்னும் பாண்டியனும் எண்ணிறந்த கோசஹஸ்ரமும், ஹிரண்ய கருப்பமும், துலாபாரமும் செய்தான் என்று வேள்விக்குடி செப்பேடுகள் குறிக்கின்றன. மாறவர்மன் இராஜசிம்மன் துலாபாரம் செய்தான் என்றும், இருமுறை ஹிரண்யகருப்பம் செய்தான் என்றும் கோசஹஸ்ரத்தின் துடக்கத்திற்காக குருதானம் பல செய்தான் என்றும் சிறியசின்னமனூர் செப்பேடுகள் கூறுகின்றன.

பல்லவர்கள் முறைப்படி பல வேள்விகளை வேட்டவர்கள் என்று அவர்களது கல்வெட்டுகள் கூறுகின்றன. சிவஸ்கந்தவர்மன் என்பான் அக்னிஷ்டோமம், அச்வமேதம், வாஜபேயம் ஆகிய வேள்விகளை வேட்டான். குமாரவிஷ்ணு அச்வமேத யாகம் செய்தான். சோமயாகம் செய்யாதவரே பல்லவ குலத்தில் கிடையாது என ஒரு செப்பேடு குறிக்கிறது. அவர்கள் பல வேள்விகளை வேட்டதால் பிரும்மண்யம் நிறைந்தவராய் இருந்தனர். அதனால் பரம பிரும்மண்யர் என்று அழைக்கப்பட்டனர்.

சோழர்களில் பராந்தகன், இராஜராஜன் முதலியோர் துலாபாரம் புரிந்திருக்கின்றனர். முதல் இராஜாதிராஜன் அச்வமேத யாகம் செய்தான் என அவன் கல்வெட்டுகள் கூறுகின்றன. விஜயாலயன் வழிவந்த சோழப் பெரும் பேரரசர்களில் இராஜாதிராஜன் ஒருவனே அச்வமேத யாகம் செய்தவன்.

பின்னர் வந்த விஜ்யநகர மன்னர்கள் ஹிரண்ய கருப்பம், துலாபாரம் ஆய செய்துள்ளனர். பொது வாகப் பார்க்கும்போது சங்ககால மன்னர்கள் வேத மரபைப் பின்பற்றி வேள்வியே அதிகம் வேட்டனர். வேத மரபு சமுதாயம் முழுவதும் ஊடுருவிப் பரந்து நிறைந்து நின்றது. காலம் செல்லச் செல்ல புராணங் கள் அதிகம் மக்களிடையே பரவின. வேத மரபில் பலவற்றிற்கு பொருள் விளங்காமல் படிப்படியாக மறையத் தலைப்பட்டன. இது பாரதம் முழுவதும் காணப்படும் ஒரு மாற்றம். இம் மாற்றம் தமிழகத்தி லும் காணப்படுகிறது. புராணங்களின் அடிப்படையில் கோயில்களில் பல்வேறு உருவங்களை வைத்து வழிபடு வது மேலோங்கத் தலைப்பட்டது. பல்லவர் காலத்தி லிருந்து மன்னர்கள் வேள்வி வேட்பதைக் காட்டிலும் சிறப்புச் செழுமை வாய்ந்த கோயில்களைக் கட்டுவதில் சிறப்பாக ஈடுபட்டனர். சங்க காலத்தில் பிற்காலத் தைக் காட்டிலும் வேத மரபு நிறைந்து நின்றது.

# 5

# மன்னுக பெரும நீ வாழும் நாளே

அரசனது அன்றாட வாழ்க்கை :

*அரசர்களது அன்றாட வாழ்க்கையைக் குறிக்கும் சில செய்திகள் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. சிறப்பாகப் பத்துப் பாட்டிலும் மதுரைக் காஞ்சியிலும், சிலம்பில் வஞ்சிக் காண்டத்திலும் மூவர் உலாக்களிலும், இச் செய்திகள் கிடைக்கின்றன.*

காலை :

*மன்னன் காலையில் இனிதெழுந்து நாட் கடன் இறுத்து, மார்பில் சந்தனம் பூசி, முத்தாரங்களையும், தரித்து, கரத்தில் வீரவளை பூண்டு, கஞ்சி போடப் பட்ட துகிலை இடையில் அணிந்து தெய்வத்தை வழி பட்டு, பின்னர் படைத் தலைவர்களைக் கண்டான் என மதுரைக் காஞ்சி குறிக்கிறது.*

*தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், தன் பழைய நகரின் வாயில் புறத்து*

இருந்த குளிர்ந்த பொய்கையில் குளித்தான். மன்றத்தில் வேப்பந் தளிரை அணிந்து கொண்டான். முன்னே பறை ஒலித்துக் கொண்டு செல்ல, களிறுபோல் நடந்து வந்தான் என்று புறநானூறு (79) குறிக்கிறது. இதிலிருந்து மன்னர் ஆற்றிலும் பொய்கைகளிலும் குளிப்பதும் உண்டு என்று அறிகிறோம். ஆற்றில் புது நீர் வரும்போது மன்னன் உரிமைச் சுற்றத்துடனும், பிறருடனும் சென்று நீராடுதல் மரபு. இதை ஒரு விழாவாகப் பல நாட்கள் கொண்டாடுவர். இதைப் புதுப் புனல் விழா என்றே கூறுவர் (சிலம்பு. 1, 6 - 159 - 160).

வெண்மையான வலம்புரிச் சங்கமும், காலை முரசமும் ஒலித்தன (புறம் 225; சிலம்பு 14, 13-4).

மன்னன் தன் தேவியுடனே எய்திய பள்ளி இனிதெழுந்தான். பெண் சக்ரவர்த்தியுடன் எய்திய பள்ளி இனிதெழுந்து என்று விக்கிரம சோழன் உலாவிலும் உடனுறைக்கும் மகுடங்கவித்தாள் உடனுறை பள்ளி உணர்ந்து என்று குலோத்துங்கன் உலாவிலும் வருவது காணலாம். மன்னன் தன் மனைவியுடன் துயில் எழுந்தான் (ராஜராஜன் உலா). பின்னர் காவிரி நீராடினான். இதைப் பொன்னித் திருமஞ்சனம் ஆடல் என்றும், காவிரித் தீர்த்தத்து அபிடேகம் செய்தருளல் என்றும் குறிப்பர். நல்ல முகூர்த்தத்திலே நீராடினான் என்றும், நீராடும்போது பல முரசுகள் ஒலித்தன என்றும் அறிகிறோம். மன்னன் திருமஞ்சனம் ஆடுவதற்கென அரண்மனைகளில் தனியாக சாலைகள் இருந்தன. அவற்றை திருமஞ்சனச்சாலை எனக் கல்வெட்டுகள் குறிக்கும்.

நீராடிய பின்னர் அந்தணர்களிடமிருந்து தளிரான அருகம்பில்லைப் பெற்று கையில் காப்பாக அணிந்து கொண்டு தன் தெய்வத்தை வணங்கினான்.

நீராடிய பின்னர், தன் மூதாதையருக்கும் (மேலைக் குரவர்க்கும்) தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் காலைக் கடவ கடன் கழித்தான் என்று இராஜராஜ சோழன் உலாக் குறிக்கிறது. இது நீரில் கொடுக்கப்படுவது. பின்னர் நெற்றியில் திருநீறு முதலியவற்றை அணிந்து கொண்டபின் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்து அழகு செய்து கொண்டான்.

*பவளச் சடையோன் பணித்தபடியே*
*தவளத்ரிபுண்ட்ரஞ் சார்த்திக் — குவளைப்பூங்*
*கார்க்கோலம் ஆடியிற் காண்பான்*

—இராஜராஜன் உலா—45, 46

பின்னர் தன் தெய்வத்தை வணங்கினான். தெய்வ வழிபாட்டின் பின்னர் மறையவர்க்கு தானங்கள் அளித்தான். நீராடி தெய்வ வழிபாட்டின்போதும், தானங்கள் செய்த போதும் மஞ்சள் நிறப் பட்டணிந்து இருப்பது வழக்கம். இவை முடிந்தவுடன் மஞ்சள் நிறப் பட்டை நீக்கி, வெள்ளையான துகிலை அணிந்து கொண்டான். இத்துகில் கஞ்சிபோடப்பட்டிருந்தது. பின்னர் பல அணிகலன்களை அணிந்து கொண்டான். இவற்றை 'மானக் கலன்கள்' என உலாக் குறிக்கும். மார்பில் சந்தனச் சாந்து பூசி, பொன்னாலும், முத்தாலும், ஆன ஆரங்களையும், அரசிலை போன்ற ஆரங்களையும், மலர் மாலைகளையும் பூண்டு, காதில் மகரக் குழைகள் பூண்டு, தோளில் தோள்வளை (கேயூரம்) சூடி, கையில் கடகம் பூண்டு, நவரத்தினங்கள் இழைத்த கச்சை உடைவாளுடன் அரையில் உதரபந்தனமாகச் சூடி, மாலையணிந்த கிரீடத்தைப் பூண்டான் என்று உலாக்கள் வர்ணிக்கின்றன :—

*..................பொய்யாத*
*பொன்னித் திருமஞ்சனம் ஆடிப் பூசுரர் கைக்*

*கன்னித் தளிர றுகின் காப்பணிந்து—முன்னை*
*மறைக் கொழுந்தை வெள்ளிமலைக் கொழுந்தை*
*—மோலிப்*
*பிறைக் கொழுந்தை வைத்த பிரானை—*
*கறைக்களத்து*
*செக்கர் பனி விசும்பைத் தெய்வத் தனிச் சுடரை*
*முக்கட் கனியை முடிவணங்கி—*
*விக்கிரம சோழன் உலா - 41, 43*

கிருஷ்ணதேவராயர், காலையில் எழுந்த பின்னர் சிறிது நல்லெண்ணெய்யைக் குடித்து, உடல் முழுவதும் எண்ணெய் பூசிக் கொண்டு தேகப் பயிற்சி செய்வது நாள்தோறும் வழக்கம். பின்னர் நீராடித் தன் அரண்மனையில் உள்ள பூஜை அறையில் தெய்வங்களுக்கு அந்தணர்களின் உதவி கொண்டு பூஜை செய்து பின்னர் அரச காரியங்களைக் கவனிப்பது வழக்கம். விஜயநகர மன்னன் வீரநரசிம்மன், துயில் எழுந்தவுடன் தோத்திரங்களையும், அரசியல் நூல்களிலிருந்து சில பகுதிகளையும் படிக்கக் கேட்பான். பின்னர் தன் உருவைக் கண்ணாடியில் கண்டு, பின்னர் ஒரு கன்னிப் பெண்ணையும், பசுவையும் வணங்குவது வழக்கமாம்.

நாள்தொறும் கிருஷ்ணதேவராயர் இவ்வாறு தேகப் பயிற்சி செய்தார் என்று குறிப்பு இருப்பதிலிருந்து தமிழகத்தை ஆண்ட மற்ற அரசர்களும் தங்கள் உடலை திடனுள்ளதாக, போர்க்காலங்களில் மாற்றார் மலைத்து மருளும்படி வலிமை உள்ளதாக வைத்துக்கொள்ள நாள்தோறும் பயிற்சி செய்தனர் என்று கொள்வதில் தவறில்லை.

**பகல் :**

திருமலைநாயக்கர் அரண்மனையில் ராஜராஜேச்வரி தேவிக்கும் மற்றும் பிறதெய்வங்களுக்கும் ஒரு "தேபூஜை

கோயில்'' இருந்தது என்றும், திருமலை மன்னன் நாள்தோறும் குளித்து, தன் தெய்வங்களுக்கு வழிபாடு செய்துவிட்டு பின்னர் அரச காரியங்களைக் கவனிப்பது வழக்கம் என்று அன்றைய குறிப்புகள் கூறுகின்றன.

மன்னன் பகல்பொழுதில் ஆள்வதிலும் இரவு வேலைகளில் வருவது குறித்து ஆலோசனை நடத்துவதிலும் கழித்தான் என ("ஞயிற்றெல்லை ஆள்வினைக்குதவி இரவின்எல்லை வருவது நாடி") புறநானூறு குறிக்கிறது (புறம் 364). முப்பது நாழிகை கொண்டது பகல் என்பது மரபு. பகலை மூன்று பகுதிகளாகப் பிரித்து, அதில் முதல் பகுதியில் வழிபாட்டிலும் அறிவுரைகளைக் கேட்பதிலும் கழித்தான். இடைப்பத்து நாழிகை அரசாட்சி, இறை கொள்ளல், பரிசிலர்க்கு ஈதல் ஆகிய பொருள் பற்றிய செயலில் ஈடுபட்டிருந்தான். கடைப்பத்து நாழிகை இசை, இன்பம் முதலியவற்றில் கழிப்பது பண்டைய தமிழ் மரபு என்று புறநானூற்றிலிருந்து அறிகிறோம்.

"ஒருநாள் முதலான் பத்து நாழிகையும் அறத்தான் வழியொழுகிப், பின்பத்து நாழிகையும் இறையின் முறைமை கேட்டு, செய்த பொருளை பரிசிலர்க்குக் கொடுத்து, மகிழ்ந்திருத்தலால் கடும் பகற்றேறற் வீசிருக்கை என்றார் (புறம் 69 உரை.).

தலைமகனால் தலைநின்று ஒழுகப்படுவன தருமார்த்த காமம் என்பன. அம்மூன்றினையும் ஒரு பகலை மூன்று கூறிட்டு முதற்கட்பத்து நாழிகை அறத்தோடுபட்டுச் செல்லும். இடையன பத்து நாழிகையும் அருத்தத் தோடு பட்டுச் செல்லும். கடையன பத்து நாழிகை காமத்தோடு பட்டுச் செல்லும். ஆதலால் தலைமகன் நாழிகையை அளந்து கொண்டு தருமத்தோடு படுவான், தலைமகளோடு படுவான். தலைமகளும் வேண்டவே தானும் வேண்டப்போந்து அத்தாணி புகுந்து அறங்கேட்பதும்

அறத்தோடுப்பட்டுச் செல்வதும் செய்யும் நாழிகை யளந்து இடையன பத்து நாழிகையும் இறையும் முறையும் கேட்டு அருத்தத்திஞேடு பட்டு வாழ்வாஞம்" (இறை சூ. 40 உரை)

**நாளோலக்கம் :**

அரசன் வழிபாடு முடித்து நாள்தோறும் அமர்ந்து அரசகாரியம் செய்யும் மண்டபத்துக்கு நாளோலக்க மாளிகை என்று பெயர். நெடுஞ்செழியன் மதுரையில் தன் அரண்மனையில் நாளோலக்கத்தில் அமர்ந்திருந்ததை மதுரைக்காஞ்சி அழகாக சித்தரிக்கிறது. மாற்ருர்கள் வீழ்த்திய குதிரை வீரர்களையும், அரண்களைக் காத்து நின்ற வீரர்களையும், யானைக் களங்களைக்கொண்ட வீரர் களையும், மண்டலாதிபர்களையும் அறங்கூறவையத் தாரையும், பாணர்களையும் பாடினிகளையும் அழைத்து வரச்செய்து அவர்கள் அனைவருக்கும் ஏராளமான பரிசு களையும், தான் மாற்றரசர்களிடமிருந்து கைப்பற்றிய பொருள்கள், களிறுகள், தேர்கள் முதலியவற்றையும் வாரி வழங்கிஞன் என்று அந்நூல் குறிக்கிறது. தமிழ் மன்னர் கள் தங்கள் நாளோலக்கங்களில் அமர்ந்து எவ்வாறு புலவர்களுக்கும், பாணர்களுக்கும், ஏழை எளியவர் களுக்கும் பொருள் வழங்கிஞர்கள் என்பதைப் பல புற நானூற்றுப் பாடல்களிலிருந்து அறியலாம்.

செங்குட்டுவன் அந்திமாலையில் தன்தேவி வதுவை வேண்மாண் மங்கலமடந்தையுடன் அணியரங்கம் அடைந் தான். அங்கே ஏவல் மகளிர் இருந்தனர். வாசனைச் சாந்துகள் ஏந்திக் கூனரும் குள்ளரும் இருந்தனர். மலர் மாலைகளை ஏந்திய பேடியர் இருந்தனர். அணிகலன்களை ஏந்தி சேடியர் இருந்தனர். முழவும் யாழும், பண்நிறைந்த இசையும் நிரம்பியிருந்தன. செங்குட்டுவன் தன் தேவி யுடன், கூத்தச் சாக்கையன் ஆடிய ஆடலைக்கண்டு களித்துப் பின்னர் வேத்தியல் மண்டபம் அடைந்தான்.

நீலன் முதலிய கஞ்சுகமாக்களும், மாடலன் முதலிய மறையோரும் தங்கள் வருகையை அரசனுக்கு வாயிலாளர் மூலம் அறிவித்தனர். பின்னர் உள்ளே சென்று, அரசனை வாழ்த்தி ஆலோசனை புரிந்தனர். இங்கு இரவில் முன் பகுதியில் மன்னன் ஆடல் கண்டு மகிழ்ந்தான் என உள்ளது. இது புறநானூற்றில் கூறியுள்ள மரபையே நினைவுறுத்துகிறது. (திருமலைநாயக்க மன்னன் மாலை நேரங்களில், தன் மனைவியரும் சுற்றமும் சூழத் தீவட்டி வெளிச்சத்தில் நாடக அரங்கில் ஆடல் மகளிரின் ஆடல் கண்டு மகிழ்ந்தான் என்று அறிகிறோம். இது ஒரு பொழுதுபோக்குப் போலும்.) மறவரும், எயில் உழந்த செல்வரும், குரிசிலரும், உதவி ஊக்கலரும், யானைக்கண நிறை கவர்ந்த ஆடவரும், பிறரும் யாவரும் வருக. பாணர் வருக. பாடியர் வருக. யாணர்ப் புலவரோடு வயிரியர் வருக என்று அனைவரையும் அழைத்துப் பரிசளித்தான் நெடுஞ்செழியன் என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது.

அரசன் சிம்மாசனம் ஏறுவது முரசு முழங்கி தெரியப் படுத்தப்பட்டது. (அறை பறை எழுந்த பின், அரி மானேந்திய முறை முதல் கட்டில் இறைமகன் ஏற. சிலம்பு. 26 1,2) ஆசானும், பெருங்கணியும், அமைச்சரும், யானைத்தலைவரும் அங்கு குழுமியிருந்தனர். மன்னன் அமர்ந்ததும் 'மன்னர் மன்னன் வாழ்க' என்று அனைவரும் ஏத்தினர். அரசன் சினமுறுங்காலை ஆசான் அதை தணித்தனன். பெருங்கணி, பன்னிரண்டு இராசிகளையும் இருஹ நிலைகளையும், ஐந்து கேள்விகளையும் (திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம்; நம்பு ஆட்சி, உச்சம், பகை, நீசக் கோள், ஆயவற்றை) அறிந்து முகூர்த்தத்தின் பயன் கூறினான் என்று சிலம்பு கூறுகிறது.

பல கல்வெட்டுகளில் மன்னன் அரண்மனையில் இன்ன பகுதியில் இன்ன கட்டிலில் அமர்ந்திருந்த போது ஆளும்

செயலில் ஈடுபட்டு, ஊர்களுக்கு இறை விதிப்பதையும், இறை நீக்குவதையும் ஆய்ந்தான் என்று காண்கிறோம்.

''ஸ்ரீவல்லபதேவர் மதுரைக்கோயிலில் உள்ளாலை அழகிய பாண்டியன் கூடத்துப் பள்ளிக்கட்டில் பாண்டிய ராஜனில் எழுந்தருளி இருந்து செய்யத்திருவாய் மொழிந் தருளினபடி'' என்று ஒரு கல்வெட்டு (223) கூறுவதிலி ருந்து இது தெளிவாகும்.

குலோத்துங்கசோழன் காஞ்சியில் செம்பொன் மாளி கையில் தென்மேற்குத் திக்கில் சித்திர மண்டபத்தில் இருந்ததைக் கலிங்கத்துப்பரணி குறிக்கிறது. "வெண் குடை கவித்திருந்தது. இருபுறமும் வெண்சாமரம் வீசப் பட்டது. சிம்மாசனத்தில் குலோத்துங்கன் அமர்ந்திருந் தான். அருகில் அணுக்கிமார்கள் பலர் இருந்தனர். அவர்கள் நாடகம் முதலிய நிருத்தம் அனைத்திலும், நால் வகை பண்களிலும் வல்லமை பெற்ற ஆடல் பாடல் மகளிர் ஆவர். மேலும் நின்று ஏத்துவோராகிய சூதரும், இருந்து ஏத்துவோராகிய மாகதரும், மங்கலப்பாடகரும் அவன் புகழ் பாடினர். வீணை, யாழ், குழல் முதலிய பல இசைக்கருவிகளை இசைப்போர் தங்கள் வல்லமை கேட்க வேண்டினர். குலோத்துங்கன் தாளமும் செலவும் பிழை யாமல் சில இசைகளைத் தானே இயற்றியிருந்தான். அவற்றைத் தன்னெதிரே பாடச்சொல்லி கேட்டான். பாணர்கள் பாக்களைப் பாட அவற்றிலும் பிழைகாணும் வகை கல்வி மிகுந்திருந்தான்.

குலோத்துங்கனிடம் தோற்ற மன்னர்கள் தங்கள் கரங்களால் வெண் சாமரம் வீசினர். மாற்றரசர்களின் தேவிமார்களெல்லாம் சேடியர்களாய் நின்றனர். தொண் டைமான் முதலிய மந்திரச் சுற்றமும், தந்திரச் சுற்ற மும் அமர்ந்திருந்தனர். அப்பொழுது வாயிலில் மாற்ற

ரசர்களும் மண்டலீகர்களும், திறைகொணர்ந்து காத்து நிற்பதை அரசனுக்கு "திருமந்திர ஓலை" என்னும் அதிகாரி அறிவித்தான். அரசன் அவர்களை வரச்சொல்ல ஒவ்வொருவரும் தாங்கள் கொணர்ந்த விலையுயர்ந்த பரிசுகளை எல்லாம் திறையாகச் செலுத்தினர். இன்னம் திறை கொணர்ந்தோர் உண்டோ என்று மன்னன் வினவினான். கலிங்கத்து மன்னன் இருமுறையாக திறை கொண்டு வந்த செலுத்தவில்லை என்று திருமந்திர ஓலை கணக்கு கூறினான் ஆதலின் அவன் செருக்கழிக்க படையை குலோத்துங்கன் ஏவினான் என்று ஓலக்கத்தில் நடந்த நிகழ்ச்சிகளை படம் பிடித்துக் காட்டுகிறார் ஜயங்கொண்டார்.

# 6

# இவளொடு ஆயிரம் வெள்ளம் வாழிய பலவே

அரசமாதேவியர் :

சங்க காலத்திலிருந்தே அரசனின் மனைவி தேவி என்றழைக்கப்பட்டாள். அரசமாதேவியர் நாட்டில் சிறந்த நிலை பெற்றிருந்தனர். நல்ல எழில் வாய்ந்தவளாயும் கற்புடைய மங்கையாகவும், இன்மொழி பேசுவாளாயும், தன் தலைவன் மாட்டு ஆருக்காதல் கொண்டவளாகவும் திகழ்ந்தாள் எனப் பல சங்கப் பாடல்களிலிருந்து அறியலாம். ஊடலிலும் இளநகை அளிக்கும் தன்மையாள் என்று பதிற்றுப்பத்து கூறுகிறது.

> "ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
> ஊடினும் இனிய கூறும் இன்நகை
> அமிர்து பொதி துவர்வாய் அமர்த்த நோக்கின்
> சுடர் நுதல் அசை நடைஉள்ளலும் உரியள்"
>
> (பதி. பத். 6—11, 13

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் தேவி :—

"..........வண்டுபட
ஓலிந்த கூந்தல் அறம் சால் கற்பின்
குழைக்கு விளக்கு ஆகிய ஒள் நுதல் பொன்னின்
இழைக்கு விளக்கு ஆகிய அவ்வாங்கு உந்தி
விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த
செம்மீன் அனையள் நின் தொல்நகர்ச் செல்வி
—(பதி. பத். 31, 23—28)

என்று புகழப்படுகிறாள். கற்பினுக்கே விளக்கு என்றும், வானத்து விளங்கும் அருந்ததி போன்றவள் என்றும் புகழப்படுகிறாள்.

சங்க காலத்தில் மன்னர்களை அவர்களது தேவியின் சிறப்பைக் கூறி அவளது கணவன் எனப் புலவர் பாடுவர். கொடுங்குழை கணவ, திருந்திழை கணவ, வாணுதல் கணவ, நண்ணுதல் கணவ, ஆன்றோள் கணவ, சேயிழை கணவ, நல்லோள் கணவ, புதையோள் கணவ, ஒண்டொடி கணவ எனப் பலவாறாக சங்க நூல்கள் குறிக்கின்றன.

## எழில் :

அரச மாதேவியரின் அழகு பல இலக்கியங்களிலும் சில கல்வெட்டுகளிலும் சிறப்பாகப் புகழப்பட்டுள்ளது. பல்லவ மன்னன் இராஜசிம்மன் என்பவனின் தேவி, தன் தலைவனிடத்தில் ஈடில்லாக் காதல் கொண்டவள் என்று வர்ணிக்கப்படுகிறாள். மகளிர் குலக்கொடி போல் விளங்குகிறாள் (நாரீணும் பதாகா) என்றும் அவள் பெயர் ரங்கபதாகை என்றும் கல்வெட்டுக் கூறுகிறது. இதே மன்னனின் மற்றொரு மனைவி விலாசவதி என்று பெயர் பெற்றவள். அவள் ஒப்பற்ற அழகியாய்த் திகழ்ந்தவள். "அழகாலும் உருவாலும் சிறந்த மகளிர்களைத் தோற்றுவிப்பதில் சிறந்த வல்லமையை நெடுங்காலமாக

நான்முகன் பெற்றிருக்கிறன். அவன் ஆற்றலின் முழு மையும் எழிலாக, மென்மையாக, அன்பாக, தூய்மையாக இவள் உருவெடுத்திருக்கிறுள்'' என்று கல்வெட்டுக் கூறு கிறது. நந்திவர்மன் என்னும் பல்லவ அரசனின் தேவி இராஷ்டிரகூட குலத்தில் பிறந்த சங்கா என்று பெயர் பெற்றவள். அவள் பூமிதேவியைப் போல் பொறு மையே உருவானவள். தாய்போல் உலகிடத்தில் அன்பு பூண்டவள் என்றும் வர்ணிக்கப்படுகிறுள் (பாகூர் செப்: 20-21). விக்கிரம சோழனின் தேவி தரணி முழுதுடை யாள் என்பவள் ''மாதர் மடமயில்'' என்றும் ''பூதலத்து அருந்ததி'' என்றும் புகழப்படுகிறுள். இரண்டாம் இராஜராஜனின் தேவி 'அறம் புரக்கும் கருணைவல்லி' என்று புகழப்படுகிறுள். இவனுடைய தேவி தரணி முழுதுடையாள் என்பவளின் அழகு கல்வெட்டில் மிக வும் சிறப்பாகப் புகழப்படுகிறது.

''பேர் படைத்த நான்முகத்தோன்
பெரும்படைப்பை வளர்க்கும் பணை
வையமேத்துஞ் சமந்தகமணி
மாதவன் புனை கவுத்துவமணி
தையலார்க்கு ஒரு சூளாமணி
சதுர்வேத சிந்தாமணி
புண்ணியம் ஒரு வடிவு கொண்டு
புகழென்னும் மணி புனைந்து
பெண்ணியல் தனதாகப்
பிறந்ததெனச் சிறந்த பேதை''

என்று அவன் மெய்க்கீர்த்தி புகழ்வதிலிருந்து இவளின் அழகும் பெருமையும் அறியலாம்.

### பல தேவியர் — அரச குலப் பெண்கள் :

தமிழகத்தை ஆண்ட பண்டைய மன்னர்கள் பல தேவியரை மணந்திருந்தனர். பல தேவியரை மணப்பது

District Br
Kasthur
Triplicane Madras

அக் காலத்து அரசர்களுக்குத் தேவையாயிருந்தது. அண்டை நாட்டு மன்னர்களின் பெண்களை மணப்பதால் நல்லுறவு நிலைநிறுத்த முடிந்தது. இராஜராஜ சோழன் தன் மகள் குந்தவையை கீழைச் சாளுக்கிய மன்னன் விமலாதித்தன் என்பவனுக்கு மணம் செய்து கொடுத்தான். இதனால் கீழைச் சாளுக்கிய நாடும் பலம் பெற்றது. அதே போன்று முதல் இராஜேந்திரசோழன் தன் மகள் அம்மங்காதேவியை, கீழைச் சாளுக்கிய மன்னன் இராஜராஜனுக்கு மணம் செய்து கொடுத்தான். இதன் காரணமாக சுமார் நூறு ஆண்டுகளுக்கும்மேல் கீழைச் சாளுக்கிய அரசுக்கு சோழர் உதவி கிடைத்து வந்தது. நெடுஞ்சேரலாதன், சோழன் மகள் மணக்கிள்ளியை மணந்திருந்தான். பாண்டியன் நின்றசீர் நெடுமாறன், சோழன் மகள் மங்கையர்க்கரசியை மணந்திருந்தான்.

பல்லவ மன்னர்கள் இராஷ்டிரகூடப் பெண்களை மணந்தனர். நந்திவர்மனின் மனைவி சங்கா என்பவள் இராஷ்டிரகூடப் பெண் என்று கண்டோம். அதே போல் பல்லவ குலப் பெண்களை கங்கர்களும், கங்கர் பெண்களை பல்லவர்களும் மணந்தனர். அது மட்டுமல்ல, தாங்கள், முடிசூடும் மன்னர்குலப் பெண்களை மணப்பதே தமக்கும் தம் குலத்துக்கும் பெருமை என்று இவர்கள் கருதியது ஒரு சிறப்பாகவும்.

### சிற்றரசர்களின் பெண்கள் :

மன்னர்கள் பல சிற்றரசர் பெண்களையும் மணந்திருக்கின்றனர். பல சிற்றரசர்களின் பெண்களை மணந்ததால் அவர்களது உதவி மன்னர்களுக்குக் கிட்டியது. கரிகாலன் நாங்கூர் வேளிர் பெண்களை மணந்தான். கொடும்பாளூர் வேளிர்களும், பழுவூர் பழுவேட்டரையர்களும், பாணர்களும், கங்கர்களும், மழவரையர்களும் இன்னபிற சிற்றர

சர்களும் தங்கள் பெண்களைச் சோழகுலத்தில் கொடுத்து சோழ குலப்பெண்களை தாங்களும் மணந்திருந்தனர். கண்டராதித்தசோழனின் தேவி செம்பியன் மாதேவியார். இவர் மழவரையர் மகள் என்று புகழப்படுகிறாள். "மேற்கெழுந்தருளிய தேவர் கண்டராதித்ததேவர் தேவியார் மழவரையர் மகளார் பராந்தகன் மாதேவடிகளான செம்பியன் மாதேவியார்" (11/19) என்று குறிக்கப்படுகிறாள். கொடும்பாளூர் வேளிர்களின் பெண்களை ஆதித்தசோழன் முதலிய பல சோழர்கள் மணந்திருக்கின்றனர். இராஜராஜ சோழன் தேவியரில் ஒருவள் பழுவேட்டரையன் மகள் என அறிகிறோம். இரண்டாம் இராஜராஜனின் தேவி அவனிமுழுதுடையாள் என்பவள் மலாடகுலத்துப் பிறந்தவள்.

சேரமன்னர்கள் தங்கள் கீழாண்ட சிற்றரசர்களின் பெண்களை மணந்திருந்தனர் என்று சங்கப் பாடல்களிலிருந்து அறியலாம். சேரலாதன் வேளாவிக்கோமான் மகள் பதுமன்தேவியை மணந்திருந்தான். உதியஞ் சேரல், வெளியன் என்பானின் மகளை மணந்திருந்தான். பாண்டியன் தேர்மாறன், கங்கராஜனுடன் சம்பந்தம் செய்து கொண்டான் என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது.

**மாற்றரசர்களின் பெண்கள் :**

மன்னர்கள் மாற்றரசர்களை வென்று அவர்களது பெண்களை மணப்பது தங்கள் புகழுக்கு ஏற்றமளிக்கும் என்ற காரணத்தாலும் மணந்துள்ளனர். அரசர்கள் சிற்றரசர்களின் பெண்களை மணந்ததுபோல் தங்கள் பெண்களை சிற்றரசர்களுக்கும் கொடுத்துள்ளனர். கொடும்பாளூர்வேளிர் செம்பியன் இருக்குவேளாயின பூதி பராந்தகன் தேவி சோழப்பெருந்தேவி எனப்படுகிறாள் (646 / 8) முத்தரையன் மஹிமாலயனின் தேவி பாண்டிய

குலத்து உதித்தவள் பஞ்சவன்மாதேவி என்று அழைக்கப்படுகிருள் இராஜராஜனின் தமக்கை குந்தவைப் பிராட்டி வல்லவரையர் வந்தியத்தேவரை மணந்திருந்தாள். உத்தமசோழரின் தேவியரில் ஒருத்தி மழபாடி தென்னவன் மகள். மற்ருெருவள் இளங்கோவேளார் மகள் வானவன்மகாதேவியென்ற பெயர் பெற்றவள். மற்ருெருவள் விழுப்பரையர் மகள். நான்காமவள் பழுவேட்டரையர் மகள் எனப் பல சிற்றரசர்களின் பெண்கள் கூறப்பட்டுள்ளனர். இதுபோல் மலேநாடியர், துளுநாடியர், கருநாடியர் முதலிய பல பெண்கள் குலோத்துங்கனின் தேவியராய்த் திகழ்ந்தனர் எனக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது.

பட்டத்து அரசி:

இவ்வாறு அரசர்கள் பல பெண்களே மணந்தபோதும் அவர்களில் ஒருவளே பட்டத்தரசியாகக் கருதப்பட்டாள். அவளே அக்ரமகிஷி என்று கல்வெட்டுக் கூறுகிறது. உத்தமசோழரின் பலதேவியரில் ஒரட்டானன் சொரப்பை என்பவள் 'அக்ரமகாதேவி' என்று அழைக்கப்படுகிருள் (141 / 19). இராஜராஜனின் தேவியரில் தந்தி சக்தி விடங்கி என்னும் லோகமகாதேவி முதலரசியாய்த் திகழ்ந்தாள். விக்கிரமசோழனுக்கு முக்கோக்கிழானடிகள் என்பவள் பட்டத்தரசியாய்த் திகழ்ந்தாள். அரசனின் பட்டத்தரசியாய்த் திகழ்ந்தவள் இறந்துவிடில், மற்றமனேவியருள் ஒருத்தி பட்டத்தரசியாகக் கொள்ளப்பட்டாள் என அறிகிரேம். முதல் குலோத்துங்கனின் பட்டத்தரசி மதுராந்தகி என்பவள். இவள் குலோத்துங்கனின் 26ம் ஆண்டில் இறந்திருக்கக் கூடும். ஆதலின் இவ்வாண்டுக்குப் பிறகு இவனின் மற்ருெரு மனேவி தியாகவல்லி என்பவள் பட்டத்தரசியாகக் குறிக்கப்படுகிருள் (பண்டாரத்தார், பி.சோ. சரி. 52) விக்கிரமசோழனின் தேவி முக்கோக்கிழா

னடிகள் இறந்த பின்னர் தியாகபதாகை என்பவள் பட்டத்தரசியானுள்.

## அரசிக்கும் பட்டப் பெயர் :

அரசர்களின் முதல் அரசி அரசனுடன் உடன் முடிகவிழ்க்கப்பட்டாள் என்று முன்னர் கூறினேம்.

> "...........மாதரில்
> ஒக்க அபிடேகஞ் சூடும் உரிமைகள்
> தக்க தலைமைத் தனித் தேவி"

என்று குலோத்துங்கசோழன் உலாக் கூறுகிறது. அவ்வாறு முடிசூடப்பட்டபோது அவர்கள் புதிய பட்டப் பெயர் ஏற்றனர் என்று கொள்ள இடமிருக்கிறது. கண்டராதித்தசோழரின் தேவியின் இயற்பெயர் பிராந்தகன் மாதேவடிகள் என்பது. இவளின் பட்டப்பெயரே செம்பியன் மாதேவி என்பது. இதுபோன்ற பட்டப்பெயர் ஏற்கும் மரபு சங்ககாலத்திலிருந்தே திகழ்ந்ததா என்று தெரியவில்லை. பூதப்பாண்டியன் தேவி "பெருங்கோப் பெண்டு" என்று அழைக்கப்படுகிருள். இது இயற் பெயரா, பட்டப்பெயரா என்று தெரியவில்லை. அதே போன்று பாண்டியன் நெடுஞ்செழியனின் தேவி 'கோப் பெருந்தேவி' என்று சிலம்பு கூறுகிறது. இப் பெயர் பட்டப் பெயர் போல் தோன்றினும் உறுதியாய்க் கூற இயலவில்லை. அதே போன்று அந்துவன் சேரலின் தேவி "பொறையன் பெருந்தேவி" என்று அழைக்கப்படுகிருள். ஆனல் குட்டுவன் இரும்பொறையின் தேவி அந்துவன் செள்ளை என்றும், செங்குட்டுவனின் தாய் சோழன் மணக்கிள்ளி என்றும் குறிக்கப்படுவதிலிருந்து அவர்கள் இயற் பெயராலேயே பெரிதும் சங்க காலத்தில் அழைக்கப்பட்டனர் என்று கொள்ளலாம்.

பல்லவர் காலத்தும் சுமார் 8ம் நூற்ருண்டுவரை தேவியரின் இயற்பெயரே பெரிதும் கிடைத்துள்ளது. 9ம் நூற்ருண்டின் இறுதியில் ஆண்ட மன்னர்களின் தேவியர் தான் "காடவன் மாதேவி", 'வீரமாதேவி' (73 / 12) போன்ற பட்டப்பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். சோழர் காலத்திலிருந்து தேவியர் பட்டப்பெயரால் அழைக்கப்படுவது சிறப்பாகக் காணப்படுகிறது. பட்டப் பெயரால் மட்டுமோ அன்றி இயற்பெயரும் பட்டப் பெயரும் இணைந்தோ இவர்கள் கல்வெட்டுகளில் குறிக்கப் படுகின்றனர். "பரகேசரிவர்மர் தேவியார் சோழ மாதேவியார்" (74/19) என்று பராந்தகனின் தேவி குறிக் கப்படுகிருள். பரகேசரிவர்மனின் கல்வெட்டில் "நக்கன் தில்லை அழகியாரான சோழ மாதேவியார்" என்று (260/19) குறிக்கப்படுவதும், இராஜராஜனின் தேவி "தந்திசக்தி விடங்கியான லோகமகாதேவி" என்று அழைக்கப் பட்டதும் இம்மரபை ஒட்டியே.

**உலக முழுதுடையாள் :**

பத்தாம் நூற்ருண்டின் பின்பகுதியிலிருந்து மற்று மொரு புதிய மரபைக் காண்கின்ருேம். சோழமாதேவியர் "உலக முழுதுடையாள்" என்று அழைக்கப்படுகின்றனர். இம்மரபு வீரராஜேந்திரனின் மெய்க்கீர்த்திகளிலிருந்து காணப்படுகிறது. வீரராஜேந்திரனின் தேவியும் அவன் மகன் அதிராஜேந்திரனின் தேவியும் பின்னர் வந்த குலோத்துங்க சோழனின் தேவியும் உலகமுழுதுடை யாள் என அழைக்கப்பட்டனர். பின்னர் வந்த சோழர் மெய்க்கீர்த்திகளில் "புவனிமுழுதுடையாள்" 'தரணீ முழுதுடையாள்' 'அவனிமுழுதுடையாள்' என்று அதே கருத்தில் பல பெயர்கள் காணப்படுகின்றன.

சோழர்களுக்குப் பின் வந்த பாண்டியர்களும் சோழர் வழியைப் பின்பற்றி தங்கள் தேவியரை உலகமுழுதுடை

யாள் என்றும் திரைலோக்ய முழுதுடையாள் என்றும் குறித்துள்ளனர். மாறவர்மன் சுந்தரபாண்டியனின் தேவியும் சடாவர்மன் சுந்தரபாண்டியன், பராக்ரம பாண்டியன், ஸ்ரீவல்லபன் முதலியோரின் தேவியர்களும் உலகமுழுதுடையாள் என்று அழைக்கப்படுகின்றனர். வீரபாண்டியனின் மெய்க்கீர்த்தி அவன் பட்டத்தரசியைத் திரைலோக்ய முழுதுடையாள் என்று கூறுகிறது.

### மெய்க்கீர்த்திகளில் தேவியர் :

இராஜராஜனின் காலத்திலிருந்து அரசனது புகழ் அவன் கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தியாக எழுதப் பட்டது. இராஜராஜன், முதல் இராஜேந்திரன் அவன் மகன் முதல் இராஜாதிராஜன் இவர்களின் மெய்க்கீர்த்தி களில், தேவியர் இடம் பெறவில்லை. கோயில்களுக்குத் தேவியர்கள் தானம் கொடுத்த இடங்களில் அவர்கள் பெயர் குறிக்கப்பட்டுள்ளனவே தவிர மெய்க்கீர்த்திப் பகுதிகளில் இல்லை. ஆனால் வீரராஜேந்திரனின் மெய்க் கீர்த்திகளிலிருந்து தேவியும் குறிக்கப்படுகிறாள். ஆதலின் இக்காலத்திலிருந்து அரசமாதேவியர் மேலும் சிறப்பைப் பெற்றனர். அவர்களின் செல்வாக்குப் பெருகியது எனலாம்.

### அரியணையில் உடனமர்தல் :

அரசன் அரியணையில் அமர்ந்திருக்கும்போது தேவியர் உடனமர்வது பண்டைய மரபு. சேரன் செங்குட்டுவன் வெள்ளிமாடத்து இளங்கோவேண்மாளுடன் இருந்தான் என்று சிலம்பு கூறுகிறது (25. 5. ). கண்ணகி வழக் குரைத்தபோது பாண்டியன் நெடுஞ்செழியன் தன் தேவி பெருந்தேவியுடன் அரியணையில் அமர்ந்திருந்தான் என்றும் இருவரும் அரசு கட்டிலிலேயே உயிர் நீத்தனர் என்றும் சிலம்பு குறிக்கிறது.

"புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சிய
பாண்டியன் நெடுஞ்செழியன்"

என்று (23–கட்டுரை 18) சிலம்பு கூறும். ஆதலின் சங்க காலத்திலிருந்தே தேவியர் அரியணையில் அமர்ந்திருப்பர் என்று அறியலாம். ஆயினும் கல்வெட்டுகளில் வீர ராஜேந்திரன் காலத்திலிருந்துதான் தேவி சிம்மாசனத்து உடனிருந்தாள் என்ற செய்தி குறிக்கப்படுகிறது. பல்லவர் கல்வெட்டிலோ, பாண்டியர் கல்வெட்டிலோ முற்காலச் சோழர் கல்வெட்டிலோ இது காணப்பட வில்லை. வீரராஜேந்திரன் கல்வெட்டில் "உலக முழுதுடை யாளோடும் வீரசிம்மாசனத்து வீற்றிருந்தருளிய உடை யார் வீரராஜேந்திர சோழர்" என்று காணப்படுகிறது. பின்வந்த சோழர் பாண்டியர் அனைவரும் இக்கருத்தைத் தங்களின் கல்வெட்டுகளில் குறிக்கின்றனர். ஆனால் பின்னால் வந்த விஜயநகரப் பேரரசர்கள் இதுபோல் அரசியரைக் குறிப்பதில்லை.

### உடனமரும் பல தேவியர் :

மன்னர்களுக்குப் பல மனைவியர் இருந்தனர் என்று கண்டோம். மன்னன் அரியணையில் அமரும் போது பட்டத்து அரசி மட்டும் அன்றி பிற தேவியரும் அரி யணையில் அமர்ந்தனர் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. முதல் குலோத்துங்க சோழனின் மெய்க்கீர்த்தி தியாக வல்லி என்பவளும் ஏழிசைவல்லபி என்பவளும் அரியணை யில் அமர்ந்திருந்தனர் என்று கூறுகிறது.

"பேரிளம் பொற்கொடி செம்பியன்
கிழானடி ஒருமருங்கு உடனிருப்ப
உலகமுழுதுடையாள் உடனிருப்ப

*செம்பொன் வீரசிம்மாசனத்து புவனமுழுது டையாளொடும் வீற்றிருந்தருளிய"*

என்று மூன்று தேவியர் சூழ அமர்ந்திருந்ததை (598 / 17) இரண்டாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி கூறுகிறது. விக்கிரமசோழன் தியாகபதாகை என்னும் தேவியுடனும், தரணிமுழுதுடையான் என்னும் தேவியுடனும் உடனிருந்தான் என்று அவன் மெய்க்கீர்த்திகளால் அறிகிறோம். இவ்வாறு இரண்டு அல்லது மேற்பட்ட தேவியர் அரியணையில் உடன் அமர்ந்திருப்பதை பின்னர் வந்த பாண்டியர் மெய்க்கீர்த்திகளோ, அல்லது 'பிற மெய்க் கீர்த்திகளோ குறிப்பதில்லை. சோழப் பேரரசர்கள் மட்டும் தங்கள் தேவியருக்குச் சிறந்த இடம் அளித்தனர் என இதனால் அறியலாம்.

அரசனோடு தேவி அமர்ந்திருப்பதை கல்வெட்டுகள் இமையப் பாவையும் சிவனும் போல், அம்மை அப்பன் போல் அமர்ந்திருந்தனர் என்றும், திருமாலின் மார்பில் திருவீற்றிருப்பதுபோல், எப்பொழுதும் •அரசனை பிரியாது வீற்றிருப்பவள் என்றும் குறிக்கின்றன.

**தேவிக்கு ஆணை நடாத்தும் உரிமை :**

அரசனோடு முடி கவிழ்க்கப்பட்ட தேவிக்கு அரச ஆணையிடுதல் போன்ற பல உரிமைகள் உடன் வந்தன என்று சோழர் கல்வெட்டுகள் கூறுகின்றன. முக்கியமாக இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றும் இராஜராஜன் ஆகிய அரசர்களின் மெய்க்கீர்த்திகள் தெளிவாகவும் விரிவாகவும் உரைக்கின்றன. முதல் குலோத்துங்கனின் தேவி "சென்னியாணையுடன் ஆணையை நடாத்தும் உரிமைத் தியாகவல்லி" என்று கலிங்கத்துப் பரணி குறிக்கிறது. விக்கிரமசோழன் உலா, பெண் சக்கரவர்த்தி என்று தேவியை

அழைக்கிறது. "பேரரசு தனிநாடத்திப் பெண்ணரசாய் முடிசூடி உடன் ஆணையும், உடன் இருக்கையும், உடன் அரசும் கடனாகவே படைத்தருளி அறம் புரக்கும் கருணைவல்லி அகலாத மாதாவென்றூரணங்கள் ஒரு நான்கும் புகலவருந் தனிநாயகி" என்று இரண்டாம் இராஜராஜனின் மெய்க்கீர்த்தி புகழ்கிறது. இதிலிருந்து தேவிக்கு ஆணையும், இருக்கையும், அரசும் உடன் கிடைத்தன என்று அறியலாம்.

"...........அவனியில்
எண் பெருமாதிரத்தும் ஏறும்
உடன் ஆணைப் பெண்
பெருமாள் அந்தப்புரப் பெருமாள்"

என்று இராஜராஜன் உலாக் குறிக்கிறது.

இரண்டாம் இராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தி,

"உடன் ஆணையும், திருவாணையும்
உடன்செல்ல முடிகவித்தாள்
மண்ணரசர் வந்திறைஞ்ச
மகுடம் புனை வளவனுடன்
பெண்ணரசும் பெருந்தாயமும்
பெற்றருளும் பெண்பெருமாள்
உறையூரும் பேருரகையும்
உதகையும் மதுராபுரியும்
முறைமுறை ஆண்டருளி
முளரிநகர் துறந்த வண்ணம்
பொன் ஆசனம் சிங்கவணை
பொலங்கற்பகப் பூஞ்சோலை
முன்னேவல் நித்தல் முறை
முறையே பெறு முலைப் பெருமாள்"

என்று குறிப்பதிலிருந்து அவன் தேவி, பல நகர்களில் அவன் அரியணையில் அமர்ந்தபோது அங்கும் உடன்

அமர்ந்தாள் என்றும் அறிகிறோம். மூன்றும் இராஜ ராஜனின் மெய்க்கீர்த்தி இன்னும் சிறப்பாக,

"உரை சிறந்த தனிஆணை
உடன் ஆணை பெற்றுடையாள்"

என்றும் 'சக்கரவர்த்தி' என்றும் போற்றுகின்றன. இதிலிருந்து கி. பி. 11-ம் நூற்றாண்டிலும், 12-ம் நூற்றாண்டிலும் அரசமாதேவியர் அரசில் சிறந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது தெளிவு.

**தேவியரின் உற்றுருக்குச் செல்வாக்கு :**

சங்க காலத்திலிருந்தே அரசமாதேவியரின் உற்றூரும் உறவினரும் அரசில் சிறந்த செல்வாக்கும் அதிகாரமும் பெற்றிருந்தனர். குட்டுவன் இரும்பொறை மையூர்க் கிழான் வேள்மான் அந்துவன் என்பவனின் மகள் செள்ளையை மணந்திருந்தான். அவள் மகன் இளஞ் சேரல் இரும்பொறைக்கு மையூர்க்கிழான் (தாத்தா) அமைச்சனுக இருந்தான். அமைச்சியன் மையூர் கிழான்" என்று அவனைப் பதிகம் குறிக்கிறது. சிற்றரசர்கள் தங்கள் பெண்களை அரசர்க்கு கொடுப்பதால் பெற்றிருந்த செல்வாக்கு முன்னரே குறிக்கப்பட்டது.

அரசியின் தந்தை மட்டுமல்ல. தாயும் உடன் பிறந்தாரும் செல்வாக்குப் பெற்றிருந்தமை கல்வெட்டுகளால் அறியலாம். பராந்தக சோழனின் தேவி சோழமாதேவியின் தாய், முள்ளூர் நங்கை என்பவள் திருவையாறு, பூந்துருத்தி முதலிய பல கோயில்களுக்கு பொன்னும் பொருளும் கொடுத்துள்ளாள் (74 / 19). பராந்தகனின் ஒரு தேவி சோழ சிகாமணி என்பவளின் தாயார் நங்கூரி நங்கை என்பவள் ( 525 / 5 ) கல்வெட்டில் குறிக்கப்படுகிறாள். பராந்தகனின் தேவி சோழமாதேவியின் தங்கை

பெருமாள் திருவரங்கி என்பவன் திருவையாற்றுக் கோயிலுக்குப் பொருள் கொடுத்துள்ளாள் (524 / 5).

## போர்க்களத்தும் தேவியர் :

அரசமாதேவியர் அரியணையில் அமரும்போது மட்டுமின்றி, வெளியூர்களுக்கு செல்லும்போதும் உடன் சென்றனர் என்று கண்டோம். குலோத்துங்க சோழன் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து காஞ்சிபுரம் சென்ற போது அவனுடன் ஏழிசை வல்லபியும், தியாக வல்லியும் உடன் சென்றனர் என்று பரணி கூறும் (பரணி – 285, 286).

அரசர்கள் போருக்குச் சென்றபோது தேவியர் உடன் சென்றனரா என்ற ஐயம் எழக் கூடும். பல நேரங்களில் அவர்கள் உடன் செல்லவில்லை. அரசன் போர்ப் புறத்தே இருக்க அரசி அரண்மனையில் தனித்து தவித்து இருந்தாள் என்னும் 'நெடுநல்வாடை'யிலிருந்து தேவி அரசனுடன் செல்வது நியதி இல்லை என அறியலாம். ஆனால், பல சமயங்களில் அரசர்கள் தங்களுடன் பெண்டிரையும் அழைத்துச் சென்றனர் என்று அறிகிறோம். முதல் இராஜேந்திரன் உத்திரலாடத்து அரசன் மகிபாலனை ஜயித்தபோது அவன் பெண்டிரையும் பண்டாரத்தையும் கைப்பற்றினான் என்று அறிகிறோம். முதல் இராஜாதிராஜன் இலங்கை அரசன் வீரசலாமேகன் என்பானுடன் போரிட்டபோது, அவன் காதலியோடு தாயையும் பிடித்தான் என்று அறிகிறோம். இரண்டாம் இராஜேந்திரன் சாளுக்கியருடன் நடந்த போரில் அங்கு போரிட்டோர் முதல் தேவியர் "சத்தியப்பை, சாங்கப்பை" என்பவர்களை போர்க் களத்தில் பிடித்தான் என்று "ஒப்பில் சத்தியவ்வை சாங்கப்பை என்று இவர் முதல் தேவியர் குழாமும், பாவையர் ஈட்டம் இனையன பிறவும் முனைவயிற் கொண்டு'

என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகிறது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் மூன்றும் ராஜராஜனைத் தோற் கடித்து :—

"ஆங்கவன் திணைக்கட்டணத்து கற்பு தனக்காளுய்
ஓங்குரிமை குழாம் ஒருகை திசைய் கொண்டு
மூரிமணிப்பட்டங்கட்டி முடிசூட்டி மார்பில்
அணைத்து வளவன் முதல்தேவியென்று பெயர்பெற்ற
வஞ்சிய் முதலாய் பெய்வளையார் பொங்குபுனற்கும்
சப முதலாக புலவர் புகழ (-431 / 5).

மடந்தையர் ஆரமும் மார்பும் உடன் கவர்ந்தருளி என்று வரும் சுந்தர பாண்டியனின் மெய்க்கீர்த்தியி லிருந்தும் இதை அறியலாம். (459/5).

**வேள்விக் கிழத்தி :**

அரசர்கள் வேள்வி வேட்டனர் என்று முன்னர் கண்டோம். வேள்வி வேட்டபோது அவன் உரிமைத் தேவியும் உடனிருத்தல் வேண்டும். ஆதலின் அவள் "வேள்விக் கிழத்தி" என்றே அழைக்கப்பட்டாள். கரிகால் பெருவளத்தான் பருந்து வடிவில் வேள்விக் குண்டம் நிர்மாணித்து வேட்டான் என்று கூறும் புறப் பாட்டு கற்பில் சிறந்த மகளிரோடு வேள்வி வேட்டான் என்று கூறுகிறது. "முன்னுறப் புகழ்ந்த தூவியற் கொள்கைத் துகளறு மகளிரோடு ...... வேதவேள்வித் தொழில் முடித்ததூஉம்" (புறம், 224). சேரன் செங்குட்டு வன் ராஜசூயம் செய்தான் என்றும் அவன் முதல் தேவி 'வேள்விக் கிழத்தி' உடன் இருந்தாள் என்றும் சிலம்பிலிருந்து அறிகிறோம்.

ஆனல் பிற்காலத்தில் மன்னர்கள் வேள்வி வேட் பதைக் காட்டிலும், கோயில்களுக்குப் பெரும் பரிசு கொடுப்பதையே சிறப்பாகக் கருதினர். அரசனுடன் அவன் தேவியர் பலரும் கோயிலுக்குப் பெரும் பொருள்

கொடுத்துள்ளனர். இராஜராஜன் தஞ்சைப் பெருங் கோயிலுக்குப் பொருள் கொடுத்தபோது அவன் தேவி யரும் அவனுடன் பொருள் கொடுத்தனர் என்று அக் கல்வெட்டிலிருந்து அறியலாம். நாம் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும்" என்று அவன் கல் வெட்டுக் கூறுவது இதையே.

பல்லவர்களும், பாண்டியர்களும், சோழர்களும் துலாபாரம் என்னும் வேள்வி வேட்டுள்ளனர். இதில் தேவியர் பங்கு பெற்றனர் என்று அறிகிறோம். நிருப தொங்கவர்மன் தேவி "ஹிரண்யகருப்பமும் துலாபார மும் புக்க பொளிவை தானம் அளித்தாள் என்று அறி கிறோம் (74/12). இது இவள் தானே ஹிரணியகருப்ப மும், துலாபாரமும் செய்ததை குறிக்கிறதா அன்றி அரச னுடன் செய்ததைக் குறிக்கிறதா எனத் தெரியவில்லை.

## மாமியாரிடம் அன்பு :

அரசமாதேவியர் தங்கள் தலைவரிடத்தில் ஆருக் காதல் கொண்டிருந்தனர் என்று கண்டோம். தங்கள் மாமியாரிடம் சிறந்த அன்பு கொண்டிருந்த தேவியரைக் கல்வெட்டுக் கூறுகிறது. உத்தமசோழரின் தாய் செம்பி யன் மாதேவியாரிடம், அவரின் மனைவியர் ஐவரும் பெரும் அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். அவ் வம்மையார் செம்பியன் மாதேவியார் பிறந்த சித்திரைக் கேட்டை திருநாளன்று செம்பியன் மாதேவி என்னும் ஊரில் கோயிலில் சிறப்பு வழிபாட்டுக்காக உத்தம சோழரின் தேவியர் பட்டன் தானதொங்கியர், மழபாடி தென்னவன் மஹாதேவி, இருங்கோளார் மகள் வானவன் மகாதேவி, விழுப்பரையர் மகளார் சோழப் பெருமானடி கள், பழுவேட்டரையர் மகள் ஆகிய ஐவரும் அளித் தனர் (311/19). இதிலிருந்து இவர்களுக்கு தங்கள் மாமி பால் இருந்த பேரன்பு விளங்கும்.

## அரசியருக்குப் பொருள் கொள்ளும் உரிமை :

அரசியர் பல இடங்களில் தாங்களே கோயில்களுக்குப் பொருள் கொடுத்திருப்பதிலிருந்து அவர்களுக்குத் தங்கள் பெயரிலேயே பொருள் கொள்ளும் உரிமை இருந்தது என அறிகிறோம். அரசமாதேவியர் தங்கள் பெயராலே நிலம் வாங்கி கோயில்களுக்குத் தானமாக வழங்கியிருப்பதைப் பல கல்வெட்டுகள் குறிப்பதிலிருந்து தங்கள் பெயரால் நிலங்கொள்ளும் உரிமையும் அரசியருக்கு இருந்தது என்று அறியலாம். செம்பியன் மாதேவியிலிருந்த கோயிலுக்கு உத்தம சோழனின் தேவி திரிபுவனமாதேவி நிலம் வாங்கி தானமாக அளித்தாள் (379/19). இராஜராஜனின் தேவி திருவையாற்றில் நிலம் விற்றதை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது (518/5) அரசமாதேவியருக்கு தனி ஆணை உண்டென்று முன்னர் கண்டோம். முதல் இராஜராஜனின் தேவி லோகமகாதேவி திருவையாற்றில் எடுத்த கோயிலுக்கு, கொடுத்த தானத்தை கல்லில் வெட்டத் தானே ஆணையிட்டாள். "லோகமஹாதேவியார் திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்த லோகமாதேவீச்சுரம் உடையார்க்கு கல்லில் வெட்டுவிக்க என்று அருளிச் செய்ய" என்று கல்வெட்டுக் கூறுவது (521/5) இதைத் தெளிவாக்குகிறது.

அரசனின் தேவி தானே ஏலத்தில் நிலத்தை எடுத்ததை ஒரு கல்வெட்டு "இந்நிலம் முக்காலே நாலு மாவரையும் கொள்வாரில்லையோ என்று முற்கூற இம் மொழி கேட்டு பொன்மாளிகைத் துஞ்சிய தேவியார் சேரமானார் மகளார் பிராந்தகன் தேவியானார் விலைக்குக் கொள்வேனென்று பிற்கூற" என்று கூறுகிறது (723/5).

## அரசியருக்கு அதிகாரிகள் :

அரசமாதேவியரின் ஆணைகளை நிறைவேற்றத் தனியாக ஆண் அதிகாரிகளும், பெண் அதிகாரிகளும் இருந்

தனர். பெண் அதிகாரிகளை 'அதிகாரிச்சிகள்' என்று கல்வெட்டுக் கூறுகிறது. லோகமாதேவி திருவையாற்றில் கட்டிய லோகமாதேவீச்சரத்துக்கு கொடுத்த பரிசுகளை தன் அதிகாரிகளையும், அதிகாரிச்சிகளையும் மேற்பார்வையிட கல்வெட்டுமூலமாக ஆணை யிட்டாள். "கல்லிலே வெட்டுவிக்கவென்று உடன் கூற்றத்து அதிகாரம் சேய்கின்ற கோவலூருடையான் நாற்றெண்மணையும், அதிகாரிச்சி எருதன் குஞ்சிரமல்லியையும் அருளிச் செய்ய" என்று கல்வெட்டு (521/5) கூறுகிறது. திருவையாற்றில் தென்கைலாயம் என்று ஒரு கோயில் உண்டு. அதற்கு முத்தான பொங்கங்கை என்பவள் ஒரு பொன் அணி கொடுத்தாள். இவள் இராஜேந்திரசோழனின் தேவி திரைலோக்ய முடையாளின் அதிகாரிச்சி என்று அழைக்கப்படுகிறாள் (512/5). முதல் இராஜாதிராஜனின் காலத்தில் லோகமாதேவீச்சுரத்துக்குக் கொடுத்த தானத்தை அனுத்தரப் பல்லவரையன் என்பாரும் 'அதிகாரிச்சி சோமயன் அமித்ரவல்லி' என்பவளும் உடன் இருந்து மேற்பார்வை பார்த்தனர் (520 / 5). இதுபோல் பல அதிகாரிச்சிகள் குறிக்கப்படுவதிலிருந்து அரசமா தேவியர்களுக்கு தமக்கெனத் தனியாக ஆண் அதிகாரிகளும் பெண் அதிகாரிகளும் இருந்தனர் என்றும் அவர்கள் சமஅதிகாரம் பெற்றிருந்தனர் என்றும் தெளிவாக அறியலாம்.

இராஜராஜனின் தமக்கை குந்தவை கருந்தட்டாங்குடி கோயிலுக்கு நிலம் வாங்கி கொடுத்தாள். அந்த பிரமானத்துக்குத் தானே கையெழுத்திட்டான்

"இத்தேவர்க்கே உரித்தாக குடுத்தேன்
பராந்தகன் குந்தவையேன்"

இக் கல்வெட்டு பல வழிகளில் சிறப்புடையதாகிறது. இத்தேவியின் ஆணைப்படி அவள் அதிகாரி இப்பிரமானம் எழுதினான். மற்றொரு அதிகாரி இதற்கு கையொப்ப

மிட்டான் அது மட்டுமின்றி இத்தேவிக்கு தானமாக கணக்கன் ஒருவனும் கரணத்தான் ஒருவனும் இருந்தனர் என்று இக் கல்வெட்டு குறிக்கிறது.

“இப்பிடிபாடு அருளிச் செய்ய எழுதினேன் இவருக்கு அதிகாரஞ் செய்கின்ற சிறு பேறுடையான் தென்னவன் எரியூர் நாட்டு வேளான். அறிவேன் இப்பிராட்டியாருக்கு அதிகாரஞ் செய்கின்ற நறுமங்கிழான் அங்காடி சூற்றியேன். இப்படிக்குடுத்தமை அறிவேன், இப்பிராட்டியார் கணக்கு பூவனூருடையான் வரகுணன். இப்படி குடுத்தமை அறிவேன் ஆழ்வார் கரணத்தான் மருதங்குடையான் மாயிலட்டி ஆச்சனென்” (1409/5) இக்கல்வெட்டிலிருந்து அரசமாதேவியருக்குத் தனியாக ஒரு நிர்வாகத்துறையே இருந்தது என்பது தெளிவு.

“திருவாணை உலகுடை முக்கொக்கிழானடிகள் ஆணை என்று இறையிலி செய்து கொடுத்து” என இரண்டாம் இராஜாதிராஜன் காலக் கல்வெட்டிலிருந்து அரசியின் ஆணை எவ்வளவு சிறப்பாகப் போற்றப் பட்டது என அறியலாம். (204/8)

# 7

# வேளிருள் வேளே விறற் போரண்ணல்

## வேளிர் :

தமிழ் நாட்டில் முடியுடைய பெருமை வாய்ந்தவர் களாய்ச் சேர, சோழ, பாண்டியர் குடி திகழ்ந்தது என் பதையும் அவர்களே வேந்தர் எனப்பட்டனர் என்பதை யும் அறிவோம். பிற்காலத்தில் பல்லவர்களும் வேந்தராய் கருதப்பட்டனர். இவர்களைத் தவிர பல குறுநில மன்னர்களும் ஆங்காங்கு ஆண்டு சிறப்பெய்தி யுள்ளனர். இவர்கள் வேளிர் என்று அழைக்கப்பட்டனர். பல ஒப்பற்ற வேளிர்களை சங்க இலக்கியம் குறிக்கிறது. 'வேந்தரும் வேளிரும்'' என ஆளும் அரசர்க்கு அடுத்து, பெருமை பெற்றவர்கள் வேளிர்கள்.

## பதினெண்குடி :

இவர்களில் ஆய், இருக்குவேள் முதலிய பல குடிகள் இருந்தன. இவர்கள் பதினெட்டுக் குடியைச் சேர்ந்தவர் என்றும் பதினெண் வகைக்குடியைச் சேர்ந்தவர் என்றும் நச்சினார்க்கினியார் குறிக்கிறார். இவர்களின் அந்த 18

குடிகள் எவை என நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. பதினெட்டு என்னும் எண்ணிக்கை ஒரு காலத்தில் சிறந்த தாக கருதப்பட்டுள்ளது. மாபாரதம், 18 நாட்கள் நடந்தது. கீதை 18 அத்தியாயங்களைக் கொண்டது. கூளங்கள் 18 வகையது எனப் பதினெட்டு பலவிதங்களில் சிறப்புற்றிருக்கிறது. இந்தக் கருத்தின் தொடர்பால் இவர்கள் 18 குடியைச் சார்ந்தவர் எனக் கூறப்பட்டனர் போலும். சங்க காலத்திலிருந்தே வேளிர்களில் பலர் வடநாட்டுத் தொடர்பு உள்ளவர்களாகத் தங்களைக் கூறிக் கொண்டனர். வேளிர்களை யாதவர் என்றும் குறிப் பர். யதுவின் வழிவந்த யாதவர் 18 குடியினர் என்று மாபாரதம் கூறுகிறது. 'ஜராசந்தன் எதிர்த்ததால் நாங்கள் 18 குலத்தோரும் இவ்வாலோசனை செய்தோம்' எனக் கண்ணன் கூறுவதாக அது அமைகிறது. துவாரகை என்னும் துவராபதி இவர்களது தலை நகராகத் திகழ்ந்தது.

இருங்கோவேளை வடபால் முனிவனின் ஓமகுண் டத்தில் (தடவினில்) தோன்றி துவராபதியாண்ட வேளிருள் 49-வது வழிவந்த வேளிருள் வேளே என சங்கப்பாடல் கூறுகிறது. இதிலிருந்து இவ்வேவளிர் குலம் வட நாட்டிலிருந்து தமிழகம் வந்து குடியேறிய ஒன்றாக சங்ககாலத்திலேயே குறிக்கப்பட்டது காணலாம். இதே குலத்தில் வந்தவர்கள் பின்னர் கொடும்பாளூரைத் தலை நகராகக் கொண்டு சீரும் சிறப்புமாக ஆண்டிருக்கிறார்கள். சோழப் பெருமன்னர்களிடம் பெண் கொடுத்தும், கொண்டும் பெரும் புகழ் பெற்றவர்கள். இருக்குவேள் எனப்பெயர்பெற்ற இவர்களது கல்வெட்டுகள் இவர்களை 'யாதவர்கள்' எனக் குறிக்கின்றன. விக்கிரமகேசரியாகிய பூதியை கொடும்பாளூர்க் கல்வெட்டு யாதவன் என்று குறிக்கிறது.

**கண்ணன் வழி வந்தோர் :**

வேளிர்களில் ஆய் மரபினரும் தங்களைக் கண்ணன் வழிவந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். கி.பி. 8-ம் நூற்றாண்டில் ஆண்ட ஆய்குல மன்னன் கோ கருநந்த டக்கன் என்பவனின் பார்த்திவ சேகரபுரம் செப்பேடுகள் அவனை யாதவ குலத்தைச் சேர்ந்தவன் என்றும், கண்ணன் வழி வந்தவன் என்றும் குறிக்கின்றன. இதே மன்னனது பாலியத்துச் சாஸனமும் இவன் விருஷ்ணி (யாதவ) குலத்தைச் சார்ந்தவன் எனக் குறிக்கிறது. இச் செப்பேடு முடிசூடுவதற்கன்றே இக்குலத்தோர்களின் தலைகள் உள்ளன எனக் கூறுகிறது. இதிலிருந்து வேளிரும் முடிசூடிக் கொண்டனர் என்பது புலப்படுகிறது.

அதியமான், மலையமான், திரையன், பாணன் கங்கர் முதலிய குறுநில மன்னர்களும் ஆண்டிருக்கின்றனர். இவர்கள் வேளிர் குலத்தவரா என்று சொல்லத் தகுந்த சான்றுகள் இல்லை. பொதுப்படையாகக் குறுநில மன்னர் என்ற பொருளில் 'வேளிர்' என்னும் சொல் வழங்கப் பட்டது. அவ்வடிப்படையில் இவர்களை வேளிர் எனலாமே தவிர இவர்கள் வேளிர் குடியைச் சேர்ந்தவர் எனக் கூற இயலாது. அதியமான் உதியர்களாகிய சேரரின் வழிவந்தவன். திரையன், சோழரின் வழிவந்தவன். பாணர் என்ற சிறந்த குறுநில மன்னர்கள் மஹாபலியின் வழிவந்தோர் எனக் கூறிக் கொண்டனர், இவர்கள் பலருக்கு 'மாவலிவாணராஜன்' என்ற பெயர் உண்டு. மகாபலியின் வழியில் வந்தவர் என இவரை மணிமேகலை கூறுகிறது. கங்கர் என்பவர் கங்க வம்சத்தில் பிறந்தோர் எனக் கூறிக்கொண்டனர். ஆதலின் இவர்கள் வேளிர் குலத்தைச் சார்ந்தவர் ஆகார்.

சங்ககாலத்தில் புலிகடிமால் என்னும் ஒரு வேளிர் குறிக்கப்படுகிறான். இவனது வரலாறு பின்னர் மைசூர்ப்

பகுதியை ஆண்ட போசளர்களாலும் (ஹொய்சாளர்) தங்களது மூதாதையர்க்கு உரியதாக கூறப்படுகிறது. போசளர்களும் தங்களை யாதவர் என்று கூறிக் கொண்டனர்.

**வேளிர் வைசியர் :**

வேளிர்கள் அரச குடும்பத்தினர் அல்லர் என்று சிலர் கருதுவர். இக்கருத்து இந்தியாவின் வடபாலும் யாதவர்களுக்கும் நிலவியது. 'யயாதுயின் சாபத்தால் க்ஷத்ரியரில் தாழ்ந்து வைச்யபிராயரான யது குலத்தில் தோன்றிய வாசுதேவர்க்கும் கோவைச்யரான நந்தகோபனுக்கும் மகனாக விளங்கிய கண்ணன் "(வேளிர் வரலாறு, பக்கம் 30) என்று குறிப்பர்.

இதிலிருந்து இவர்கள் முதலில் க்ஷத்திரியர்களாயிருந்தனர் என்றும், பின்னர் அரசுரிமை இழந்தனர் என்றும் வைசியர்களாகப் பின் கருதப்பட்டனர் என்றும் தெளிவாகிறது. அரச குடிக்கும் வைசிய குடிக்கும் உள்ள தொழில்களில் இவர்கள் ஈடுபட்டனர். இவர்கள் உழுதொழில், கால்நடைகள் வளர்த்தல், நூற்றல், மண்சுடுதல், போற்றொழில் முதலிய தொழில்கள் செய்தனர் என்பர் (வேளிர் வரலாறு ப. 28). அவர்கள் உழவு தொழிலில் சிறந்தவர் என்பதற்கு 'நெற்குவியல்களுடைய முத்தூற்றுக் கூற்றத்தை உடைய வேள்' என சங்க இலக்கியங்களில் குறிக்கப்படுவது சான்றாகும். ஆய் என்பவரும் யாதவரும் ஒருவரே என்றும் அவர்கள் கால் நடைகளைக் காக்கும் ஆயர்களே என்பதும் அனைவரும் அறிந்ததே. வைச்யர்களுக்கு குறிக்கப்படும் தொழில்களிலும் இவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்பது தெளிவு.

**கருத்துக் குழப்பம் :**

வேளிர்கள் வரலாற்றின் தொடக்கத்தில் தங்கள் வலியால் முடிசூடியும், வலிவிழந்த நேரங்களில் பிற தொழில்

களில் ஈடுபட்டும் வந்திருக்கக்கூடும். ஆதலின் இவரை அரச குடியினர் என்றும் வைசியர் என்றும் கூறும் கருத்துக் குழப்பம் மிகவும் தொன்மையான காலத்திலேயே ஏற்பட்டு விட்டது என்றும் கொள்ளலாம். வேளிர் அனைவரும் வடநாட்டிலிருந்து தமிழகம் வந்தவர்கள் என்று கூறச் சான்றுகள் இல்லை. ஆனால் பெரும்பாலான குடியினர் வந்து குடியேறினர் என்பது திண்ணம். இருக்குவேளிர், ஆய்வேள் ஆகியோர் இவ்வாறு வந்தவர் என்பதில் ஐயமில்லை.

## ஏற்றமும் ஒடுக்கமும் :

குறுநில மன்னர்கள் தமிழகத்துக்கு அருந்தொண்டாற்றியிருக்கிறார்கள். அவ்வப்போது நடந்த உள்நாட்டுப் போர்களுக்கும் அவர்களே காரணமாயிருந்திருக்கிறார்கள். சங்க காலத்தில் தமிழகத்தில் முடியுடை மன்னர் மூவர் ஆண்டனர். ஆனால் அவர்கள் தமிழகம் முழுவதையும் ஆளவில்லை. சேரர் தங்கள் பகுதியில் பெரும் பகுதியையும், சோழர் தங்கள் பகுதியையும், பாண்டியர் தங்கள் பகுதியையும், ஆண்டுள்ளனர். அவர்களே தங்கள் இளங்குடிகளைப் பல இடங்களுக்கு முடிசூட்டி ஆண்டன மூவேந்தர் குடிகளில் வலிமை மிகுந்த கரிகால் பெருவளத்தான், சேரன் செங்குட்டுவன், நெடுஞ்செழியன் ஆகியோர் தோன்றியபோது அண்டைப் பகுதிகள் மீது வெற்றி கொண்டனர். ஆயினும் விரைவில் அவை சிறுசிறு பகுதிகளாக பிரிந்தன. சங்ககாலத்தில் தமிழகத்தில் மூவேந்தருக்கும் பெரும்பகுதி அடிப்படாது இருந்தது; அவற்றில் சிறு சிறு பகுதிகளைப் பல குறுநில மன்னர்கள் ஆண்டிருக்கின்றனர். இவர்கள் வாய்ப்புகளுக்கு ஏற்ப மன்னர்களோடு உறவு பூண்டும் மாறுபட்டும் போரிட்டுள்ளனர்.

குறுநில மன்னர்கள் படிப்படியாக வெற்றி கொள்ளப் பட்டு ஒரு பேரரசின் சிற்றரசர்களாக ஆக்கப்பட்டது கி. பி. 6-ம் நூற்றூண்டின் இறுதியில் எனலாம். தமிழகத்தின் வடக்கே பல்லவர்களும், தெற்கே பாண்டியரும் இச்சிற் றரசர்களைத் தங்களுக்கு கீழ்படியச் செய்ததால் தமிழ கத்தில் இதுகாறும் காணுத ஒற்றுமை தோன்றத் தலைப் பட்டது. பின்னர் வந்த சோழப் பேரரசர்கள் துங்க பத்திரை ஆற்றிலிருந்து ஈழம்வரை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவர இது அடி கோலியாகத் திகழ்ந்தது. கி. பி. 10 11, 12-ம் நூற்றூண்டுகளில் சிற்றரசர்கள் சோழப் பேரரசர்களால் முற்றிலும் ஒடுக்கப்பட்டிருந்ததால், தமிழகம் ஒருங்கிணைந்த ஒப்பற்ற நாடாகத் திகழ்ந்தது. சோழப் பேரரசர்களின் காலத்தில் தான் இம்மகத்தான ஆட்சித்திறனை காண முடிந்தது. 13-ம் நூற்றூண்டில் பேரரசு வலி குன்றத் தொடங்கியதும் சிற்றரசர்கள் ஆங்காங்கே தலை தூக்கி தனித்தனி ஆட்சி நிறுவ முற்பட்டதால் நாட்டில் ஒற்றுமை குலையத் தலைப்பட்டு மாற்றூரின் படையெடுப்புக்கு இடமளித்தது. மாலிக் காபூரின் படையெடுப்பு வெற்றிபெற இதுவே காரணமா யிற்று.

இருப்பினும் விரைவில் சிதறிக்கிடந்த நாட்டுப் பிரிவு களை ஒருமைப்படுத்தி சிற்றரசர்களை ஓர் ஆட்சிக் கீழ் விஜயநகரப் பேரரசர் நிறுவினர். சோழப் பேரரசு தமிழகம் முழுவதும் ஓராட்சியில் ஆண்டது இவர்களுக்கு பேருதவியாக இருந்தது. அதன் அடிப்படையில் கன் னடம், தெலுங்கு, தமிழ், மலையாளம், ஆய நாடுகளில் பெரும்பகுதிகளை ஒன்றூக்கி, விஜய நகரப் பேரரசு ஆள முடிந்தது. இதன் பயனுல் திராவிடம் ஒரு பெரும் நாடாய் இணைந்தது. ஆயினும் சோழராட்சித் திறன் விஜய நகரப் பேரரசிடம் காணவில்லை. மாபெரும் நிலப்பரப்பில் நிலவிய ஆட்சி ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாயக்கர்

களின் தன்னுட்சியால் படிப்படியாக வலி குன்றி சீர் இழந்து வெளி நாட்டார் எளிதில் கைப்பற்றும் நிலையை அடைந்து விட்டது. விஜயநகரப் பேரரசு தோன்றிய காரணத்தால் இதுகாறும் தமிழகத்தில், சங்க காலம் தொட்டு வாழ்ந்து வந்த பாணர், கங்கர், அதியர் முதலிய குறுநில மன்னர்களின் குலங்கள் மறைய நேரிட்டன. பொதுவாகப் பார்க்கும் போது தமிழகத்தில் சங்க காலத்தில் ஏராளமான குறுநில மன்னர்கள் தனியாட்சி நடத்தினர். பின்னர் அவர்கள் ஒரு பேரரசுக்கு அடங்கிய போது நாடு சிறந்த வலிமை பெற்றது. மீண்டும் அவர் கள் தனியாட்சி நிலவ முயன்ற போது நாடு வலி குன்றி மாற்றான் புகும் நிலைக்கு வந்தது.

கி. பி. 6, 7, 8-ம் நூற்றாண்டுகளில் பல்லவர்கள் புகழ் மிகுந்த சிற்றரசர்களைத் தங்களது ஆட்சிக்குகீழ் கொண்டு வந்தனர். இவர்களில் பாணர், கங்கர், முத்தரையர், அதியர் ஆகிய சிற்றரசர்கள் இருந்தனர். இவர்கள் சிற் றரசர்களாய் இருந்த போதிலும், போதிய அதிகாரம் பெற்றிருந்தனர்.

## பாணர்

பாணர்கள் பெரும் பகுதியை பல்லவர்களின் பிரதி நிதிகளாக ஆண்டனர். கீழைக் கடற்கரையிலிருந்து வட ஆற்காடு பகுதிவரை பாணர்களது ஆட்சி பரவியிருந்தது. பாணர்கள் அரைசர் என்றும் அதிஅரைசர் என்றும் கல் வெட்டுகளில் குறிக்கப்படுகின்றனர். பல்லவர்களும் பாண்டியர்களும் தங்களை ஆதிராஜர் என்று கூறிக் கொண்டனர் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். 'அதிராஜர்' அல்லது 'அதியரைசர்' எனும் சொல் பேர ரசன் என்னும் பொருளை உடைத்து. பாணர்கள் பல்ல வர்களின் சிற்றரசர்களாக ஆண்ட போதிலும் தங்களை அதியரைசர் என்று கூறிக் கொள்வதிலிருந்து இவர்கள்

ஆட்சியில் தேவையான அதிகாரம் பெற்றிருந்தனர் என்பது தெளிவாகிறது.

### கங்கர்

வடஆற்காட்டின் மேற்கிலும் தெற்கிலும் கங்கர் என்ற சிற்றரசர் ஆண்டனர். இவர்களும் சங்க காலத்தி லிருந்தே இப்பகுதியை ஆண்டனர் என்பதற்குச் சான்று கள் உள்ளன. ஆறும் நூற்றூண்டிலிருந்து இவர்களும் அதியரைசர் எனக் கூறிக் கொண்டனர். ஆயினும் பல்லவர்களுக்கு அடங்கி யாண்டனர். மேலைக் கடற் கரையில் கொங்கனப் பகுதியில் ஆண்ட மேலைக் கங்கர் கள் இவரே என்று வரலாற்று ஆசிரியர் கருதுவர். ஆனல் அண்மையில் கிடைத்த சான்றுகள் இரு குடியினரும் வேறு எனக் கருதும் வகையில் உள்ளன. கொங் கானத்தை ஆண்டவர் கொங்கன்யாதிராஜர் என்றும் இவர்கள் கங்கதியரைசர் என்றும் குறிக்கப்படுகின்றனர். கொங்கனியரசர்கள் கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர் என்றும் கங்கர்கள் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர் என்றும் கருத இடமிருக்கிறது. இருப்பினும் கொங்கனி அரசர்களும் தங்களைக் கங்கை வம்சத்தில் பிறந்தவர் என்று கூறிக் கொள்கின்றனர்.

கங்கர்கள் பாணர்களைப் போல் பல்லவருக்கு அடிபணிந்த போதிலும் பாணர்களோடு அடிக்கடி போரிட்டனர்.

### முத்தரையர்

தஞ்சாவூர், செந்தலை, வல்லம் என்ற பகுதிகளை முத் தரையர் என்ற குறுநில மன்னர்கள் 6, 7, 8-ம் நூற்றூண்டு களில் ஆண்டனர். இவர்கள் தமிழில் சிறந்த பற்றுக் கொண்டவர். தஞ்சையர்கோன், என்றும் நற்புகழாளன்

என்றும் இம்மன்னர்கள் குறிக்கப்படுகின்றனர். இம்மன்னர்களைப் பற்றி வரலாற்று ஆசிரியரிடையே பல கருத்து வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. முத்தரசர் என்ற பெயரின் மருவிய உருவே முத்தரையர் என்பதாம். தஞ்சை, திருச்சி பகுதிகளில் இன்றும் முத்து ராஜா என்னும் குடியினர் உள்ளனர். இவர்கள் முத்தரசர் குடியைச் சேர்ந்தவரே. கங்கரசர், பாணரசர் என்பது போன்று முத்தரசர் என்பது முத்து அரசர் என்பதின் திரிபே.

இவர்கள் களப்பிரர் என்று குறிக்கப்படும் குடியினரே என்றும், இவர்கள் மைசூர்ப் பகுதியிலிருந்து தஞ்சைப் பகுதிக்கு குடியேறி இருக்க வேண்டும் என்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவர்களை களவர கள்வர் என்று செந்தலைக் கல்வெட்டு கூறுகிறது. இதை களவர களவர் என்றும் கள்வர் கள்வர் என்றும் படிக்கலாம். களவர கள்வர் என்று படித்தால் இவர்கள் களவரர் என்னும் கருத்து ஏற்புடையதாகும். இவர்கள் களப்பிரர் என்னும் கருத்து நிலைப்படுமானால் கி. பி. 4-ம் நூற்றாண்டிலேயே முத்தரையர்கள் தஞ்சைப் பகுதியைக் கைப்பற்றிவிட்டனர் எனலாம். கி. பி. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த 'அபிதம்மாவதாரம்' என்னும் நூலில் புத்த தத்தர் என்னும் புலவர், அச்சுதவிக்காந்தன் என்னும் களப்பிர மன்னன் சோழ நாட்டை ஆண்டான் எனக் குறிக்கிறார். காவிரிப் பூம்பட்டினம் அவன் ஆட்சியின் கீழ் இருந்தது. பெரும்பிடுகு முத்தரையன் என்னும் அரசன் முத்தரையர்களில் சிறந்தவனாக விளங்கினான். முத்தரசர்கள் பெரும்பாலும் பல்லவர்களின் சிற்றரசர்களாகவே திகழ்ந்தனர். சில நேரங்களில் பாண்டியர்களுக்கு அடிப்பட்டும் ஆண்டனர்.

தஞ்சை இவர்களால்தான் புகழ் பெற்றது. தஞ்சையை ஆண்ட இவர்களை வென்றுதான் விஜயால

யன் சோழப் பேரரசை நிறுவினன். இவர்கள் சோழர்களால் அடக்கப்பட்ட பிறகு மீண்டும் உயர் நிலையை அடையவில்லை.

## இருக்குவேள் :

கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட இருக்குவேளிரைப் பற்றி முன்னரே குறிப்பிட்டோம். இவர்கள் இருக்குவேள் என்றும் இளங்கோவேள் என்றும் பட்டம் ஏற்று ஆண்டனர். அரசனாக ஆண்டவர் இருக்குவேள் என்றுபட்டம் ஏற்றும் மற்றவர் இளங்கோவேள் என்று பட்டம் ஏற்றும் ஆண்டனர். 6, 7, 8 நூற்றாண்டுகளில் இவர்கள் பல்லவர்களுடனும் பாண்டியர்களுடனும் தொடர்பு கொண்டு ஆண்டனர். இவர்களது உதவியால் தான் சோழப் பேரரசு நிலைநிறுத்தப்பட்டது. இவர்களது குடியில் வந்தவர்கள் சோழர்களுக்கு சிறந்த சேனாதிபதிகளாகத் திகழ்ந்து வந்ததோடு தங்கள் பெண்களைச் சோழ அரசர்களுக்கு மணம் செய்து கொடுத்தனர். இவர்கள் பாண்டியப் பெண்களையும், சோழப் பெண்களையும் மணந்தனர். கொடும்பாளூரில் இவர்களால் எடுக்கப்பட்ட கோயில் ஒன்றில் கன்னடக் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இதிலிருந்து இவர்கள் கன்னடத்தொடர்பு உடையவர்கள் என்பதும் புலப்படுகிறது. இவர்களை யாதவர் எனக் கல்வெட்டுக் கூறுகிறது.

## பழுவேட்டரையர் :

பழுவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பழுவேட்டரையர்கள் சோழர் காலத்தில் சிறப்பெய்தியவர். இவர்களும் வேளிர் குலத்தைச் சேர்ந்தவர்களே என்று கொள்ளலாம். இவர்கள் தங்களை மகரிஷிகோத்திரத்து க்ஷத்திரியர் எனக் கூறிக் கொண்டனர் என்று முன்னரே கண்

டோம். இவர்களும் சோழ மன்னர்களுக்கு உறுதுணை யாக நின்றவர்கள். சுமார் 9-ம் நூற்றூண்டிலிருந்து 11-ம் நூற்றூண்டின் இறுதி வரை இவர்கள் சிறப்புடனி ருந்தனர்.

## அதியர் :

அதியர்கள், உதியர் வழிவந்தவர் என்று முன்னரே கண்டோம். சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த இவர்களது குடி எட்டாம் நூற்றூண்டில் மீண்டும் சிறப்பெய்தியது. அதியர்களில் அதியேந்திரன் என்ற மன்னன் பல பெயர் களுடன் நாமக்கல் குகைக்கோயில்களில் குறிக்கப் பெறு கிறான். அதியர்கள் பல்லவர்களின் கீழ்படிந்து ஆண் டனர். பாண்டிய மன்னன் ஒருவன் அதியர்களோடு பல்ல வரையும் வெற்றி கொண்டதை சிறப்பாகக் கூறிக் கொள் வதிலிருந்து அதியர்கள் மிக வலிமிகுந்திருந்தனர் என்பது தெளிவு. பின்னர் இவர்கள் வலி குன்றினர். மீண்டும் 13-ம் நூற்றூண்டில் அதியமான் ஒருவன் குறுநில மன்னனாக குறிக்கப் பெறுகிறான். இதன் பின்னர் இப் புகழ் வாய்ந்த குடி மங்கியது.

## பிறர் வடநாட்டார் :

சோழர் காலத்திலிருந்து சில புதிய குறுநில மன்னர் குடிகள் புகழ்பெற்றன. சேதிராயர், வத்ஸராஜன், காலிங்கராயர், காங்கேயர், மழவராயர், மகதராஜன், சம்புவராயர், விராடராஜன், கடம்பராயன், காடவராயன் நிஷதராஜன், அயோத்திராஜன், முதலிய குறுநில மன்னர் களின் குடிகள் சிறந்தன. இக்குடிகளில் சேதி, வத்ஸம், கலிங்கம், மகதம், விராடம், நிஷாதம், அயோத்தி முதலிய பெயர்கள் இவர்களுக்கு வடநாட்டுடன் இருந்த தொடர்பை அல்லது ஈடுபாட்டைக் குறிக்கின்றன. இவர் களது குடிகள் அந்நாடுகளில் இருந்து தமிழகம் வந்து குடியேறியவை என்று கூறமுடியா விட்டாலும் அந்நாடு

களிலிருந்து வந்ததாக இவர்கள் கூறிக் கொள்வதில் பெருமை கொண்டனர் என்று கொள்ளலாம்.

இக்குடிகளில் காடவராயர் என்னும் குடியும், சம்புவ ராயர் என்னும் குடியும் 13-ம் நூற்றூண்டில் மிகவும் சிறப்புப் பெற்றிருந்தன. காடவர்களில் சிறந்த கோப் பெருஞ்சிங்கன் என்பவனே சோழப் பேரரசுக்கு முடிவு கட்டியவன். சம்புவராயர் என்பவர்கள் தொண்டை மண்டலத்தின் பெரும்பகுதியை 13-ம் நூற்றூண்டின் இறுதியில் தனியாக ஆட்சி நடத்திஞர்கள்.

14-ம் நூற்றூண்டில் விஜயநகரப் பேரரசு தோன்றி யதும், இக்குறுநில மன்னர்களின் குடிகள் மறைந்து போயின. விஜய நகர மன்னர்களின் பிரதிநிதிகளாக, தாஃனத் தஃலவர்களாக வந்த நாயக்கர்கள் விரைவில் தனி யாட்சி நிறுவினர்.

## தனிப் படையும் தனி ஆணேயும் :

சிற்றரசர்கள் பேரரசர்கட்கு உட்பட்டு ஆண்டபோ திலும், அவர்களுக்குத் தனிப்படையும் அதிகாரங்களும் இருந்தன. பல்லவர்கட்கு கீழ்ப்படிந்த பாணர்களுக்கும் கீழ் இருந்த பல சேவகர்களேக் கல்வெட்டுகள் கூறுகின்றன. 'பெரும்பாண தியரைசர் சேவகர் சிற்றுப் பாடி பணேயஞர்' என்பனபோல வரும் பல கல்வெட்டுகளேக் இதற்குச் சான்ருக கூறலாம். சோழர் காலத்திலும் இது போன்ற சேவகர் இருந்தனர். "கருகாவூர் கிழவன் மருதம் பட்டனை சோழ வேளாங் சேவகன் நும்பன் கண்டன்" என்பவன் திருப்பழனம் கோயிலில் பராந்தகன் காலத்தில் குறிக்கப் பெறுகிருன் (173/19). இச்சேவகர்களில் பலர் தங்கள் தஃலவன் இறந்தால் அவர்களோடு தீப்பாய்ந்தனர். பழுவேட்டரையன் மறவன் குமரன் இறக்க, அவனுடன் அழகியான் மறவன் என்பவன் தீப்பாய்ந்தான் (172/19).

அவ்வாறு தீப்பாயும் போது கோயிலுக்கு ஒரு விளக்கு வைத்துவிட்டு அவன் தீப்பாய்ந்தான்.

அரசர்களுக்கு இருந்ததுபோல் குறுநில மன்னர்களுக்குப் பல துறைகளிலும் பணிபுரிவோர் இருந்தனர். அடிகள் பழுவேட்டரையர் மறவன் கண்டனுக்கு குன்ற நாட்டுக் கண்டப் பெருந்திணை என்பவன் கன்மியாக இருந்தான் (273/19). நாவலூர் உடையான் கண்டன் தேவடி என்பவன் அடிகள் பழுவேட்டரையன் கண்டன் சுந்தரசோழன் என்பவனுக்கு ஸ்ரீ காரியம் ஆராய்பவனாக இருந்தான் (327/19).

மனைவியர் :

சிற்றரசர்களின் தேவியர் அரைசி என்றும், தேவி என்றும், அகமுடையாள் என்றும் அழைக்கப்படுகிறாள். 'அரையன் மஹிமாலயன் ஆன பராந்தக முத்தரையன் அரைசியான பஞ்சவன் மாதேவி' என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது (61/19). வன்னாடுடையார் மழநாட்டு வேளார் என்றும் வன்னாடுடையார் தேவியார் சதிரயன் உத்தம சீலியார் என்றும் மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது (255/19).

வேளார்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியர் உண்டு. அவர்கள் அகமுடையாள் என்று அழைக்கப்படுவதும் உண்டு. 'விக்கிரமசோழ மாராயன்' என்பவன் கோவிந்தபுத்தூர் என்னும் இடத்தில் ஒரு கற்கோயிலை எடுப்பித்தான். அவனது இருமனைவியர் கோயிலுக்கு நிலம் அளித்துள்ளனர். இருவரும் 'அகமுடையாள்' என்று கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றனர் (333, 334/19).

சிற்றரசன் இறக்க அவனுடன் மனைவியும் தீப்பாயும் வழக்கம் தமிழகத்தில் இருந்தது. வீரசோழ இளங்கோ

வேளார் என்பவர் இறக்க அவரது தேவி கங்கமாதேவி என்பவள் தீப்பாய்ந்தாள். இது கண்டராதித்த சோழர் காலத்தில் நடந்தது. அவ்வாறு அவள் தீப்பாயும் முன்னர் அல்லூர் என்னும் கோயிலில் நொந்தா விளக்கு எரிக்க பொருள் கொடுத்து பின்னர் இறந்தாள் (630/8).

குறுநில மன்னர்களது குடிவந்தவர்களே வேளார் ஆவர் என்பது இளங்கோ வேளார் என்பதிலிருந்து அறியலாம். இவர்கள் சிற்றரசர்களாக இருந்ததோடன்றி பேரரசர்களின் சிறந்த சேனுபதிகளாகவும் திகழ்ந்துள்ளனர்.

சேனுபதிகள் :

பல்லவருக்கும் பாண்டியருக்கும் பலர் சேனுபதிகளாகத் திகழ்ந்திருக்கிறூர்கள். சோழர்களது சேனுபதிகளில் பலர் வேளிரும் வேளாரும் ஆவர். இராஜராஜனுக்கு குரவன் உலகளந்தானுன இராஜராஜ மாராயன் என்பவன் சேனுபதியாய் இருந்தான். முதல் இராஜேந்திரனுக்கு விக்கிரம சோழிய வரையன் ஆகிய அரையன் இராஜராஜன் என்பவனும், முதல் இராஜாதிராஜனுக்கு இராஜேந்திர சோழ மாவலி வாணுதிராஜன், ஜயங்கொண்ட சோழ வாணகோவரையன், இராஜாதிராஜ நீலகங்கரையன், இராஜாதிராஜப் பல்லவரையன் முதலியோரும் சேனுபதிகளாகத் திகழ்ந்திருக்கிறூர்கள். அதிராஜேந்திரனுக்கு இராஜராஜன் ஜெயங்கொண்ட சோழனுன சேனுபதிகள் இருக்குவேளார் என்பவர் சேனுபதிகளாக இருந்தார் (754/18). இரண்டாம் இராஜராஜனுக்கு, இராஜராஜ அணிமுரி நாடாழ்வான் என்பவனும், வீரராஜேந்திரனுக்கு வீரராஜேந்திர காராணை விழுப்பரையன் என்பவனும் சேனுபதிகளாயிருந்தனர். முதல் குலோத்துங்கனுக்கு கருணுகரத் தொண்டைமானும் அரும்பாக்கிழான் மணவிற் கூத்தனுன காலிங்க

ராயன் என்னும் நரலோகவீரனும் சேனாபதிகளாய் திகழ்ந்தது அனைவரும் அறிந்ததே. இது போன்று சிற்றரசர்களும் வேளார்களும் அரசனின் சேனாபதிகளாகத் திகழ்ந்திருக்கிறார்கள்.

சில சேனாபதிகள் சிறந்த கல்விமான்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேட்டிற்கு தமிழ் பிரசஸ்தி பாடியவன் ஏனாதி சாத்தன் சாத்தன் என்னும் சேனாபதியாகும். "பிரசஸ்தி பாடினான் சேனாபதி ஏனாதி சாத்தன் சாத்தன்" என அச் செப்பேடு கூறுகிறது.

## வீரருக்குக் குலப் பெயர் கொடுத்தல் :

ஒப்பரும் வீரர்களுக்கு அரசர்கள் உயர்ந்த குலம் என்னும் அந்தஸ்தும் பிற சலுகைகளும் செல்வாக்குகளும் அளிப்பதும் உண்டு. முதலாம் ஆதித்த சோழனுக்கு விக்கி அண்ணன் என்னும் வீரன் பேருதவி புரிந்தான். அவனுக்கு ஆதித்தன் தமிழவேள் என்னும் குலப் பெயர் கொடுத்தான். அதனுடன் ஒரு சிறந்த ஆசனமும் சாமரை வீசிக் கொள்ளும் உரிமையும், பல்லக்கும், முரசும், மாளிகையும் சிறந்த உணவும், காளமும், யானைகளும் கொடுத்தான். என்று கல்வெட்டுக் கூறுகிறது. மேலும், ஆதித்த சோழனுடன் அவனது அரும் நண்பன் சேர மன்னன் இரவி என்பவனும் சேர்ந்து இவற்றை அளித்தான் எனக் கல்வெட்டுக் கூறுகிறது. சோழ நாட்டிலும் சேர நாட்டிலும் விக்கி அண்ணன் இச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது இதன் கருத்து போலும்.

## கல்வெட்டு :

"தொண்டை நாடு பாவிய சோழன் பல் யானைக் கோக் கண்டனாயின இராஜகேசரி பன்மனுலும் சேரமான்

கோட்டன் இரவியாலும் தவிசும், சாமரையும், சிவிகையும், திமிலையும், மாளிகையும், போனகமும், காளமும், களிற்று நிறையும் செம்பியன் தமிழவேள் என்ற குலப் பியரும் பெற்ற விக்கி அண்ணன்" என்று கூறுகிறது. பொது வாழ்வில் சாமரம் வீசிக் கொள்ளுதல், பல்லக்கில் செல்லுதல், திமிலையும் காளமும் இசைத்துக் கொள்ளுதல் முதலிய அரசால் கொடுக்கப்படும் அந்தஸ்துகள் என பிற கல்வெட்டுகளிலிருந்தும் அறிகிறோம். இக் கல்வெட்டில் போனகம் என்று குறிப்பது எதை எனத் தெளிவாகத் தெரியவில்லை. போனகம் என்பது உண்ணும் திரவப் பொருள். அரசனுடன் அமர்ந்து உண்ணும் ஒரு அந்தஸ்தை இது குறிக்கிறதோ எனத் தோன்றுகிறது மேலும் இக் கல்வெட்டு தமிழவேள் என்னும் குலப் பெயர் கொடுத்தான் எனக் குறிப்பதும் சிறப்பாகும். இதிலிருந்து பல குலப் பெயர்கள் இன்று உயர்ந்த ஜாதியாகக் கருதப்படுபவை, அன்று அரசனால் அளிக்கப்பட்ட பெருமைகள் என்பதில் ஐயமில்லை.

# 8

# அம்பொடு வேல் நுழை வழியெல்லாம் தான் நிற்குமன்னே

**போர் வீரர் :**

அரசர்களிடத்தில் சிறந்த வீரர்களாகப் பணிபுரிந்தவர்கள் பலர். அவர்களில் வீரர் என்னும் சொல்லுக்கே இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள் மறவர் என்போர். மறவர் என்ற சொல் வீரர்களைக் குறிக்கப் பொதுப் படையாகவும் ஒரு குறிப்பிட்ட குடியைக் குறிக்கவும் வழங்கப்பட்டது. வேடர், கானவர், எயினர், குன்றவர், குறவர், மலையர் முதலிய பெயர் அனைத்தும் கண்ணப்ப நாயனார் பிறந்த ஒரே குடியின் பெயராக பெரிய புராணம் கூறுகிறது. சிலப்பதிகாரத்திலிருந்தும் வேட்டுவர், மறவர், எயினர், குன்றவர் என்ற சொற்கள் ஒரே குடியைக் குறிக்கின்றன என அறிகிறோம்.

**சங்க கால மறவர் :**

சங்க காலத்தில் மறவர்கள் கொடுந் தொழில் புரிபவராக இருந்துள்ளனர். மறவர் என்றாலே மக்கள் நடுங்


குவர். மறவர், வழிவரும் புதியோரைக் கொன்று வீழ்த்தினர் (புறம் 175). நீண்ட வழிகளைக் காத்து நின்ற மறவர் கையாற் கவிக்கப்பட்ட கண்ணால் குவித்துப் பார்த்து அம்பு எய்வர். அவர்களால் வீழ்த்தப் பட்டோரது உடல்களை மூடி புதிய கற்குவைகள் காணப் படும். (புறம் 2). அவர்களுடைய கொடிய தொழிலுக்குப் பயந்து ஊர் மக்கள் குடி பெயர்ந்தனர். அவ்வூர் பீர்க்கை படர்ந்து பாழாகிக் கிடக்கும், அவ்வூர் அம்பலம் மிகவும் பரிதாபமான நிலையில் இருக்கும். வணிகர்கள், கழுதைகளின் மேல் பொருள்களை ஏற்றி வாளேந்தி வருவர். மறவர்கள் அவர்களை மறித்துப் போரிட்டு அவர்கள் தலையை வெட்டி வீழ்த்தி அருங்கலங்களைத் திறையாகக் குவிப்பார். அதைத் தங்களுக்குள்ளே பிரித்துக் கொள்வர் (அகம். 89). மறவர்களது வில் தோள் வரை உயர்ந்திருக்கும். அதை வளைத்து இழுத்து அம்பு எய்வர் (அகம். 175). தொடுத்த அம்பு குறி தவறினால் வில்லைக் கவ்வும் கல்லாத அறிவினர் அவர்கள் (அகம். 214).

மறவர்கள் அழகு இல்லாத தாடி உடையவர்கள். தங்கள் அம்புகளை நடுகல்லின் பக்கத்தில் தேய்ப்பர் (அகம். 297). வேங்கட மலையைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ள மறவர்கள் வளைந்த வில்லையும் கொடிய பார்வையையும் உடையவர்கள். அருகில் உள்ள குன்றில் ஏறி எருதைக்கொன்று அதன் தசையை நெருப்பில் இட்டு ஊனைத் தின்று தேங்கள்ளைக் குடித்து புலால் நீங்காத வாயுடையவர்கள். அவர்கள் தங்கள் கையை கழுவ மாட்டார்கள். கடப்ப மரத்தின் கீழ் கூத்தாடுவார்கள் (அகம். 265). கூரிய அம்பினையும் வளைந்த வில்லையும் உடைய மறவர் தாங்கள் வேண்டுவதைக் கொண்டு மற்றவற்றை பிறருக்குப் பயனில்லாமல் அழித்தனர் (புறம். 23.).




**பல்லவ மன்னனுக்கு முடிசூட்டும் காட்சி :**

வைகுந்தப் பெருமாள் கோயில்,
காஞ்சி.
கி.பி. 8ம் நூற்றுண்டு.



**பல்லவ மன்னன் அவையில் வீற்றிருக்கும் பெருமிதத் தோற்றம் :**

வைகுந்தப் பெருமாள் கோயில்,
காஞ்சி.
கி.பி. 8ம் நூற்றுண்டு.



அரசமாதேவி :

நாகேச்சுரர் கோயில்,
கும்பகோணம்.
கி.பி. 9ம் நூற்றுண்டு.

யானை வீரரும், குதிரை வீரரும்
போரிடும் காட்சி :

வைகுந்தப் பெருமாள் கோயில்,
காஞ்சி.
கி.பி 8ம் நூற்றுண்டு.






**போருக்குச் செல்லும் பல்லவர் படை:**

வைகுந்தப் பெருமாள் கோயில், காஞ்சி.
கி.பி. 8ம் நூற்றுண்டு.

**கானவர்:**

மாமல்லபுரம்.
கி.பி. 8ம் நூற்றுண்டு.





வாட்பயிற்சிபெறும் மறவர் :
அரங்கநாதர் கோயில்,
திருவரங்கம்.
கி.பி. 15ம் நூற்றுண்டு




விஜயநகரக்கால குதிரை வீரன்:
வரதராஜர் கோயில், காஞ்சி.
கி.பி. 16ம் நூற்றுண்டு.




செக்கில் எண்ணெய் ஆட்டுதல் :

சோழர் காலம், தாராசுரம்.
கி.பி. 12ம் நூற்றுண்டு



ஆயர்மகள் :


மாமல்லபுரம்
கி.பி. 6ம் நூற்றுண்டு.



கதிரவனை வணங்கும் அந்தணர்:
மாமல்லபுரம்.
கி.பி 8ம் நூற்றாண்டு.



தில்லை
வடக்கு கோபுரத்தைக்
கட்டுவித்த தச்சர்:
கி.பி. 16ம் நூற்றாண்டு.



ஆடல் மகள்:

தில்லை நடராஜர் கோயில்.
கி.பி. 12ம் நூற்றுண்டு.



ஆடல் மகள்:

தில்லை நடராஜர் கோயில்.
கி.பி. 12ம் நூற்றுண்டு.



இசைக்கருவி வாசிக்கும் ஆசிரியர் :

தில்லை.
கி.பி 12ம் நூற்றாண்டு.



மத்தளம் வாசிக்கும் கூத்தன் :

தில்லை.
கி.பி 12ம் நூற்றாண்டு.

## மறவரது வாழ்க்கை :

மறவர்களது வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் கண்ணப்ப நாயனர் கதையை சேக்கிழார் பெருமான் படைத்துள்ளார்.* கண்ணப்பன் வரலாற்றில் வேட்டுவர் வாழ்க்கையைக் குறிக்கும் சேக்கிழார் அங்கு "கொல், எறி, குத்து" என்ற சொற்களே ஓங்கி நிற்கும் என்று கூறுகிறார். அவர்கள் அயல் புறத்திருந்து ஆநிரைகளைக் கவர்ந்து வாழ்வர். அவர்களது குலம் குற்றமே குணமாகக் கொண்ட குலம். பொச்சையின் நறவும் மானின் புழுக்களையுமே அவர்கள் உணவாக உண்பர். கொடுமையையே தலையாகக் கொண்டவர்கள். வில்தொழிலே தொழிலாய்க் கொண்டவர்கள் என்றும் அவர்கள் குறிக்கப்படுகின்றனர். இவர்களது குடிக்கு அரசன்போல் ஒரு தலைவன் உண்டு. கண்ணப்பனின் தந்தை அது போன்ற ஒரு தலைவனாகும்.

## வேலனை வேண்டல் :

மறவர்கள் மக்கட் பேற்றுக்காக முருகப் பெருமானை வழிபடுவர். இதைப் பெருவிழாவாகக் கொண்டாடுவர். சேவலையும் மயில்களையும் முருகனுக்கு விடுவர். பல மணிகள் கட்டிய தோரணங்களை எடுப்பர். கதம்பம் சாற்றி குரவைக் கூத்து ஆடி (பேரணங்கு ஆடல்) வெறியாடல் செய்து இதைப் பெருவிழாவாக நடத்துவர். வேடர் குலத் தலைவனும் நாகனும், அவன் மனைவி தத்தையும் முருகப் பெருமானை வழிபட்டு அதன் பயனாய் பிறந்த குழந்தையே கண்ணப்பன். தலைவனுக்குக் குழந்தை பிறந்ததும் குறவர் தங்கள் சிற்றூர்

---

*பல்வேறு திறத்து தமிழ் மக்களது வாழ்க்கையை, சிலம்பும், சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணமும் எடுத்துக் கூறுவது போல் வேறு எந்த நூலும் கூறுவதில்லை.

களில் பெருவிழா எடுத்தனர். பிறந்த குழந்தையை தந்தை கையில் எடுத்துப் பெயரிடுதல் மரபு. தங்கள் மறக் குடிக்கேற்ப கடவும் காப்புச் செய்வர். இளந்தளிரும், வேம்பும் கட்டித் தொங்க விடுவர். தெய்வத்துக்குப் பெரு மடை (பலி) கொடுப்பர். மறவச் சிறுவன் நடை பயிலும் போது புலிப் பல்லை முள்ளம் பன்றியின் முள்ளால் துளைத்து நாணில் கோர்த்து கழுத்தில் அணிவிப்பார்கள். பாசி மணிகளோடு பல மணிகளைக் கோவைகளாகக் கோத்த அரைஞாணில் காசு கோர்த்து இடுப்பில் கட்டி யும் காலில் தண்டையும் காதில் குதம்பையும் அணிவித்து அலங்கரிப்பர்.

## மறவக் குழவியின் விளையாடல் :

மறவக் குழந்தை நாயைப் பாசத்தால் பிணித்து விளை யாடுவது உண்டு. ஐந்தாவது வயதிலேயே காடுகளில் சென்று விலங்குக் குட்டிகளைப் பிடித்து வந்து முற்றத்து மரத்தில் கட்டி விளையாடுவர். கண்ணப்பர் ஐந்தாம் ஆண்டில் முயல் குட்டி, காட்டுப் பன்றிக் குட்டி, புலிக் குட்டி முதலியவற்றைத் துரத்திச் சென்று பிடித்து வந்து வளர்த்தார் என்று சேக்கிழார் குறிக்கிறார்.

## வில்விழா :

நன்கு வளர்ந்த மறக்குலச் சிறுர்களுக்கு வில் தொழில் கற்றுக் கொடுப்பர். இதை சிலை பயில் பருவம் என்பர். வில் தொழிலில் சிறந்த வீரரை ஆய்ந்து நல்ல நாள் தேர்ந் தெடுத்து மற்ற மறவர்க்கெல்லாம் சொல்லி அனுப்புவர். இன்னவன் வில் பிடிக்கப் போகின்றான் எனப் பறை சாற்றி அறிவிப்பர். அதைக் கேட்டு மலையில் கிடைக்கும் மணி, பொன், புலித்தோல், யானைத்தந்தம், மயிற்பீலி, தேன், நறவு, ஊண், கிழங்கு, பழங்கள் முதலிய கொண்டு வேடர் வருவர். இதை ஒரு விழாவாகவே கொண்டாடுவர். இதற்கு வில்விழா என்று பெயர். வில்லேந்தியவர் காத்து

நிற்க எடுக்க வேண்டிய வில்லுக்குக் காப்புக் கட்டுவர், புலி நரம்பால் ஆக்கிய காப்பை பின்னர் மறவச் சிறுவனின் கையிலே அணிவிப்பர். இச் சடங்குகள் முடிந்ததும் அனைவரும் விருந்து உண்பர். பின்னர் மறவச் சிறுவன் பசிய இலைகளினால் ஆன படலையைச் சுற்றிக் கொண்டு, பல மலர்களை தொடுத்த தொடையலைச் சூடி, காசுகள் கோர்த்த வடத்தோலைக் கட்டிக் கொண்டு பலவேறு அணிகளையும் அணிந்துகொண்டு, வெட்சி மலர்க் கண்ணி சூடி, ஆசிரியன் ஏந்தி நிற்கும் வில்லின் அருகில் செல்வான். அப்போது தொண்டகம், முரசு, கொம்பு, துடி முதலிய இசைக் கருவிகள் முழங்க வில்லை ஏந்திக் கொண்டு, அனைவரும் சூழ அக் குறிச்சியை (குறிஞ்சி நிலக் கிராமம்) வலம் வருவார்கள். இவ் விழா ஏழு நாட்கள் நடைபெறும்.

ஏழாம் நாளன்று சூரியன் உச்சியில் நின்றபோது மங்கலவாழ்த்துக்களும், இசைக்கருவிகளும் ஒலிக்க தங்கள் தொழிலாகிய வில்தொழிலில் சிறந்தவரிடமிருந்து வில்லைப் பிடிக்கக் கற்றுக் கொள்வான். அன்று தொடங்கி மலையின் பக்கத்தில் முன்னோர் பழகிய இடத்தில் முறைப்படி வணங்கி வில்வித்தை கற்பான். அவ்விடத்திற்கு ‘வில் தொழில் களம்’ என்று பெயர். மறக்குலமகன் தனது 16-வது வயதிற்குள் வில்வித்தையும் பிற போர்ப்பயிற்சிகளும் படைக்கலப் பயிற்சிகளும் பெறுவான்.

குலத்தலைமை கொடுத்தல் :

மறவர் குலத்தலைவன் தான் தளர்வு எய்தியதும், வயது வந்த தன் மகனுக்குக் குலத்தலைமை அளிப்பான். அதுவும் ஒரு சிறந்த விழாவாகக் கொண்டாடப்படும். அதன் சின்னமாக அவன் மகன் முதன்முதலில் வேட்டையாட அனுப்பப்படுவான். அதற்கு “கன்னி வேட்டை” என்று பெயர். கன்னி வேட்டை செல்வதற்கு முன் மறவர் தலைவன் தேவ

ராட்டியை அழைத்து, தன் விருப்பத்தைக் கூறி 'காடு பலி' கொடுக்க வேண்டுவான். தேவராட்டி என்பவள் பெரும்பாலும் வயது முதிர்ந்தவளாக விளங்குவாள். அவள் வேங்கைப் பூவை கண்ணியாகச் சூடி மான் கொம்பிலிருந்து அறுத்துச் செய்த குழையை காதில் சூடி, புனுகுத் திலகம் இட்டு, மணிவடம் பூண்டு, மரவுரி தரித்து அதன்மேல் மயில்பீலி சூடி விளங்குவாள். அவளிடத்தில் மறவர் தலைவன் தன் "மகனுக்குக் குலத் தலைமை கொடுக்கப் போகிறேன்; இவன் வேடர்களைக் காக்கின்ற பொறுப்பு உரிமை புகுகின்றான். இவன் வேட்டைத் தொழிலில் என்னைக் காட்டிலும் சிறக்க வேண்டும்; வேற்றுப் புலங்களை கவர்வதிலும் என்னைக் காட்டிலும் சிறந்தவனாக வேண்டும்; அதற்காகக் காட்டில் உறை தெய்வங்கள் அனைத்தும் விரும்பி உண்ணும் காடு பலி நீ அளிக்க வேண்டும்" என்று வேண்டி அதற்குரியவற்றை அவளிடம் கொடுப்பான். அவளும் அவற்றைப் பெற்று, வாழ்த்தி, காடு பலி கொடுக்கச் செல்வாள். பின்னர் மறவர் தலைவன் தன்மகனை வரவழைத்து அவனை புலித்தோல் ஆசனத்தில் அமரச் செய்து, 'மலையர் குலம் காவல் பூண்டு, மாற்றார்களை எறிந்து, மான் வேட்டையாடி, என்றும் உன்னுடைய மரபுரிமையைத் தாங்குவாய்' என்று கூறி அதன் சின்னமாக உடைத் தோலையும் உடைவாளையும் அவனிடத்திலே கொடுப்பான். தந்தையின் கழலை வணங்கி அவற்றை ஏற்றதும் அவன் மறவர் தலைவனாகிறான். தந்தை அவனை வாழ்த்தி வேட்டைக்குச் செல் என விடை யளிப்பான்.

தந்தையை வணங்கி வேடர்களுடன் அருகில் இருந்த மங்கலச் சுனை நீராடி மனை செல்வான். மறுநாள் அதிகாலையில் வேட்டைக்குச் செல்வான். இதையே கன்னிவேட்டை என்பர்.

சாலினி :

எயினர் குடியில் வளம் குன்றுமானால் அக்குடியில் வந்த தேவராட்டி தெய்வத்துக்குப் பலி கொடாமையால் தான் இவ்வாறு ஆயிற்று என்று சாமி ஆடிக் கூறுவாள். அவளைத் தேவராட்டி என்றும் சாலினி என்றும் கூறுவர். அவள் கண்ணப்பன் வரலாற்றிலும் நரை மூதாட்டி என காடுபலி கொள்ள அழைக்கப்பட்டது கண்டோம். மறவர் வாழ்வில் இச்சாலினி இன்றியமையாத நிலை வகித்தாள் என்று இதிலிருந்து அறிகிறோம்.

சாலினி ஊரில் மன்றில் தெய்வத் தன்மையுற்று, மெய் மயிர் சிலிர்த்து மூரி நிமிர்ந்த கைகளை ஒற்றையும் இரட்டையுமாக்கி அபிநயத்தோடு கூட்டித் தாளத்துக்கு ஏற்ப ஆடுவாள். கானவர்களும் அதுகண்டு வியந்து நிற்பர். ‘நீங்கள் முன்பு கூறியபடி தெய்வத்துக்குப் பலிகொடாமையால் எயினர்களின் மன்றுகள் பாழ்பட்டன. பகைவர்களுடைய ஊர்களில் ஆநிரைகள் நிறைந்து நிற்கின்றன. நீங்கள் கலையமர் செல்வியாகிய கொற்றவைக்கு வெற்றிக்கு விலையாக உயிர்ப்பலி கொடுத்தாலோழிய உங்களுக்கு வெற்றி கிடைக்காது. கள்ளுண்டு வாழ்வதையும் மதுவுண்டு செருக்கு மிக்க இல்வாழ்க்கையையும் நீங்கள் விரும்பினால் கொற்றவைக்கு உரிய பலியை உடனே அளியுங்கள்’ என்று சாலினி கூறுவாள்.

குமரிக்குக் கொற்றவைக் கோலம் :

அதைக் கேட்ட எயினர் தங்கள் குடிப்பிறந்த ஒரு குமரியை கொற்றவை போல் அலங்கரிப்பர். அவளது கூந்தலைச் சடையாகக் கட்டுவர். அதில் கொற்றவையின் முடியில் பாம்பு சுற்றி இருப்பது போல், பொன் நாணால் சுற்றிக் கட்டுவர். அதில் காட்டுப் பன்றியின் பல்லை இளநிலாப் என்ன சொருகுவர். கொடும் புலியைக்

கொன்று அதன் பற்களை தாலியாகக்கட்டி, அதன் தோலை மேகலையாக உடுத்துவர். வயிர வில்லை அவள் கையில் கொடுப்பர். அவளைக் கலைமான் மீது அமர்த்துவர். அம் மானின் கொம்பு முறுக்குண்ட கொம்பு. அவளைப் போற்றிக் கானக்கோழியும், நீலநிற மயிலையும் கொடுப்பர். வண்ணம், சுண்ணம், வாசனை பொருந்திய சந்தனமும், அவரை துவரை முதலியவற்றின் புழுக்கலையும், இரத்தம் கலந்த சோற்றையும் ஏவல் எயிற்றியர் எடுத்துப் பின்னே செல்வர். மறவர் வழிப்பறி கொள்ளும்போது கொட்டும் பறையும் சூறை கொள்ளும்போது ஊதும் சின்னமும், துத்தரி, குழல், எறிமணி முதலியவற்றை இசைத்து அக் குமரிமேல் தெய்வம் வந்ததாகக் கொண்டு பலிப்பீடத்தின் அருகில் சென்று அதன் அருகில் அவளை நிறுத்தி வாழ்த்துவர். அப்பலிப்பீடம் கொற்றவை கோட்டத்து முன்றிலில் இருக்கும். அம்முன்றிலில் கொற்றவையைப் போற்றி மறவர் கழுத்தை அறுத்து அதிலிருந்து பீறிட்டெழும் இரத்தம் பீடத்தின் மீது விழப் பலி கொடுப்பர். இதை எயினர் கடன் என்று கூறுவர். (சிலம்பு வேட்டுவ வரி).

## எயினர் அளிக்கும் தலைப்பலி :

எயினர் தங்களது கழுத்தை அரிந்து கொற்றவைக்குப் பலி கொடுத்தல் மரபு என்று சங்க இலக்கியங்களில் இருந்து அறிகிறோம். இது வெறும் இலக்கியக் கற்பனை அல்ல. உண்மையாக வாழ்க்கையிலும் இவ்வாறு செய்தனர் என்பதற்குச் சான்று உள்ளது. நெல்லூர் மாவட்டம் கூடூர் என்ற இடத்தில் கம்பவருமன் காலத்துக் கல்வெட்டு ஓர் உதாரணம். அதில் வீரன் ஒருவன் தன் தலையை அரிந்து கையிலே தாங்கி நிற்பது போல் சிற்பம் உள்ளது. அதில் உள்ள கல்வெட்டு பட்டை போத்தன் என்பவன் தன் தலையை அரிந்து படாரிக்கு பலியாகக் கொடுத்தான் என்றும் அரிந்த தன் தலையை

பீடத்தின் மீது வைத்தான் என்றும் கூறுகிறது. இதை மேதவம் என்று கல்வெட்டுக் கூறுகிறது. அதற்காக ஊரார் அவன் வழிவந்தார்க்கு நிலம் கொடுத்தனர். அக் கல்வெட்டு நல்ல தமிழில் பின்வருமாறு குறிக்கிறது. "ஸ்ரீ கம்ப வருமற்க்கு யாண்டு இருபதாவது பட்டை போத்தனுக்கு, ஒக்கொண்ட நாகன் ஒக்கந்திந்தன் பட்டை போத்தன், மேதவம் புரிந்ததென்று படாரிக்கு நவ கண்டங் கொடுத்து, குன்றகத் தலை அறுத்து பிடலிகை மேல் வைத்தானுக்கு, திருவான்மூர் ஊரார் வைத்த பரிசாவது" என்று அது உள்ளது. இதில் இருந்து மறவர் தங்கள் தலையை அரிந்து கொற்றவைக்குப் பலியாக அளித்த உண்மையை அறியலாம்.

தமிழகத்தில் கி. பி. 8-ஆம் நூற்றூண்டிலிருந்து சுமார் 11-ம் நூற்றூண்டு வரை காணப்படும் கொற்றவையின் சிற்பங்களின் காலடியில் இரு மறவர்கள் காண்பிக்கப்பட்டிருப்பர். அவர்களில் ஒருவன் தன் தலையை அரிந்து கொடுப்பதாக உள்ளதைக் காணலாம். இஃது அன்று நிலவிய மறவர்களின் பண்பே என்பதில் ஐயமில்லை.

## அறத்துக்குப் புறம்பானவர் மறவர் :

சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியிலும் அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரையிலும் ஒரு குறிப்புக் கிடைக்கிறது.

> "இடுமுள்வேலி எயினர் கூட்டுண்ணும்
> நடுவூர் மன்றத்தடி பெயர்த்தாடிக்
> கல்லென் பேரூர்க் கணநிறை சிறந்தன
> வல்வில் எயினர் மன்று பாழ்பட்டன
> மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவா
> அறக்குடிபோல் அவிந்து அடங்கினர் எயினரும்;"
>
> —(சிலம்பு 12-10, 15)

மறவர்கள் வளங்குன்றி அறக்குடிகள் போல் சினம்

குறைந்து செருக்கு அடங்கி விட்டார்கள் என இளங்கோ குறிக்கிறார். இவர்களை மறக்குடிகள் என்றும் கூறுகிறார். இதிலிருந்து இவர்கள் அறத்துக்கு அடங்காமல் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி, சினம் மிக்கவராய், கொலை, களவு முதலிய தொழிலையே புரிபவர்களாய் காட்டுக்குடிகளாக வாழ்க்கை நடத்தியதாலே மறக்குடி, மறவர் என்று பெயர் பெற்றனரோ என்று ஐயுற வேண்டியுள்ளது.

இவ்வாறு மறக்குடிகளாக, கட்டுக்கடங்கா காட்டுக் குடிகளாகத் திரிந்தவர்களை வென்று, படிப்படியாக பண்புள்ளவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் மாற்றிய பெருமை தமிழகத்தில் வடபால் பல்லவருக்கும் தென்பால் பாண்டியருக்கும் சேரும். இக்குடிகளை பண்படுத்தும் நிலை கி. பி. 4, 5-ம் நூற்றாண்டிலிருந்து தொடங்கி 9, 10-ம் நூற்றாண்டுக்குள் ஓர் உயர்நிலை அடைய முடிந்தது எனலாம். இந்த நல்வழியில் சிக்காமல் தங்களது கொடுந்தொழிலையும், களவுத் தொழிலையும் தொடர்ந்து நடத்திவந்த ஒரு சில குறவர் போன்ற குடிகள் ஆங்காங்கே இருந்திருக்கத்தான் வேண்டும்.

மழவர் :

மறவர்களைப்போலவே மழவர் என்ற ஒரு குடியினரும் சங்க காலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வில்லையே ஏராக உடையவர்கள். வேலை ஏந்தியவர்கள். வேல்களின் காலில் கடையாணி இடப்பட்டிருக்கும். அவர்கள் இருமல் நீங்க மண்ணை வாயில் அடக்கிக் கொள்வர். மழவர் தங்கள் இளைஞருக்கு படைக்கலம் பயில்வித்தனர். அது அரங்கேற்றும் நாளை ஒரு பெரும் விழாவாக நடத்தினர். அதற்கு பூந்துடை விழா என்று பெயர் (அகம். 187). மறவர்கள் போல் மழவர் கொடுந்தொழில் மிக்கோர் அல்லர். அவர்களது பெயரால் மழநாடு என்று ஒரு பகுதியே இருந்தது. இதிலிருந்தே அவ்வீரர்கள் பண்புள்ள நாட்டவர்களாகத்

திகழ்ந்தவர் என்று அறியலாம். திருஞானசம்பந்தரை கொல்லிமழவன் சந்தித்தான் என்று பெரிய புராணம் கூறும். பிற்காலத்தில் மழவரயர் என்ற பெயரில் பல ஒப்பற்ற வீரர்கள் இருந்துள்ளனர். சோழப்பேரரசர்கள் மழவர் குடியில் பெண் கொண்டனர். சோழ மாதேவியரில் ஒப்பற்ற திலகமாகத் திகழ்ந்த செம்பியன் மாதேவியார் மழவரையர் மகளார் அவர்.

## பல்வேறு படையினர் :

சங்க காலத்தில் பலவேறு படையினர் இருந்தனர் என்று அறிகிறோம். கடும்பரி கடவுவார் (குதிரைப் படை), களிற்றின் பாகர் (யானைப் படை) நெடுந்தேர் ஊருநர் (தேர்ப் படை) கடுங்கண் மறவர் (காலாட்படை) ஆகியோரைச் சிலம்பு கூறுகிறது. சங்க காலத்திலேயே படைத் தலைவர்கள் படைகளை ஆராயும் வழக்கம் உண்டு. (பதி.பத் 97). வேலுக்கு புலித்தோலால் ஆன உறை வைத்திருந்தனர் (பதி.பத்.24.2) இளங்கோசர்கள் என்பவர் முருக்கமரத்தாலான தூணை இலக்கமாகக் கொண்டு படைக்கலம் பயில்வர் (புறம். 169). பல்லவர் காலத்தில் படைத் தலைவர்கள் இருந்தனர். கி. பி. 3, 4-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் இவர்கள் படர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். பிற்காலப் பல்லவர் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் சேவகர் என்றும் வீரர் என்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். பாண்டியர்களது செப்பேடுகளில் சாமந்தர், மகாசாமந்தர் என்று கூறப்படுகின்றனர். சோழர் காலத்தில் சேனைத் தலைவர்கள் தண்டநாயகன், மகாதண்ட நாயகன், சேனாபதி என்று அழைக்கப்படுகின்றனர்.

## கைக்கோளப் படை :

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து படையினரில் கைக்கோளர் என்ற பிரிவினர் குறிக்கப்படுகின்ற

னர். இவர்கள் ஏன் கைக்கோளர் என அழைக்கப்பட்டனர் என்று தெளிவாகத் தெரியவில்லை. கைக்கோளர் என்ற சொல் கைகொள்வார் என்னும் பொருளில் வந்து இருக்கக்கூடுமோ என்று ஐயம் உள்ளது. அரசன் சிறந்த தன் வீரர்களுக்கு கை கொடுப்பது மரபு போலும். பகைவரை வெற்றி கண்ட மன்னன் தேர்த்தட்டில் தன் வீரர்களோடு கைகோர்த்து ஆடுவான் என்று சங்க நூல் குறிக்கிறது. அரசனது கை கொள்ளும் பேறு பெற்றமையால் கைக்கோளர் எனப் பெயர் பெற்றனரோ என ஐயுற வேண்டியுள்ளது.

முதல் பராந்தக சோழன் காலத்தில் 'ஆதித்த சோழத் தெரிஞ்ச கைக்கோளர்' என்ற படையினர் குறிக்கப்படுகின்றனர். இது பராந்தகனின் தந்தையாகிய ஆதித்த சோழன் பெயர் பெற்ற படை என்பது தெளிவு. பராந்தகன் பெயரால் பல கைக்கோளப் படைகள் இருந்தன. மதுராந்தகத் தெரிஞ்ச கைக்கோளர், பராந்தகத் தெரிஞ்ச கைக்கோளர், சிங்களாந்தகத் தெரிஞ்ச கைக்கோளர் முதலிய படைகள் இருந்தன. அரிஞ்சய சோழன் காலத்தில் கரிகால சோழத் தெரிஞ்ச கைக்கோளர், கோதண்டராமத் தெரிஞ்ச கைக்கோளர், தானதொங்கத் தெரிஞ்ச கைக்கோளர், வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளர் முதலிய படைகள் இருந்தன. இராஜேந்திரனின் கல்வெட்டில் இராஜராஜனின் பெயரால் அருள்மொழி தேவர் தெரிஞ்ச கைக்கோளர் என்பவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். இப் படைகளின் பெயரில் "தெரிஞ்ச" என்ற சொல் தேர்ந்தெடுத்த என்ற பொருள்படும் போலும்! சில கல்வெட்டுகளில் (18, 19/19 மூத்தவாள் பெற்ற கைக்கோளர் என்பவர்கள் குறிக்கப்படுகின்றனர். அரசனிடமிருந்து வாளை முதலில் பெறும் பேறு பெற்றதால் இப்பெயர் பெற்றனர் போலும்.

## வலங்கை இடங்கை :

கி. பி. 10-ம் நூற்றாண்டிலிருந்து மற்றுமொரு பிரிவை காண்கிறோம். இப்பிரிவு தமிழக வரலாற்றில் ஒரு சமூகப் புரட்சியாக சற்றேறக் குறைய அண்மைக் காலம் வரை நிலவி வந்தது. இது வலங்கை இடங்கை என்று பிரிக்கப் பட்ட குடிகளாகும். தஞ்சைப் பெருங் கோயிலில் இராஜ ராஜனின் பல பெயர்களால் வலங்கை வேளைக்காரர்கள் இருந்திருககிறார்கள்.

(1) இராஜராஜத் தெரிஞ்ச வலங்கை வேளைக்காரர்.

(2) அரிதுர்க்க லங்கனத் தெரிஞ்ச வலங்கை வேளைக் காரர்.

(3) மூர்த்த விக்ரமாபரணத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.

(4) இரணமுகராமத் தெரிஞ்ச வலங்கை வேளைக் காரர்.

(5) இராஜ கண்டிவத் தெரிஞ்ச வலங்கை வேளைக் காரர்.

(6) சத்ருபுஜங்கத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.

(7) அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.

(8) க்ஷத்ரிய சிகாமணித் தெரிந்த வலங்கை வேளைக் காரர்.

எனப் பல வலங்கை வேளைக்காரர்கள் இருந்தனர் என்று அறிகிறோம்.

வலங்கை வேளைக்காரர் என்பது படை என்றும் அவற்றில் பலகுடியினர் இருந்தனர் என்றும் அறிகிறோம். இராஜராஜனின் படையில் வலங்கை வேளைக்காரனாக வெள்ளாளன் இருந்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. (238 / 17). "இவ்வூர் இருக்கும் வெள்ளாளன் ஸ்ரீ ராஜராஜ தேவர் படை ஜநநாத தெரிஞ்ச வலங்கை வேளைக்காரரில் வண்ணக்கன் ஐய்யாறனாகிய சித்திரையாளி" என்று கல்வெட்டுக் கூறுவதால் இதை அறியலாம். அதிராஜேந்திர சோழனுடைய கல்வெட்டில் (4/8) 'வலங்கை இடங்கை மகமை' குறிக்கப்படுகிறது. இதில் இருந்து வலங்கை இடங்கை என்னும் பாகுபாடு 11-ம் நூற்றண்டிலேயே நிலைத்து விட்டது என்பது தெளிவு.

கைவகுத்தல் (வலங்கை இடங்கை தோற்றம்) :

வலங்கை இடங்கை என்னும் பாகுபாடு எவ்வாறு தோன்றியது என்று தெளிவாகத் தெரியவில்லை. பெரும்பாலும், படை அரசனின் வலக்கைப் புறத்தும் இடங்கை புறத்தும் வகுத்து நிறுத்தப்பட்டதிலிருந்து இது தோன்றியிருக்கலாம் என்று கொள்ளலாம். ஏனாதிநாதர் தனது படையை பாகுபடுத்தி நிறுத்தியதை "கை வகுத்து" என்று பெரிய புராணம் கூறுகிறது. இதிலிருந்து படை வகுப்பது "கைவகுத்தல்" எனப் பெயர் பெற்றது என்பது தெளிவு. சிறந்த திறன் மிக்கப் போர் புரிவோர் அரசனின் வலப்புறத்தும், அவர்களுக்குக் களத்தில் படைக் கலங்களை நீட்டித்தருதல் முதலிய பணி புரிவோர் இடப்புறத்தும் நிறுத்தப்பட்டிருக்கக் கூடும். போர்ப் புறத்து வீரர்கள் முதலிடமும், வேல் வடித்துக் கொடுத்தல் முதலிய தொழில் புரிவோர் இரண்டாவது இடமும் பெறுவதில் வியப்பில்லை. தங்கள் உயிரை மதியாது போரிட்ட வீரர்களுக்கு உயர் இடம் அளித்தது

இயல்பே. உயர் இடத்தைக் குறிப்பதற்காக வலப்புறமும் இரண்டாம் இடத்தைக் குறிக்க இடப்புறமும் கொள்ளப் பட்டன. ஆதலின் காலப்போக்கில் வலங்கையினர் இடங் கையாரைக் காட்டிலும் ஜாதியில் உயர்ந்தவர் என்று கருதிக் கொள்ளத் தலைப்பட்டனர்.

எல்லா ஜாதியினரும் போர் வீரர்களாகப் பணிபுரிந் திருக்கின்றனர் என்று முன்னரே கண்டோம். ஆதலில் எல்லா ஜாதியிலும் வலங்கை, இடங்கை என்னும் பாகு பாடு காணப்பட்டது. ஆனால் பிராம்மணர்களுள் இப் பாகுபாடு காணப்படவில்லை.

கல்வெட்டுகளில் வலங்கை இடங்கையினருக்கு பல சலுகைகள் அரசனால் அளிக்கப்பட்டவை குறிக்கப்படு கின்றன. சகவருடம் 1340-ல் (கி.பி. 1418) திருவண்ணாமலை யில் வலங்கை இடங்கை வகுக்கப்பட்டது என்றும் வலங் கைக்கு கொடுக்கப்பட்ட சலுகைகள் என்ன என்பதும் குறிக்கப்படுகின்றன. "திருவண்ணாமலையில் வலங்கை இடங்கை இல்லை. திருவண்ணாமலையில் இரண்டு தெருவில் கைக்கோளருக்கு முன்பு பூர்வம் நடந்து போந்த சங்கு, தண்டு, ஆனை, சாமரம் மற்றும் வலங்கைக்கு உரிய வரிசைகள் எல்லாம் நடக்கக் கடவதாக" என அரசன் ஆணையிட்டதை கல்வெட்டுக் கூறுகிறது (155/8). சகவரும் 1350-ல் (கி. பி. 1428) திருவையாற்றில் வலங்கை சாதி 98-ம், இடங்கை ஜாதி 98-ம் குறிக்கப்படுகின்றன. "பொய்கை நாட்டு தென்கால சபையாரும் வலங்கை 98 ஜாதியும், இடங்கை 98 ஜாதியும் நிறைவற நிறைந்து, குறைவற குவிந்து" என்று குறிக்கிறது. இதிலிருந்து கி. பி. 15-ம் நூற்றூண்டில் சற்றேறக் குறைய 98 ஜாதிகள் வலங்கையிலும் இடங்கையிலும் இருந்ததாக அறியலாம். இதிலிருந்து ஒவ்வொரு ஜாதியிலும் வலங்கையும் இடங் கையும் இருந்தனர் என்பது தெளிவு. செல்வத்

தாலும் செல்வாக்காலுமே இப்பிரிவு ஏற்பட்டுப் பின்னர் ஜாதி அடிப்படையில் அமைந்தது என்று கருதலாம். வலங்கை என்பது அரசனால் ஏற்படுத்தப்பட்டது என்பதும் தெளிவு.

## போர்ப்படை இசைஞர் :

சோழர் காலத்துப் படையினரைப் பற்றிக் கண்டோம். படையில் வீரரைத் தவிர, முரசு முழங்குவோர், குழல் ஊதுவோர், வாத்யம் வாசிப்போர், முதலிய இசை வல்லுநர்கள் இருந்தனர். படைக்கெனத் தனி இசைக் குழு இருந்தது. இராஜராஜன் தனது படையில் சிறந்த வாத்யம் வாசிப்பாரையும், இசைஞரையும் பெரிய கோயிலில் பணிபுரிய அமர்த்தினான். இதிலிருந்து படையில் இருந்தவர் இசை வல்லமையினால் அரசனால் போற்றப்பட்டனர் என்பது தெளிவு.

இராஜராஜனின் தஞ்சைக் கோயிலில் வங்கியம் வாசிக்க அமர்த்தப்பட்டவன் நிகரிலி சோழத் தெரிஞ்ச உடனிலைக் குதிரை சேவகரில் இருந்து வந்த தஞ்சை கணபதி என்பவன். முத்திரைச் சங்கு ஊதுபவன் யானைப் பாகரில் இருந்து வந்தவன். பக்கவாத்தியர் பலரும் காந்தர்வர்கள், (இசைப்பவர்) பலரும் வலங்கை வேளைக்காரப் படைகளிலிருந்து வந்தவர்கள் என்று தஞ்சைப் பெருங் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

## ஈழவர் :

ஈழவர் என்ற குலம் சங்க காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் கி. பி. 3, 4 -ம் நூற்றாண்டில் நிலைத்திருக்க வேண்டும். ஈழவர் என ஏன்பெயர் பெற்றனர் என்று தெரியவில்லை. ஈழநாட்டில் இருந்து வந்து இவர்கள் குடியேறியவர்களாயிருக்கலாம்.

ஈழவர் மரம் ஏறும் தொழிலில் வல்லமை பெற்றிருந் தனர் என அறியலாம். சில கல்வெட்டுகள் கோயில் களுக்கோ அந்தணர்களுக்கோ கொடுக்கப்பட்ட நிலங் களில்ஈழவர் ஏறக்கூடாது என்று கூறுகின்றன. தண்டந் தோட்டம் செப்பேடுகள் "இவ்வூரெல்லையில் தெங்கும் பனையும் ஈழவர் ஏறப் பெருதாராகவும்" என்று கூறு கிறது. இதிலிருந்து கள் இறக்குவதற்காக இவர்கள் மரம் ஏறுவர் என்றும் இது அரசாங்கத்தின் கட்டுப் பாட்டில் இருந்தது என்றும் அறியலாம். கல்வெட்டு களில் ஈழப்பூட்சி என்னும் ஒரு வரி குறிக்கப்படுகிறது. அது இத் தொழில் மீது இடப்பட்ட வரி என அறிய லாம்.

இக்குடியை சாணர் என்றும் அழைப்பதுண்டு. சாணர் என்ற பெயர் சான்ருர் என்ற சொல்லில் இருந்து தோன்றியிருக்க வேண்டும். ஏனுதிநாதர் என்னும் நாய ஞர் ஈழக் குலத்தைச் சார்ந்தவர். அவர் ஈழகுலச் சான் ருர் எனக் குறிக்கப்படுகிருர்.

இக்குலத்தவர் வில் தொழிலில் சிறந்து அரசனுக்கு வில்வித்தை கற்றுத்தரும் சிறந்தோர்களாகவும் பணிபுரிந் திருக்கிருர்கள். ஏனுதிநாதர் மன்னருக்கு 'வென்றி வடி வாட் படை பயிற்றும் தொழில் விஞ்சையில் தலைமை சார்ந்தவர்' பிறருக்கும் படைப்பயிற்சி அளித்து அதனுல் பெருஞ்செல்வம் பெற்றவரும் உண்டு என ஏனுதிநாதர் வரலாற்றிலிருந்து அறிகிருேம். இது குலமுறையாகவே வருவதும் உண்டு. இவர்களில் பயிற்சி பெறும் பிறர் மள்ளர் என்றும் அழைக்கப்படுவர்.

# 9

# உணவெனப்படுவது நிலத்தொடு நீரே

**வேளாண்மையின் சிறப்பு :**

வேளாண்மையின் சிறப்பை குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு எடுத்துரைக்கிறார். மறுஉலகத்தில் கிட்டும் செல்வத்தைப் பெறுதல், மாற்றான் தோள் வலியை அழித்தல், இவ்வுலகில் புகழ்நிறுத்தல் இம்மூன்றையும் வேளாண்மைக்கு நீர்நிலை பெருக்குவதால் ஒருங்கே பெறமுடியும் என்கிறார். உடலுக்கு உயிர்கொடுத்தால் மறுமைச்செல்வம் வரும். புகழ்வரும். மாற்றாரின் வலி குன்றும். உடலுக்கு இன்றியமையாதது உணவு. உணவு கொடுத்தவரே உயிர் கொடுத்தவர். உணவு எனப்படுவது நிலமும் நீரும் இணைவதால் தோன்றுவது. மிகப்பரந்த நிலமாயினும் மானம் பார்த்த பூமியாயிருந்தால் பயன் இல்லை. ஆதலின் நீர் நிலைகளைப் பெருக்கி உணவு உற்பத்திக்கு வழிதேடுவதால் மற்ற அனைத்தைக் காட்டிலும் சிறப்பைப் பெறுவாய் என அப்பெரும் புலவர் கூறுவது' ஓர் உன்னதத் தத்துவமாய் திகழ்கிறது. சங்க காலத்து மக்கள் வேளாண்மையின் சிறப்பை மேனிலை

உலகின் செல்வத்தைக் காட்டிலும் சிறந்ததாகக் கருதினர் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

District Branch Library
Triplicane, Madras-5

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையை குருங்கோழியூர் கிழார் " திருவில்லது கொலைவில்லறியார் நாஞ்சில் அல்லது படையும் அறியார் " என்று கூறுவார். போர்ப்படையைக் காட்டிலும் உண்மையான நிலைத்த பேறு வேளாண்படைக்கே என்று இது உணர்த்துகிறது. "ஏரோர்க்கு நிழன்ற கோலினை" என்பது அரசன் ஏர் பிடித்து உழும் மக்களை எவ்வாறு காத்தான் என்பதற்கு எடுத்துக்காட்டு.

"பகடுபுறந்தருநர் பாரமோம்பி
குடிபுறந்தருகுவை "

எனக் கிள்ளிவளவனை பாடியதும் இதையே.

போர்ப்புறத்தே நின்படை வெற்றி கண்டதற்கு காரணம் கலப்பையால் உழப்பட்ட நிலத்திலே விளைந்த நெல்தான் (புறம். 35) எனக் கூறுவது வேளாண்மையின் சிறப்பையும் உணவின் பெருக்கத்தையும் ஆகும். வீரர்கள் அரசனுக்கு வெற்றி கொடுக்க உழவு தான் காரணம் எனக் குறள் கூறும். (1034).

" ஒருபிடி படியுஞ்சீறிடம்
எழுகளிறு புரக்கு நாடு " (புறம் 40.)

எனக் குறிப்பது நிலத்தின் வளத்தைக் குறிக்கும்.

**நில வகைகள் :**

பொதுவாக நிலம் பூமி, செய், செறு, குண்டில், அறை என்று அழைக்கப்பட்டது. நீர் நிலம், விளைநிலம் என்றும், நன்செய் நிலம் என்றும் கல்வெட்டில் அழைக்கப் பட்டது.

தவிர ஓர் ஆண்டுக்கு எவ்வளவு போகங்கள் பயிர் செய்ய முடியுமோ அதன் அடிப்படையிலும் நிலங்கள் அழைக்கப்பட்டன. ஒரு போகம் என்பது ஒரு பூவிளையும் நிலம் என்றும், இரண்டு போகம் விளைவது இரு பூவிளையும் நிலம் என்றும் அழைக்கப்பட்டன. சித்திரை மாதத்தில் அறுவடை ஆகும் ஒரு வகை நெல்லுக்கு 'கார்' என்று பெயர். அது அறுவடை செய்யும்போது முதிர்ந்த பயிர்களை அறுத்து சில நாள் கழித்து மீண்டும் இரண்டாம் முறை அறுவடை செய்வர் என அறிகிறோம். அதை 'மறு' என்பர். ஆதலின் இது போன்ற பயிர்களை 'கார் மறு நிலம்' என்று அழைத்தனர். பெரும்பாலான கல்வெட்டுகளில் 'கார்மறு' நிலம் குறிக்கபடுகிறது.

நீர்ப் பாசனத்தின் அடிப்படையில் ஆறுபாச்சல் நிலம் என்றும் இறைத்தல் நிலம் என்றும், குறிப்புகள் உள்ளன. மன்னூர்கோயில் கல்வெட்டு இருபூ ஆறுபாச்சல் நிலன். என்று கூறுகிறது. "இறைத்தல் ஒருபூ நிலம்" என்று மற்றொரு கல்வெட்டு கூறுகிறது. ஒருவகைநெல் அதிக நாட்கள் கழித்து அறுவடைசெய்யப்பட்டது என்றும் மற்றது குறுகிய காலத்துக்குள் அறுவடை செய்யப்பட்டது என்றும் அறிகிறோம்.

இதை 13ம் நூற்றாண்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலக் கல்வெட்டு "பெரும்பூவும் குறுவையும் விளை நிலம்" (372/4) எனக் குறிக்கிறது. விளைச்சலுக்கு ஏற்ப நிலங்கள் பல தரங்களாகவும் பிரிக்கப்படடு முதல் தரம், இரண்டாந்தரம் என்று 12 க்கும் மேற்பட்ட தரங்கள் பிரிக்கப்பட்டிருந்தன. சில நிலங்கள் தரமில்லா நிலங்கள் (தரமிலி) என்றும் அழைக்கப்பட்டன. மேல் குறித்தவை அனைத்தும் நெல்விளையும் நிலங்களைக் குறிப்பவை ஆகும். மற்றவிளையும் பயிர்களை ஒட்டியும் நிலங்கள் பெயர்பெற்றன. கமுகுத்தோட்டம், மஞ்சள் விளையும் நிலம், சுற்றுத்

தெங்கும் கொடித்தோட்டநிலம், மாந்தோட்டநிலம், வரகு விளையும் நிலம், எள்ளுவிளையும் நிலம், கருணியும் வழுதலையும் விளையும் நிலம்'' என்று ஒரு கல்கவட்டு குறிக்கிறது.

**பயிர் வகைகள் :**

பயிர்கள் பொதுவாக வான்பயிர் என்றும் புன்பயிர் என்றும் பிரித்து அழைக்கப்பட்டன. "இவ்வூர் காரும், மறுவும், இருபூவும், கரும்பு, செங்கழுநீர், கொழுந்து, வாழை, மஞ்சள், இஞ்சி, தெங்கு, கமுகு, மா, பலா, பருத்தி, ஆமணக்கு உள்ளிட்ட வான்பயிர், புன்பயிர் உள்ளிட்டன'' என்று சுந்தரபாண்டியன் (12ம் நூற்றாண்டு), கல்வெட்டுக் கூறுகிறது. கரும்பு, செங்கழுநீர், தெங்கு கமுகு, பலா, வாழை, கொழுந்து, மஞ்சள், இஞ்சி உள்ளிட்ட பல பயிர்களும், எள்ளு வழுதிலை பாகல் உள்ளிட்ட புன்பயிர்களும் என்று மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது (753/8) பெரும்பாலும் மரங்கள் நின்ற இடங்களை தோட்டம் என்றும், கொல்லை என்றும், கல்வெட்டுகள் கூறுகின்றன. "மா, வாகை, வேம்பு, பனை, புங்கு, புளி இடுமரங்களும், படுமரங்களும்'' என்று சுந்தர பாண்டியன் கல்வெட்டுக் கூறுகிறது.

"வாகையும், வேம்பு குடி இருப்புப் பனை, புங்கு. புளி, ஆத்தி, ஆவிரை, கொமிஞ்சி...இடுமரங்களும் படுமரங்களும் (178/8). மூன்றும் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு ஒன்று நிலம் திருத்தியதை'' பிரும்மதேசத்து புறக்காலில் காடுவெட்டி பயிர் செய்ய வொண்ணாது கிடந்த நிலத்தை மடப்புறமாக காடுவெட்டி கட்டைபறித்து மேடும் தாழ்வும் ஒக்க இட்டு, ஆறும் கனகபாலன் அடைத்து, பயிர் நிலமாகத் திருத்தி'' என்று கூறுகிறது. மற்றொரு கல்வெட்டில், "காடுவெட்டி, ஏந்தலும் கண்டு கிணறும் குழித்து, நத்தமும் கண்டு, குடியும் ஏற்றி, கரம்பு திலைத்து அச்சுக்கட்டாக்கி பயிர் செய்யக் கடவராகவும்'' என்ற

கூறுகிறது. இதுபோல் பல கல்வெட்டுகள் காடுகளை அழித்துப் பயிர் செய்த வகையைக் கூறுகின்றன.

நிலம் திருத்துதல் :

பல இடங்களில் காடாகிக் கிடந்த நிலங்களை திருத்திப் பயிர் செய்தனர். அதை "நிலன் திருத்தி" என்று கல்வெட்டுக் கூறும். நிலத்தை திருத்துவதை வசக்கல் என்றும் மசக்கல் என்றும் அழைப்பது உண்டு. "காடும் வெட்டி நிலமும் வசக்கி பயிரேற்றி விளைஞ்ச நிலம்" என்று ஸ்ரீவல்லபபாண்டியனின் கல்வெட்டு (223/14) கூறுகிறது. இது போன்ற பல நிலங்கள் மசக்கல் என்றே அழைக்கப் படுவதும் உண்டு. புதிதாக நிலத்தில் பயிர் செய்வதை "பயிர் ஏற்றுதல்" என்று அழைத்தனர்.

ஆற்றங்கரைகளில் இருந்த நிலங்கள் சில சமயம் ஆற்றுப் பெருக்கால் பாதிக்கப்பட்டன. மணலிட்டு பயிர் செய்ய முடியாது கிடந்ததை பெரும் பொருளிட்டு சிலர் பயிர் நிலமாக்கியுள்ளனர். இவ்வாறு மணலடித்ததால் அந்நிலங்களின் எல்லைகள் மறைந்துபோக உத்தேசமாகக் கொண்டு திருத்தியுள்ளார்.

> " ஆற்றுப்படுகையில் ஆறுடைந்து மணலிட்டு
> மணல் மேடாய் பயிர்செய்ய ஒன்னாது
> கிடக்கிற உத்தேசப்படி நிலம் இருவேலி "

என ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

கடற்கரையில் இருந்த நிலங்கள் சில சமயங்களில் மணலடித்து பயிர் இட ஏதுவின்றி போதல் உண்டு. "கடலில் திரை ஏறி வாய் அருகு இல்லிபடும், இராவணன் மெல் வாயும், எழுந்து, மணல் குன்றாக நிலனும் பட்டின வர் குடி இருப்பான நிலனும், நீங்கலாகப் பனையும் இலுப் பையும் மரமாக்கலாம் நிவமாக்கி (990/5) என்று சீர்காழி

யில் உள்ள மூன்றும் குலோத்துங்களின் கல்வெட்டுக் கூறுவதிலிருந்து இதை அறியலாம்.

நிலத்தைத்திருத்தி அமைத்ததை ஒரு கல்வெட்டு அழகாகக் குறிக்கிறது, "நந்தவனம் அமைப்பேன் என்று காடும் கள்ளியும் வெட்டி, மேடும் பள்ளமும் ஒப்பித்து, நாலும்வேலியும் அமைத்து, நாறுபூத் திருபள்ளித்தாம மல்லிகையும் பெருஞ் சண்பகமும் சிறு சண்பகமும், இருவாச்சியும் உள்பட்டன மற்றும் எல்லாப் பூமரமும் வைத்த நிலமும் வேலியடைத்நு, நீர் இறைத்து கன்று வைத்து" என்று கூறுகிறது.

"காவேரி உடைந்து மடுவாய் நீர்நிலை ஆனநிலத்து சிபண்டாரத்து தொளாயிரங் காசு ஒடுக்கி" (985/5) எனத் திருவெண்காட்டில் ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

"வாகையும், வேம்பு குடிஇருப்புப்பணை, புங்கு, புளி, ஆத்தி, ஆவிரை, கொழிஞ்சி...... இடுமரங்களும் படுமரங்களும் (178/8) எனக் கல்வெட்டுக் கூறுகிறது.

'காடுவெட்டி கட்டைபறித்து களரும் சுடுகாடும் மேடும் பள்ளமும் பாடு பறிவரம்பிட்டு வெட்டித் திருத்தி பதினெட்டடிக் கோலால் பதினறுக்கு பதினறு கொண்டது ஒரு மாவாக, கதிரில் வழி கண்ணுறு சதுரம் கட்டி நன்செய் புன்செய் தோட்டங்களில் பயிர் செய்தும் பயிர் செய்வித்தும்,' (411/5) என ஒரு கல்வெட்டுக் கூறும்.

மற்றொரு கல்வெட்டு "நிலம் அநேக காலம் விழலும், காடுகோளுமாய் பயிர் செய்யாது கூறுபாடும் பரப்பும் தரமும் இறை ஏற்றமின்றி சபை பொதுவாய் கிடந்தமையில்" என்று கூறுகிறது.

இதுபோன்று காடுகளை அழித்தல் சங்ககாலத்தில் கரிகால் பெருவளத்தானல் மேற்கொள்ளப்பட்டது

என்று "காடுகொன்று நாடாக்கி" என்னும் அடிகளால் அறியலாம். பல்லவ மன்னர்கள் பல காடுகளை அழித்து பயிர்செய்ய வகைசெய்தனர். அதனால் அவர்களுக்கு காடு வெட்டிகள் என்றே பெயர் இருந்தது. அன்று அவர்கள் மேற்கொண்ட பணியினால்தான் தமிழகத்தின் வடபகுதியில் பெரும்பகுதி உழவுக்கு ஏற்றதாகச் செய்யப்பட்டது.

நிலத்தைப் பண்படுத்தியவன் சுவர்க்கம் ஏகுவான் என்று சிறுபஞ்சமூலம்

"குளம்தொட்டு காவுபதித்து வழிசீத்து
உளம் தொட்டு உழுவயல் ஆக்கி
வளம் தொட்டு பாகுபடும் கிணற்றோடு என்று
இனப்பண்படுத்தான் ஏகுசுவர்க்கம் இனிது (64)

எனக் குறிக்கிறது.

## நீர்ப்பாசனம் :

நிலங்களுக்கு ஆறுகளிலிருந்தும், ஏரி குளங்களிலிருந்தும், கிணறுகளிலிருந்தும் நீர் பாய்ச்சப்பட்டது. வாய்க்கால்களின் மூலமாகவும் ஏற்றத்தின் மூலமாகவும் நீர் நிலங்களுக்குப் பாய்ச்சப்பட்டது. "இந்நிலத்துக்கு பழம் படி பாயும் நீர் பாயவும், வாரும் நீர் வாரவும் இறைக்கும் நீர் இறைக்கவும் பெறுவதாகவும்"; என்று ஒரு கல்வெட்டுக் குறிப்பதிலிருந்து, பாய்த்தல், வாருதல், இறைத்தல் என மூன்று பொதுப் பிரிவுகளாகக் கொண்டிருந்தனர் என அறியலாம்.

ஏற்றம் குற்றேத்தம் என்றும் நெட்டேத்தம் என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டது. குற்றேத்தம், ஏற்றத்தின்மேல் ஒரு ஆள் நின்றுகொண்டு முன்னும் பின்னும் ஓடி இறைப்பதாகும். நெட்டேத்தம் என்பது மாடு பூட்டி இறைக்கும் ஏற்றம் போலும். இவை தவிர கூடை

களைக்கட்டி வாய்க்கால்களிலிருந்து நீர் இறைப்பதும் உண்டு.

வாய்க்கால்களை நேராக வைத்துக்கொள்வது அரச னின் பொறுப்பு. இதற்காக வரி வசூலிக்கப்பட்டது இவ் வரிகளுக்கு 'புழுதிபாடு' என்றும் 'கொள்கலன்' என்றும் பெயர். இவ்வரிகளைப் பெறும் உரிமையை ஊர்ச் சபைக்கோ, அல்லது சில தனிப்பட்டவர்களுக்கோ அளித்து, அவர்கள் அவற்றைச் சீராக வைத்திருக்க அரசன் பணித்தான்.

ஏரிகளைக் கவனித்து வருவதற்கு ஊர்களில் ஏரி வாரி யம் அமைக்கப்பட்டது. இவ்வாரிய மக்கள் இவ்வேரி களைச் செவ்வனே வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப் பை ஏற்றனர்.

கிணறு :

நிலங்களுக்கு நீர் பாய்ச்ச பல கிணறுகள் வெட்டப் பட்டன. இவ்வாறு கிணறு வெட்டுவதை கிணறு தொட் டல் அல்லது 'கிணறு குழித்தல்' என்று குறிப்பர். தனி யார் கிணறுதோண்ட விரும்பினால் ஊர்ச் சபையிடம் அனு மதி பெறவேண்டும் என்றும், ஊராய் இருந்தால் அரசனி டமிருந்து அனுமதி பெறவேண்டும். என்றும் விதிமுறை இருந்ததாக அறிகிறோம். "துரவு கிணறு இழிக்கப் பெறு வதாகவும்" என்று கூறுவதிலிருந்து அரச ஆணை பெற் றுத்தான் கிணறுகள் தோண்டப்பட வேண்டும் என்று ஊகிக்கலாம். (தண்டந்தோட்டம் செப்பேடுகள்). மூன் றாம் நந்திவர்மனுடைய வேலூர் பாளையம் செப்பேடுகளும் "துரவு கிணறு இழிக்கப்பெறுவதாகவும் என்று கூறுவதி லிருந்து கிணறு தோண்டும் உரிமையும் அரசனால் அளிக் கப்பட்டது என்பது தெளிவு. பாண்டியன் பராந்தக வீர நாராயணன் கொடுத்த ஒரு வயலில் இரண்டு கிணறுகள்

இருந்தன. அக்கிணற்றால் விளைந்த நிலத்தை அவன் அளித்தான் என்று தளவாய்புரம் செப்பேடுகள் கூறுகின்றன. "பருத்தி வயக்கலும், இவ்வயல்களில் கிணறு இரண்டும் அக் கிணற்றால் விளை நிலனும்"—என்றும், மேலும் கொடுத்த வயல்களில் கிணறுகள் மூன்று இருந்தன என்றும் அக்கிணற்றில் எப்பொழுதும் நீர் இருந்ததென்றும், அக்கிணற்றால் விளையும் வயலனைத்தும் இறையிலியாக அளிக்கப்பட்டன என்றும் அச்செப்பேடு கூறுகிறது.

## வாய்க்கால்கள்

ஏரியிலிருந்து வாய்க்கால் வெட்டிக்கொள்ளவும் அரசன் அனுமதி தேவை. அதேபோன்று ஆற்றிலிருந்து வாய்க்கால் தோண்டவும், வெள்ளம் வரும்போது அந்நீரைபெற வெள்ளக்கால் தோண்டவும் அரச அனுமதி தேவை. "செய்யாற்றாலும், வெஃகாவினாலும் திரையன் ஏரியாலும் நீர் ஈந்த வழி ஆற்றுக்காலும் வெள்ளக்காலும் தோண்டிக்கொண்டு உண்ணப் பெறுவராகவும்" என்று காசாக்குடி செப்பேடு கூறுகிறது. அதுமட்டுமல்ல. இவற்றின் இடையிலே நீர் இறைத்தால் அரசனால் தண்டிக்கப் படுவர் என்பதை அசெப்பேடு "இக்கால்களில் கூடை இறைத்தும், குறங்கறுத்தும் குற்றேத்தும் பண்ணியும் கொண்டு உண்டார் கோக்கொள்ளும் தண்டப் படுவதாகவும்" என்று குறிக்கிறது. இதிலிருந்து இவ் வாய்க்கால்கள் எதற்காகத் தோண்டப்பட்டனவோ அதற்கு இடையூறு ஏற்படாமல் காத்தல் மன்னனின் கடன் என்றும் அறிகிறோம். இதே கருத்தை பல்லவ மன்னன் நந்தியின் புல்லூர் செப்பேடு கூறும். "இவ் ஊர் ஏரிகளுக்கு ஆற்றுக்கால் நீரீந்த வழி தோண்டிக்கொண்டு உண்ணப் பெறுவாராகவும். இக்கால் கூடை எறிந்துக் குற்றேத்தம் பண்ணியும் குறங்கறுத்தும் கொள்ளப் பெறாதாரா

கவும். கொண்டார் கோவினுல் தண்டிக்கப்படுவாராக வும்" என்பது அச்செப்பேட்டின் வாசகம்.

சில ஊர்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டபோது அங்கு பல வாய்க்கால்கள் புதிதாக வெட்டப்பட்டன. இவை முக்கிய வாய்க்கால்களாக அமைக்கப்பட்டபோது இவைகளுக்குச் சிறப்பாகத் திட்டமிட்டு பெயரிட்டனர். உத்தரமேரூரில் நந்திவர்மன் காலத்தில் (8-ஆம் நூற்றுண்டு) புதியதாக வாய்க்கால்கள் அமைக்கப்பட்டன. இவை வைரமேக தடாகத்திலிருந்து ஊர் நிலங்களுக்கு நீர்பாய அமைக்கப்பட்டவை. இவற்றிற்கு தெய்வப் பெயர்களாக ஸ்ரீதேவி வாய்க்கால், சரஸ்வதி வாய்க்கால், பார்வதி வாய்க்கால், சுப்பிரமணிய வாய்க்கால், கணபதி வாய்க்கால், என்று பெயர் சூட்டப் பெற்றிருந்தன. சேரமாதேவியில் திருமாலின் பன்னிரு பெயர்களான கேசவ, நாராயணு, மாதவ, கோவிந்த, விஷ்ணு......என்பவற்றில் புருஷோத்தம வாய்க்கால், மாதவ வாய்க்கால், வாசுதேவ வாய்க்கால் என்பவை குறிக்கப்படுகின்றன. இதிலிருந்து பன்னிரு பெயர்களையும் வாய்க்காலுக்கு இட்டிருக்கின்றனர் என்று ஊகிக்கலாம்.

தெய்வங்களின் பெயர் மட்டுமின்றி ஊர் அமைத்தவர்களின் பெயராலும் வாய்க்கால்கள் அழைக்கப்பட்டன. செம்பியன் மாதேவி என்னும் ஊர் கண்டராதித்த சோழரின் தேவியால் ஏற்படுத்தப்பட்டது. அவ்வூரில் அமைந்த வாய்க்கால்கள் அத்தேவியின் பெயர்களாலும், அவள் கணவன் பெயராலும் அழைக்கப்பட்டன. செம்பியன் மாதேவி வாய்க்கால், பராந்தகன் மாதேவி வாய்க்கால், மாதேவடிகள் வாய்க்கால், முதலிய பெயர்கள் அத்தேவியாரின் பெபரால் வந்தவை. இவை தவிர அவ்வூரில் கண்டராதித்த வாய்க்கால் என்பதும் பழூவூர் நக்கன்

என்னும் வாய்க்கால் ஒன்றும் இருந்தன என அறிகிறோம். இதிலிருந்து ஓர் ஊரைப் புதிதாக அமைக்கும்போது வேளாண்மைக்கு வேண்டியவற்றை திட்டமிட்டு அமைத்து அவற்றிற்கு பெயர்கள் இட்டனர் என்று அறியலாம்.

இதைத் தவிர பல வாய்க்கால்கள் அரசர்களின் பெயர் தாங்கி நிற்பதைக்கண்டால் அவர்கள், பாசனம் சிறக்க எவ்வளவு பணி செய்தனர் என்பது புரியும். சுந்தர சோழன் வாய்க்கால், கரிகாலசோழன் வாய்க்கால், இராஜ கேசரி வாய்க்கால், இராஜராஜன் வாய்க்கால், இராஜாதி ராஜ வாய்க்கால், சுங்கந்தவிர்த்த சோழன் வாய்க்கால் எனப் பல அரசர்களின் பெயர்களைக் கொண்ட வாய்க்கால்கள் கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றன.

ஆற்றிலிருந்து நேராக நிலங்களுக்குப் பாயும் வாய்க்கால்கள் இருந்தன. இவை ஆற்றுக்கால் என்று அழைக்கப்பட்டன. உய்யக்கொண்டான் திருமலையில் 'வயிர மேக வாய்க்கால்' குறிக்கப்பட்டுள்ளது. காவிரியிலிருந்து பிரியும் உய்யக்கொண்டான் வாய்க்கால் வயிரமேக வாய்க்காலாக இருக்கும்.

ஆற்றிலிருந்து குளங்களுக்கும் ஏரிகளுக்கும் நீர்ப் பாய்ச்சும் வாய்க்கால்களை குறங்கு, கால், கிளைக்கால், ஓடை என்று அழைத்தனர். ஆறு பெருக்கிடும்போது வாய்க்கால்வழி நிலத்திற்கு நீர் பாய்ச்சுவதும் நாம் அறிந்ததே. இவ் வாய்க்கால்களுக்கு வெள்ளக்கால் என்று பெயர். ஊற்றிலிருந்து கல்வெட்டி தற்காலப் பயிர் செய்வதும் உண்டு. அதை ஊற்றுக்கால் என்பர். ஆறுகள் கோடையில் வறண்டபோது இது பயன் அளித்தது.

பல்லவ மன்னன் பரமேச்சுரவர்மன் காலத்தில் கூரம் என்னும் கிராமத்தில் பரமேச்சுர தடாகம் ஏரி தோண்டப்

பட்டது. இதற்கு பாலாற்றில் இருந்து நீர் கொண்டுவர பெரும்பிடுகு கால் என்னும் கால்வாய் தோண்டப்பட்டது. இவ்வூர் பரமேச்சுர தடாகத்துக்கு பாலாற்று நின்றும் தோண்டின பெரும்பிடுகு கால் என்று கூரம் செப்பேடு (வரி 78, 79) கூறுகிறது. இப்பொழுது தென்னேரி என்று அழைக்கப்படும் ஏரி முன்னர் திரையன் ஏரி என்று அழைக்கப்பட்டது. இத்திரையன் ஏரிக்கு செய்யாற்றிலிருந்தும், வெஃகாவிலிருந்தும் நீர் கொண்டு வரப்பட்டது. இந்நீர் கொண்டுவரும் கால்களிலேயே வெள்ளக்காலும், ஆற்றுக்காலும் தோண்டிக் கொள்ளலாம் என நந்திவர்மன் ஆணையிட்டான். இவ்வாறு ஆறுகளிலிருந்து ஏரிகளுக்கு நீர் கொண்டுவரும் கால்களையும் ஆற்றுக்கால் என்று அழைத்தனர் என்று புல்லூர் செப்பேடுகளால் அறிகிறோம். 'இவ்வூர் ஏரிகளுக்கு ஆற்றுக்கால் நீரிந்த வழி தோண்டிக்கொண்டு உண்ணப் பெறுவராகவும், என்று செப்பேடு கூறுகிறது. இவ்வாறு கால்கள் தோண்டுவது அரசின் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும், என்பது இவர்களுக்கு ஆற்றுள் நின்றும், ஏரிகள் நின்றும் நீரிந்த வழி தோண்டிக்கொண்டு போவாராகவும்" (புல்லூர் 122, 123), என்பதால் தெளிவர்கிறது.

## ஏரிகள்

நீர்ப் பாசனத்துக்கு இன்றியமையாததான ஏரிகள் ஏராளமாக மன்னர்களாலும் பிறராலும் தோண்டப்பட்டன. பல்லவ அரசி சாருதேவியின் செப்பேட்டில் ராஜ தடாகம் குறிக்கப்படுகிறது. திரையன் ஏரி என்பது, சங்க காலத்துப் புகழ்பெற்ற திரையனால் தோற்றுவிக்கப் பட்டது போலும். பல்லவமன்னன் மகேந்திரவர்மன் சோளிங்கருக்கு அருகில் மகேந்திர தடாகம் என்னும் பெரும் ஏரியைத் தோற்றுவித்தான். அதே போன்று மாமண்டூரில் உள்ள சித்ரமேக தடாகம் என்பதும் இம்

மன்னனால் தோண்டப்பட்டிருக்கவேண்டும் என்று அறிஞர் கருதுவர். கூரம் கிராமத்தில் பரமேச்சுர தடாகம் என்னும் ஏரி பல்லவ மன்னன் பரமேச்சுரன் காலத்தில் தோண்டப்பட்டது.

பல்லவ ஏரிகளில் மிகவும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது உத்தரமேரூரில் உள்ள வயிரமேக தடாகம் என்னும் பேரேரியாகும். இது இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் தோன்றியிருக்கவேண்டும். இதே போல் கங்கைகொண்ட சோழபுரத்தில் முதல் இராஜேந்திர சோழனால், தான் கங்கைவரை பெற்ற வெற்றியின் நினைவாக கங்கை கொண்ட சோழப் பேரேரி அமைக்கப்பட்டது. இதற்கு சோழ கங்கம் என்று பெயர். பராந்தக சோழன் காலத்தில் அவன் பெயரால் ஏற்படுத்தப்பட்டதே இப்போது வீராணம என அழைக்கப்பெறும் வீரநாராயணன் ஏரி என்பதாகும். அதே அரசன் காலத்தில் 'சோழவாரிதி' என்னும் பேரேரி ஒன்று சோளிங்கருக்கு அருகில் ஏற்பட்டது. இங்ஙனமே மதுராந்தகப் பேரேரி என்று மதுராந்தகத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புள்ள ஏரியும் பேரரசின் புகழ்பாடிக் கொண்டுள்ளது.

ஏரி குழித்தல் :

இவ்வாறு தோண்டப்பட்ட ஏரிகள் அடிக்கடி மண் மேடு இட்டு தூர்ந்துவிடும். ஆகையால் இவற்றை அடிக்கடி ஆழம் செய்யவும், ஏரிக் கரையை அடிக்கடி உயர்த்தவும், பலர் பொருள் வைத்து உள்ளனர். இது ஒரு பெரும் அறமாகக் கருதப்பட்டது. பாண்டிய மன்னன் சடையன் மாறன் என்பவன் காலத்தில் இருப்பைக்குடி என்னுமிடத்தில் இருப்பைக்குடி கிழவன் என்பவன் குளத்தின் கரை பழைமையாக இருந்ததை எடுத்துவிட்டு அடியில் கல் இட்டுப் புதியதாக கரை இட்டு மடைகள் வைத்து அதற்கு இருப்பைக்குடி

கிழவன் ஏரி என்று பெயர் இட்டான் என்று அறிகிறோம். இவ்வாண்டு பழங்கரை இழித்து அதனடியில் கல்லு நாட்டி, மன்னு மடைக்கு மேற்கு கருங்குளத்துக்கு கிழக்கு நிலைத்திட்டு கரை செய்து மடை வைப்பித்து இருப்பைக்குடி கிழவன் என்று தன பெயரிட்டு ஏறுவித்தது" (43/14) என்று கல்வெட்டுக் கூறுகிறது. மதுரை மாவட்டத்து இராமனாதபுரத்தில் பாண்டியன் மாறஞ் சடையன் காலத்தில் நக்கன் புள்ளன் என்பவன் தன் பெயரால் ஓர் ஏரி அமைத்து, கற்கோதி குமிழி செய் வித்தான். ஆனால் பணி பாதியிலேயே நின்றுவிட்டது. நக்கன் புள்ளன் இடையில் இறந்திருக்கக் கூடும். அவன் மகன் புள்ளன் நக்கன் என்பவன் குறைப் பணியை முற்றுவித்தான். இங்கு பணி செய்தவன் தச்சன் வடுகன் கூற்றன் என்பவன். குறைப் பணியை முடித்தான் அத்தச்சன் மகன். ஆதலின் அவர்களுக்கு அக் குளத்தின் கீழ் தலைநீர் பாயும் நிலம் ஒரொரு வயலை, புள்ளன் நக்கன் அளித்தான் (26/14).

இதுபோன்று ஏரிக்குச் செய்த பல பணிகளை உத்தர மேரூர் கல்வெட்டுகள் கூறுகின்றன. பல்லவ மன்னன் தந்திவர்மன் காலத்தில் தானவேந்தன் என்பவன் ஊர் சபையாரிடம் 20 கழஞ்சு பொன் கொடுத்தான். அவர் கள் அவ்வூரில் இருந்த ஒவ்வொரு சேரியைச் சேர்ந்த நிலத்திலிருந்தும் வந்த எருவிலையைக் கொண்டு மாதந் தோறும் குழி குத்துவதாக ஒப்புக் கொண்டனர். "வயிர மேக தடாகத்துக்கு உட்குழி குத்துவதாக சுட்டிக் குடுத்தோம்" (357/6). இவ்வேரியில் ஓடம் விடுவ தற்காக தானி புத்தடிகள் என்பவனின் தாய் 100 கழஞ்சு பொன் குடுத்தாள். தானி புத்தடிகள் என்ப வன் இரண்டாவது ஓடம் விடவும், அதற்கு வேண்டிய வழி செய்யவும் 100 கழஞ்சு பொன் கொடுத்தான். இப் பொன் கொண்டு ஆள் கூலி உள்ளிட்டு நாள் ஒன்றுக்கு

ஒரு குழியாக ஓர் ஆண்டுக்கு 360 குழி மண் வெட்டிக் எடுத்து கரை ஏற கட்டுவதாக ஊர்ச் சபை ஏற்றுக் கொண்டது (353 / 6). இதே ஏரியை மண் வெட்டி கரை அட்ட திருக்கழுக்குன்றன் என்பவன் கம்பவர்மன் காலத்தில் 100 கழஞ்சு பொன்னும் 203 காடி நெல்லும் கொடுத்தான். அதிலிருந்து வரும் வட்டியிலிருந்து குழி குத்தி கரை கட்டுவதாக சபை ஒப்புக் கொண்டது. வைகாசி மாதம் முதல் இரண்டு திங்கள் ஆண்டாண்டு தோறும் செய்வதாக சபை ஏற்றது. இதை இவ்வேரிக்கு தர்மம் என்று கல்வெட்டுக் கூறுகிறது. இதே மன்னன் காலத்தில் ஒருவர் ஏரி குழிகுத்தி கரைக்கு மண் அட்ட கோயிலில் பொன் குடுத்தார். அதனால் சபை மகிழ்ந்து அவனுக்குப் பல வரி விலக்குகள் அளித்தது (369/6).

இதே ஊரில் காரிகைக் குட்டம் என்ற ஏரிக்கு சுற்றிலும் ஒரு கோல் அகலத்துக்குக் கரை இருந்தது. அதைச் சுற்றிலும் அரைக் கோல்அகலத்துக்கு வெளிப் பூமியாக அமைக்க இருவர் பொன் கொடுத்து நிலம் வாங்கி வைத்தனர். அக்கரையில் மண் எடுப்பாரையும் முள் குத்துவாரையும், நீர் விட்டாரையும் தண்டிக்கச் சபை ஒப்புக் கொண்டது (370/6).

இராஜராஜசோழன் காலத்தில் அரிகேசரி மங்கலத்தில் ஏரி உடைந்து குளமாய், காடாய் கிடந்தது. இவ்வேரிப் பாசனம் உள்ளிட்ட நாடுகளை வகை செய்கின்ற அரச அதிகாரி அரையன் அம்பலக்கூத்தன் என்பவன் "குளத்தை குழிச்சு பெருங்கரை கட்டி வைத்து காடும் வெட்டுவித்து மடைகளும் எடுப்பித்து பரமேசுரப்பேரேரி என்று பெயரிட்டான்" என்று (724/5) அறிகிறோம்.

விண்ணமங்கலம் என்னும் ஊரில் ஏரியில் மீனை விற்று அதிலிருந்து வந்த பொன் கொண்டு ஏரியை ஆண்டுதோறும் ஆழம் செய்ய வகை செய்தனர் (459/6)

ஏரி சமைத்து ஆற்றிலிருந்து, நீர் கொணர்ந்து பயிர் செய்ய ஒரு குடும்பமே வகை செய்தது. நாற்பத்தெண்ணுயிரப் பிள்ளையும் அவர் தமக்கை மங்கையர்க்கரசியும் தங்கள் பொருள் இட்டு நிலம் திருத்தினார்கள். இதற்கு அண்ணாநாட்டு எல்லையில் திருந்திகை என்ற ஆற்றை அடைத்து ஏரிவெட்டி தூம்பு இட்டு நிலம் திருத்தினார்கள். மங்கையர்க்கரசி இறந்து போனாள். பிள்ளையும் வயதால் தளர்ந்து போனார். ஏரியைச் சரிவர பராமரிக்க முடியவில்லை. ஏரி பல இடங்களில் உடைந்தது. ஆறும் உடைந்தது. கழனி யெல்லாம் காடாய் நெடுநாள் பாழாகிக் கிடந்தன. பிள்ளையின் மருமகன் தொண்டைமா நாச்சியார் என்பவனை ஏரிமடைகள் அடைப்பித்து கலிங்கும் இடக் கல்வெட்டிக் கொடுத்தார்கள். இவ்வாறு இப்பணி செய்ய முடியாமல் போனதால் நிலம் பாழய் கிடந்தது. அதனால் நாற்பத்தெண்ணுயிரப் பிள்ளையின் மக்கள் சபையாரிடம் சென்று "எங்களால் ஆறு அடைத்து ஏரியில் மடைகளும் அடைத்து கலிங்கும் கட்ட முடியாது. நீங்கள் உங்கள் பொருள் இட்டு இப் பணி செய்யுங்கள். நாங்கள் முன்பு செய்ததுக்கு கொல்லை காடு கழனிகளில் மூன்றில் ஒரு பங்கு எங்களுக்கு விட்டு இருகூறு நீங்கள் அநுபோகியுங்கள்" என்று கூறினர். அதனால் ஊரில் எட்டுப் பேர்கள் சேர்ந்து பொருள் இட்டு இப் பணி செய்ய ஒப்புக் கொண்டனர். அவர்களுக்குப் பிள்ளையின் மக்கள் எழுத்திட்டு கொடுத்து விட்டனர். அப்பொருள் கொடுத்த எண்மரில் அவ்வூர் தேவரடியாள் திருவம்பலம் பிரியாத பிள்ளை என்பவளும் ஒருத்தி (83/8).

ஏரியில் ஓடமிடுவதற்காகப் பலர் பொருள் கொடுத்திருக்கிறார்கள் என்று கண்டோம். ஏரியில் குழி குத்தி மண் எடுத்து கரையில் அட்டுவது என்று சிலவற்றில் குறிப்பும் கண்டோம். திருச்சி மாவட்டம் நங்கவரத்தில் உள்ள

ஒரு கல்வெட்டு இதை தெளிவாகக் குறிக்கிறது. ஓடம் மரத்தால் செய்யப்பட்டது. இதைக் குளத்தில்விட்டு நாள் தோறும் ஒரு குறிப்பிட்ட அளவு மண் தோண்ட வேண்டும். அதை ஓடத்தால் கரைக்குக் கொணர்ந்து கரையில் அட்டவேண்டும். இதற்காகும் செலுவுக் காகவே அப்பொருள்கள் கொடுக்கப்பட்டன.

நங்கவரத்தால் அறிஞ்சிகை சதுர்வேதி மங்கலத் தார் தங்களூர் குளத்தில் ஒரு ஓடம் 'இசங்க' நிலம் விற்றுக் கொடுத்தார்கள். இந்நிலத்தை வாங்கி இப் பணிக்காக வைத்தவர் கொடும்பாளூர் கற்கடை திரை லோக்யனுரான கோதண்ட ராம மாராயன் என்பவர். குளத்தில் நாள் தோறும் ஆறு ஆள் மண் தோண்டி கரைக்கு அட்ட வேண்டும். இவர்கள் ஒரு நடைக்கு 140 கூடை மண் கொண்டுவர வேண்டும். இதுபோல் ஒரு நாளைக்கு நான்கு முறை கொண்டு வரவேண்டும். இந்த ஆட்களுக்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு பதக்கு நெல் கூலி புடவை உட்பட கூலி (வேட்டி உட்பட) அறுவருக்கு நாள் ஒரு கலமாக வருடத்திற்கு 365 கலம் நெல். இவர்களை கண்காணிப்பானுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு குறுணி நாலு நாழி (அதாவது 12 படி) நெல் ஆண்டுக்கு 45 கலம். இந்த ஓடத்தில் அழிவு ஏற்பட்டால் திருத்தும் தச்ச னுக்கு ஒரு ஆண்டுக்கு 2 கலம் 1 தூணி, 1 பதக்கு. மரம் இடும் வலையனுக்கு (ஓடக்காரன்) 2 கலன். இவ்வாறு கூலி கொடுக்க வேண்டும். இந்நிலத்தை சபையே உழுது, நெல் கொடுக்கவேண்டும். கொடுக்கத் தவறினல் அரசே தண்டிக்கும்.

இவ்வாறு அரசர், மாதேவியர், அதிகாரிகள், பெண்டு கள் உள்ள சமூதாயத்தைச் சேர்ந்த பலரும் பொருள் கொடுத்து ஏரிகளை நல்ல நிலையில் வைத்திருக்க பெரிதும் முயன்றிருக்கின்றனர்.

# 10

# உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

வெள்ளாளர் :

உழவர்கள் மண்மகள் புதல்வர் என்றும், வளமையர் என்றும், களமர், சதுர்த்தர், உழவர் மேழியர், வேளாளர், ஏரின்வாழ்நர், காராளர், புனைஞர், பின்னவர் என்றும் நிகண்டு கூறுகிறது. வேளாளர் என்பவர் வைசியரும் சூத்திரரும் என்று பிங்களந்தை கூறுகிறது. வேளாளர்களுக்கு உழவு, பசுகாவல், வாணிபம், குயிலுவம், காருக வினை (நெய்தல் தொழில்) இருபிறப்பாளர்க்கு ஏவல் செய்தல் என அறுவகைத் தொழில்கள் எனத் திவாகரம் குறிக்கிறது. இவற்றில் எத்தொழிலை வேண்டுமானால் இவர்கள் பின்பற்றலாம் என்பது இதன் கருத்துப் போலும். ஆதலின் மேல் குறிப்பிட்ட அறுவகைத் தொழில்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்லும் உரிமை இவர்களுக்கு இருந்தது என அறிகிறோம். இவர்களுக்கு கடையர், தொழுவர் என்னும் பெயர்களும் இருந்தன. இவர்களை இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர்' எனச் சிலம்பு கூறும் (10-149, 150)

வெள்ளாளர் அல்லது வேளாளர் என்னும் பெயர் வெள்ளத்தை ஆள்பவர் என்னும் பொருளிலிருந்து வந்திருக்க வேண்டும் என்று சிலர் கருதுவர். ஆற்றில் வெள்ளப் பெருக்கு எடுத்து வரும்போது வெள்ளநீரை நிலத்துக்குப் பாய்ச்சி பயிர் செய்ததால் இப்பெயர் வந்தது என்பது அவர் கருத்து. ஆனால் 'வேள்' என்னும் சொல்லில் இருந்து இப்பெயர் வந்திருக்கக்கூடும் என்பது இந்நூலாசிரியர் கருத்து. 'வேள்' எனில் 'மண்' என்பது பொருள் (யாழ்பனத்து அகராதி தமிழ் லெக்சிகன்) மண்ணைக் கொண்டு தொழில் புரியும் குயவனுக்கு 'வேட்கோ' எனப் பெயர், பல கல்வெட்டுகளில் காணப்படுவது 'வேள்' என்பது மண்ணைக் குறிக்கும் என உறுதி செய்கிறது. மண்ணை ஆள்பவர், என்னும் பொருளும் வேள் + ஆளர் அல்லது வேளாளர் என வந்திருக்ககூடும். வேள் = மண் என்னும் சொல்லிலிருந்தும் வேளிர் என்னும் பெயர் வந்திருக்கக் கூடும். வேளாளர், வேளார், வேளிர் என்று மூன்று திறத்தாரும் ஒரு குடியினராகவே கருதப்படுதல் உண்டு என்றும் முன்னரே கூறினோம். வேளிரும் வேளாளரும் முதலில் ஒரே இனத்தவராய் இருந்திருக்க கூடும் என்று கொண்டால் தவறில்லை.

கல்வெட்டுகளில் வேளாளர்கள் பல பெயரில் குறிக்கப் படுகின்றனர் வேளிர், வேளார், செட்டி, நாயக்கர், முதலி, ரெட்டி, காராளர், பெருக்காளர், நாட்டார், கோனார், பிள்ளை என்று பெயர்கள் காணப்படுகின்றன. 12-ம் நூற்றூண்டில் 'இவ்வூர் வெள்ளாளன் நெய்த வாயில் உடையான் வேளான் தேவர் கண்டன்' எனக் கல்வெட்டு கூறுவது வெள்ளாளர், வேளான் என்று அழைக்கப்பட்டதன் எடுத்துக்காட்டு (23/8). விண்ணமாலை வெள்ளாளரில் சின்னம நாயக்கன் மகன் சூரப்ப நாயக்கன் என்று 13-ம் நூற்றூண்டில் கூறப்பட்டுள்ளது (468/8). 'வெள்ளாளரில் வடுகமிரட்டி மகன் வடுகமிரட்டி என்று மற்றொரு

கல்வெட்டு கூறுகிறது (468/8). ஆதித்த சோழர் காலத்தில் (கி. பி. 9-ம் நூற்றூண்டு) ஈசானமங்கலத்து வெள்ளாளன் கங்கப் பெருமானடி அறிஞ்சகுடி வெள்ளாளன் புழலயன் என்பவன் குறிக்கப்பெறுகிறுன். இவன் புழலயன் செட்டி என்று அழைக்கப்படுகிறுன். இவன் தஞ்சாவூர் மடிகை மாணிக்க வாணியன் கருநாடக புழலய செட்டி என்று அழைக்கப்பெறுகிறுன். இதிலிருந்து வெள்ளாளன் ஆக இருந்தபோதிலும் செட்டி என்று அழைக்கப்படுகிறுன் என்பது தெளிவு.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடியதாகக் கூறப்படும் ஏர் எழுபது என்னும் நூல் இவர்களது புகழைச் சிறப்பாகக் கூறுகிறது. வையம் புரக்கும் பெருக்காளர் என்றும் ‘அழுங்குழவிக்கு அன்புடைய தாயே போல், அனைத்துயிர்க்கும் எழுங்கருணைப் பெருக்காளர்’ என்றும், ‘தாயனைய காராளர்’ என்றும் புகழ்கிறது. இவர்களது குலத்திலும் உயர்ந்த குலம் ஏதுமில்லை என இந்நூல் கூறுகிறது. இவர்கள் கங்கை மரபில் தோன்றியவர்கள் என ஏரெழுபதும் குறிக்கிறது. இதை சேக்கிழார் பிள்ளைத் தமிழும் குறிக்கிறது. வேதம் ஓதலும், ஈதலும், உழவும் நிரை ஓம்பலும், வாணிகமும், வழிபாடும் ஆகிய அறுவகை இலக்கணத்தையுடைய வேளான் பக்கமும்’ என்று உரையாசிரியர் கூறுவர். ‘வேளாண் மாநதர்க்கு உழுதூண் அல்லது இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி’ என தொல்காப்பியம் கூறும்.

பெரிய கழனியையுடையவர்களை கிழவர் என்பார்கள். காவிரியனையுந் தாழ் நீர் படப்பை நெல்விளை அம்பர் கிழவோன் (புறம். 385).

வேளாளர் உயர்ந்த அதிகாரிகளாகவும், உழவுத் தொழில் நடத்துபவர்களாகவும், பிறதொழில் வல்லு

நர்களாகவும், பிறருக்கு உழைப்பவர்களாகவும், பணி புரிந்தனர் என்று கல்வெட்டுகளால் அறிகிறோம். இவர்கள் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டவர்களுள்ளும் பல குடிகள் இருந்தன. உதாரணமாக ஆந்தை, காடை, மணியன், வில்லியன் முதலிய குடிகள் கொங்கு நாட்டில் 11, 1.-ம் நூற்றாண்டிலேயே இருந்தது என்று வள்ளியெறிச்சல் கல்வெட்டுகளால் அறிகிறோம். அவர்கள் உயர் குடிகளாக வாழ்ந்திருக்கிறார்கள். தமிழவேள், மாராயர், மூவேந்த வேளான் என்ற பட்டங்கள் அவர்களுக்கு காணப்படுகின்றன.

சேக்கிழார் நாற்பத்தெண்ணாயிரவர் என்ற குடியைச் சேர்ந்தவர். இக்குடியினர் உழவு தொழிலில் சிறந்தவர்கள். ஏகாம்பரநாதர் உமையன்னைக்கு எட்டு உழக்கும், ஈராழி நெல்லும் கொடுக்க, அதை உமையின் கையிலிருந்து பெற்று உழவு தொழில் பெருக்கினர் என்று சேக்கிழார் புராணம் கூறுகிறது. காராளர் வயலில் உழுது தங்கள் கையால் நட்டு விளைந்த கதிர்கள் திருந்தினால்தான் பாராளும் அரசர்களின் பொன்முடி திருந்தும். கலப்பை பூண்ட ஏரால் எண்திசை வளர்க்கும் புகழ் வேளாளர் என்றும், ஏரடிக்கும் சிறு கோலால் தரணி ஆள்வதால் தான் முடியரசர் செங்கோல் செலுத்துவர் என்றும் சேக்கிழார் புராணம் கூறுகிறது.

### அதிகாரிகள் :

வேளாளர்களில் பலர் உயர்தர அதிகாரிகளாக அரசில் பணிபுரிந்தனர். பாண்டிய மன்னன் சடையன் மாறன் கீழ் பராந்தகப் பள்ளி வேளானாயின நக்கன் புள்ளன் என்பவன் உயர் அதிகாரியாகத் திகழ்ந்தான். ராஜசிம்ம பாண்டியனுக்கு பெருங் காகூர் கோன் வேளான் கணக்கனாக இருந்தான். (பெரிய சின்னமனூர் சாஸனம்). சோழர்களது கல்வெட்டுகளில் பெருமளவு

உயர் அதிகாரிகளாக மூவேந்த வேளான் என்னும் பட்டம் பெற்றவர்கள் பணிபுரிந்து இருக்கிறார்கள். இவர்கள் வேளாளர்கள் என்பதில் ஐயமில்லை. இராஜராஜனின் கீழ் பொய்கை நாட்டுக் கிழவன் ஆதித்தன் சூரியன் ஆன தென்னவன் மூவேந்த வேளான் என்பவன் உயர் அதிகாரி யாகப் பணிபுரிந்தான். அவனது திறமையைப் போற்றி அவனைத் தஞ்சைப்பெருங்கோயிலில் ஸ்ரீகாரியமாக அரசன் நியமித்தான். உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்க னை வில்லவ மூவேந்த வேளான் என்பவன் இராஜராஜ னுக்கு பெருந்தரமாகப் பணிபுரிந்தான். இராஜாதிராஜன் கீழ் வேளாளக் கூத்தன் ஆன செம்பியன் மூவேந்த வேளான் என்பவள் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்தான். சோழர் காலத்தில் பணிபுரிந்த நூற்றுக் கணக்கான அரசாங்க அதிகாரிகள் மூவேந்தவேளார் எனப்பட்டம் பெற்றதிலிருந்து வேளாளர் உயர் அதிகாரிகளாகப் பெரும்பாலாக இருந்தனர் என்பதில் ஐயமில்லை.

### சேனைத்தலைவர்கள் :

வேளாளர்கள் அமைதி நிலவிய நாட்களில் அரசனின் அதிகாரியாகவும் பணிபுரிந்தனர். ஆயினும் போர்க்காலங் களில் அரசர்களுக்காகவோ, அரசர்களுடனோ போருக் குச் சென்று வெற்றி வாகை சூடும் வீரர்களாகவும் பணி புரிந்திருக்கின்றனர், கலிப்பகையார் என்பவர் வேளாண் குடியைச் சார்ந்தவர். அவருக்கு திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியாரை மணஞ்செய்ய நிச்சயத்த னர். ஆனால் மணவினை நடக்கும் முன்னர், கலிப்பகையார் அரசனின் ஆணையை ஏற்றுப் போருக்குச் சென்றார். ஏயர் கோன் கலிக்காமனார் வேளாண் குடியைச் சேர்ந்தவர். ஆயினும் அவர்குடி சோழ அரசர்களுக்குச் சேனாபதியாக விளங்கிய குடி என்று 'வளவர் சேனாபதிக்குடி' என்று குறிக்கப்படுகிறது. இதிலிருந்து ஒரு குடியே வழிவழியாக

அரசனுக்கு தானைத் தலைமை ஏற்கும் பேறு பெற்றிருந்தது என்றும் அறியலாம். இதே போன்று வேளாண் குடியைச் சேர்ந்த கோட்புலி நாயனார் சோழ மன்னர்க்கு தந்திரியாய் போர்க்களம் சென்றார். உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனான வில்லவ மூவேந்த வேளான் என்பவன் முதல் இராஜராஜனுக்குப் பெருந்தரமாகப் பணிபுரிந்தான். அவன் இராஜராஜனுக்காக கோழிப் போரில் பங்கு கொண்டான் என்று தஞ்சைக் கல்வெட்டு கூறுகிறது. சேக்கிழார்குடி சோழப் பேரரசுக்குச் செய்த பெரும் பணிகளை அனைவரும் அறிவர். இராஜராஜனின் படையில் வெள்ளாளன் சித்திரையானி என்பவன் வேளைக்காரப்படையில் பணிபுரிந்தான் (238/5).

## வாணிபம் :

வேளாளர் பலர் வாணிகத்துறையில் சிறந்து இருக்கிறார்கள். இவர்களிடத்தில் சித்ரமேழி நாட்டார் எனும் சமுதாய அமைப்பு இருந்தது. இச்சித்ரமேழி நாட்டாரின் மெய்க்கீர்த்திகளில் மூன்று மாறுபாடுகள் காணப்படுகின்றன. சில மெய்க்கீர்த்திகள் மேழியையே தெய்வமாகக் கொண்டவர்கள் என்று கூறுகின்றன. இவர்கள் மேழி பிடித்து உழுபவர்கள். சில மெய்க்கீர்த்திகள் "பசும்பையையே தெய்வமாகவும்" என்று கூறுகின்றன. இவ்வமைப்பு வேளாளர்களில் வணிகத்துறையில் சிறந்தோர்களின் சமுதாய அமைப்பு எனலாம். இன்னம் சில மெய்க்கீர்த்திகள் செங்கோலையே தெய்வமாகக் கொண்டவர்கள் எனக்கூறுகின்றன. இவர்கள் அறங்கூறும் பணியில் ஈடுபட்டபோது இவ்வாறு அமைத்துக் கொண்டனர் போலும்.

## சித்ரமேழி பெரிய நாட்டவர் :

உழவையே தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த ஒரு குடி மக்கள், நாட்டில் பலபகுதிகளில் பரவி வாழ்ந்த

போதிலும் ஒரே இனத்தவராக சமயத்தவராக தங்களைக் கருதி வாழ்ந்தனர். இவர்கள் ஏரையே தெய்வமாகக் கொண்டவர் என்றும் அதனால் சித்ரமேழி பெரிய நாட்ட வர் என்று பெயர் பெற்றனர் என்றும் அறிகிறோம். இவர் கள் தங்களை பூமிதேவியின் மக்கள் என்று கூறிக் கொண் டனர். இவர்கள் செந்தமிழிலும் வடகலையிலும் வல்லமை பெற்றிருந்தனர். நீதியில் நிபுணர்களாகத் திகழ்ந்தனர். செல்வம் நிறைந்தவர் ஆதலின் திருமகளின் மக்கள் என்றும் தங்களைக் கூறிக்கொண்டனர். எப்பொழுதும் இன் சொல்லே பேசுபவர். 'தெங்கும், பலாவும், தேமாஞ் சோலையும், வாழையும், கமுகும், வளர்கொடி முல்லையும், பூவையும், கிள்ளையும் பொலிவோடும் கெழுமி வாட்டம் இன்றி கூட்டம் பெருக' வாழ்ந்தனர் என்று கல்வெட்டுக் கூறுகிறது. இதிலிருந்து நிலத்தில் பயிர் செய்தலை எவ் வளவு சிறப்பாகக் கருதினர் என்பது தெளிவு. செங் கோன்மையே இவர்கள் தலையாகக் கருதினர். 'சித்ர மேழியே தெய்வமாகவும் செம்பொற்பசும்பையே வேலி யாகவும்' கொண்டவர் என்றும் இவர்கள் தங்களைக் கூறிக் கொண்டனர். உத்தம நீதி, உயர் பெருங்கீர்த்தி, முததமிழ் மாலை முழுவதும் உணர்ந்தவர் என்றும் இவர்கள் குறிக்கப் பெறுகின்றனர். இவர்கள் எழுபத்தொன்பது நாடுகளில் வாழ்ந்தனர் என்றும் திருக்கோயிலூர் கல்வெட்டிலிருந்து அறிகிறோம். இச்சித்ரமேழி நாட்டார் என்ற பெயரில் வெள்ளாளர் சமுதாயம் பல நூற்றுண்டுகள் தமிழகத்தில் சீரும் சிறப்புமாகத் திகழ்ந்தது என்று அறிகிறோம். நெல்லூரில் உள்ள ஒரு கல்வெட்டில் இவர்கள் 'அறம் வளர, கற்பமைய, புகழ் பெருக, மனுநெறி தழைப்ப» நியாயம் நடாத்துகின்றவர்கள் என்று குறிக்கப் பெறு கின்றனர் (496/5). இவர்கள் பல நாட்டில் இருந்தவர்கள் என்று அவர்கள் இருந்த நாடுகளின் பெயர்கள் குறிக்கப் பெறுகின்றன. நாட்டை விஷயம் என்றும் இவர்கள்

குறிக்கின்றனர். இவர்களது பிரதிநிதிகள் அவ்வப்போது கூடி தங்கள் சமுதாயத்துக்குத் தேவையானவற்றை ஆலோசித்தும், தங்கள் பெயரால் நடக்கும் அறத்திற்கு வேண்டியவற்றை நிர்ணயித்துக் கொண்டனர் என்றும் அறிகிறோம். இக்கூட்டத்திற்கு பெரிய நாடு என்று பெயர். இப்பிரதிநிதிகள் எடுத்த முடிவுகள் இச்சமுதாயம் முழுதையும் பிணைத்தது என்று அறிகிறோம்.

நெல்லூரில் குலோத்துங்க சோழன் காலத்தில் இப்பெரிய நாட்டார் கூடினர். இவர்கள் கூடிய இடமும் சித்ர மேழி மண்டபம் எனக் குறிக்கப்படுகிறது. இல்லூர் பெருமாள் கோயிலுக்கு நிலம் இப்பெரிய நாட்டவர் அளித்தனர். இவர்கள், அக்கூட்டத்தில் பெரிய ஊர்கள் 1000 குழி நிலமும், நடுத்தர ஊர்கள் 750 குழி நிலமும், சிறிய ஊர்கள் 500 குழி நிலங்களும், பள்ளிப்பட்டுகள் 250 குழி நிலங்களும் விடவேண்டும் என்று தீர்மானித்தனர். அத்தீர்மானத்தில் மற்றொன்றும் குறித்தனர். பிராம்மணிபுர சேவகப்பற்றைச் சேர்ந்தவர்கள், அதனால் கொடுக்க இயலாது என்று கூறக்கூடாது. யார் யார் மேழி பிடித்து உழுகிறார்களோ அவர்கள் அனைவரும் விடவேண்டும். விடாதவர் பெரிய நாட்டார்க்கு பிழைத்தவர்களாவர் என்றும் தீர்மானித்தனர்.

இத்தீர்மானத்தில் கையொப்பமிட்டவர் அனைவரும் வெள்ளாளர்கள். இந்நாட்டவர் பல கல்வெட்டுகளில் குறிக்கப்படுவதிலிருந்து இவர்கள் சிறந்த சமுதாய அமைப்பில் இயங்கி வந்தார்கள் என்று கருத இடமிருக்கிறது. இவர்கள் கலப்பையையே தங்களது கொடியாகக் கொண்டிருந்தனர். திருக்கோயிலூரில் கலப்பை போன்ற உருவில் ஒரு தோரனம் அமைத்திருந்தார்கள் என்றும் சிறப்பாக பூமிதேவியைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டனர் என்றும் கல்வெட்டிலிருந்து அறிகிறோம். இவர்

களுக்கென தனிப்பட்ட மெய்க்கீர்த்தியே இருப்பதிலிருந்து, இவர்கள் சமுதாயத்தாலும், அரசாலும் பெரிதும் போற்றப்பட்டனர் என்று அறிகிறோம். இக்காலத்தில் நாட்டார் என்று அழைக்கப்படும் குடிகளில் பலர் இப்பெரும் சமுதாயக் குடிகளாக இருந்திருக்க வேண்டும்.

வாணிகர்களாகப் பணிபுரிந்த வேளாளர்கள் பல்வகைத் தானியங்களை விற்பதில் ஈடுபட்டிருந்தனர் எனக் கொள்ள இடமிருக்கிறது. கூலவாணிகம் இவர்களது சிறந்த வாணிகத் தொழிலாக இருந்தது. இருப்பினும் பிற வாணிகங்களிலும் இவர்கள் சிறந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உண்டு. ஆதித்த சோழர் காலத்தில் ஈசானமங்கலத்தில் இருந்த வெள்ளாளன் புழலய செட்டி என்பவன் ஒரு மாணிக்க வியாபாரி என்று அறிகிறோம். பசும்பையையே தெய்வமாகக் கொண்டு சித்ரமேழி என்னும் சமுதாய அமைப்பில் திகழ்ந்த வெள்ளாளர் இது போன்று வாணிகத்தில் ஈடுபட்டவர்கள் என்பதில் ஐயமில்லை.

உழு தொழில் :

உழு தொழிலையே தங்களது தொழிலாகக் கொண்ட வெள்ளாள மக்களின் வாழ்க்கைப்பற்றி அதிகம் குறிப்பிடல் வேண்டியதில்லை. இவர்களே மன்னராலும் பிற மக்களாலும் போற்றப்பட்ட பெருக்காளர். இவர்களைப் பற்றிய ஏராளமான இலக்கியச் சான்றுகளும் கல்வெட்டுச் சான்றுகளும் உண்டு. இவர்களில் பல ஊர்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்டு விளங்கினர். ஊர்க் கிழவர் ஊராளி என இவர்கள் அழைக்கப்பட்டனர். இவர்களே காவுடையர் (கா என்பது கிராமம் என்னும் பாகதச் சொல்), காவுண்டர், காமிண்டர் எனச் சிறந்தவர்கள். இதேபோல் நாட்டுத் தலைவர்களாகவும் சிலர் விளங்கிய

தால் நாட்டார் எனவும் பெயர் ஏற்றனர். உழுது வாழ்ப வர்கள் மேல்வாரத்தார் என்றும் கீழ்வாரத்தார் என்றும் இருவகை வேளாளர் உண்டு என உரையாசிரியர்கள் குறிப்பர். உரையாசிரியர்கள் காலத்தில் இப் பாகுபாடு இருந்தது என்பது இதனல் தெளிவாகிறது. நிலத்தைக் கட்டுக் குத்தகைக்கு வாங்கி குத்தகை செலுத்துதல் மேல் வாரம் என்றும், அவ்வாறு மேல் வாரத்துக்கு ஏற்ற நிலத்தை பிறரிடம் கொடுத்து பயிரிடச் செய்து பெறும் குத்தகை கீழ்வாரம் என்றும் பொருள் பெறும் போலும்! ஆதலின் செல்வம் மிகுந்தவர் மேல் வாரத்துக்கு நிலம் பெற்று பிறரிடம் கீழ்வாரத்துக்கு அளித்தனர் என்று கொள்ள இடமுண்டு. இதிலிருந்து வெள்ளாளர்களில் செல்வம் மிகுந்தவர்கள் என்றும் செல்வம் குறைந்தவர்கள் என்றும் இருபிரிவுகள் இருந்தன. செல்வம் குறைந்த அல்லது அற்ற வேளாளர்கள் பிறரிடம் தொழில் புரிந்து வாழ்ந்தனர். இவர்களையே பிறருக்குத் தொழில் புரி வோர் என நூல்கள் குறித்தன. அரசின் அருள் பெற்று ஊர்க்கிழவர்களாகவும், தானைத் தலைவர்களாகவும் விளங் கிய வேளாளர்கள், சமுதாயத்தில் உயர்ந்த ஜாதியினர் என்றும், பிறர்க்கு தொழில் புரிவோர் தாழ்ந்த ஜாதியினர் என்றும் கருத்து நிலவியது.

கிளைக் குடிகள்

வேளாண்குடியில் பல கிளைக்குடிகள் இருந்தன என்று குறிப்பிட்டோம். இக்குடிகள் ஒவ்வொன்றிலும் செல்வம் நிறைந்து உயர்ந்த ஜாதியாக வாழ்ந்தோரும், செல்வ மின்றி தாழ்ந்த ஜாதியாக வாழ்ந்தோரும் உண்டு. உதாரணமாக வள்ளியெறிச்சல் என்ற இடத்தில் 11-ம் நூற்றாண்டுக் கல்வெட்டு, காடை, புலியன் முதலிய வேளாளர் குடிகளைக் குறிக்கிறது. இவர்கள் உயர்ந்த குடிகளாக அரசாங்கப் பணிபுரிந்திருக்கிறார்கள். மூவேந்த வேளான், தமிழவேள், முதலிய பட்டம் கொண்டுள்ளனர்.

ஆனால் இக்காலத்தில் இவர்களில் சிலர் தாழ்ந்த ஜாதி யினராகக் கருதப்படுகின்றனர். அதே போன்று நாடார் என்னும் குடியில் சிலர் தங்களை உயர்ந்தவர்களாகவும் சிலர் தாழ்ந்தவர்களாகவும் கருதிக்கொள்ளத் தலைப்பட் டனர். ஆதலின் குடியில் உயர்வும் தாழ்வும் செல்வத் தாலும் செல்வாக்காலுமே தோன்றி பின்னர் ஜாதியின் பெயரால் கற்பிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

வெள்ளாளர்களில் சிலர் தங்களது சிறந்த திறனால் அரசால் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டனர். மதுரை மாவட்டம் கீரனூர் கல்வெட்டில் வீரராஜேந்திரன் காலத்தில் ஒரு வெள்ளாளன் பல்லவரையன் என்று அழைக்கப்பெறுகிறான். 'இவ்வூர் வெள்ளாளன் பூசகளில் அரையன் சிறியனான வேந்த சூளாமணி பல்லவரையன்' என்று கல்வெட்டுக் குறிக்கிறது. இதே ஊரில் உள்ள கல் வெட்டுகளில் கீழ்மணியர் மேல்மணியர் என இரு பிரிவு கள் வெள்ளாளர்களில் குறிக்கப்பட்டுகின்றன. வெள்ளாளன் கீழ் மணியரில் நீலன் புலியன்' (277/5) என்றும், மேல்மணியரில் காவன் உடையான் (279/5) என்பவனும் குறிக்கப்பெறுகின்றனர். ஒரு கல்வெட்டில் வெள்ளாளன் கோன் என்று குறிக்கப்படுகிறான். வெள்ளாளன் கழஞ்சியன் தேவனான கொங்கு இளங் கோன்' (280/5) என்று குறிக்கப்பெறுகிறான். மற்றொரு கல்வெட்டில் வெள்ளாளன் பறையன் என்று குறிக்கப் பெறுகிறான். விக்ரம சோழன் காலத்தில் திருமுருகன் பூண்டி கல்வெட்டு 'வெள்ளாளன் மாப்புள்ளிகளில் பறையன் ஆன தனபாலன்' (253/5) என்பவனைக் குறிக்கிறது.

வெள்ளாளர்களுள் பல கிளைக்குடிகள் இருந்தன. இவை காலப்போக்கில் பெருகி 20-ம் நூற்றாண்டிலேயே ஏராளமான எண்ணிக்கையாக உயர்ந்தன. பல இடங்

களில் வெள்ளாளரும் வேளாரும் ஒரே குடி என்னும் வகையில் குறிப்புகள் உள்ளன. திருநாவுக்கரசர் வேளாண்குடியைச் சேர்ந்தவர். சேக்கிழார் வேளாளர். இவரது குடிபுகழ் வேளாண்குடி என்று கூறப்படுகிறது. இளயான் குடி மாறர் நாயனுர் ஏரின் மல்கு வளத்திஞல் வரும் எல்லை இல்லாததோர் செல்வம் பெற்றவர். இவர் சூத்திரநற்குடியில் பிறந்தவர் என்று சேக்கிழார் குறிக்கிருர்.

ஏயர்கோன் என்பவர் வேளாண் குடியைச் சேர்ந்தவர். ஆயினும் தங்கள் குல முறையில் சோழ மன்னன் சேனு பதியாய் பணிபுரிந்த குடி என்று 'வளவர் சேனுபதிக்குடி' என்று அழைக்கப்பட்டது. இவர் தன் இரு மக்கள் சிங்கடியார், வனப்பகை ஆய இருவரையும் சுந்தரமூர்த்திக்கு அடிமையாக அளிக்க அவரும் இவர்களை மகன்மையாகக் கொண்டார். அவர்களைத் தனது மக்களாக ஏற்றுக் கொண்டார். தான் பாடிய பாடலில் சிங்கடியப்பன் என்று அவர்களின் பெயரை இட்டே பாடினுர் கோட்புலி நாயனுர் வேளாண் குடியைச் சேர்ந்தவர். அவர் சோழ மன்னனுக்கு தந்திரியாய் போரிடவும் செயல் பெறறவர்.

## வாழ்க்கை :

இவர்களுடைய வாழ்க்கைகளைப் பற்றி பல செய்திகளை சங்க நூல்கள் தருகின்றன. இவர்கள் மருதநிலத்தின் குடிகள். இவர்களது மனைகள் ஒப்பில்லாத மனைகள் என்று அழைக்கப் பெறுகின்றன. இவை தென்னங் கீற்றுகள் வேயப்பட்ட கூரைகளை உடையவை. இவர்களது மனை முன்றுகளில் மஞ்சள் விளைந்திருக்கும். சுற்றிலும் பூந்தோட்டங்கள் நிறைந்திருக்கும் (பெரும் பாணுற்றுப்படை 355), முல்லை நிலத்து உழவர்களின் மனை முன்றுகளில் வரகு முதலியன நிற்கும். தானியங்களை

சேமித்து வைக்கும் குதிர்கள் இருக்கும். அவர்களது குடியிருப்புகள் வரகு வைக்கோலாலே வேயப்பட்டிருக்கும். வரகு திரிகை நட்ட பந்தல் நிற்கும். கலப்பையும், திரண்ட சக்கரங்களையும் ஆங்கே சார்த்தி வைத்திருப்பர்.

தன் பொருளைப் பிறருக்குப் பகிர்ந்து இன்பம் கண்டவர்கள் இவர்கள் வேளாளர் விருந்தோம்புவதில் சிறந்தவர் எனப் பண்டைய நூல்கள் கூறுகின்றன. 'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்றே ஒரு பாடல் உண்டு. சிறிய முதுகையும் பிடியின் கைபோன்ற பின்னலையும் தொடியணிந்த கையையும் உடைய வேளாண் பெண்கள் தங்கள் குழந்தைகளையும் விட்டுவிட்டு விருந்தினர்களை இருக்கச்செய்து பலமுறை குத்திய வெண்மையான அரிசிச் சோற்றுடன் நண்டும், பீர்க்கங்காயும் கலந்த உணவை கொடுப்பர் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. வேளாளர் குடி இருப்பில் பெரிய பலாப்பழம், தெங்கின் இளநீர், முற்றிய வாழைப்பழம், பனைநுங்கு முதலிய கிடைக்கும். சேம்பின் இலையுடன் வள்ளிக்கிழங்கு முதலிய கிழங்குகளும் கிடைக்கும் எனப் பெரும்பாணாற்றுப் படை கூறுகிறது. முல்லை நிலத்து உழவர்கள் வரகையும் அவரை விதையையும் புழுக்கி உண்பர். உழவர் கழனியில் அரிசிச் சோற்றோடு மீனை விலாப்புடைக்க உண்பர் என்று புறப்பாட்டு (புறம் 60) கூறுகிறது.

வெள்ளாளர் சிறுவர்களுக்குரிய வயது வந்ததும் மயிர் நீக்குவர். அதை ஒரு விழாவாகவே நடத்துவர். அது தொடங்கியே கலை பயில பணிப்பர். மருள் நீக்கியாருக்கு கலைபயிலும் நாள் வந்ததும் மயிர் நீக்கும் விழா நடந்தது.

உழவர், பள்ளர் பறையரோடு கழனியில் இறங்கிப் பணிபுரிவர், அவர்களது கை வலியகை எனவும்

கருங்கை எனவும் அழைக்கப்படும். நிலத்தை முதலில் உழுவதை ஒரு பெரும் விழாவாகவே கொண்டாடினர். கலப்பைக்குச் செந்நெல் கதிரையும் அருகம்பில்லையும் குவளைப்பூவையும் மாலையாகத் தொடுத்து அணிவித்து, தொழுது, ஏரைப்பூட்டி நிற்க அருகில் இருந்தோர் ஏரைப் பாடுவர். இதை ஏர்மங்கலம் என்று அழைப்பர். (சிலம் 1. 10. 132. 5). மாடுகளினால் நிலத்தை மிதிக்கச் செய்தலும் (பெரும். 209–211) உழுத நிலத்தைக் காலால் மட்டுப் படுத்தலும் (தமிழர் சால்பு 289) சங்ககாலத் தமிழர் அறிந் திருந்தனர். வரிசையாக நின்று கொண்டு பட்டை களினால் வயலுக்கு நீர் இறைத்துக்கொண்டே பாடுவர். (மதுரை 89-90) நாற்று நட்டு பயிர் செய்தல் சங்ககால உழவர் கையாண்ட முறையாகும் (பெரும்பாண். 212). களை எடுக்க இவர்கள் தொடுப்பு என்னும் கருவியை உபயோகிப்பர். (பெரும்பாண், 20:-2) வேளாளப் பெண்கள் மயிரைக் கொண்டையாக அணிந்து, ஆம்பல் முதலிய மலர்களினாலும், தளிர்களினாலும் ஆன ஒருவகை ஆடை அணிந்து களையாக விளைந்த ஆம்பலையும், நெய் தலையும், தளம்பு என்னும் கருவியால் எடுப்பர்.

நெற்கதிர்கள் திரண்டு விளைந்தவுடன் அவற்றை அறுப்பர். நெல்லை அறுக்கும்போது தாளோடு சேர்த்து அறுத்து, அருகில் நின்ற மிகவும் பழமையான மருத நிலத் தில் சேர்த்திப் போரிடுவர், அவ்விடத்துக்கு களம் என்று பெயர். உழவர்க்கு களமர் என்னும் பெயர் இதனால் வந்திருக்கக் கூடும். அக்களத்தில் உறையும் தெய்வங் களுக்கு பலிகொடுத்தலும் உண்டு. ஆதலின் இதை 'மரு தின் ஓங்கு சினை நிழல் பலிபெறு வியன் களம்' எனப் பெரும்பாணாற்றுப்படை கூறும்.

நெல்லை அரித்துப் போரிட்டு சூட்டைக்கடாவிடுவர். அப்போது முகக்கக் கொடுத்துப் பாடுவர். அதற்கு முக

வைப் பாட்டு என்று பெயர். அப்போது தடாரி அல்லது கிணை என்னும் திரண்ட முழவை முழக்கி கிணைவன் (தடாரி கொட்டுவோன்) வயல் உழவனைப் போற்றுவான். இதை மகிழ் இசை ஓதை என்றும் களவழி வாழ்த்து' என்றும் அழைப்பர்.

## வேளாண் மகளிர் :

மயிரைக் கொண்டையாக அணிந்திருப்பர். ஆம்பல் முதலிய மலர்களாலும் தளிர்களாலும் ஆன ஒருவகை உடையைத் தரித்திருப்பர். (புறம் 60) அவர்கள் சிறிய முதுகுடையவர்கள். பிடியின் கைபோன்ற பின்னலை உடையவர்கள். கையிலே தொடி யணிந்திருப்பவர் என சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. ஏரால் உண்டு வாழ் பவர் பெரிய மனையின்கண் மகளிர் குளத்துக்கீழ் விளைந்த களத்தின்கண் கொண்ட வெண்ணெல்லை முகந்து கொடுப் பார்.

## திருமணம்

வேளாளர் தங்கள் பெண்களுக்கு 12 வயது வந்ததும் மணம் முடிப்பர். மணம் பெரும்பாலும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது. வேளாண்குடியில் பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் சென்று பெண் கேட்பது மரபு. திருநாவுக்கரசரின் தமக்கை திலகவதியாருக்கு 12 வயது வந்ததும் கலிப்பகையார் பெண் கேட்டுவர சில பெரியோரை அனுப்பினுர் என்று பெரியபுராணம் கூறு கிறது. இதிலிருந்து மணமகனோ, மணமகளோ விழாவின் முன்னர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வது மரபில்லை எனக் கொள்ளலாம். இதே போன்று மானக்கஞ்சார நாயனாரின் மகளை ஏயர்கோன் என்பவர் மணக்க விரும்பி மகட் பேச பெரும் முதியோரை அனுப்பினார். இவ்விரு வரும் வேளாளர் குடியைச் சேர்ந்தவர்கள்.

மணம் பேசி முடிந்ததும் மதிநூல் வல்லுநர் இரண்டு திறத்தார்க்கும் ஏற்புடைய மங்கலமான நாளை வகுத்தனர். மணவிழாவின் தொடக்கமாகத் தங்கமயமான கலத்தில் வெண்முளை பெய்து தொடங்கினர். இது இப்பொழுதும் பாலிகை இடுதல் என வழங்கப்பெறும். மணமக்கள் வாழ்வில் செழுமை நிறைந்திருக்க வேண்டும் என்பதின் தொடக்கமாக இதைக் கருதினர் போலும்.

மணவிழாவின் முக்கிய அங்கமாக ஆண்மகன் பெண்ணின் கரத்தை பிடித்தல் விளங்கிற்று. "கஞ்சாரர் மகள் கொடுப்ப கைபிடிக்க வருகின்ற" என்று வருகின்ற அடிகளால் இதை அறியலாம். மணவிழாவில் ஒரு குறிப்பிட்ட தொகை அரசுக்கு கடமையாகக் கொடுக்கப்பட்டது. இதைக் கண்ணாலக்காசு எனக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. மூன்றும் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு ஒன்று 12-ம் நூற்றாண்டில் கண்ணாலங்களில் கொண்டவன் ஒரு சின்னமும் குடுத்தவர் ஒரு சின்னமும் இடக்கடவர்களாகவும்' என்று குறிக்கிறது. அரசுக்கு வர வேண்டிய இப்பொருளை அவ்வூர் கோயில்களுக்கு அரசன் அளித்திருக்கிறான். இதே போன்று ஈரோட்டில் உள்ள ஒரு கல்வெட்டில் 'கண்ணாலம் ஆண்தலை அரைக்கால் பொன் பெண்தலை அரைக்கால் பொன்' என்று வருவதிலிருந்து இக் காசு கல்யாணங்களில் எங்கும் கொடுக்கப்பட்டது என்றும் இவ்வாறு கொடுக்கப்படுவது பல நூற்றாண்டுகளாக வழக்கிலிருந்த மரபு என்றும் தெரிகிறது.

புதுச்சேரிக்கு அருகில் ஒரு கல்வெட்டு கட்டில் ஏறுவான். கொடுக்கவேண்டிய காசைக் குறிக்கிறது. முற்காலத்தில் மணந்து கொள்வதற்குமுன் கட்டிலில் ஏறிப்படுத்தல் கூடாது என்னும் கருத்து நிலவியது, ஆதலின் இது கட்டில் ஏறுவான் என்பது மணவினை முடிக்கும்போது

என்று பொருள் தோன்றுகிறது. வேளாண்குடி ஆண் மகன் நாட்டுக்காகப் படை யெடுத்து செல்லவேண்டும் என்றால், தனக்கு மணவிழா நிச்சயித்திருந்தாலும்கூட அதை தள்ளி வைத்துவிட்டுப் போருக்கு எழும் ஆண்மை படைத்தவன் என்பது திலகவதியாரின் வரலாற்றிலிருந்து தெரிகிறது. திலகவதியார்க்கு மணவிழா நிச்சயமான பின்னர், மணமகனை கலிப்பகையார் அரசனின் ஆணையை ஏற்றுப் போருக்கு சென்றார். போரில் அவர் இறந்துவிட்டார். தனக்காக நிச்சயிக்கப்பட்ட ஆண்மகன் போரில் இறக்கவும், திலகவதியார் மணவிழா நடக்காத போதிலும் தீப்பாய நிச்சயித்தாள். ஆனால் திருநாவுக்கரசரின் வேண்டுகோளுக்கிணங்கி தம் முடிவை அப்பெண் மாற்றியமைத்துக் கொண்டாள் என்று பெரியபுராணம் கூறுகிறது. இதிலிருந்து வேளாண்குடி மக்களின் உயர்ந்த மனப்பக்குவம் தெளிவாகிறது. அதோடு வேளாண்குடியில் கணவன் இறந்துவிட்டால் விருப்பமுள்ளோர் தீப் பாய்வதும் உண்டு என்றும் அறியலாம். புகழனார் இறந்ததும் அவர் மனைவி உடன் இறந்தாள்.

வேளாண்குடிப் பெண்களுக்கு கடைசியர் என்றும் பெயர் உண்டு. கடைசியர் காலையில் பூக்களை நாற்றில் கோர்த்து தலையில் சூடிக்கொள்வர். தோளில் வளை தரித்திருப்பர். மார்பகம் திறந்திருக்கும். கழனியில் இறங்கி அவர்களே களை எடுப்பர். அவ்வாறு எடுக்கும்போது ஒருவர்மேல் ஒருவர் சேற்றை வாரி இறைத்துக்கொண்டு விளையாடுவர். அதனால் அவர்கள் உடலிலும், முலையகத்தும் சேறுபட்டு அதனால் ஓர் அழகும் பெற்றிருப்பர். இவர்கள் கள்ளை உண்டு மயக்கம் பெற்றிருப்பர். அதனால் பெரிய மீன் போன்ற இவர்களது கண்கள் சிவந்திருக்கும். தம் இசையில் புதுமையுண்டாகும் வகையில் இழிந்த மொழியில் பாடுவர். இப்பாட்டிற்கு 'விருந்திற் பாணி'

என்று பெயர்' என சிலப்பதிகாரத்திலிருந்து அறிகிறோம். வெள்ளாளர் பெண்களுக்கு வெள்ளாட்டி என்றும் பெயர் உண்டு. வேலைக்காரி என்னும் பொருளிலும் வெள்ளாட்டி என்னும் சொல் பல கல்வெட்டுகளில் கையாளப்படுகிறது.

# 11

# வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை

**வணிகர் :**

தொல்காப்பியம் மரபியலில் வணிகர், வைசியர் என அழைக்கப்படுவதிலிருந்து அக்காலத்திலேயே வைசியர் குடி சிறப்பாகக் கூறப்பட்டது தெளிவு. அவரது வாழ்க்கையை வாணிக வாழ்க்கை என்று தொல்காப்பியம் கூறுகிறது (மர. 78). 'வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை'. இவர்கள் இளங்கோக்கள், மன்னர் பின்னர், இப்பர், எட்டியர், நாய்கர், ஆன்காவலர், உழமர், பரதர், வினைஞர், செட்டியர், சிரைட்டியர் எனவும் அழைக்கப்படுவர் என்று நிகண்டு கூறுகிறது. இவர்களுக்கு அறுதொழில்கள் உண்டு எனப் பண்டைய நூல்கள் குறிக்கின்றன. ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரைஓம்பல், வாணிகம் என்ற அறுதொழிலும் அவர்க்குரியன ஆதலின் அவர் 'இருமூன்று மரபினர்' என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகின்றனர். இவ்வறு தொழில்களை வணிகர்க்கு நிகண்டுவும் குறிக்கிறது. கல்வெட்டுகளில் இவர்கள் வணிகர், நகரத்

தார், திசையாயிரத்து ஐந்நூற்றுவர், வியாபாரி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றனர். இவர்களுக்கு உழவுத் தொழிலும் வாணிகமும் சிறந்த தொழிலாக இருந்தது.

கடல் வாணிபம் செய்வோரை 'கலந்தரு திருவிற் புலம் பெயற்மாக்கள்' என்று சிலம்பு கூறுகிறது. இவர்களைக் கடலோடிகள் என்று அரும்பதவுரையாசிரியரும், பரதேசிகள் என அடியார்க்கு நல்லாரும் குறிப்பர் (சிலம்பு. 1. 5. 11).

## பண்டைய வணிகர் :

மதுரைக்கு அருகில் உள்ள அழகர் மலையில் சுமார் கி.மு. 3-ம் நூற்றூண்டைச் சார்ந்த பல கல்வெட்டுகள் உள்ளன. அவை சமணப் பெரியோர்களுக்கு அளித்த பாழியைக் குறிக்கின்றன. இப்பரிசு கொடுத்தவர்களில் பலர் வணிகர் என்று குறிக்கப்படுகின்றனர். அறுவை வணிகன், உப்பு வணிகன், கொழு வணிகன் முதலிய மதுரையைச் சேர்ந்த பல வணிகர்கள் அங்கு பொருள் கொடுத்துள்ளனர். இதிலிருந்து பல வணிகர்கள் சங்க காலத்தில் சமண மதத்தை தழுவியிருந்தார்கள் என்று அறிகிறோம். இதிலிருந்து பல்வேறு வணிகர் இருந்தனர் என்பதும் பெறப்படுகிறது. எட்டு வகை தானியங்களை விற்கும் கூலவணிகர், நூல் ஆடை விற்கும் அறுவை வணிகர், உப்பு விற்கும் உமணர் முதலிய பலவகை வணிகர் இருந்தமை சங்க நூல்களில் இருந்து அறிகிறோம். கலத்தாலும் காலாலும் இவர் பொருள் ஈட்டுவோர் என சிலம்பு கூறுகிறது. கலம் என்பது நீர்வழியாக, மரக்கலத்தின் மூலம் நடைபெறும் வியாபாரம். காலால் என்பது வண்டிகளால் தரைவழியாக நடைபெறும் வாணிபம். நீர்வழி வாணிபம் என்றும் நிலவழி வாணிபம் என்றும் அக்காலத்திலேயே வகுத்திருப்பது சிறப்பாகக் கவனிக்கத்தக்கது.

**சங்க கால வாணிபம் :**

சங்க காலத்தில் வணிகர் வியாபாரஞ் செய்த பொருள்கள் யாவை என்பதையும், அவர்கள் எத்தன்மையினர் என்பதையும் பட்டினப்பாலை மிகவும் சிறப்பாகக் கூறுகிறது. வாணிகரது வாழ்க்கை எதைக் குறிக்கோளாகக் கொண்டு சிறந்தது என்பதற்கு இலக்கிய மரபாக இதைக் குறிக்கலாம்.

நிமிர்ந்த குதிரைகள் நீர்வழியே வந்தன. வண்டியில் மிளகு மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. வடமலையில் பிறந்த மணியும், பொன்னும், தென் கடல் முத்தும், குடமலையில் விளைந்த சந்தனமும், அகிலும், கீழ்க்கடலில் பிறந்த பவளமும், கங்கைக் கரைப் பொருள்களும், காவிரி யாற்றங்கரைப் பொருள்களும் ஈழத்திலிருந்த உணவுப் பொருள்களும், கடாரத்திலிருந்து வந்த நுகரும் பொருள்களும், பிற நாட்டுப் பொருள்களும், அவர்களால் விற்கப் பட்டன என்று பட்டினப்பாலை கூறுகிறது. இவற்றிலிருந்து இந்தியா முழுவதிலிருந்தும் வந்த பொருள்களையும் பிறநாடுகளிலிருந்து வந்த பொருள்களையும் விற்கும் வணிகர் நிறைந்திருந்தது தமிழ் நாடு எனத் தெளியலாம்.

**வணிகர் தன்மை :**

இவ்வாறு சிறந்த வணிகர் தன்மை யாது எனப் பட்டினப்பாலை கூறுவது சங்க கால வைசியர்களின் வாழ்க்கைக் குறிக்கோளை தெளிவாக விளக்குகிறது. இவர்கள் நீர்மீதும் நிலத்தின் மீதும் வணிகம் செய்வதால் அவற்றில் இனிது உறங்குவர். தன் சினைகளோடு மகிழ்வர். பகையின்றி வாழ்வர். மீன் பிடிப்போர் முன்றிலில் கூட மீன்கள் பாய்ந்து விளையாடும் வகையிலும், விலங்கு இறைச்சிகளை விற்போர் வீட்டிலும் விலங்குகள் நிறைந்து

நிற்கும் வகையில் அவர்களது கொடுந் தொழிலை நீக்கி, களவு செய்வோரை நல்வழிப்படுத்தி, தெய்வங்களை வழி பட்டு, வேள்விகள் பல செய்து, அந்தணர்களது புகழ் பரவச் செய்து வாழ்வர். ஆநிரைகளை ஓம்பல், உழவுத் தொழிலைச் சிறக்கச் செய்தல் ஆகியவை இவர்களது சிறந்த தொழில். அறம் குறையாமல் வருவோர்க்கு நல்ல உணவு அளித்து நடுவுநிலை தவறாது, அருள் வாழ்க்கை நடத்துவர். தாம் பொய் கூறின் தம் குடிக்கே இழுக்கு என்று எப்போ தும் வாய்மையே கூறி, பிறர் பொருளையும் தம் பொருள் போல் மதித்து தாம் கொள்ளும் பொருள்களை அதிகமாக கொள்ளாமல், கொடுக்கும் போது குறைத்துக் கொடுக் காமல் உரிய அளவிலே கொடுத்தும் கொண்டும் தம் இலாபத்தை வெளிப்படையாகக் கூறி விற்கும் தன்மை யினர் என்று அப்பாடல் கூறுகிறது. வணிகர் தங்களது பொருள்களை கழுதைகளின் மீது ஏற்றி வருவர் என்றும், தங்களைக் காத்துக் கொள்ள வாள் ஏந்துவர் என்றும் சங்கப் பாடல்களில் இருந்து அறிகிறோம். இம்மரபு பிற்காலத்தும் நிலவியது.

## வணிக சமுதாயம்—மணிக்கிராமம் :

வணிகர்களது சமுதாயம் பல பெயர்களில் திகழ்ந் தது. அவற்றில் 'மணிக்கிராமம்' என்ற ஓர் அமைப்பு சிறந்து விளங்கியது. கடல் கடந்த சயாம் நாட்டில் தக்கோலம் என்று பெயர் பெற்ற (தகூபா) இடத் தில் ஒரு தமிழ்க் கல்வெட்டுக் கிடைத்துள்ளது. அதில் மணிக்கிராமத்தார் குறிக்கப்பட்டுள்ளனர். இக்கல்வெட்டு தெள்ளாறெறிந்த நந்திவர்ம பல்லவன் காலத்தது என்று வரலாற்று ஆசிரியர் கூறுவர். மணிக்கிராமம் என்னும் பகுதி காவேரிபூம்பட்டினத்தில் இன்றும் உள்ளது. காவேரி பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாகத் திகழ்ந் ததை, அனைவரும் அறிவோம். அங்கிருந்து தமிழக வணிகர்

கடல் கடந்து வாணிகம் செய்யச் சென்றிருக்கின்றனர். அவர்களே தக்கோலத்தில் குறிக்கப்படும் மணிக்கிராமத்தார் எனலாம். அக்கல்வெட்டு சேனுமுகத்தையும் குறிக்கிறது. இதிலிருந்து மணிக் கிராமத்தார் கடல் கொள்ளைக்காரர்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், சென்ற இடத்தில் தங்களைக் காத்துக் கொள்ளவும் சேனையை அழைத்துச் சென்றனர் என்றும் அறியலாம்.

## நாநாதேசி-ஐந்நூற்றுவர் :

மணிக்கிராமம் என்பது போல நாநாதேசி என்ற ஒரு அமைப்பும் வணிக சமுதாயத்தில் இருந்தது. இவர்கள் நாநாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்று பல கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் ஐந்நூற்றுவர் என்ற குடியினரே என்று கொள்ள வேண்டும். ஆயிரத்து ஐந்நூற்றுவர் என இவரை சிலர் குறிப்பர். இது தவறாகத் தோன்றுகிறது. திசை ஆயிரத்து ஐந்நூற்றுவரைக் குறிக்கும் ஒரு கல்வெட்டு இவர்களது சாஸனத்தை பஞ்சசத வீர சாஸனம் என்று குறிக்கிறது. பஞ்சசதம் என்பது ஐந்நூற்றையே குறிக்கும். திசையாயிரத்து என்பது பல்வேறு திசைகளைச் சேர்ந்தவர் என்ற பொருளே எனக் கொள்ளலாம்.

மைசூர் பகுதியில் கிடைத்த சில கல்வெட்டுகள் இவர்களது தோற்றத்தையும் தொழிலையும் குறிக்கின்றன. இவர்கள் வாசுதேவர் கந்தழி, மூலபத்ரா ஆகிய குலங்களில் பிறந்தவர்கள். பல்வேறு குடியைச் சேர்ந்தவர்கள். பல்வேறு தேசங்களில் சுற்றித் திரிவோர்க்கு பிறந்தவர்கள், பகவதியால் போற்றப்பட்டவர்கள். சேர, சோழ, பாண்டிய, மலய, மகத, கௌஸல, சௌராஷ்டிர, தானுஷ்டிர, குறும்ப, காம்போஜ, லாட, பருவர, நேபாள, ஏகவத, லம்பகர்ண, ஸ்திரீராஜ்ய, கோலமுக முதலிய

பல்வேறு நாடுகளுக்கும் சென்று வியாபாரம் செய்பவர்கள். இவர்கள் சிறந்த யானைகள், குதிரைகள், விலையுயர்ந்த கற்கள், வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை விற்றவர்கள். சிவப்பு நாடா கட்டிய கழுதைகளிலும், எருமைகளின்மீதும் பொருள்களை ஏற்றிச் செல்வார்கள். இவர்களது சாஸனம் வீரசாஸனம் என்று அழைக்கப்படும், என்று இவர்களது கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்.

இவர்களது வாணிபம் பல நாடுகளிலும் பரவியிருந்தது. பல்வேறு தொல்லைகளை சமாளிக்க வேண்டியிருந்ததாலும் இவர்கள் வீரர்களாகவும் திகழ்ந்தனர் போலும். இவர்கள் சுமத்திரா தீவுகளுக்குச் சென்று வாணிகம் செய்துள்ளதை அங்கு 'லோபோ தோவேர்' என்ற இடத்துக் கல்வெட்டுக் கூறுகிறது. இது கி.பி. 1088–யைச் சார்ந்த கல்வெட்டு.

பூமி புத்ரர்கள் :

இராஜாதிராஜ சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று(திட்டகுடி 291/8) இவர்களைப் பற்றி குறிக்கிறது. அது அரசனின் மெய்க்கீர்த்திக்கு பின்னர் இவர்களது கீர்த்தியை கூறுகிறது.

ஸ்ரீமத் பூமிசுபுத்ரஸ்ய
சாதுர்வர்ணஸ குலோத்பவம்
சர்வலோக ஹிதார்த்தாய
சித்ரமேளஸ்ய சாஸனம்

என்று அச்சாஸனம் தொடங்குகிறது. இதிலிருந்து சித்ரமேழி நாட்டவர் எடுத்த முடிவுகள் இச்சாஸனத்துடன் தொடங்கியது என்று தெளிவாகிறது.

இக்கல்வெட்டு 'எழுபத்தொன்பது நாட்டு உத்தம நிதி உயர்பெருங்கீர்த்தி, முத்தமிழ் மாலை மும்மையும் நிறைந்த சித்ரமேழி பெரிய நாட்டோரும், நான்கு திசை பதினெண்பூமி தேசி திசை விளங்கு திசையாயிரத்து ஐநூற்றுவரும், அவ்வூர் கோயிலில் பூமிதேவியை எழுந்தருளிவித்ததையும் சித்ரமேழி தோரணம் எடுத்ததையும் வழிபாட்டுக்கு பொருள் கொடுத்ததையும் குறிக்கிறது. இங்கு இரண்டு குழுக்கள் குறிக்கப்படுவது சிறப்பாகும். ஒன்று எழுபத்தொன்பது நாட்டு சித்ரமேழி பெரிய நாட்டார் குழு. இரண்டாவது பதினெண் பூமி திசையாயிரத்து ஐந்நூற்றுவர் குழு என்பவையாகும். இவற்றிலிருந்து இரண்டு திறத்தாரும் வைசியர் என்றும், பெரிய நாட்டவர், உழவுத் தொழிலைத் தலையாகக் கொண்டவர் என்றும், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் என்பவர் வணிகத்தையே தலையாகக் கொண்டவர் என்றும் கொள்ள இடமிருக்கிறது. நாட்டுக்கும் நகரத்துக்கும் தர்மமாக என்று இக்கல்வெட்டு குறிப்பதிலிருந்தே 'நாடு' உழு தொழிலினரையும், நகரம் என்பது வணிகரையும் குறிக்கிறது என்பது தெளிவு.

## பசும் பையே தெய்வம் :

சித்ரமேழி சாஸனங்களை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அவற்றில் சித்ரமேழி பெரிய நாட்டவரைக் குறிக்கும் கல்வெட்டுகளில் சித்ரமேழியே தெய்வமாகவும், பசும்பையே வேலியாகவும் உடையவர் என்று குறிக்கப் படுகின்றனர். இவ்வாறு குறிக்கப்படுபவர் உழுதொழிலைத் தலையாகக் கொண்டவர்கள். உதாரணமாக திருக்கோயிலூர் கல்வெட்டு 'செங்கோலே முன்னாகவும், சித்ர மேழியே தெய்வமாகவும், செம்பொன் பசும்பையே வேலியாகவும் க்ஷமையினோடும் கருணை எய்தி, சமய தன்மம் இனிது நடாத்தி நிகழாநின்ற உயர்பெருங்கீர்த்தி முத்

தமிழ் மாலை முழுவதும் உணர்ந்த சித்ரமேழி பெரிய நாட்டோர்' என்று கூறுகிறது. இதிலிருந்து பெரிய நாட்டார் உழுதொழிலினர் என்பது தெளிவு. பல நாட்டு வியாபாரிகளைக் குறிக்கும் பிரான்மலைக் கல்வெட்டு 'செங்கோலையே முன்னுகைவும் செம்பொற் பசும்பையே தெய்வமாகவும் க்ஷமையினோடுங் கருணை எய்திச் சமய தன்மம் இனிது நடாத்தி' என்று வருகிறது. இங்கு பொன் நிறைந்த பையே 'பசும்பையே' தெய்வமாகக் கூறப்பட்டுள்ளது, வியாபாரிகள் பொருளீட்டும் சின்னமாகக் கருதப்பட்டதற்கு எடுத்துக்காட்டு.

திட்டகுடி :

இட்டகுடியில் இருந்த பெருமாள் கோயிலுக்கு 'எழுபத்தொன்பது நாட்டு விண்ணகர் எம்பெருமான் கோயில் எனப் பெயர் கல்வெட்டில் காணப்படுகிறது. இதிலிருந்து இக்கோயிலை எழுபத்தொன்பது நாட்டு பெரிய நாட்டார் எடுப்பித்தனர் என அறியலாம். இங்கு திருமுற்றத்தில் நானூற்றுவன் திருமண்டபம் ஒன்று இருந்தது. அதில் கூடியே சித்ரமேழி நாட்டார் முடிவு எடுத்தனர். அதன்படி அக்கோயிலில் பூமிதேவியை எடுப்பித்தனர். இவர்கள் பூமிதேவி புத்ரர் என்று குறிக்கப்படுவது சிறக்கத்தக்கதாகும். பல இடங்களில் இவர்கள் பூமிதேவியையும் ஸ்ரீதேவியையும் பிரதிட்டை செய்துள்ளனர். நிலமகளையும் திருமகளையும் இவர்கள் சிறப்பாகப் போற்றியதால் இவ்விரு தெய்வங்களையும் பல இடங்களில் எழுந்தருளிவித்துள்ளனர்.

திட்டகுடியில் இவர்கள் ஒரு தோரணம் எடுத்தனர். அத்தோரணம் 'மேழித் தோரணம்' என்று கூறப்படுகிறது. இதிலிருந்து இது கலப்பையின் உருவில் இருந்தது என அறியலாம். திட்டகுடி நாட்டாரும் நகரத்தாரும் எடுத்த முடிவுகளும் குறிப்பிடத்தக்கவை. ஆண்

டுக்கு ஏர் ஒன்றுக்கு ஒரு பதக்கு நெல்லும், ஆள் ஒன்றுக்கு ஐந்து காசும், இவர்கள் பணிமக்கள் இரண்டு காசும், இவ்வூர் கோபாலர் குடி ஒன்றுக்கு நாலு நாழி நெய்யும், கோயிலுக்கு வழிபாட்டுக்காக அளிக்க வேண்டும். இதைத் தண்டுவாருக்கு வெள்ளை அரிசி தூணிப்பதக்கு, பூரிஅரிசி கலம், பாக்கு ஐம்பது, வெற்றிலை பத்து, உப்பு நாநாழி, மிளகு உரி, எள்ளெண்ணை நாழியும் ஊரில் கொடுகக வேண்டும். அவ்வாறு தண்டவருவார்கள் வெண்கலம் தகர்த்தும், மண்கலம் உடைத்தும் கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டது.

## திருக்கோயிலூர் :

திருக்கோயிலூரிலும் சித்ரமேழி நாட்டார் கொடுத்த தானமும் இங்கு குறிப்பிடத் தகுந்தது. இவ்வூர் கோயிலுக்கும் 'எழுபத்தொன்பது நாட்டு பதினெண் பூமி சித்ரமேழி விண்ணகர்' என்று பெயர். திட்டைகுடியில் குறிக்கப்பட்டுள்ளது போல எழுபத்தொன்பது நாட்டாரும் பதினெண் பூமி நகரத்தாரும் இங்கு சித்ரமேழி குழுவாய் சமைந்திருந்தனர் என்பது தெளிவு இவர்கள் கொடுத்த தானமும் சிறப்பானது. '......சித்ரமேழி விண்ணகர் திருவிடைக்கழி நின்றருளின பெருமாள் கோயில் அனுதியாக மேழி திருத்தோரணமும், ஸ்ரீபூமி தேவி பிரதிஷ்டையும் பண்ணி முன்பே நம் தர்மமாய் போதுகையில் இந்நாயனுர்க்கு நாம் வைத்துக் குடுத்த வைப்பும் சமைப்பும், செடியும், முகமும், சாதனமும், ராஷ்டிர க்ஷோபங்களில் கைதப்புகையில் முன்பு வைத்துக் கொடுத்தபடியே ஆட்டைக்கு, ஏருக்கு பதக்கு நெல்லும், ஆளுக்கு குறுணி நெல்லும் வெட்டாள் உட்பட பெற வைத்துக் குடுத்தோம்' என்று கல்வெட்டு கூறுகிறது. இதிலிருந்து முன்பிருந்தே இங்கு சித்ரமேழி நாட்டார் தர்மம் கொடுத்திருந்தனர். அது போர்களில் கைமாறிப்

போய்விட்டது. ஆதலின் மீண்டும் தர்மம் அளித்தனர் என்றும், இவர்கள் பூமிதேவி பிரதிஷ்டையும், மேழித் தோரணமும் எடுத்திருந்தனர் என்றும் அறிகிறோம்.

**பிரான்மலை :**

பிரான்மலையில் உள்ள ஒரு கல்வெட்டு சித்ரமேழி குழுவினரின் தன்மையைக் குறிக்கும் தலையாய கல் வெட்டு ஆகும். இக் கல்வெட்டு ஸ்ரீ பூமிதேவி புத்ராளும் க்ஷார க்ஷீரோத பூர்விளும், ஜயந்தி சித்ர லோகாளும் ராஜ்ய பரிபாலகாளும் சர்வலோக ஹிதார்த்தாய சித்ர மேழி சாஸநம்' என்று தொடங்குகிறது. இம்மெய்க்கீர்த்தி இவர்களை ராஜ்ய பரிபாலகர் என்று கூறுவதிலிருந்து இவர்கள் அரசியல் செல்வாக்கு மிகவும் பெற்றிருந்தனர் என்று அறியலாம். இச்சாஸநம் திரிபுவனச்ரய பஞ்சசத வீரசாஸனம்' என்று கூறப்படுகிறது. இதிலிருந்து ஐந் நூற்றுவர் வீரசாஸனம் என்றும் பெயர் பெற்றது என்று அறிகிறோம். இவர்கள் ஸ்ரீவாசுதேவ சகாயகன் தேவீ மூல பத்ரலோப ஸ்ரீஐம்பொழில் பரமேச்வரிக்கும் பூமி தேவிக்கும் மக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இதிலிருந்து ஐம்பொழில் பரமேச்வரி என்ற தெய்வத் தையும் பூமி தேவியையும் சிறப்பாகத் தொழுதனர் என்றும் அறியலாம்.

இவர்கள் பதினெட்டு பட்டினத்திலும் முப்பத் திரண்டு வளர்புரத்தும் அறுபத்து நான்கு கடிகைத் தாவளத்தும் இருந்தனர் என்றும் கூறிக் கொள்கின் றனர். பதினெண் விஷயத்தார், பதினெண் பட்டடினத் தார், பதினெண் குடி வேளார் என்று பதினெட்டு பல கருத்துகளில் வழங்கப்படுவது, வரலாறு தெரியாத காலததில் சிறந்திருந்த ஏதோ ஒரு சிறப்பை பிற்காலத் தார் பலர் தங்களதாக கூறிக் கொண்டனர் என்று

முன்னரே கூறியுள்ளோம். ஆதலின் பதினெட்டு எவை என்று தெரியவில்லை. சிறந்த பட்டினங்களில் பதினெட்டை இணைத்து பதினெண் பட்டினங்கள் எனக் கூறியிருப்பார் என்பதில் ஐயமில்லை. அதே போன்று 'முப்பத்திரண்டு வளர்புறம் அறுபத்தி நான்கு கடிகைத் தாவளமும்' என்று குறிப்பது எண்களுக்கு கொடுக்கப் பட்ட சிறப்பே ஒழிய முப்பத்திரண்டு வளர்புரம் மட்டும் இருந்தன என்றோ கடிகைத் தாவளம் அறுபத்து நான்குதான் இருந்தன என்றோ கூற இயலாது. பல இருந்தன என்று கொள்வது மட்டும் பொருந்தும்.

பட்டினம், வளர்புரம், கடிகை, தாவளம் இவற்றுடன் 'தாவளத்திருந்து தன்மம் வளர்க்குஞ் செட்டியும், செட்டி சுரப்புத்தனும், தவறொன்றில்லாத தன்மை ஒழுக்கத்து கவறை தன்னோடு காச்யபன் விடுத்த சாமுண்டேச் வரியும், உருத்திரன் விடுத்த ஓலவாரியனும், உண்ணி யது முடிக்கும் ஒண்டிறல் வீரர் பன்னிருதரத்து பணி செய் மக்களும் முன்னியாக 'இச்சாஸனம் செய்யப் பட்டது என்று கல்வெட்டுக் கூறுகிறது. இவற்றிலிருந்து இவர்களைப் பற்றி பல புராணக் கதைகள் தெரிகின்றன. காஸ்யபன் விடுத்த சாமுண்டேச்வரியும், உருத்திரன் விடுத்த ஓலவாரியனும் இவர்களால் சிறப்பாக வழி படப்பட்டனர் என்பது தெளிவு. இவர்களது ஓலை நாயகம் உருத்திரனுல் விடுக்கப்பட்டவன் என்ற கருத்து இருந்தது.

முரசு ஒலித்துக் கொள்ளும் உரிமை பெற்றிருந்த இவர்கள் வாழ்ந்த வீதிகளில் முத்தமிழ்ப் பாடலோடு ஆடல் ஓவா விழாவும் வேள்வியும் விளங்கின. இவர்கள் வாழ்ந்த இடங்களில் தெங்கு, பலா, மாஞ்சோலை, சந்தன வேலி, சண்பகப் பொழில், வாழை, கமுகு, கொடி முல்லை, பூவை, கிள்ளை முதலிய நிறைந்து விளங்கின.

அவ்வாறு சிறந்த இவர்கள் வாட்டம் இன்றி கூட்டம் பெருகஅறம் வளரக் கலிமெலிய புகழ்பெருக பகைபணிய திசையனைத்துஞ் செவிடுபட செங்கோலே முன்னாகவும் செம்பொற் பசும்பையே தெய்வமாகவும் க்ஷமையினோடு கருணை எய்த சமயதன்மம் இனிது நடாத்துபவர்கள் எனக் குறிக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்று குறிக்கப்பட்ட போதிலும் பல்வேறு பிரிவின ராகக் குறிக்கப்படுகின்றனர். இக்கல்வெட்டில் கீழ்வரும் பிரிவுகள் குறிக்கப்பட்டுள்ளன.

1. நான்கு திசை சமஸ்தலோக பதினெண் விஷை யத்தோர்.

2. எட்டை வட்டை இடைவட்டைகளில் திசை விளங்கு திசையாயிரத்து ஐந்நூற்றுவர்.

3. ஏறு சாத்து இறங்கு சாத்து விளங்கு திசை யாயிரத்து ஐந்நூற்றுவர்.

4. அற்றை வட்டை அருவட்டை நாரத்தரை நலவத் தரை திசை விளங்கு திசை ஆயிரத்து ஐந் நூற்றுவர்.

5. அறங்கள் தரங்களில் திசை விளங்கு திசையா யிரத்து ஐந்நூற்றுவர். (எதுகை மோனையாக குறிக்கப்பட்டுள்ள எட்டை வட்டை இசை வட்டை, ஏறுசாத்து இறங்குசாத்து, இற்றை வட்டை, அருவட்டை, முதலிய இச் சொற் களுக்கு என்ன பொருள் என்று தெளிவாகத் தெரியவில்லை).

6. நாடு நகரங்களில் திசை விளங்கு திசையாயிரத்து ஐந் நூற்றுவர்.

7. கேரள சிங்க வளநாட்டு அருவிமாநகரமான குல சேகர பட்டினதது நகரத்தார்.

8. துவராபதி நாட்டு எறிபடை நல்லூர் வடமட்டை நகரத்தார்.

9. புறமலை நாட்டு புதுத்தெருவான சேரநாராயண புரத்து நகரத்தார்.

10. கடலடையாதிலங்கை கொண்ட சோழ வள நாட்டு உறத்தூர் கூற்றத்து கொடும்பாளூர் மணிக்கிராமத்து நகரத்தார்.

11. திருக்கோட்டியூர் மணியம்பலத்து நகரத்தார்.

12. கேரள சிங்க வளநாட்டு அளகாபுரமான செழிய நாராயணபுரத்து நகரத்தார்.

13. ஐம்பொழில் வளநாட்டு கல்வாயல் நாட்டு சுந்தர பாண்டியபுரத்து நகரத்தார்.

14. களவழி நாட்டு அளகை மாநகரமான ஜயங் கொண்ட சோழப் பெருந்தெரு நகரத்தார்.

15. மண்டலிகள் கம்மரப் பெருந்தெரு நகரத்தார்.

16. பன்னிரண்டு நகரத்து ஜயங்கொண்ட சோழபுரம் உள்ளிட்ட நகரத்தார்.

17. கருவூர் கண்ணபுரம், பட்டாலி, திலயூர், இராச ராசபுரம். கிரனூர் உள்ளிட்ட நகரத்தார்.

ஆகியோர் கூடி இத்தானம் அளித்தனர்.

இதிலிருந்து பல நாடுகளில் பரவி வாணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், இவர்கள், தாங்கள் ஒரே இனத்தவர் என்று கூடி தங்கள் இனத்துக்கென முடிவெடுத்து, அதை தங்கள் இனத்தவர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி செய்யும் சமுதாய அமைப்புப் பெற்றிருந்தனர் என்பது தெளிவு. இவ்வளவு பரந்த சமுதாய அமைப்பு சமயத்தின் அடிப்படையில் இருந்ததால் இது இனிதே நடந்தது என்பதில் ஐயமில்லை. 'சமய தன்மம் இனிது நடாத்தி' என்று கூறும் இவர்களது மெய்க்கீர்த்திகள் இதை எடுத்துரைக்கின்றன. சமய அடிப்படையில் இன்றேல் பல்வேறு அரசர்களால் ஆளப்பட்ட நாடுகளில் இருந்தோர் இவ்வித அமைப்பில் வாழ்தல் இயலாத காரியம். இவர்கள் அனைவரும் நகரத்தார் என்று குறிக்கப் படுவது நோக்கத் தகுந்தது. இவர்கள் வாழ்ந்த இடங்களும் புரம் என்று குறிக்கப்படுவதும் பெருந்தெரு என்று குறிக்கப் பெறுவதும் சிறப்பாக அறியற்பாலதாம். இவை வணிக அமைப்பைக் குறிப்பவையாகும்.

இம்முடிவுக்கு கையொப்பமிட்டவர்களில் சிலர் வேளார், செட்டி, கோனூர், பிள்ளை, முதலிய பெயர் கொண்டவர்களாக உள்ளனர். ஆக இப்பெயர் கொண்டவர்கள் வைசியர்களும் ஆவர் என்பது தெளிவு. சிலர் வணிகராதித்தர் என்றும் பட்டம் கொண்டவர்கள். சிலர் ஊர் கிழார்களாவும் குறிக்கப்படுகின்றனர். சிலர் சமய சக்கரவர்த்தி என்றும், சமய மந்திரி என்றும் அழைக்கப் படுகின்றனர். இப்பெயர்கள் இச்சமுதாய அமைப்பில் இருந்த செல்வாக்கை குறிக்கிறது போலும். ஒருவர் சமய மாதா என்று அழைக்கப் படுகிறார். ஒருவர் குதிரைச் செட்டி என்றும் அழைக்கப்பெறுகிறார்.

## வாணிகப் பொருள்களும் வரியும் :

இக்கல்வெட்டு மேலும் பல துறைகளில் சிறப்புடையது. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் வணிகர்கள் என்ன என்ன பொருள்களில் வாணிகம் புரிந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாக இக்கல்வெட்டு விளங்குகிறது. இவ்விலைப் பொருள்கள் வகைப்படுத்தப்பட்டுள்ள முறையையும், வியாபாரம் எவ்வளவு சீராக அமைந்திருந்தது என்பதையும் எடுத்தியம்புகிறது. உப்பு, அரிசி, நெல், பயிற்றம், அவரை, துவரை, ஆமணக்கு, பாக்கு, மிளகு, மஞ்சள், சுக்கு, வெங்காயம், கடுகு, சீரகம், இருப்பு, பருத்தி, நூல், புடவை, மெழுகு, தேன், சந்தனம், அகில், பன்னீர், சவரி மயிர், கற்பூரத் தைலம், சாந்து, புழுகு, சவ்வாது, செமாடு, குதிரை, ஆனை முதலிய வாணிகப் பண்டங்கள் குறிக்கப்படுகின்றன.

இப்பொருள்கள் ஒவ்வொன்றும் தலைச்சுமை, பாக்கம், பொதி, வண்டி என அளவுகளால் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு காசு வரி அளிக்கப்படல் வேண்டும் என்றும் கல்வெட்டுக் கூறுகிறது. தேன், பனிநீர் முதலிய திரவப் பொருள்கள் குடம் என்னும் கொள் அளவை கொண்டு நிச்சயிக்கப்பட்டன. சாந்து, புனுகு, சவ்வாது ஆகிய வாசனைப் பொருள்கள் 'கொம்பு' என்னும் அளவைகளால் நிச்சயிக்கப்பட்டன.

பொருள்களுக்கு இடப்பட்ட வரியும் அன்றைய நிலவரத்தை தெரிவிக்கின்றன. உப்புக்கும் நெல்லுக்கும் வரி ஒரே அளவாக இருந்தது. நெல்லைப் போல் இருமடங்கு அரிசிக்கு இடப்பட்டது, பருத்தியைப் போல் இருமடங்கு நூல்களுக்கு இடப்பட்டது. நூலுக்கும் இரும்புக்கும் ஒரே வரி. வாசனைப் பொருள்களாகிய சந்தனம், அகில், பன்னீர், சவரிமயிர் முதலியவற்றிற்குத்தான் மிகவும் அதிகமாக வரி காணப்படுகிறது. அவற்றிற்கு எவ்வாறு

வரி இடப்பட்டது என்பது தெளிவாகக் கூறப்படுவதால் அதன் பட்டியல் இங்கே குறிக்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| உப்பு | தலைச்சுமை | ஒன்றுக்கு | காசு | ½ |
| | பாக்கம் | ,, | ,, | ½ |
| | பொதி | ,, | ,, | 1 |
| | வண்டி | ,, | ,, | 10 |
| நெல் | பாக்கம் | ,, | ,, | ½ |
| | பொதி | ,, | ,, | 1 |
| | வண்டி | ,, | ,, | 10 |
| அரிசி | பாக்கம் | ,, | ,, | 1 |
| | பொதி | ,, | ,, | 2 |
| | வண்டி | ,, | ,, | 20 |
| பயிற்றம் | பாக்கம் | ,, | ,, | ½ |
| | பொதி | ,, | ,, | 1 |
| | வண்டி | ,, | ,, | 20 |
| அவரை துவரை | பாக்கம் | ,, | ,, | ½ |
| | பொதி | ,, | ,, | 1 |
| | வண்டி | ,, | ,, | 20 |
| ஆமணக்கங் கொட்டை | பாக்கம் | ,, | ,, | ½ |
| | பொதி | ,, | ,, | ½ |
| | வண்டி | ,, | ,, | 10 |
| பாக்கு | பாக்கம் | ,, | ,, | 2 |
| | பொதி | ,, | ,, | 4 |
| மிளகு | பாக்கம் | ,, | ,, | 2½ |
| | பொதி | ,, | ,, | 5 |
| மஞ்சள் | பாக்கம் | ,, | ,, | 1½ |
| | பொதி | ,, | ,, | 3 |
| சுக்கு | பாக்கம் | ,, | ,, | 1½ |
| | பொதி | ,, | ,, | 3 |
| வெங்காயம் | பாக்கம் | ,, | ,, | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| கடுகு, சீரகம் | பொதி | ,, | ,, | 2 |
| மெழுகு | தலைச்சுமை | ,, | ,, | 4 |
| | பாக்கம் | ,, | ,, | 5 |
| | பொதி | ,, | ,, | 10 |
| தேன் | குடம் | ,, | ,, | 4 |
| கொள்கைப் பட்டு | தலைச்சுமை | ,, | ,, | 1 |
| | பாக்கம் | ,, | ,, | 1 |
| | பொதி | ,, | ,, | 2 |
| சந்தனம் | பொதி | ,, | ,, | 30 |
| அகில் | சுமை | ,, | ,, | 30 |
| பட்டுப்பட்டாவள் | சுமை | ,, | ,, | 30 |
| பன்னீர் | குடம் | ,, | ,, | 30 |
| சவரிமயிர் | சுமை | ,, | ,, | 30 |
| கற்பூரத் தைலம் | சுமை | ,, | ,, | 20 |
| சாந்து, புழுகு, ஜவ்வாது | கொம்பு | ,, | ,, | 15 |
| செமாடு | ஒன்றுக்கு | ,, | ,, | 1 |
| குதிரை | ஒன்றுக்கு | | அச்சு | ½ |
| ஆனை | ஒன்றுக்கு | | அச்சு | ½ |

நகரத்தார் பொருள்கள் வைத்து விக்கும் இடங்களை மடிகை என்று அழைத்தனர். சாரிகைக் கோட்டை என்னும் சுங்கக் கோட்டைகளும் இருந்தன. மன்னார்குடியில் இரண்டு மடிகைகள் இருந்தன. புவனேகவீரன் மடிகை, விக்ரம பாண்டியன் மடிகை என அவை பெயர் பெற்றிருந்தன. அவை சாரிகைக் கோட்டையில் இருந்தன. அந் நகரத்தார் சாரிகைக் கோட்டையில் புகும் பாக்கு பொதி ஒன்றுக்கு உழக்குப் பாக்கு கொண்டு அதை முதலாகக்

கொண்டு அவ்வூரில் இருந்த ஐயங்கொண்ட சோழீச்சுர முடையாற்கு திருவமுதுக்கு வைத்தனர் (40/6). இதே போன்று சாரிகை கோட்டையில் புகும் மிளகு பொதி ஒன்றுக்கு உழக்கு மிளகும், புடவை கட்டு ஒன்றுக்கு பணம் மாகாணியும் கொண்டு கறியமுதுக்கு வைத்தனர் (41/6). கோட்டைக்குள் வராமல் புறத்தே சென்றாலும், இவ்வாறே கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தனர்.

# 12.

# அந்தணர் என்னும் அறவோர் பலரே

## குடியேற்றம் :

அந்தணர்கள் தமிழகத்துப் பழங்குடிகள் அல்ல என்பதும், இந்தியாவின் வடபால் இருந்து வந்து இங்கு வாழ்ந்த மக்களோடு கலந்து ஒன்றி வாழத்தலைப்பட்டவர்கள் என்பதும் எல்லா வரலாற்று அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். இவர்கள் எப்பொழுது தென்னகத்தில் முதலில் குடியேறினர் என்பது குறித்து கருத்துவேறுபாடுகள் உண்டு. பௌத்தர்களும் அமணர்களும் வருவதற்கு முன்னரே இவர்கள் வந்தவர்கள் என்று கொள்ள இடமிருக்கிறது. பிராம்மணர்கள் மட்டும் கூட்டமாகத் தமிழகக்துக்கு வந்தனரா, அல்லது க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களுடன், ஆரிய சமுதாயமாக வந்தனரா என்று கூறப் போதிய சான்றுகள் இல்லை: தனிப்பட்ட கூட்டமாக வந்தனர் என்று கொள்வதைக் காட்டிலும் பிற வர்ணத்தாருடன் வந்தனர் என்று கொள்வதே பொருந்தும்.

எப்படி இருப்பினும் ஆற்றல் மிகுந்த தலைமையில் இக்குடியேற்றம் நடந்திருக்க வேண்டும். தமிழகத்தில் அகத்திய முனிவரும் கவுண்டின்ய முனிவரும் இது போன்ற குடியேற்றத்துக்கு தலைமை ஏற்றனரோ என்று ஐயுற வேண்டியுள்ளது. முதலில் அகத்தியர் தலைமையிலும் பின்னர் கவுண்டின்யர் தலைமையிலும் இக்குடியேற்றம் ஏற்பட்டது எனலாம். இக்குடியேற்றம் பெரும் அளவு நடந்திருக்க வேண்டும். இன்றைய தமிழக பிராம்மணர்களில் பிருஹத் சரணம் என்னும் ஒரு பிரிவு உண்டு. பிருஹத் சரணம் எனில் பெரும் செலவு (குடிப் பெயர்வு) எனப் பெயர் பொருந்தும், ஆதலின் இவர்கள் ஆதி பிராம்மணக்குடியாக இருக்கக்கூடும்.

இவர்கள் தமிழகத்தில் மட்டுமின்றி ஈழத்திலும் குடியேறி கடல் கடந்த நாடுகளிலும் குடியேறினர். மௌரியப் பேரரசன் அசோகனுல் பௌத்தசமயத்தவர் ஈழத்துக்கு அனுப்பப்படபோது அங்கு அந்தணர் இருந்தனர் என்றும் அவர்கள் பௌத்த மதத்தைத் தழுவினர் என்றும் அந்நாட்டு நூல்களிலிருந்து அறிகிறோம்.

தமிழகம் வந்த பிராம்மணர்கள் வேதம் வல்லவ ராயினும், வழக்கு மொழியாக பிராகிருதம் பேசினர் எனக் கொள்ள இடமிருக்கிறது. இவரது பெண்டுகள் பிரா கிருத மொழியே பேசினர்.

க்ஷத்திரியர்களும் வைசியர்களும், சூத்திரர்களும் எவ் வாறு தமிழகத்தில் ஒன்றி வாழத்தலைப்பட்டனரோ அதே போன்று பிராம்மணர்களும் வாழத்தலைப்பட்டனர். இவ்வாறு கலந்த சமுதாயத்தையே சங்க இலக்கியங்கள் சித்தரிக்கின்றன. சிறுசிறு கதைகளாகத் திகழ்ந்தவை காலப்போக்கில் வளர்ச்சியும் விரிவும் பெற்று பல புரா ணங்களாக மிளிர்ந்தன என்றும் அவை கி. பி. 2ம் நூற்

றூண்டின் பின்னர் அதிகம் தோன்றின என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். இலக்கியங்களில் குறிக்கப்படும் அந்தணர்களது வாழ்க்கை புராண வளர்ச்சியைக் காட்டிலும் வேத மரபையே அதிகம் கூறுகின்றன.

District Branch Library, Kasturba Hospital, Triplicane,

## கோத்திரங்கள் :

சங்ககாலத்திலேயே இவ்வந்தணர் பல கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாகத் திகழ்ந்தனர் எனச் சங்க இலக்கியங்களிலிருந்து அறியலாம். கவுண்டின்யர், வாதுளர், கோசிகர், ஆத்ரேயர், காசியபர் ஆய கோத்திரங்களைச் சார்ந்தோர் சங்க காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்தனர் என அவர்களது பெயர்களிலிருந்து அறிகிறோம். பல்லவர் காலத்தில், அதாவது சுமார் கி. பி. 8ம் நூற்றூண்டில் 32க்கும் மேற்பட்ட கோத்திரங்களைச் சார்ந்தவர்கள் தமிழகத்திலும் அதை ஒட்டிய தென் ஆந்திர தேசத்திலும் இருந்தனர்.

| | | | |
|---|---|---|---|
| சாண்டில்ய | ஆவிஷ்ட | கௌண்டின்ய | ஹாரீத |
| பாரத்வாஜ | ஆத்ரேய | சாவர்ணி | லோஹித |
| கௌதம | கௌசிக | மௌத்கல | வாசிஷ்ட |
| தாராயண, | வத்ஸ | சாங்கிருத்யாயன | கார்க்க |
| பராசர | விஷ்ணுவிருத்த | மாஷல | அக்னிவேச்ய |
| காச்யப | ரதீதர | காமக | சாங்கர்ஷ |
| கண்வ | மாத்தர | குத்ஸ | சாலவத |
| வாதூல | பவுருகுத்ஸ | கபி | ஜாதகர்ண |

முதலிய கோத்ரங்கள் செப்பேடுகளில் காணப்படுகின்றன. பாண்டியரின் ஸ்ரீவரமங்கலம் செப்பேடு, பார்க்கவ கோத்ரத்தையும், தளவாய்புரம் செப்பேடு வான கோத்திரத்தையும் குறிக்கின்றன.

## சூத்திரங்கள் :

இவ்வந்தணர்களது அன்றாட வாழ்க்கைகளையும் சடங்குகளையும் கிருஹ்ய சூத்திரங்கள் என்னும் நூல்கள் கட்டுப்படுத்துகின்றன. இவற்றில் பல கோத்ரங்களைச் சேர்ந்தவர் ஒரு சூத்திரத்தைப் பின்பற்றுவது உண்டு. இச் சூத்திரங்கள் இயற்றிய முனிவர்களின் பெயரால் பெயர் பெற்றன. பல்லவர் காலத்தில் ஆபஸ்தம்ப, பிராவசன, வாஜஸனேயி, ஹிரண்யகேசி, பவிஷ்ய, சந்தோக, கலா ராச்ய, காலார்ச்ச, அக்னிவேச்ய முதலிய சூத்திரங்களைப் பின்பற்றினோர் இருந்தனர் என்று காசாக்குடி, புல்லூர் முதலிய செப்பேடுகளால் அறியலாம், ஸ்ரீவரமங்கலம் செப்பேடு ஆச்வலாயன சூத்திரத்தைக் குறிக்கிறது. பௌதாயன கல்பத்தைச் சேர்ந்த ஒருவர், 8-ம் நூற்றாண்டு பாண்டியர் செப்பேட்டில் குறிக்கப்படுகிறார். தமிழகத்தில் ஆபஸ்தம்பம், போதாயனம், ஆச்வலா யனம் ஆகிய சூத்திரங்கள் இன்று வரையிலும் பெருவாரி யாக பின்பற்றப்படுகின்றன.

## உட்பிரிவுகள் :

பிராம்மணர்களில் பல்வேறு கோத்திரங்களும், சூத்தி ரங்களும் இருந்தமை கண்டோம். ஆனால், தேசத்தாலும், காலத்தாலும், சமுதாயத்தில் பெற்ற செல்வத்தாலும், செல்வாக்காலும், சிலர் தங்களை உயர்ந்த குடிகள் எனவும், பிறரைத் தாழ்ந்தோர் எனவும் கூறிக் கொள்ளத் தலைப் பட்டனர். அந்தணர்களுக்குள் பல பிரிவுகள் சங்க காலத்தில் இருந்தனவா என்பது தெளிவாகத் தெரிய வில்லை. கோத்திரத்தாலும் சூத்திரத்தாலும் ஏற்பட்ட வேறுபாடுகளைத் தவிர வேறு உட்பிரிவுகள் சங்க காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், கி. பி. 6ம் நூற்றாண்டிற்கும் முன்னரே உட் பிரிவுகள் தோன்றி விட்டன, என்பதற்குச் சான்றுகள் உள்ளன. திருஞான

சம்பந்தர் 'சைவ அந்தணர்' என்று அறிகிறோம். கி. பி. 7-ம் நூற்றாண்டிலிருந்து அந்தணர்களிடம் சைவர்கள், வைணவர்கள், வேதம் ஓதுவோர் என மூன்று பிரிவுகளைக் காண்கிறோம். சைவர்கள், 'சிவாசாரியர்' என அழைக்கப்பட்டனர். பல்லவமன்னன் பரமேச்வரவர்மன் கூரத்தில் எடுத்த கோயிலில் வழிபாட்டுக்காக அனந்தசிவாசாரியருக்கும் அவர் வழிக்கும் நிலம் அளித்தான் என செப்பேடு கூறுகிறது. தமிழகத்தில் கி. பி. 11-ம் நூற்றாண்டின் இறுதி வரை திகழ்ந்த வைணவர்கள் பெரும்பாலோர் வைகானச மரபைச் சேர்ந்தவர்கள். விகனஸ் என்ற முனிவரின் மரபைப் பின்பற்றியதால் இப்பெயர் பெற்றனர். இம்மரபு முற்றிலும் வேதமரபு. பிற சமயங்களிடம் வெறுப்பின்றி சிவபிரான், துர்க்கை முதலிய பிற தெய்வங்களையும் வழிபடும் சமயமாகத் திகழ்ந்தது. பல நூற்றுக்கணக்கான கல்வெட்டுகளில் கையொப்பமிட்டவர்கள் வைகானசர் என்று அழைக்கப்படுகின்றனர். வைணவர்களில் பாஞ்சராத்ரம் என்னும் மற்றொரு மரபு உண்டு. அது வேதத்திற்கு அப்பால் தோன்றி, தனித்து வளர்ந்தது. பிறகு பல்வேறு கருத்துக்களை உட்கொண்டது. இம்மரபைத்தான் வைணவ சமயக் குரவர் இராமானுஜர் பின்பற்றினார். இராமானுஜரின் வைணவசமய சீர்திருத்தத்தின் பயனாக தமிழகத்தில் வைகானச மரபைச் சேர்ந்த பல கோயில்களும், மக்களும் பாஞ்சராத்ர மரபை பின்பற்றினர் என்று கூறுவர்.

அந்தணர்களில் மூன்றாவது பிரிவு வேதம் ஓதுவோர். இவர்களுக்குத் தனியாகப் பல நிலங்கள் அளிக்கப்பட்டன. இவற்றைக் கொண்டு வேதம் ஓதி வந்தனர். பல கோயில்களில் அவ்வப்போது நடக்கும் சந்தி பூஜைகளிலும் விழாக்களிலும் வேதம் ஓதினர். இவர்களில் நான்கு வேதம் ஓதுவோர், (சதுர்வேதி) மூன்று வேதம்

ஓதுவோர் (திரிவேதி), இருவேதம் ஓதுவோர் (திவிவேதி) உண்டு. இவர்கள் ஸ்மிருதிகளின் வழி நிற்பவராதலின் ஸ்மார்த்தர் என்று அழைக்கப்பட்டனர்.

தமிழகத்து அந்தணர்களது வாழ்க்கை முறை பற்றியும், தொழில்கள் பற்றியும் அறிய பல இலக்கியங் களும் கல்வெட்டுகளும் துணைபுரிகின்றன.

குழவிப் பருவம் :

அந்தணக் குழந்தையின் பிறப்பும், வளர்ப்பும் சடங்கு களும், ஞானசம்பந்தர் வரலாற்றிலிருந்து சிறப்பாக அறி யலாம். குழந்தைப் பேற்றால் தந்தையார் பெரும் மகிழ்வு கொண்டார். அன்று மறையோர்கள் சூழ ஓமங்கள் செய் தார். "மீதணியும் நெய்யணி விழாவொடு சிறப்பார்" என்பதிலிருந்து குழந்தைக்கு நெய் தடவி குளிப்பாட் டினர் எனக் கொள்ளலாம். ஜாதகம் எழுதுவிக்கும் சடங்கும் நடத்தப் பெற்றது. வீட்டில் விளக்குகள் வைத்து அலங்கரித்தனர். திண்ணைகளில் நீர் நிரம்பிய குடங்களும், வெண்முளைப் பாலிகைகளும் வைத்தனர். பொன் முதலான பல பொருள்களைத் தானமாக அளித் தனர். வேப்பந்தழையைக் காப்பாகக் கட்டினர். இதை 'நிம்ப முதலான கடிநீடுவினை' என்று பெரிய புராணம் கூறும். கிருஹ்ய சூத்ரங்களில் குறிப்பிட்ட முறைப்படி குழந்தை பிறந்த பத்து நாட்களிலும் சடங்குகள் செய்தார் என்று சேக்கிழார் கூறுவார்.

"தூய திருமாமறை தொடர்ந்த நடைநன்
மேயவிதி ஐயிருதினத்திலும் விளைத்தார்".

பதினொன்றாம் நாள் நாமகரணநாள். அழகிய தொட்டி லில் காலையில் குழந்தையை இடுவர். குழந்தைக்கு பல காப்புக்கள் அணிவிப்பது மரபு. ஞானசம்பந்தரின்

தந்தை பிற காப்புகள் தேவையில்லை என்று திரு நீற்றையே காப்பாக இட்டார் என்று பெரிய புராணம் கூறுகிறது. பின்னர் தமிழும் மறையும் கூறத் தாலாட்டினர். திருமுலைப்பால் குழந்தைக்கு அன்று கொடுப்பதும் உண்டு. குழந்தையின் வளர்ச்சியை செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், தவழும் பருவம் என்றெல்லாம் இலக்கியங்கள் கூறும். குழந்தைக்கு முடி எடுத்தல் என்பது ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இது பிறந்த ஓர் ஆண்டுக்குள் நடைபெற்றிருக்க வேண்டும். திருஞானசம்பந்தரைப் பற்றிய வரலாற்றில் செங்கீரைப் பருவத்திற்கு முன்னரே முடி எடுக்கப்பட்டது என்று அறிகிறோம்.

ஐந்து ஆண்டு நிரம்பியதும் அந்தந்த மரபுக்கு உகந்த பாக்கள், சிறுவர்க்கு சொல்லித் தரப்பட்டன. சண்டேசுர நாயனார்க்கு ஐந்தாண்டு நிரம்பியதும் ஆகமங்கள் கற்றுத் தரப்பட்டன. அந்தணச் சிறுவர்களுக்கு ஏழாம் ஆண்டில் பூணூல் சடங்கு செய்யப்பட்டது. இதை 'புகழும் பெருமை உபநயனப் பொருளில் சடங்கு' என்று சேக்கிழார் குறிப்பார். பூணூல் பூட்டியதிலிருந்து சிறுவர் வேதம் ஓதத்தலைப்பட்டனர்.

அந்தணர் பிள்ளைகளை அரச குலத்தோர் வளர்ப்புப் பிள்ளையாகக் கொள்வதும் உண்டு. சுந்தரரை நரசிங்க முனையரையர் என்னும் குறுநில மன்னன் வளர்ப்பு பிள்ளையாக அன்புடன் வளர்த்தான். இதை மகன்மை கொள்ளல் என்று பெரிய புராணம் குறிக்கிறது.

**அந்தணர் கல்வி :**

வேதங்களையும், அவற்றின் அங்கங்களையும் அறிவது அந்தணர்களின் தலையாய கல்வியாகத் திகழ்ந்தது. எவ்வளவு ஆண்டுகள் அவர்கள் தொடர்ந்து கல்வி பயின்றனர்

என்று கூறச் சான்றுகள் இல்லை. அவர்களது பதினாரும் வயதில் மணம் செய்து வைக்கப்பட்டது. ஆதலின் ஏழாவது வயதிலிருந்து ஒன்பது ஆண்டுகளாவது கல்வியில் செலவழித்தனர் எனக் கொள்ளலாம். மணஞ் செய்துகொண்டதும் கல்வியை நிறுத்தியதாகத் தெரிய வில்லை. திருமுருகாற்றுப்படை சில அந்தணர் நாற்ப தாண்டுகள் பிரம்மச்சரியம் காத்து, வேத நெறியில் நின்றனர் என்று கூறுகிறது. கல்விக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இவர்களைக் கருதலாம்.

ஐந்தாம் வயதிலேயே அந்தணச் சிறுவர்களுக்கு கல்வி ஆரம்பமாகியது என்று முன்னர் கூறினோம். கல்வியின் தொடக்கம் எழுத்து அறிவதிலிருந்து தொடங்கியது. ஒவ்வொரு ஊரிலும் எழுத்தறிவிக்கும் ஆசான் இருந்தனர். அவர்களுக்குத் தனியாக நிலங்கள் தானமாக அளிக்கப் பட்டிருந்தன. அவற்றிற்கு அக்ரவிருத்தி என்று பெயர். இவ்வாறு எழுத்தறிவித்த ஆசானைத் தெய்வமாகவே தமிழ் மக்கள் கொண்டனர், என்பதற்கு 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்னும் முதுமொழி சான்று. ஐந்தாவது வயது முதல் ஏழாவது வயதுவரை எழுத்து, தோத்திரம், எண்சுவடி முதலியன கற்றனர்.

ஏழாவது வயது முடிந்ததும் பிராம்மணச் சிறுவ னுக்கு பூணூல் அணிவிக்கப்பட்டது. அதிலிருந்து வேதங் கள் கற்றுத் தரப்பட்டன. வேதத்தை பகுதி பகுதியாக பிரித்து திரும்பத் திரும்ப ஓதி என்றும் நினைவில் இருத்திக் கொள்வதே கற்பிக்கப்பட்ட முறை ஆகும். இதை துரு சொல்லுதல் என்று எட்டாம் நூற்றாண்டுச் செப்பேடு கூறு கிறது. இன்றும் வந்துள்ள இம்முறையை 'திருவை' சொல்லுதல் என்று அழைக்கின்றனர். வேதத்தை பதம், கிரமம், கணம் என்று பிரித்துப் படித்தனர் என்று

எட்டாம் நூற்றாண்டு செப்பேட்டிலிருந்து அறியலாம். இருக்கு யஜுஸ், சாமம் ஆகிய மூன்று வேதங்களும் கற்கப்பட்டன. ஒரு சில இடங்களில் அதர்வண வேதமும் கற்றுத் தரப்பட்டது. அந்தணர்கள் வேதங்களைத் தவிர பிற கல்விகளையும் கற்றனர். வியாகரணம், நியாயம், மீமாம்சம், கல்பம், கிருஹ்யம், தர்மங்கள், வாத்தியங்கள், பாஷ்யங்கள், ராமாயணம், மாபாரதம். புராணங்கள், சிவாகமங்கள், வைணவ ஆகமங்கள், பதஞ்சலியின் யோக சூத்ரங்கள் முதலியவையும், மருத்துவ நூல்களாகிய வாக்படரின் அஷ்டாங்க ஹிருதயம் போன்றவைகளையும் கற்றனர். இவை தவிர முத்தமிழிலும் இவர்கள் சிறப்புற்றனர் என்று அறிகிறோம்.

இவ்வாறு கற்ற ஒவ்வொரு துறையிலும் பொதுக் கல்வி, சிறப்புக் கல்வி என இருவகைக் கல்விகள் இருந்தன. இவர்கள் இருவகைக் கல்விகளையும் ஒரே இடத்திலோ அல்லது வெவ்வேறு இடங்களிலோ கற்றனர். எண்ணாயிரம் என்ற இடத்தில் இரு கல்விகளையும் ஒரே இடத்தில் கற்றுக் கொடுத்தனர் என்று அறிகிறோம்.

### கல்விச்சாலைகள் :

சாலை, வித்யாஸ்தானம், கடிகை, மடம் என்று பல்வேறு பெயர்களில் கல்வி கற்றுத்தரும் ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டன. இவை பெரும்பாலும் கோயிலைச் சார்ந்தவையாகவே பணிபுரிந்தன. இவற்றிற்கு அரசர்களும், செல்வந்தர்களும் ஏராளமான பொருள் அளித்திருக்கின்றனர். கல்வி கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உணவுக்கும், உடைக்கும் ஒவ்வொருவர்க்கும் இவ்வளவு அரிசி என்று வகுக்கப்பட்டு நிபந்தங்கள் அளிக்கப்பட்டன. படுப்பதற்குப் பாய், தேய்த்துக் குளிக்க வாரந்தோறும் எண்ணெ, இரவில் ஒரு விளக்குஆய அனைத்தும் கொடுக்கப்பட்டன என திருமுக்

கூடல் கல்வெட்டால் அறிகிறோம். இதிலிருந்து கல்வி இலவசமாகத்தான் கற்றுக் கொடுக்கப்பட்டது என்றும் கல்விகற்கும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உடை அளிக்கப்பட்டது என்றும் அறிகிறோம். பொதுக் கல்வி கற்போருக்கு நாள் ஒன்றுக்கு 6 நாழி நெல்லும், சிறப்புக் கல்வி கற்போருக்கு 10 நாழி நெல்லும் கொடுக்கப் பட்டது. பார்த்திவசேகரபுரம் என்ற இடத்தில் கி. பி. 8-ம் நூற்றாண்டில் ஒரு சாலை நிறுவப்பட்டது. இங்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவன் பூமி உள்ளவனாய் இருக்கக் கூடாது என்று குறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பொருள்படைத்தவர்களை விட்டு ஏழை மாணவர்களுக்கு மட்டும் வசதி செய்து கொடுத்த சாலைகள் இருந்தன என்பது தெளிவு. பொதுக் கல்வி பெற்றவர்கள் சாத்ரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். சாத்திரம் படித்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டனர் போலும். சட்டர்கள் என்று அழைக்கப்பட்டவர்களும் இவர்களே போலும்.

எண்ணாயிரம் என்ற இடத்தில் இருந்த சாலையில் 270 மாணவர் பொதுக் கல்வியும், 70 மாணவர் சிறப்புக் கல்வியும் பெற்றனர். திரிபுவனி என்ற இடத்தில் 260 மாணவர்களும் திருமுக்கூடலில் 40 மாணவர்களும் கல்வி கற்க வகை இருந்தது என்று அறிகிறோம். எண்ணாயிரத்தில் 340 மாணவர்களுக்கு 14 ஆசிரியர்கள் இருந்தனர். திரிபுவனியில் 240 மாணலர்களுக்கு 12 ஆசிரியர்களும், திருமுக்கூடலில் 40 மாணவர்களுக்கு 4 ஆசிரியர்களும் இருந்தனர். இவற்றிலிருந்து ஒரு ஆசிரியருக்கு சராசரி 20 மாணவர்களுக்குமேல் கற்பிக்கும் நிலை இல்லை என்று அறிகிறோம். திருமுக்கூடலில் வேதம் கற்கும் 10 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரும், வியாகரணம் கற்கும் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரும் இருந்தனர்.

## கல்விச்சாலையில் புகவு

பொதுக் கல்வி பெற்று பின்னர் சிறப்புக் கல்விக்கு வரும் மாணவரை எவ்வாறு சேர்த்துக் கொள்வது என்பதையும், சேர்ந்த பின்னர் எவ்வாறு கற்றனர் என்பதையும் பார்த்திவ சேகரபுரம் செப்பேடு கூறுகிறது. இதை பிரவேசகஞ் செய்தல் என்று கூறுகிறது. அதற்குரிய விதிகள். வியாகரணம், மிமாம்சை, புரோஹிதம், ஆகியவற்றில் பொதுப்படைக் கல்வி பெற்றிருக்க வேண்டும். மூன்று வேதங்களிலும் பொதுவாக அறிய வேண்டியவற்றை அறிந்திருக்க வெண்டும். ஐந்து சட்டர்கள் முன்னிலையில் இவற்றைத்தான் அறிவேன் என்றும், தனக்கு நிலம் ஏதுமில்லை என்றும் ஐந்து தீக்களின் மத்தியில் சத்தியம் செய்யவேண்டும். அவனையே இச்சாலைக்குள் அனுமதித்தனர். இதை செப்பேடு "பிரவேசகஞ் செய்யும் பரிசு, வையாகரண மீமாய புரோஹிதப் புன்பாய், புவிசிரியம் இலன், திரிராட்ய வியவஹாரத்துக்கு வேண்டும் ஒத்துடையான், இது சத்யம் என்று ஐவர் சட்டரைக் கொண்டு பஞ்சக்கம் செய்தான், புகவு பெறுவான்" என்று கூறுகிறது.

இதிலிருந்து சில செய்திகளை அறிகிறோம். கல்விக் கூடத்தில் அனுமதிக்க மாணவர்களே தேர்வு வைத்தனர். தன் தகுதியையும், செல்வ நிலையையும் குறித்து சேரவிருக்கும் மாணவனே சத்யம் செய்தால் போதும்.

கற்கும் முறையைப் பற்றியும் இச்செப்பேடு சிறப்பாகக் கூறுகிறது. 'வாரம் ஓதும் பரிசு சூத்ரத்தாலும் சூத்ராரணத்திலும் துரு சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு கிரமவாரம் அடுத்தோதுவது. சாகையிலும் கல்பத்திலும் கணத்திலும், துரு சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு வாரம், நாலு பாதத்திலும் துரு சொல்லி ஒன்பது புகவினில் அகத்தூகத்தில் இரண்டு வாரம்'

என்று கூறுகிறது. படிப்படியாகத் தான் கற்கவேண்டிய கல்வி முழுமையையும் நெட்டுருவாக அறிதல் இம்முறையின் அடிப்படை அம்சம். 'அகத்தூ ஹத்தில்' என்று செப்பேடு கூறுவது இதையே.

## சாலை ஒழுக்கம்

இது தவிர கல்விச் சாலையில் படிக்கும்போது மாணவர் ஒருவரை ஒருவர் பிழைக்கப் பேசக்கூடாது. பேசினால் ஐந்து காணம் தண்டமிட வேண்டும். ஒருவரை ஒருவர் குட்டினால் குட்டியவன் ஒரு காசும், குட்டு உண்டவன் ஐந்து காணமும் தண்டமிடவேண்டும். ஒருவரை ஒருவர் படைக்கலத்தால் தாக்கிக் கொண்டால் சாலையிலிருந்து வெளியேற்றப்படுவார். படைக்கலம் பிடித்துக்கொண்டு வகுப்புக்கு செல்லக்கூடாது. சூது ஆடுதலும் கூடாது, வேலைக்காரிகளை அமர்த்திக் கொள்ளக்கூடாது என விதிகள் கூறுகின்றன. மேலும் சட்டர்கள் வயது முதிர்ந்தவர்கள் ஆகையாலும், சிறப்புக் கல்வி கற்க வந்தவராகையாலும் சாலைக்குரிய நெல்லை குடியானவரிடமிருந்து அவர்களே வசூலித்தனர் போலும். உழும் குடிகளைத் தாங்களே நீக்குவதோ, அல்லது பலாத்காரமாக அவர்களிடமிருந்து பொருள் கொள்வதோ கூடாது. அவ்வாறு கொண்டவர்கள் தண்டிக்கப்பட்டனர். அது மட்டுமின்றி ஊர்ச் சபைக்கு கடமை செலுத்தவேண்டும். அதாவது செய்ய வேண்டிய பணியிருந்தால் ஒவ்வொரு வேதத்தையும் படிப்போர், வேதத்துக்கு ஒருவராக மூவர் கட்டாயம் சென்று சபை இட்ட பணியை செய்தல் வேண்டும். செய்யத் தவறினால் 54 காணம் தண்டம் கொடுக்கவேண்டும். மாணவர்கள் பொது வாழ்வுக்குத் தேவையான கட்டாய சேவையும் செய்தல் வெண்டும் என்று இதனால் அறிகிறோம். சாலையில் பணிபுரிபவர்கள் மாணவர்களைத் திட்டினால் ஒரு காசு தண்டிக்கப்பட்டனர் என்று பார்த்திவ சேகரபுரம் செப்பேடு கூறுகிறது.

**கல்விச்சாலையும் அரசும் :**

இவ்வாறு கல்வி போதிக்கும் சாலைகளை அரசர்கள் மிகவும் ஆர்வத்தோடு நிறுவி வளர்த்தனர். இவற்றில் காஞ்சியில் இருந்த கடிகை மிகவும் சிறப்பாக விளங்கியது. கடிகை என்பது உயர் கல்வி கற்பிக்கும் நிறுவனம் என்றும், கல்விப் போட்டி நிகழும் இடம் என்றும் குறிப்பர். கி. பி. 5-ம் நூற்றாண்டிலேயே காஞ்சிக் கடிகை புகழ் பெற்றிருந்தது. கதம்ப குலத்தைத் தோற்றுவித்த மயூரசர்மன் என்பவன் தன் குருவுடன் காஞ்சி கடிகையில் உயர் கல்வி கற்க வந்தான் என்று அறிகிறோம். கைலாயநாதராலயத்தை தோற்றுவித்த பல்லவ மன்னன் இராஜசிம்மன் கடிகையை திருத்தியமைத்து ஏராளமான செல்வம் அளித்தான். ஆய்குல மன்னன் கோக்கருநன் தடக்கன் என்னும் மன்னன் பார்த்திவ சேகரபுரத்தில் விஷ்ணுவுக்கு கோயில் எடுத்து, 95 சட்டர்கள் படிக்க ஒரு சாலையை ஏற்படுத்தினான். பாண்டிச்சேரிக்கு அருகில் பாகூர் என்ற கிராமத்தில் ஒரு வித்யாஸ்தானத்துக்கு பல்லவ மன்னன் நிருபதுங்கன் மூன்று ஊர்களை அளித்தான். எண்ணாயிரத்தில் சாலையில் படிக்கும் மாணவருக்கும், ஆசிரியருக்கும் வேண்டியவற்றிற்கு முதல் இராஜேந்திர சோழன் பொருள் அளித்தான். இவ்வாறு அரசர்களே இச்சாலைகள் சிறக்க முன்னின்று வகை செய்தனர் என்று அறியும்போது இங்கு சிறந்த கல்வி போதிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

வேதங்களில் தைத்திரீய யஜுர் வேதம் சிறப்பாகப் படிக்கப்பட்டது. சாம வேதத்தில் வாஜசனேயம், சந்தோகம், தலவகாரம் ஆகிய மூன்று பிரிவுகளும் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன. வடமொழி இலக்கணங்களில் முதலிடம் பெற்றது ரூபாவதாரம் என்னும் நூல். பாணினியின் வியாகரணம் சிறப்பாகக் கற்கப்பட்டது. மீமாம்சையில், பிராபாகரரது மீமாம்சையே தமிழகத்தில்

சிறப்பாகக் கற்கப்பட்டது. வேதாந்தம் கற்பிக்கும் ஆசிரியருக்கு மற்ற ஆசிரியரைக் காட்டிலும் நெல் அதிகம் அளிக்கப்பட்டது. ஆனால் பணம் கொடுக்கப்படவில்லை. வேதாந்தம் கற்றுக் கொடுப்பவர் பணம் வாங்கிக் கொள்ளக்கூடாது என்று ஒரு மரபு உண்டு. மற்ற ஆசிரியர்களுக்கு நெல்லும் அவரவர் பாடங்களில் ஒவ்வொரு அத்யாயம் முடிந்ததும் பணமும் கொடுக்கப்பட்டன. வியாகரணம் கற்றுக் கொடுப்பவருக்கு 8 கழஞ்சும், மீமாம்சை கற்றுக் கொடுப்பவருக்கு 12 கழஞ்சும் கொடுக்கப்பட்டன.

இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட சாலைகளில் அந்தணச் சிறுவர்கள் மட்டும் கல்வி கற்றார்களா அல்லது பிறரும் கல்வி கற்றனரா என்று தெளிவாகக் கூற இயலாது. பெரும்பாலான இடங்களில் அந்தணர் படித்தது சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. ஆனால் சில இடங்களில் படித்தவர்கள் இருபிறப்பாளர் என்று அழைக்கப்படுகின்றனர். இருபிறப்பாளர் என்பவர் அந்தணர், அரசர், வைசியர் ஆகிய மூன்று குடிகளுமே ஆவர். ஒரு சில குறிப்புகளிலிருந்து அரசியல் நூல்களும் படைக்கலப் பயிற்சியும் சாலைகளில் கற்றுத் தரப்பட்டனவோ என்று ஐயப்பட வேண்டியுள்ளது. சில கடிகைகளும், சாலைகளும் மிகவும் வலிவுள்ளவையாக, அரசர்களும் கண்டு ஐயுறும் அளவிற்கு இருந்தன. காஞ்சியிலிருந்த கடிகை, சத்யசேனன் என்பவரிடமிருந்தது என்றும் அதை ஸ்கந்தசிஷ்யன் என்ற மன்னன் கைப்பற்றினான் என்றும் அறிகிறோம். கதம்ப குலத்தை நிறுவிய மயூரசர்மன் காஞ்சியில் கடிகையில் சேர்ந்து கற்க வந்தபோது அங்கிருந்த குதிரைக் காவலனுடன் நேரிட்ட சண்டையால் பில் பிடிக்க வந்த கரம் வாளேந்தி தனியான ஒரு அரசையே நிறுவியது என்று தாளகுண்டா கல்வெட்டுக் கூறுகிறது. பார்த்திவ சேகரபுரம் சாலையில் சட்டர்கள் படைக்கலம்

கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளக் கூடாது என்றும் படைக்கலம் எடுத்துச் செல்லக் கூடாது என்றும் விதி காண்கிறோம். படைக் கலம் தாங்கும் இவர்கள் அந்தணர்களா அல்லது அரசர், வைசியர் குலத்தையும் சார்ந்தவர்களா என்பது தெளிவாக இல்லை. அந்தணர்களிலும் பலர் சேனாதிபதிகளாகத் திகழ்ந்திருப்பதால் இதை நிச்சயமாகக் கூற இயலவில்லை. இச்சாலை காந்தளூர்ச் சாலையைப் பின்பற்றி அமைக்கப்படுகிறது என்று செப்பேடு கூறுகிறது. காந்தளூர்ச் சாலை என்பது மிகவும் வலிவுள்ளதாக திகழ்ந்துள்ளது. இராஜராஜன் தான் அடைந்த வெற்றிகளில் காந்தளூர்ச் சாலையை வெற்றி கண்டதை சிறப்பாகக் கூறுகிறான். 'காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி' என்று கூறிக் கொள்கிறான். ஒப்பற்ற ஒரு அரசனுடன் போரிடும் அளவுக்கு அங்கு கலன்கள் நிறைந்திருந்தன. முதல் குலோத்துங்க சோழன் அச்சாலையை இரு முறை வென்றான். 'இருகால் சாலை கலமறுத்த தண்டினான்' என்று அவன் புகழப்படுகிறான். இவற்றிலிருந்து காந்தளூர்ச் சாலையில் இருந்தவர் அந்தணர்களாயின் அவர்கள் போர்த் திறன் மிகுந்து இருந்தவர்கள் என்று கொள்ள வேண்டும்.

## அந்தணர்களின் மணவினை :

அந்தணர்களுக்கு நடைபெற்ற மணவினைச் சடங்குகளைப் பற்றி கல்வெட்டுகளில் சான்றுகள் இல்லாவிட்டாலும் இலக்கியங்களிலிருந்து எவ்வாறு நடைபெற்றது என்று கூற இயலும். சிறப்பாகப் பெரிய புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனார்க்கும், திருஞானசம்பந்தருக்கும் நடைபெற்ற மணவிழா விரிவாகவும், தெளிவாகவும் கூறப்பட்டு உள்ளது. ஆண்டாள் 'வாரணமாயிரம்' எனப்பாடும் பதிகத்திலும் இது சிறப்பாகக் காணப்படுகிறது.

அந்தணக்குல ஆண்மகனுக்கு 16வது வயதிலேயே மணம் செய்வித்தனர் என்று அறிகிறோம். பெண்ணிற்கு 12 வயதில் மணம் செய்தனர். ஆண் வீட்டார் பெண்ணைக் கேட்டு அனுப்புதல் மரபு. சுந்தரருக்கு சடங்கவியாரின் பெண்ணைக் கேட்டு அனுப்பினர் எனப் பெரிய புராணம் கூறுகிறது. திருஞானசம்பந்தருக்கு உரிய வயது வந்தவுடன் 'மறைச் சடங்குகள் காட்டவரும் வேள்வி பல புரிய ஒரு கன்னிதனை வேட்டருள வேண்டும்' எனக் கேட்டனர். திருஞானசம்பந்தர் அதற்கு ஒப்புக் கொண்ட பின்னர் அவர் தந்தை மறையோர்களுடன் திருநல்லூர் பெருமணம் சென்றெய்தி நம்பாண்டார் நம்பியின் பெண்ணைக் கேட்டார். அதே போன்று ஆண்டாள் கண்ணனை தான் மணந்து கொண்ட கனவில், இந்திராதி தேவர்கள் எல்லாம் வந்து தன்னை மணம் பேசினர் என்று கூறுகிறாள். பெண் வீட்டார் சென்று பிள்ளையைக் கேட்கும் இக்கால மரபு பண்டைய மரபு அல்ல என்பது தெளிவாகிறது. ஆண்மகனின் ஜாதகத்தையும், பெண்ணின் ஜாதகத்தையும் ஒப்பு நோக்குவது பற்றி எக்குறிப்பும் இல்லை.

பெண் வீட்டார் மகளைக் கொடுக்க சம்மதித்தவுடன் கணிதநூல் வல்லுநர் நக்ஷத்திரம் முதலிய கண்டு நல்ல நாளை நிச்சயித்தனர். பின்னர் உற்றார் உறவினருக்கு 'மணநாள் ஓலை' அனுப்பினர். அன்று வீட்டை மங்கலக் கோலம் கொண்டு அலங்கரித்தனர். திண்ணைகளுக்கு செஞ்சாந்து பூசினர். பாலிகை வைத்தனர். மங்கல வாத்யங்களும் இசைக்கப்பட்டன. மாமறை நூல் விதிச் சடங்குகள் நடைபெற்றன.

மணஞ்செய்யும் நாளுக்கு முதல் நாள் மணமகனுக்கு காப்பு அணிவித்தல் மரபு. இதைக் காப்பு நாள் என்று அழைப்பர். காப்பு பூணும் நாளன்று மணமகனுக்கு

காப்பை நகர்வலம் செய்வித்து நவமணி அணிந்த சித்ர விதான மண்டபத்தில் 'வைதிக விதிச் சமாவர்த்தனம்' செய்தனர். செந்நெல்லும் வெண்மையான அரிசியும் பரப்பினர். அதன் மீது நூல் சுற்றி மாலை அணிவித்து, வாசநீரிட்டு, அரசிலை தருப்பை இட்ட கலசம் வைத்தனர். மணிவிளக்கும் பரப்பில் வைத்து நாத மங்கலம் முழங்க வேதகீதம் முழங்க பூஞ்சயனத்தின் மீதிருந்த மணமகன் கரத்தில் காப்பு அணிவித்தனர். காப்பு நாணில் பொன்னால் ஆன நாணும் இருந்தது. இதைப் பெரிய புராணம் 'மைப்பொன் நாண் காப்புச் சேர்த்தார்' என்று கூறும். இவ்வாறு மணமகன் விரதம் பூணுவது மணமகன் வீட்டில் நடைபெறும் சடங்கு.

திருமணத் திருநாளன்று, மங்கலம் இசைக்க மண மகனை எழுப்பி காலைக்கடன் முடிந்தவுடன், மாலையும் தாரும் சூடி, மஞ்சனச் சாலை புகுந்து, வாச நெய் பூசி, ஆசனத்தில் அமர்த்தி, தூ நீர் ஆட்டி அவனை அலங்கரித் தனர். பட்டாடை பூட்டி தலையை ஈரம் உலர்த்தி, மலரணிவித்தனர். பனிநீர் (பன்னீர் என இப்போது அழைக்கப்படுகிறது) சந்தனம், மன்மதச் சாந்து முதலிய கலவையைப் பூசி கையில் பவித்திரம் அணிவித்தனர் பின்னர் தன் குல தெய்வத்தை வணங்கி ஊர்வலமாக-பெண்ணின் வீடு சென்றனர். ஞானசம்பந்தர் சிவிகை மீதேறி வாத்யங்களும், பதிகங்களும் மறையும் விளங்க பெண்ணின் வீடு சென்றார். சுந்தரமூர்த்தி அரசனால் வளர்க்கப்பட்டவர். ஆதலின் அரசனுக்கும் வைதீக மரபுக்கும் ஏற்ப அலங்கரித்துக்கொண்டு குதிரைமீது ஊர்வலமாகப் பெண்ணின் வீடு சென்றார்.

ஊருக்கு வந்த மணமகனையும் உற்றார் சுற்றத்தையும் பெண் வீட்டார் எதிர்கொண்டு அழைத்தனர். நிறை குடம், தூபம், பாலிகைகள் ஏந்தி சுண்ணம், அறுகு,

பொரி முதலிய வீசி சந்தனக் கலவை நீர்தெளித்து மறையவர், மடவார் சூழ எதிர்கொண்டழைத்தனர். ஞானசம்பந்தர் பெண்ணின் ஊராகிய நல்லூர் பெரு மணம் சென்றதும் கோயிலுக்குச் சென்று சிவபெருமானை வணங்கி அருகினில் இருந்த ஒரு மடத்தினுள் புகுந்தார். அங்கு மஞ்சனமாடி வெண் பட்டாடை பூண்டு அலங் கரித்துக்கொண்டார் என்று பெரிய புராணம் கூறுகிறது. ஞானசம்பந்தர் அலங்கரித்துக்கொண்ட அணிகளைக் கூறுமிடத்து, கோவை மணிசரி, தொங்கல், கடிசூத்திரம், உதரபந்தனம், முத்தின் பூணூல் கோவை, முத்துமாலை, வைரமோதிரம், கையில் தண்டையும் சரியும், முழங்கைப் பொட்டு, கழுத்தில் கண்டிகை முதலிய பூண்டு முத்து மகுடம் பூண்டார் எனச் சேக்கிழார் கூறுவார்.

பெண்ணுக்கும் காப்பணிவித்து அலங்கரித்தனர். மறையோர்கள் எல்லாம் எதிரே சென்று மணமகனை எதிர்கொள்ள, அரிசிலை, தருப்பை தோய்ந்த நீரைக் கல சத்திலிருந்து இருக்கோதித் தெளிக்க மணமகன் பூப்பந்தர் வந்தடைந்தார். அப்போது மங்கல மடந்தையர் எல்லாம் பொற்குடங்களில் நீர், மணி, விளக்கு, தூபம், மாலைகள், பாலிகைகள், சந்தனக் கலவை முதலிய ஏந்தி எதிர் கொண்டனர். அங்கு மணிப்பீடத்தின்மீது மணமக்களை அமர்த்தி மங்கலமகளிர் பாட்டுக்கள் பாடி, கலசங்களி லிருந்து நீர் ஒழுக்கி, அவரை வலம்வந்து விதிமுறை வினைகள் செய்தனர். பின்னர் மங்கல மாதரார் உள்ளே செல்ல மணமகள் வீட்டினுள் சென்றார்.

உள்ளே விதானம் கட்டி அலங்கரித்த இடத்தின்கீழ் மலர்த்தவிசின்மீது அமர்ந்தார். பெண்ணின் தந்தையும் தாயும், மணமகனின் காலை பாலும், நீரும் ஊற்றிக் கழு வினர். பெண்ணின் தாய் ஊற்ற தந்தை கழுவினார். அந் நீரை தலைமேலும் அங்குள்ளோர் மீதும் தெளித்து

ஊற்ற ஆண்மகனின் கரத்தில் பெண்ணின் கரத்தை எடுத்து வைத்து பெண்ணின் தந்தை தன் கோத்திரத்தை எடுத்துக்கூறி நீர் வார்த்து 'என் பாவையை அளித்தேன்' எனக்கூறிக் கொடுத்தார் (பெரிய புராணம்).

அதன்மேல் நடந்த சடங்குகளை ஆண்டாள் தன் பதிகத்தில் குறித்துள்ளாள். மங்கல வாத்தியம் முழங்க வரி சங்கங்கள் ஊத பெண்ணின் கரத்தைப் பற்றிய பின்னர் தீயை வலம் வந்தனர். பெண்ணின் கால்விரலை மணமகன் பற்றி அம்மி மிதிக்கச் செய்தனர். பின்னர் மணமகனின் கைமேல் பெண் கையை வைத்து பொரியை எடுத்து தீயில் இடுவர். (இதை இன்று பொரி ஓமம் அல்லது லாஜ ஹோமம் என்பர்). இலக்கியங்கள் அந்தணர் மணத்தை முற்றிலும் நமக்குத் தெரிவிக்கின்றன.

## அந்தணர் மனைவியர் :

அந்தணரின் மனைவியை பிராமணி என்றும், பாரியை என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. அந்தணன் சேனாபதியாகத் திகழ்ந்த போது அவன் மனைவியைத் தேவி என்றும் மாராசி என்றும் அழைப்பதும் உண்டு (636/5 ; 637/5) அந்தணர்கள் பல மனைவிகளை மணந்திருந்தனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. பிராம்மணர் தங்கள் குலத்தில் மட்டுமின்றி பிற குடியிலும் பெண்களைக் கொண்டிருந்தனர். இதை அனுலோமம் என்பர். பிராம்மணப் பெண்கள் க்ஷத்ரிய, வைசிய, சூத்திரக் குடியில் மணப்பதும் உண்டு. இதை பிரதிலோமம் என்பர். அனுலொம பிரதிலோம வழியில் பிறந்த மக்களைச் சமுதாயம் ஒதுக்கித் தள்ளிவிடவில்லை. அவர்களுக்கு உரிய அந்தஸ்து அளித்து அவருக்குச் சில தொழில்களையும் தனியாக ஒதுக்கியது. இவற்றை அறநூல்கள் வகை செய்து விதிகள் செய்துள்ளன.

**தொழில்கள் :**

அந்தணர்கள் வேதம் ஓதுதல் தவிர பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். கல்விக்காகத் தங்களை அர்ப்பணித்து 48 ஆண்டுகள் பிரம்மசரியங் காத்து வேத நெறியில் நின்ற அந்தணர்களை திருமுருகாற்றுப்படை குறிக்கிறது. இதை முன்னரே குறிப்பிட்டோம். வேதம் வல்ல பல அந்தணர்களுக்கு அரசர்கள் தானம் அளித்தனர். இவ்வாறு அரசர்களிடம் தானம் பெற்றவர்கள் கல்வியிற் சிறந்தவர்களாயிருந்தனர். காசாக்குடி செப்பேடுகள் ஒரு பிராம்மணரின் கல்வி கேள்விகளை கீழ்வருமாறு குறிக்கின்றன. அவர் வேதக்கடலைக் கரைகண்டவர். சாம வேதத்தை சுவரத்துடன் நன்கு பாடவல்லவர். சந்தஸ், கல்பம், வியாகரணம், ஜோதிஷம், நிருத்தம். சிக்ஷை. சந்தோவிச்சித்தி ஆகிய அங்கங்களுடன் வேதங்களைத் தானும் அறிந்து, பிறருக்கும் போதிக்கும் வல்லமை நிறைந்தவர். சொல், சொற்றொடர், பொருள் இவற்றை நன்கு அறியும் திறன் பெற்றவர். சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் நன்கு திளைத்தவர். கர்மகாண்டத்திலும், ஞானகாண்டத்திலும் பண்டிதர். உலகியலிலும் உக்திகளிலும், கலைகளிலும் சிறந்தவர். காவியம், நாடகம், ஆக்யாயிகம், இதிஹாசம், புராணங்கள் ஆகியவற்றை நன்கு கற்றவர். கர்மங்களை நன்கு அனுஷ்டிப்பவர்" என்று அச்செப்பேடு கூறுகிறது.

பிராம்மணர்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு பிரமதேயம் என்று பெயர். தங்களுக்குக் கிடைத்த நிலங்களைத் தாங்களே அனுபவிக்காமல் தங்கள் குலத்தவருக்கும் கொடுத்து செல்வத்தைப் பகிர்ந்து கொண்டு இவர்கள் வாழ்ந்தனர். பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்சடையன் வேள்விக்குடி என்னும் கிராமத்தை கொற்கை கிழான் என்னும் பிராம்மணருக்கு கொடுத்தான். அதை அவர் மூன்று கூறுகளாக்கி இரண்டு கூறுகளை 50 பிராம்

மணர்களுக்குக் கொடுத்தார். ஒரு கூற்றைத் தான் கொண்டார். அதிலும் தன் தம்பிமார்க்கு நான்கு பங்கும், தன் சிற்றப்பனூர் மக்களுக்கு ஆறு பங்காக்கியும் கொடுத்தார். நிலம் பெற்றவர்கள் பிரசஸ்தி பாடியவர்க்கும் செப்பேட்டில் எழுதிய தச்சனுக்கும் நிலமும் மனையும் கொடுத்தார். இவ்வாறு தங்களுக்குக் கிடைத்ததை பிறருடன் பங்கு கொண்டு வாழ்ந்த பிராம்மணர்கள் உண்டு. வேதம்வல்ல பிராம்மணர்களுக்கு அவர்களது ஆற்றலுக்காக மட்டுமின்றி, அரசன் தன் ஆயுர், பலம், வெற்றி இவற்றிற்காகவும் நிலம் அளித்தான். இவ்வாறு அளிக்கப்பட்டவை சூரிய கிரஹணம், சந்திர கிரஹணம் ஆகிய விசேஷ நாட்களில் அளிக்கப்பட்டன. வேதங்களையும் பிற சாத்திரங்களையும் அறிந்து தான் ஓதியும் பிறருக்கு ஓதுவித்தும் வந்த அந்தணர்களைப் பற்றி பல கல்வெட்டுகள் கூறுகின்றன.

## அந்தண அமைச்சர்கள்

பல அந்தணர்கள் அரசனுக்கு அமைச்சர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். பல்லவ மன்னன் நந்திவர்மனுக்கு மந்திரியாகத் திகழ்ந்தவன் பிரும்மதுவஜராஜன் என்னும் அந்தணன். இவன் பிருஹஸ்பதியை ஒத்தவன் என்றும் நீதி நிபுணன் என்றும் முக்கிய மந்திரி என்றும் அழைக்கப் பெறுகிறான். இவனை வீரன் என்றும் தீரன் என்றும் செப்பேடுகள் புகழ்கின்றன. புல்லூர்ச் செப்பேடுகளில் நாகசர்மன் என்னும் அந்தணன் நந்திவர்மனின் மந்திரியாகக் கூறப்படுகிறான். அவனுக்குப் பிரும்மாதிராஜன் என்னும் பெயர் இருந்தது என்றும் அவன் பிருஹஸ்பதிக்கு சமமானவன் என்றும் க்ஷாத்ரவித்தையில் சிறந்தவன் என்றும் சிவபக்தன் என்றும் அழைக்கப்பெறுகிறான். பிருஹஸ்பதியின் பெயரால் தர்மசாத்திரம் ஒன்று இருந்தது. அது பல்லவர்களிடை மிகவும் சிறப்புற்றிருந்தது போலும். சின்னமனூர் செப்பேடுகள் பாண்டிய மன்ன

னுக்கு பட்ட சோமாசி என்னும் அந்தணன் தர்மாத்யக்ஷனாக இருந்தான் என்றும் அவன் அரசனுக்கு அறம் போதித்தவன் (தர்மோபதேஷ்டா) என்றும் மந்திரியாயிருந்தான் என்றும் கூறுகின்றன. பாண்டிய மன்னன் பராந்தக வீரநாரயணன் அளித்த தளவாய்புரம் செப்பேடுகளுக்கு ஆணத்தியாகத் திகழ்ந்தவன் இளையாநக்கன் என்னும் அந்தணன், இவன் ஹரிசரண கமலசேகரன் ஆயிரத்தைந் நூற்றுவன் திருமகிழ் இளையாநக்கன் என்று அழைக்கப்படுகிருன். இவன் நரேந்திர மந்திரி என்றும் அதிகாரி என்றும் குறிக்கப்படுகிருன். சோழ மன்னர் சுந்தரசோழருக்கு அநிருத்த பிரம்மாதிராஜன் என்பவர் அமைச்சராக இருந்தார். மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனின் மந்திரியாகத் திகழ்ந்த போது அவருக்குத் தென்னவன் பிரம்மராஜன் என்ற பெயர் இருந்தது.

## அறக்களத்து அந்தணர்

பல அந்தணர்கள் அரசர்களுக்கு அறம் உரைக்கும் அதிகாரிகளாகத் திகழ்ந்தார்கள். பட்டசோமாசி என்பவன் அரசனுக்கு தர்மோபதேஷ்டா என்று சின்னமனூர் செப்பேடுகளில் குறிக்கப்பெறுகிருன். வேதசாத்திரங்களை அறிந்தவனும் சோமபாகம் செய்தவனுமான தாதபட்டன் என்பவன் பராந்தக வீரநாராயணனுக்குத் தர்மாத்யக்ஷனாக பணிபுரிந்தான். அவர்களை தருமவினைஞர் எனச் சிலப்பதிகாரம் குறிக்கும்.

## அந்தணச் சேனதிபதிகள் :

பல அந்தணர்கள் அரசனது சேனதிபதிகளாக பணிபுரிந்திருக்கிருர்கள்.

முதல் இராஜராஜ சோழனுக்குச் சேனதிபதியாகத் திகழ்ந்தவன் கிருஷ்ணன் இராமனுன மும்முடிச் சோழ

பிரும்மமாராயன் என்பவன். இவன் அந்தணர் குலத்தவன் அந்தணக் குலத்தவர் அரசனின் கீழ் உயர்ந்த பதவி வகித்த போது அளிக்கப்பட்ட பட்டமே பிரும்மமகாராயர் அல்லது பிரும்மாதிராயர் என்னும் பெயர்களாகும். இராஜராஜனின் வெற்றிகளில் கணிசமான பகுதிக்கு காரணமாக இவ்வந்தணச் சேனாதிபதி திகழ்ந்திருக்க வேண்டும். இராஜராஜன் கட்டுவித்த பெருங்கோயி லுக்கு திருச்சுற்றை இச்சேனாதிபதி கட்டுவித்தான். இராஜராஜ சோழதேவர் திருவாய் மொழிந்தருள இத் திருச்சுற்று மாளிகை எடுப்பித்தான் கிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழ பிரும்மமாராயன் எனக் கல் வெட்டுக் கூறுகிறது. இதிலிருந்து இராஜராஜன் இவனி டத்தில் பெரும் மதிப்பு வைத்திருந்தான் என்று அறிய லாம்.

இராஜராஜனின் மகன் இராஜேந்திர சோழனிடத் திலும் கிருஷ்ணன் இராமன் சேனாதிபதியாகத் திகழ்ந் தான். அவனுக்குப் பின்னர் அவன் மகன் மாராயன் அருண்மொழியான உத்தமசோழ பிரும்மமாராயன் என் பவன் சேனாதிபதியாய் இருந்தான். தமிழகத்தை ஆண்ட தலைசிறந்த இருமன்னர்களுக்கு தந்தையும் மகனுமாக இரு அந்தணர்கள் சேனாதிபதிகளாகத் திகழ்ந்துள்ளார் கள். அருண்மொழியான உத்தமசோழ பிரும்மமாராயன் இராஜேந்திரன் காலத்தில் கோலாரில் ஒரு கோயில் கட் டினான்.

இவன் தண்டநாயகன் என்று கூறப்படுகிறான். தண்டநாயகன் உய்யக்கொண்டார் வளநாட்டு கேரளாந் தகச் சருப்பேதி மங்கலத்து நராக்கன் இராமன் அருண் மொழியான உத்தம சோழ பிரும்மமாராயன் என்று இவனைக் கல்வெட்டுக் குறிக்கிறது (651/5). கேரளாந் தகச் சதுர்வேதி மங்கலத்து நக்கன் ஸ்ரீ கிருஷ்ணன்

இராமனுன இராஜேந்திர சோழ பிரும்மமாராயர் தேவி யார் ஸ்ரீ கிருஷ்ணன் கௌசலையார் என்பவள் ஒரு கல் வெட்டில் குறிக்கப்படுகிருள் (636/5). இதே ஊரில் இருந்து மற்ருெரு சேனுதிபதி வந்துள்ளான், அவன் இராமன் அருண்மொழியான உத்தமசோழ பிரும்ம மாராயன் என்பவன். அவன் மனைவி மாராசி என்று அழைக்கப்படுகிருள். அவள் பெயர் தேசப்பன் செம்பி யன் மாதேவி என்பது (637/5).

இராஜேந்திரனின் மகன் இராஜாதிராஜனிடம் அப்பி மையன் இராஜேந்திர பிரும்மமாராயன் என்பவன் தண்ட நாயகனுக இருந்ததோடு அரசனின் பிரதிநிதியாக மகா ராஜவாடி ஏழாயிரம் என்னுமிடத்தை ஆண்டான். இரண்டாம் இராஜேந்திர சோழனுக்கு ஜயங்கொண்ட சோழ பிரும்மாதிராஜன் என்ற அந்தணன் சேனுதிபதி யாக இருந்தான். குலோத்துங்க சோழனுக்கு ஞான மூர்த்தி பண்டிதன் ஆன மதுராந்தக பிரும்மாதிராஜன் என்பவன் சேனுதிபதியாகத் திகழ்ந்தான். ஆக தலை சிறந்த சோழ மன்னர்கள் அனைவரிடத்திலும் அந்தணர் கள் சேனுதிபதிகளாகத் திகழ்ந்திருக்கிருர்கள்.

அந்தண அதிகாரிகள் :

பல அந்தணர்கள் அரசனின் அதிகாரிகளாகத் திகழ்ந் திருக்கிருர்கள். இவர்கள் அரசனின் அருகிலிருந்து அவனிடும் ஆணைகளை வாய்மொழி கேட்டு எழுதும் திரு மந்திர ஓலை என்னும் பொறுப்பிலும், திருமந்திர ஓலை நாயகம், திருமந்திர ஓலை நாயகக் கண்காணி, புரவுவரி திணைக்களம் முதலிய பல பிரிவுகளில் பணிபுரிந்திருக் கின்றனர். ஊர் நிலங்களை அளித்தல், வகை செய்தல், முதலிய பணிகளையும் ஊர்க் கணக்கு முதலியவைகளையும் செய்து உள்ளனர் என்பதை ஏராளமான கல்வெட்டு கள் கூறுகின்றன. முற்காலப் பல்லவர் செப்பேட்டிலும்

பாண்டியர் செப்பேட்டிலும் ஆணத்தி என்னும் பொறுப்பில் பல அந்தணர்கள் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் அரசனது ஆணையை நிறைவேற்றுவோர் என்னும் பொறுப்பில் இருந்தவர்கள்.

முதல் பராந்தக சோழனுடைய காலத்தில் ஊராட்சி முறையைக் குறிக்கும் உத்தரமேரூர் கல்வெட்டு புகழ் வாய்ந்தது. இதில் அரசனின் ஆணையை உத்தர மேரூருக்கு பெற்று வந்து சபை கூட்டத்துடன் இருந்து ஆணையை நிறைவேற்றியவன் ஸ்ரீவங்கநகர் கரஞ்சை கொண்டைய கிரமவித்த பட்டனாகிய சோமாசிப் பெருமாள் என்னும் அந்தணன் ஆவன். இது போன்று நூற்றுக் கணக்கான எடுத்துக் காட்டுகளைக் கல்வெட்டுகளில் இருந்து பெறலாம்.

சில சோழர் கல்வெட்டுகள் அரச அதிகாரிகள் அனைவரையும் விரிவாகக் குறிக்கின்றன. இவர்களில் பல மூவேந்த வேளார், பிரும்மாதிராஜன் முதலிய பட்டம் பெற்றவர்கள். இவற்றிலிருந்து அந்தணர்கள் பல்வேறு குடியினரோடு சம அந்தஸ்து உடையவர்களாகக் காணப் படுகிறார்களே ஒழிய, ஜாதியின் காரணத்தால் இப்பதவிகளில் இவருக்கு எவ்வித உயர்வும் கொடுக்கப்படவில்லை என்பது தெளிவு. எல்லா மக்களுடனும் கலந்து ஒன்றாக இவர்கள் பணிபுரிவதைப் பல சோழர் கல்வெட்டுகள் குறிப்பதிலிருந்து அரசாங்கப் பணிகளில் அந்தணர்களுக்கு எந்த வாய்ப்பு இருந்ததோ அது மற்ற குடியினருக்கும் இருந்தது என்பதும் தெளிவு.

**அந்தணர் அரச குரு :**

பல அந்தணர்கள் அரசனின் குருவாக இருந்திருக்கிறார்கள். இராஜராஜ சோழனுக்கு சர்வசிவ பண்டிதர் என்பவர் குருவாக இருந்திருக்கிறார்.

வீரபாண்டியனுக்கு பார்த்திவகேசரி என்னும் பெயர் பெற்ற அந்தணன் குருவாக இருந்தான் என சிவகாசி செப்பேடு கூறுகிறது. முதல் இராஜேந்திர சோழனுக்கு ஈசான சிவபண்டிதர் என்பவர் குருவாகத் திகழ்ந்தார். முதல் குலோத்துங்க சோழனுக்கு "உடையார் ஸ்வாமிதேவர் ஸ்ரீ கண்ட சிவர்" என்பவர் குருவாகத் திகழ்ந்திருக்கிறார் (703/5). மூன்றும் குலோத்துங்கனுக்கு ஈச்வர சிவன் என்பவர் குருவாகத் திகழ்ந்தார். 18 வித மான வித்தைகளையும் கற்றவர் என்றும் உபநிஷத்துக் களில் உள்ள பொருளனைத்தும் சிவபிரானின் உன்னத தத்துவத்தையே கூறுகின்றன என்று கண்டவர் என்றும் சித்தாந்தரத்னாகரம் என்னும் நூல் இயற்றியவர் என்றும் கல்வெட்டு கூறுகிறது. இவரே மூன்றும் குலோத்துங் கனால் திரிபுவனத்தில் எடுக்கப்பட்ட கோயிலில் சிவ பிரானை பிரதிஷ்டை செய்தார் என அக்கல்வெட்டுக் கூறுகிறது.

ஊர்க்கணக்கு :

பெரும்பாலான ஊர்களில் கணக்கராக அந்தணர் பணியாற்றி இருக்கின்றனர். கணக்கர்களாக பிறரைக் காட்டிலும் அந்தணர்களே கல்வெட்டுகளில் அதிகம் குறிக்கப்படுவதிலிருந்து, இத்தொழிலில் இவர்கள் அதிகம் ஈடுபட்டனர் என்று அறியலாம். ஊர்ச் சபைகளில் மத்யஸ் தர் என்னும் ஒரு பதவி உண்டு. இப்பொறுப்பை பல இடங்களில் அந்தணர்கள் வகித்து வந்தனர். இதை நடு விருக்கை என்றும் பல கல்வெட்டுகள் குறிக்கும். இவர்கள் சபை இடும் பணியை எழுதி வைக்கும் பணியாளர் களாகத் திகழ்ந்தார்கள். "சபை பணிக்க எழுதினேன் மத்யஸ்தன்......என்" எனப் பல கல்வெட்டுகளில் காணலாம்.

## அந்தணர்களும் கோயில்களும் :

தமிழகத்தில் கோயில்கள் மற்ற குடியினரின் வாழ்க்கையுடன் எந்த அளவுக்குப் பிணைந்திருந்தனவோ அந்த அளவுக்கு அந்தணர் வாழ்க்கையுடனும் பிணைந்திருந்தன. கோயில்களை அண்டி வாழ்ந்த அந்தணர்கள் பலர். தமிழகத்தில் சிவலயங்களிலும் திருமால் கோயில்களிலும், வழிபாடு அந்தணர்களாலேயே செய்யப்பட்டது. சிவாலயங்களில் சிவாசாரியர்களும், வைணவ ஆலயங்களில் ஸ்ரீ வைஷ்ணர்களும் வழிபாடு செய்தனர். வழிபாட்டை தேவகர்ம என்றும், வழிபாடு செய்வாரை தேவகன்மி என்றும் கல்வெட்டுகள் கூறும். இவ்வாறு செய்பவர்களுக்கு நம்பி என்னும் பெயரையும் கல்வெட்டுகளில் காண்கிறோம். சுமார் 11-ம் நூற்றூண்டில் இறுதி வரை சைவமும் வைணவமும் ஒன்றை ஒன்று ஏற்று அதிக பூசல்கள் இன்றி வளர்ந்தன. வைணவர்களில் பெரும்பாலானவர்கள் வைகாணச மரபை பின்பற்றினர் என்று முன்னரே கூறினேம். சைவம், வைணவம், இன்ன பிற சமயங்களுக்கும் அடிப்படை ஒற்றுமையைக் கொண்டு, அதற்கு அப்பால் வேதாந்தக் கருத்துகளையும் உள்ளடக்கி கோயில்கள் திகழ முடிந்தது. அம்மரபு இன்றுவரை கேரளப் பகுதியில் நிலவி வருகிறது. ஆனுல் 12-ம் நூற்றூண்டிலிருந்து சமயம் சற்று தீவிர நிலையை ஏற்று அதிக வேறுபாடுகளுக்கு தமிழகத்தில் இடமளித்தது. கேரளத்தில் கோயில்களில் வழிபாடு செய்தவர்கள் “நம்பி ஸ்ரீ பாதங்கள்” அல்லது “நம்பி திருவடி” என அழைக்கப்பட்டனர். சுமார் 15-ம் நூற்றூண்டு வரை கேரளத்திலும் கல்வெட்டுகளில் பூஜை செய்வோர் நம்பி என்றே அழைக்கப்படுகின்றனர். இப்பெயரே பின்னர் மறுவி “நம்பூத்திரி” என்று அழைக்கப்பட்டது போலும்.

உத்தமசோழர் காலச் செப்பேடு “நம்பியை வழிபாடு செய்ய அமர்த்தவும், நம்பியை பெருதுவிடில் வேதம்வல்ல

பிராம்மணனை அமர்த்தவும்" என்று கூறுகிறது. இதிலிருந்து அந்தணர் வழிபடும் குலத்தில் பிறந்தவராக இருந்தால் வேதம் வல்லாரைக் காட்டிலும் முதலிடம் பெற்றனர் என்பது தெளிவு.

அந்தணரல்லாத சிலரும் கோயில்களில் பூஜை செய்துள்ளனர் என அறிகிறோம். உதாரணமாக உத்தர மேரூரில் சப்தமாதர் கோயிலில் வழிபாடு செய்தவர் 'பாரசவர்' என்று குறிக்கப்படுகிறார்.

வழிபாடு தவிர, பரிசாரகஞ் செய்யவும் அந்தணர்கள் நியமிக்கப்பட்டனர். இராஜராஜன் தான் எடுத்த தஞ்சைக் கோயிலில் பரிசாரகஞ் செய்ய மாணிகளை நியமித்தான். மாணிகள் என்பவரை பிரும்மசாரிகள் என்று கூறுவர்.

கோயில்களில் பண்டாரஞ் செய்யவும் கணக்கு எழுதவும் பல அந்தணர்கள் நியமிக்கப்பட்டனர். தஞ்சை இராஜராஜேச்வரத்தில் அந்தணர்களே பண்டாரிகளாகவும், கணக்கெழுதும் கரணத்தார்களுமாக பணிபுரிந்தனர். இப்பணிகளில் பலர் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பல ஊர்களைச் சேர்ந்தவர்கள். அவர்களை அந்தந்த ஊர்ச்சபையே தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும் என்று இராஜராஜன் விதித்திருந்தான்.

### இசை கூத்துக்களில் வல்லுநர் :

பல அந்தணர்கள் இசைத்துறையிலும், நாட்டியத் துறையிலும் ஈடுபட்டு சிறந்த வல்லுநர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். சேரன் செங்குட்டுவன் பறையூர் மறையோன் கூத்தச் சாக்கையன் ஆடலைக் கண்டு மகிழ்ந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இக்கூத்தன் மறையோன் எனக் கூறப்படுவதிலிருந்து அந்தணர்

குலத்தவன் என்பது தெளிவு. தஞ்சைப் பெருங்கோயி லில் உடுக்கை வாசிப்பான் ஒருவன் உடுக்கை விஜ்ஜா தரனை சோமசிவன் எனக் குறிக்கப்படுகிறான். இவ னும் இவன் தந்தையும் கிரமவித்தர் என அழைக்கப்படு கின்றனர். இதிலிருந்து இவர்கள் அந்தணர்கள் எனக் கொள்ளலாம்.

அந்தணர்களுக்கு தொன்று தொட்டே நிலம் அளிக் கப்பட்டு வந்தது என்று கண்டோம். இவை விளைச்சல் நிலங்களானதால் பல அந்தணர்கள் விவசாயத்தில் ஈடு பட்டிருந்தனர் என்பதும் தெளிவு. இவர்களே நிலத்தில் இறங்கி ஏர் பிடித்து உழுது பயிர் செய்தார்களா அன்றி பிற உழுங்குடிகளைக் கொண்டுசெய்தார்களா என்று கூறச் சான்றுகள் ஏதுமில்லை. பல அந்தணர்கள் ஊர்ச்சபை களில் பல வாரியங்களுக்கு பெருமக்களாகத் தேர்ந்தெடுக் கப்பட்டு ஏரிவாரியம், கழனி வாரியம், தோட்ட வாரியம், பொன் வாரியம், பஞ்சவார வாரியம், சம்வத்சர வாரியம் எனப் பல வாரியங்களில் பணிபுரிந்திருக்கிறார்கள். இது தவிர சபை இட்ட ஊர்க் கடமை முதலியவும் இவர்கள் செய்தல் வேண்டும், என்று பல கல்வெட்டுகளால் அறிய லாம்.

இதுகாறும் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் அந் தணர் வணிகத் துறையில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

### துறவிகளும் மடாதிபதிகளும் :

பல அந்தணர்கள் உலக வாழ்வைத் துறந்து துறவி களாக மக்கள் வாழ்வை உய்விக்கும் பெரியோர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் பல்வேறு சமயக் கோட் பாடுகளை ஏற்று அவற்றிற்கு ஏற்ப துறவறம் பூண்டவர் கள். சைவ சமயத்தைச் சார்ந்த பல்வேறு உட்பிரிவுகளை யும் தழுவிய துறவிகள் இருந்தனர். காபாலிகம், காளா

முகம், பாசுபதம், பைரவம், சித்தாந்த சைவம் ஆகிய பல உட்பிரிவுகளைச் சார்ந்த துறவிகளும் இருந்தனர். திருவொற்றியூரில் நிரஞ்சன குரு என்பவர் கோயிலில் இருந்தார் எனப் பல்லவர் காலக் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். பராந்தக சோழரின் மகன் இராஜாதித்த சோழனுக்கு கேரளத்தைச் சேர்ந்த வெள்ளன் குமரன் என்ற அந்தணன் உடன் இருந்த வீரனாகத் திகழ்ந்தான். ஆனால் இராஜாதித்தன் தக்கோலப் போரில் இறந்தவுடன் மனமுடைந்து துறவறம் பூண்டான். இவன் சதுரானன பண்டிதன் என்னும் பெயரில் திருவொற்றியூரில் ஒரு மடம் அமைத்து அதில் வசித்தான். சதுரானன மடம் காளாமுகப் பிரிவைச் சார்ந்திருந்தது. சதுரானன பண்டிதனாகத் திகழ்ந்த இவ்வந்தணன் காளாமுகத் துறவியாகத் திகழ்ந்தான். கொடும்பாளூர் இருக்குவேளிர்களில் புகழ்பெற்ற பூதி என்னும் விக்ரமகேசரி தான் எடுப்பித்த கோயிலை ஒட்டி ஒரு மடம் அமைத்து அங்கு வசித்த மல்லிகார்ஜுனன் என்னும் துறவிக்கு நிலமளித்தான். மல்லிகார்ஜுனன் வேதபாரகன் என்றும் 'காளாமுகாதான யதிமுக்யன்' என்றும் குறிக்கப்படுகிறான். இதுபோன்று துறவிகளாக வாழ்ந்த அந்தணர்கள் பல மடங்களின் தலைவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள்.

அல்லன செய்தோர்:

சிறந்த வேதம் விளங்கப்பாடி
விழுச்சீரெய்திய ஒழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத்து ஒருதாமாகி
உயர்நிலை உலகம் இவணின்று எய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சிற்
பெரியோர்......அந்தணர்

எனச் சங்க காலத்திலேயே மக்களால் புகழப்பட்ட அந்

தணர்கள், ஒழுக்கத்தாலும், அறநெறியாலும், அன்புடை நெஞ்சத்தாலும் மக்களின் மனத்தைக் கவர்ந்தோர் ஆவர். ஆயினும் அவர் குடியிலும் நல்லது அல்லன செய்த பலர் இருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

கோயில்களில் பணிபுரிந்த சில அந்தணர்கள் கோயில் அணிகலன்களையும், சொத்துக்களையும் கவர்ந்ததால் அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டு ஏலத்தில் விடப்பட்டதை சில கல்வெட்டுகள் குறிக்கின்றன.

அரசியல் சூழ்ச்சிகளிலும் சில அந்தணர்கள் பெரும் பங்குகொண்டு பாதகம் புரிந்திருக்கின்றனர். இராஜராஜ சோழனின் அண்ணன் ஆதித்த கரிகாலன் சூழ்ச்சியால் கொல்லப்பட்டான். அதற்குக் காரணமாயிருந்தவர்கள் சோமன் இரவிதாசனான பஞ்சவன் பிரும்மாதிராஜன், பரமேசுரனான இருமுடி சோழ பிரும்மாதிராஜன், மலையனூரான் ரேவதாசக்கிரமவித்தன் என்போர் (Ep. Ind. Vol. XXI. No. 27) இவர்கள் அந்தனர் என்பது தெளிவே. இதை உடையார் குடிக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

அந்தணப் புலவர் :

அந்தணக் குலத்தில் பலர் சிறந்த புலவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். கபிலர், பரணர், நக்கீரர், மலைபடுகடாம் பாடிய பெருங்குன்றூர் பெருங்கௌசிகன், பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார், முதலிய அந்தணர்கள் புலமை மிக்கவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். அந்தணர் வடமொழியிலும், தமிழ் மொழியிலும் சிறந்திருந்தனர். ஆயினும் சங்க காலத் தமிழ் அந்தணர்கள் தமிழ் மொழியில் சிறந்த ஈடுபாடு கொண்டு ஒப்பற்ற தமிழ்ப்பாக்கள் இயற்றிப் புகழ் எய்தியுள்ளனர். அக்கால அந்தணர் தமிழகத்தில் இயற்றிய சம்ஸ்கிருத நூல்கள் ஏதும் எஞ்சாததிலிருந்து சமஸ்கிருதப் புலமை

யைக் காட்டிலும் தமிழ்ப் புலமையில் அவர்கள் சிறந்திருந்தனர் என்பதில் ஐயமில்லை.

ஒப்பற்ற தமிழ் இலக்கணம் வகுத்த அகத்தியரும், தொல்காப்பியரும் அந்தணக் குலத்தவர் எனப் பண்டைய மரபுகள் குறிக்கின்றன. கி. பி. 7-ம் நூற்றாண்டிற்குப் பின்னர் தேவாரத் திருப்பதிகங்களையும் திருவாசகத்தையும் இயற்றிய திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் ஆய பெரியார்கள் அக்குலத்தவர் என்பதும் அனைவரும் அறிந்ததே. கி. பி. 8-ம் நூற்றாண்டில் தண்டி என்னும் சிறந்த சம்ஸ்கிருத கவி பல்லவர் அவையை அலங்கரித்தான். இந்திய தத்துவ சாத்திரத்தில் ஒப்பற்ற நக்ஷத்திரங்களாகத் திகழும் சங்கரரும், இராமானுஜரும் தமிழ் நாட்டுச் செல்வர்களே. சோழர் காலத்தில் 'பரணி' இயற்றிய பெரும் புலவர் ஜயங்கொண்டார், அந்தணக் குலத்தவர் என்பர். இது போன்று பல அந்தணக் குலத்துதித்தோர் சிறந்த தமிழ்ச் சான்றோர்களாகவும் வடமொழிப் புலவர்களாகவும் திகழ்ந்தனர்.

## பிரும்மதேயம் :

அந்தணர்களுக்கு அரசர்கள் நிலம் கொடுப்பது பல செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கொடுக்கப்பட்ட நிலங்களை பிரும்மதேயம் என்று அழைப்பர். இவ்வாறு நிலம் கொடுப்பது சங்க காலத்திலேயே நிலவிய ஒரு பண்பு. சேரன் செங்குட்டுவன் பரணர்க்கு உம்பர்க் கட்டுவாரியை கொடுத்தான். செல்வக் கடுங்கோ வாழியாதன் கபிலர்க்கு நூறாயிரங்காணம் கொடுத்து நன்றாவென்னும் குன்றேறி கண்ட நாடெல்லாம் கொடுத்தான். நெடுஞ் சேரலாதன் குமட்டூர் கண்ணனூர்க்கு ஐந்நூறூர் பிரமதாயங் கொடுத்

தான். இங்கு கொடுக்கப்பட்ட நிலம் பிரமதாயம் எனப் படுவது குறிக்கத்தக்கது.

அறத்தையே கூறிய செவ்விய நாவையுடைய செயற் கரிய வேள்விகள் செய்து முடித்த வேதம் ஓதும் அந் தணர்க்கு அரிய கலங்களில் நீர்வார்த்து செல்வக் கடுங்கோ வாழியாதன் கொடுத்தான் எனப் பதிற்றுப் பத்து ( 64 ) கூறும். இவ்வாறு நிலம் கொடுக்கும்போது கரத்தில் நீர்வார்த்துக் கொடுத்தல் சங்க காலத்திலேயே நிலவியது என்று அறிகிறோம். இதைப் பிற்காலச் செப் பேடுகளும் கல்வெட்டுகளும் 'நீரோட்டிக் கொடுத்தான்' எனக் குறிக்கின்றன.

இவ்வாறு ஒரு பிராம்மணர்க்கு கொடுக்கப்பட்டது 'ஏகபோக பிரமதேயம்' என்றும், பலருக்கு கொடுக்கப் பட்டது பிரம்மதேயம் என்றும் குறிக்கப்படுகின்றன. கோயில்களைச் சார்ந்து அளிக்கப்பட்ட பிராம்மணர் நிலங் கள், தேவதானப் பிரம்மதேயம் என்றும் பெயர் பெற்றன. அந்தணர்களுக்குக் கொடுத்த நிலத்தை அரசன் விரும்பினால் மாற்றி வெள்ளாளர்களுக்குக் கொடுப்பதும் உண்டு. அவ்வாறு மாற்றப்பட்ட பல நிலங்களை சோழர் காலக் கல்வெட்டுகளில் காணலாம். திருவாலங்காட்டுக்கு அருகில் உள்ள பழையனூர் என்னும் ஊர், சிங்களாந்த கச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த பிரும்மதேயமாக இருந்தது. இதற்குத் தலைமாறாக வேறு நிலம் கொடுத்து இதை வெள்ளான் வகையாக மாற்றியதை சோழர் கல் வெட்டுக் குறிக்கிறது.

# 13

# எம்முளும் உளன் வைகல் எண்தேர் செய்யும் தச்சன்

## கம்மாளர்கள்

கருவிகள் செய்யத் தெரிந்த விலங்கே மனிதன் என்று தொல்லியல் வல்லுநர் இலக்கணம் கூறுவர். மனிதக் குரங்கிலிருந்து குரங்கு மனிதனை வேறாகக் கொள்ள அவன் செய்த கருவிகளே சான்றுகள் என்பர். அங்கிலை யிலிருந்துதான் மனித இனத்தின் வரலாறு ஆரம்பமாகிறது. அவ்வாறு கருவிகள் செய்து மனித இனத்தைத் தொடங்கி, வளம் செய்தவர்களே கம்மாளர். இவர்களை விச்வகர்மா என்று நம் முன்னோர் அழைத்தது மிகவும் பொருந்தும். இவர்களைக் கம்மாளர் என்றும் அழைப்பர். கம்மாளர் எனில் தொழில் புரிவோர் என்று பொருள் படும். தொழிலாளி என்னும் சொல் இவர்களுக்கே முதன் முதலில் பொருந்தும். ஆதலின் இவர்களுக்கு வினைஞர் என்ற பெயரும் பண்டைய நூல்களில் காணப் படுகிறது. மண், மரம், கல், உலோகம், பொன், தந் தம் ஆகிய பல பொருள்களிலிருந்து கலன் செய்வோர்

இவர்களில் இருந்தனர் ஆயினும் இவர்கள் அனைவரும் ஒரு இனத்தவரே. கொல்லர் என்ற பெயரும் இவர்களுக்கு உண்டு. 'கொல்' எனில் வெட்டல் எனப்பொருள். பல பொருள்களை வெட்டி, செதுக்கி செய்வதால் இப் பெயர் பெற்றனர்.

பெயர்கள் :

இவர்களுக்கு கண்ணாளர், சிற்பியர், துவட்டர், ஓவர், தபதியர், அற்புதர், யவனர், கொல்லர், அக்கசாலையர், புனைந்தோர், கம்மியர், கண்ணுள் வினைஞர் எனவும், சித்ர காரர், ஓவியர், மோகர் என்றும் பெயர்கள் இருந்ததாக நிகண்டு கூறுகிறது. தட்டார், பொன் செய்யுங் கொல்லர், பொன் வினைமாக்கள், சொன்னகாரர், அக்கசாலையர், பொன் செய்யும் புலவர் என்று பெயர்கள் இருந்ததாக வும் அதே நூல் குறிக்கிறது.

காவிரிப் பூம்பட்டினத்தில் மருவூர்பாக்கம் என்னும் பகுதியில் கஞ்சகாரர் (வெண்கலம் செய்வார்), செம்பு செய்குநர், கண்ணுள் வினைஞர் (சித்ரகாரிகள்) சுதையால் பாவை முதலிய செய்யும் மண்ணீட்டாளர், மரங் கொல் தச்சர், கருங்கைக் கொல்லர், பொன்செய் கொல்லர் ஆகியோர் வசித்ததாகச் சிலம்பு கூறுகிறது (சில. 1. 5. 28.31.)

பண்டைய தமிழ் இலக்கியங்களில் இவர்களைப் பற்றி பல சிறந்த குறிப்புகள் இருக்கின்றன. ஓரே பகலில் எட்டுத் தேர்களைச் செய்யும் வல்லமை படைத்த தச்சன் இருந்தான் எனப் புறநானூறு (87) "வைகல் எண் தேர் செய்யும் தச்சனை" குறிக்கிறது. பார்த்தோர் வியக் கும்படி செய்த பொம்மைத் தேரை சிறுவர்கள் வேகமாக உருட்டும் வண்ணம் செய்தளிக்கும் தச்சரைப் பெரும் பாணாற்றுப் படை குறிக்கிறது. நோக்கினார் கண்ணி

டத்தே தம் தொழிலை நிறுத்தும் வல்லமை படைத்த கண்ணுள் வினைஞரை "எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞர்" என மதுரைக் காஞ்சி (516. 519) கூறுகிறது. இவர்களை நூலறி புலவர் என நெடுநல்வாடையும், மேலோர் விழையும் நூலறி மாக்கள் என்று சிலப்பதிகாரமும் குறிக்கின்றன.

## தோற்றம் பற்றிய கதைகள் :

இவர்களது தோற்றத்தைப் பற்றியும், சிறப்புகளைப் பற்றியும் பல கதைகள் உள்ளன. இவர்கள் பாஞ்சாலர்கள் என்றும் குறிக்கப்படுவர். பாஞ்சால நாட்டிற்கும் இவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதற்கு இது சான்றாகும். பாஞ்சால நாட்டில் கிரேக்க, ரோமானியர் கலைஞர்களாகத் திகழ்ந்துள்ளனர். அவர்களை யவனர்கள் என இந்திய இலக்கியங்கள் கூறும். யவனர் கட்டிடத் தொழிலிலும், சிற்பத் தொழிலிலும் வல்லவர்கள். பல யவனர்கள் தமிழ் நாட்டிலும் பணிபுரிந்திருக்கின்றனர். அவர்களது தொடர்பால் கம்மாளர்களது தொழில் சிறப்பெய்தியது என்பதில் ஐயமில்லை. இந்த வரலாற்றுத் தொடர்பையே பாஞ்சாலர் என்னும் சொல் நினைவுறுத்துகிறது போலும். தச்சர்களுக்கு 'யவனர்' என்றே பெயர் உள்ளதை நிகண்டு கூறுவதும் இங்கு நினைவிற் கொள்ளல் தகும்.

## சங்கீர்ண ஜாதியர் :

கம்மாளர்கள் சங்கீர்ண ஜாதியர் என்று குறிக்கப்படுகின்றனர். கலப்பு மணம் புரிந்து கொண்டு அதன் பயனாய்ப் பிறந்த மக்களுக்கு பல தொழில்கள் ஒதுக்கப்பட்டன. இவர்களே இத்தொழிலாளர். இம்மக்கள் இருபிறப்பாளராகவே கருதப்பட்டனர். உயர்ந்த ஜாதி

யில் பிறந்த ஆண்மகன் அடுத்த ஜாதியிற் பிறந்த பெண்ணை மணந்து அல்லது புணர்ந்து பிறந்த மக்களை அனுலோமர் என்றும் உயர்ந்த ஜாதியில் பிறந்த பெண்ணுக்கு அடுத்த ஜாதியில் பிறந்த ஆண்மகனிடத்துப் பிறந்த மக்களைப் பிரதிலோமர் என்றும் வடமொழி நூல்கள் கூறும். தொல்காப்பியர் காலத்திலேயே இது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜாதிப் பாகுபாடு என உரையாசிரியர்களின் உரைகளில் இருந்து அறிகிறோம். இதைப் பார்ப்பனப் பாக்கத்து வகை எனத் தொல்காப்பியர் கூறுவார். (புறத்திணை. சூ. 75. நச்சினார்க்கினியம்).

இதற்குப் பொருள் எழுதும் உரையாசிரியர் "பார்ப்பாருக்கு பார்ப்பனக் கன்னியிடத்தில் கற்பு நிகழ்வதற்கு முன்னர் களவில் பிறந்தவன் அவள் பிறர்க்குரியவளாகிய காலத்து களவில் பிறந்தவன், கணவனை இழந்தவளிடம் பிறந்தவன், பிறவர்ணத்துப் பெண்களிடத்தே இவ்வாறு தோன்றியவன், அவரவர் மக்கட்கண் இவ்வாறே தோன்றியவர்கள் ஆகிய ஜாதி என்பர். இன்னோரும் தம் தம் தொழில் வகையால் பாகுபட மிகுதிப்படுத்தல் வாகைத் திணை" என்று உரைப்பர். "இன்னும் பெண்பாலுயர்ந்து ஆண்பால் இழிந்த வழி பிறந்த ஜாதிகளும் அணை நிலை வகை எனப்படும் என்றும் உரைப்பார். இதிலிருந்து கலப்பு மணத்தால் பிறந்த மக்களையும் அவர்களே தொழில் புரிவோர் என்பதையும் அறியலாம்.

### ஸ்தபதி :

நிலத்தைத் தேர்ந்தெடுத்து மனை எடுத்து சிற்பங்களைச் செதுக்கி ஓவியங்களைப் படைக்கும் சிற்ப வல்லுநர்களைப் பற்றியும் வாஸ்த்து நூல்கள் குறிக்கின்றன. இவர்களை ஸ்தபதி, சூத்திரகிராஹி, வர்த்தகி, தச்சன் என்று நான்கு பிரிவுகளாகக் கூறுவர்.

தச்சன்: மரம், தந்தம், கல், உலோகம் முதலியவற்றில் பல்வேறு உருவங்களைச் செதுக்கும் வல்லமை பெற்றவனை தச்சன் என்று குறிப்பர். மிகவும் நுண்ணியதும், மிகப் பெரியதுமான உருவங்களை செதுக்கும் வல்லமை படைத்தவன் மண்ணீட்டுத் தொழில் அறிந்தவன், நல்ல குணங்களை உடையவன். ஆசானுடைய சொல்லை ஏற்று அதன்படி பணிபுரிபவனே தச்சன் என்று வழங்கப்படுவான் (மானசாரம்).

சூத்திரகிராஹி: நூல் பிடித்து கல்லின் மீதும் மற்ற பொருள்கள் மீதும் வேண்டிய அளவுகளைக் குறியிட்டுக் கொடுக்கும் திறன் பெற்றோனை சூத்திரகிராஹி என்று குறிப்பர்.

வர்த்தகி: குறிப்பிட்ட அளவுகளுக்கு ஏற்ப செதுக்கப்பட்ட கற்களையும் சிற்பங்களையும் உரிய இடங்களில் பொருத்தி கட்டிடங்களை எழுப்ப வல்லவன் வர்த்தகி.

ஸ்தபதி: ஸ்தபதி என்பவர் சிற்ப நூல் வல்லுநர்களின் தலைவனாகவும் ஆசானாகவும் கருதப்படுவார். மனையை நிலை பெற ஸ்தாபிப்பதால் ஸ்தபதி என்று இவர் அழைக்கப்பட்டார். கட்டிடம் அமைப்பதில் முழுப் பொறுப்பையும் ஏற்று மனை வகுப்பில் முனைந்துள்ள பல்வேறு தொழில் புரிவோரின் பணிகளையும் மேற்பார்வையிட்டு சீர் செய்து பணிமுடிக்கும் ஆசார்யர் இவர். சிற்பம், ஓவியம், கட்டிடம், முதலிய பல்வேறு துறைகளிலும் வல்லுநராகி முதிர்ச்சி பெற்ற அனுபவத்தை உடையவராகி நல்ல (புலவனாகவும்) வலிமை மிகுந்தவராய் இனிமையான குணமுடையவராய் நம்பிக்கைக்கு உகந்தவராய் உள்ளவரையே ஸ்தபதியாக, ஆசார்யனாக வரிப்பது வழக்கம்.

இந்நால்வருள்ளும் தச்சன் தெ[illegible] அனுபவம் முதிர்ந்தவர்களை வர்த்த[illegible] ஸ்தபதி என்ற பொறுப்புகளில் அமர்[illegible] இந்நான்கு பிரிவுகளும் அந்தப் பணிகளின் பொறுப்பைக் குறிப்பவையே யொழிய குல வேறுபாடுகள் அல்ல.

Distt. [illegible] Kasturba [illegible] Triplicane Madras-5

தச்சர் என்ற சொல் தற்காலத்தில் மரத்தொழில் புரிபவர் என்ற பொருளிலேயே வழங்கப்படுகிறது. ஆனால் பண்டைக் காலத்தில் செதுக்கும் தொழிலில் வல்லுநர் தச்சர் என்று கூறப்பட்டனர். மரத்தொழில் புரிபவரை மரத்தச்சர் என்றும் கல்தொழில் புரிவோரை கல்தச்சர் என்றும் குறிப்பது வழக்கம். வேதத்தில் சிவபெருமான் தச்சர்களில் தலையானவராக கூறப்படுகிறார். சிவபிரானிடமிருந்தே வாஸ்து சாத்திரங்கள் தோன்றியதாக அந்நூல்கள் குறிக்கின்றன. இந்தியாவின் வடபகுதியில் சிற்ப வல்லுநர்களை சிற்பாச்சாரியர் என்றும் சூத்திரதாரன் என்றும் பெரும்பாலும் குறிப்பர். தமிழ் நாட்டில் தச்சர்கள் என்றே வழங்கப்பட்டனர். சிற்ப ஆசாரியர்களாக விளங்குபவர்களை பெருந்தச்சர் என்று கல்வெட்டுகள் குறிக்கும். இவர்களே தச்சாசாரியர் என்றும் குறிக்கப்படுவர்.

## குடியும் தொழிலும் கூறும் கல்வெட்டு :

திருவாரூரில் கி. பி. 12-ம் நூற்றாண்டில் தச்சர்களைப் பற்றிய ஒரு சிறந்த கல்வெட்டு உள்ளது. அக்கல்வெட்டு கிரந்த எழுத்துகளில் உள்ளது. பாண்டிய குலாந்தக சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த கல்வியிற் சிறந்த பல அந்தணர்கள் கூடி தச்சர்களின் குடி, அவர்கள் படிக்கக் கூடிய கல்வி, அவர்கள் செய்யக் கூடிய தொழில்கள் என்ன என்ன என்பதை ஆராய்ந்தனர். பல நூல்களில் இருந்து மேற்கோள்களும் அப்படியே கல்வெட்டில் தரப்பட்டுள்ளன (603/17).

இக்கல்வெட்டில் தச்சர்கள் ரதகாரர்கள் என்று குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இரண்டு குடிகள் குறிக்கப்படுகின்றனர். ஒரு குடி அனுலோமராகப் பிறந்தவர்கள் என்றும், மற்றது பிரதிலோமர்களாகப் பிறந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. அனுலோமர் என்பவர் அந்தணர், க்ஷத்ரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்கு வர்ணங்களிலும் உயர்குடி ஆண் மகனுக்கு பின்குடி பெண்ணுக்கு பிறந்தவராவர் என்று கூறுகிறது. உயர்குடிப் பெண்ணுக்கு பின்குடி ஆண் மகனால் பிறந்தவர் பிரதிலோமர் என்பவர். அனுலோம ஜாதியர் பிரதிலோம ஜாதியரைக் காட்டிலும் உயர்ந்த ஜாதியாகக் கருதப்பட்டனர். ரதகாரராகத் தச்சர்களாகத் தொழில் புரிபவர்கள் அனைவரும் கலப்பு மணத்தால் பிறத்தவர்கள் என்று இக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள அனைத்து நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. சில நூல்கள் இவர்கள் சங்கீர்ண ஜாதியில் பிறந்ததால் கீழ் குலத்தவர் என்றும் பிற நூல்கள் இவர்கள் உயர்ந்த குலந்தைச் சார்ந்தவர்கள் என்றும் கூறுகின்றன. பல நூல்கள் இவர்களை ஆசாரியர்கள் என்றும் இவர்களைக் கொண்டுதான் எல்லா தொழில்களையும் செய்தல் வேண்டும் என்றும் கூறுகின்றன. "ரதகாரரான கம்மாளரோம் அனுலோமரோம் பிரதிலோமரான ஜாதிகளில் இழி தொழில் செய்யோம்" என்று கல்வெட்டில் குறிப்பதிலிருந்து இவர்கள் உயர்ந்த ஜாதியினர் என்று ஸ்மிருதிகள் ஏற்றுக் கொண்டன என அறிகிறோம்.

இவர்களைப் பெரும்பாலான நூல்கள் புகழ்கின்றன. பொன்னால் பொருள் செய்பவன் சொர்ணகாரன் என்றும், இரும்புத் தொழில் செய்பவன் அயஸ்காரன் என்றும் தச்ச வேலை செய்பவன் தச்சன் என்றும், உருவங்களைச் செய்பவன் துவஷ்டா என்றும், அவனே ரதகாரன் என்றும், தேவதைகளுடையவும் பிறவுமான கோயில்களை

எடுப்புவன் ஸ்தபதி என்றும் குறிக்கின்றன. மேலும் ஸ்தபதி, விச்வகர்மா, தச்சன், துவஷ்டா ரதகாரன், காஷ்டகாரன், வர்த்தகி முதலிய சொற்கள் அனைத்தும் சிற்பியைக் குறிக்கும் என்று கூறுகின்றன.

சில நூல்கள் இவர்களுக்குப் பூணூலும், சந்தியாவந்தனமும் உண்டு. ஆயினும் வேதம் ஓதல், வேள்வி செய்தல், அக்னிஹோத்திரம் முதலியன கிடையாது என்று கூறுகின்றன. இவர்களுக்குப் பூணூலும் சந்தியாவந்தனமும் வெறும் ஒப்புக்குத்தான் என்று கூறுகின்றன. ஆனால் வேறு சில நூல்கள் இவர்கள் வேதம் அறிந்தவர்கள், அறநூல்களை (தர்ம நூல்களை) அறிந்தவர்கள் என்றும், நிமித்தமும், சகுனமும் கூறுவதில் வல்லவர்கள் என்றும், ஆசார்யர் என்றும் கூறுகின்றன.

இவர்களது தொழில்களில் தேர் இலக்கணம், குதிரை இலக்கணம் அறிதல், ஊர், நகரம் முதலிய நிர்மாணித்தல், பிரதிமைகள் செய்தல், ஆயுதங்கள் செய்தல், முதலிய கூறப்பட்டுள்ளன. ரதகாரன் வாஸ்து வித்தை அறிந்தவன் என்றும், வில் வித்தை கற்றவன் என்றும் கூறப்படுகிறான். தைத்த அம்புகளையும் முள்ளையும் எடுப்பதிலும் வல்லவன் என்றும் இவன் குறிக்கப்படுகிறான் (603/17).

இவர்களுக்கு குறிக்கப்பட்டுள்ள தொழில்களில், நிலத்தை சோதித்தல், நிலம் கொள்ளல், மனை எடுத்தல், சிற்பங்கள் செய்தல், சித்திரங்கள் செய்தல் முதலிய தொழில்கள் குறிக்கப்படுகின்றன. இவை தவிர தேர்கள் செய்தல், ஆயுதங்கள் செய்தலும், தைத்த அம்பு, முள் முதலிய நீக்கும் தொழிலும் அறிந்தவர் எனக் குறிக்கின்றனர்.

## ஆயுதம் செய்வார் :

மனை எடுக்கும் தொழிலும், சிற்பத் தொழிலும் ரதகாரர்களின் தொழில் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் இக்கல்வெட்டுக் கூறும் இரு செய்திகள் மிகவும் இன்றியமையாதவை. 1) இவர்கள் ஆயுதம் செய்பவர் என்பது போர்க்கலன்களை இவர்கள் செய்து கொடுத்ததிலிருந்து அறியலாம். அக்காலத்தில் இவர்கள் போர்க் கலன்கள் செய்து கொடுத்ததன் மூலம் எவ்வளவு சிறந்த நிலை வகித்திருந்தார்கள் என்பதையும் அறியலாம். 2) போர்களில் தைத்த அம்புகளையும் வேல்களையும் உடலிலிருந்து எடுக்கும் மருத்துவராகவும் இருந்திருக்கின்றனர். ஆய்குல மன்னன் கோக்கருந் தடக்கன் என்பவனின் திருப்பறப்பு சாஸனத்தை எழுதியவன் அவியலன் தடக்கன் என்பவன். இவன் "ஸ்ரீ கோக் கருநந் தடக்கற்கு ஆயுதங்கள் செய்வான் விழிஞத்து ஸ்ரீ வல்லவ பெரும்பணை" என அழைக்கப்படுகிறான். இதிலிருந்து இச் செப்பேட்டை எழுதிய சிற்பி அரசனுக்கு ஆயுதம் செய்தவன் என்று அறிகிறோம்.

பாண்டிய மன்னன் பராந்தக வீரநாராயணனின் தளவாய்புர செப்பேடு சம்ஸ்கிருத பகுதியும் தமிழ்ப் பகுதியுமாக இரு பகுதிகளைக் கொண்டது. இதில் தமிழ்ப் பகுதியை எழுதியவன் தமிழாபரணன் என்னும் கொல்லன். இவனைப் பற்றி செப்பேடு சிறப்பாகக் கூறுகிறது. "தேர்மிகு மாக்கடல் தானைத் தென்னவர் கோன் திருவருளால் சீர்மிகு செப்பேட்டுக்குச் செந்தமிழ் பாத்தொடை செய்தோன்" என்றும் செப்பேடு வாசகத்தை "ஆரியம் விராய் தமிழ் தொடுத்த மதியோன்" என்றும் கூறுகின்றன. சிவபெருமான் வேண்ட அவருக்கு மழு செய்தளித்தவர் வழிவந்தவன் என்றும், மாமுனியாகிய மனு வழியில் வந்தவன் என்றும் கூறப்படும் இவன்

பாண்டித் தமிழாபரணன் என்னும் பல சிறப்புப் பெய ரெய்திய பாண்டிய மாராயப் பெருங்கொல்லனாகிய ஸ்ரீ வல்லவன் எனப்படுகிறான். இவனை வடமொழிப்பகுதி கவி என்று கூறுகிறது. இதிலிருந்து அரசனாலும் கவி என்று போற்றப்படும் தகுதி வாய்ந்தோர் கம்மாளர் குலத்தில் இருந்தனர் என அறியலாம். மாராயப் பட்டம் எய்தி யுள்ளதும் இதனால் தெரிகிறது.

இச்செப்பேட்டை எழுதியவன், முன் கூறிய தமிழா பரணன் என்னும் பாண்டி மாராயப் பெருங் கொல்லனின் தந்தை. நிருபசேகரப் பெருங்கொல்லன் என்பவன். மகன் பிரசஸ்தி பாட அதைத் தந்தை செப்பேட்டில் பொறித்துள்ளான். இவனைக் கூறுமிடத்து பாண்டி யனின் ஆணையை, அவனது பொறியாகிய வில், புலி, இரு கயல்களுடன் இமயத்தில் பொறிக்கும் தொழில் செய்து வந்தோர் பின் தோன்றல் எனக் குறிக்கப்படுகிறான். இவ் விருவருக்கும் அரசன் நிலம் அளித்துள்ளான்.

தச்சர்களின் மெய்க்கீர்த்தி :

நன்னிலம் தாலுக்கா ஆலங்குடி கிராமத்தில் ஆபத்ச காயேசுரர் கோயிலில் தச்சர்களைப் பற்றிய ஒரு சிறப் பான கல்வெட்டு உள்ளது. அது கி.பி. 1264-ம் ஆண் டைச் சார்ந்தது. அக்கல்வெட்டில் இவர் குடிக்கென சித்ரமேழி நாட்டாருக்கு முன்னர் நாம் கண்டது போன்ற தனி மெய்க்கீர்த்தியே காணப்படுகிறது. அம்மெய்கீர்த்தி பல விதங்களில் சிறப்புடையது. அது இவர்களது தோற்றத்தைப் பற்றியும், கொடி பற்றியும் தன்மை பற்றி யும் குறிக்கிறது. மேலும் சித்ரமேழி நாட்டவர் போல், தச்சர் இனத்தைச் சேர்ந்த அனைவரும் பல்வேறு நாடு களில் இருந்த போதிலும், தாங்கள் ஒரே இனத்தவர் என்று கொள்ளும் ஒரு சமுதாய அமைப்பைக் கொண்டி ருந்தனர். இவர்கள் அவ்வப்போது கூடித் தங்கள் இனத்

தின் நன்மை தீமைகளைப் பற்றிய முடிவுகளை எடுத்தனர். அது அவ்வினம் முழுவதையும் பிணித்தது.

அவர்களது மெய்க்கீர்த்தி பின்வருமாறு தொடங்கு கிறது.

*பெற்றுடையது உத்தராபதி*
*அளந்துடையது தவப்பள்ளி*
*ஜயித்துடையது மகரக் கொடி*
*கொற்றவரும் தேவர்களும் கொண்டாட*
*அறத்தொடு புரிந்த வாக்குப் பெருக்கமும்*
*சிறப்பொடு பொலிந்த செல்வம் நன்கு பெயும்*
*குன்றாத குடி பிறப்பும்*
*கூறுடை சொல் வீறுடைமையும்*
*இவரொடும் மாறுணர் நிராசையும்*
*மன்று கலங்கா மனை வாழ்க்கையும்*
*சென்ற இடத்து செறு வெற்றியும்*
*புகழும் புத்ர லாபமும் சத்ரு நாசமும்*
*மற்றும் எப்பேர்ப்பட்ட சமஸ்த*
*உதயங்களும் உடையராய்*
*யாவரும் தொழும் தொழில் வல்லராய்*
*அக்கசாலையும் பள்ளியும் ஆணையாக*

உடைய அறுவகை தொழில் நால்வகை ரதகாரரோம் என அக்கல்வெட்டுத் தொடங்குகிறது (439/6).

இவர்கள் பெற்றுடையது உத்தராபதி எனக் குறிக் கப்பட்டுள்ளது. வேளிர்கள் துவராபதியை தங்களது நகராகக் கூறிக் கொள்வர் என்று முன்னர் கண்டோம். இங்கு ரதகாரர் தங்களது நகர் உத்தராபதி எனக் கூறு வதும் நோக்கத் தகுந்தது. கம்மாளர்களது மரபின்படி அவர்கள் பாஞ்சாலத்திலிருந்து வந்தவர் எனக் கூறிக் கொள்கின்றனர். அவர்களுக்கு பாஞ்சாலர் என்றே

பெயர் உண்டு. கம்மாளர்களுக்கு மகரக் கொடி இருந்தது என்றும் இக்கல்வெட்டால் அறிகிறோம். இவர்கள் குன்றாத குடிப் பிறப்புடையவர் என்றும், மன்று கலங்காத மனை உடையவர் என்றும் குறிக்கப்படுகின்றனர். அக்கசாலையும் பள்ளியும் ஆணையாக உடையவர்கள் என்பர். அக்கசாலை என்பது காசு அச்சடிக்கும் சாலை.

இவர்கள் அறுவகைத் தொழில் நால்வகை ரதகாரர் எனக் குறிக்கப்படுகின்றனர். இவர்களில் நால்வகை ரதகாரர் என்பவர் ஸ்தபதி, சூத்ரகிராஹி, வர்த்தகி, தச்சர் என்று பாகுபடுத்தப்பட்ட நால்வகையினர். வேதியர்களும். வைசியர்களும், வேளாளரும் எவ்வாறு அறு தொழிலாளர் என்று கூறப்பட்டனரோ அதே போன்று இவர்களும் அறு தொழிலாளர் என்று அழைக்கப்பட்டனர் போலும்.

இக்கல்வெட்டு இவர்களை பதினெண் விஷயத்து அறுவகைத் தொழில் நால்வகை ரதகாரர் என்று கூறுகிறது. பதினெட்டு என்ற எண் பல வகையிலும் சிறப்பாகக் குறிக்கப்படுவதை முன்னரே கண்டோம்.

ரதகாரர்களும் தங்களை பதினெண் விஷயத்து ரதகாரர் என்பது, பொதுப் படைச் சொல் எனலாம். இருப்பினும் கல்வெட்டில் கீழ் வரும் நாடுகளில் இருந்த ரதகாரர்களின் பிரதிநிதிகள் கூடி ஒரு முடிவு எடுத்தனர்.

1. அருமொழி தேவ வளநாடு

2. இராஜேந்திர சோழ வளநாடு

3. உம்பர் நாடு

4. கேயமாணிக்க வளநாடு

5. ... (கல்வெட்டு இங்கு சிதைந்துள்ளது)

6. உய்யக் கொண்டார் வளநாடு

7. சுத்தமலி வளநாடு

8, நித்த விநோத வளநாடு

9. பாண்டிய குலாசனி வளநாடு

10. சளுக்கி குலகால வளநாடு

11. இராஜகம்பீர வளநாடு

12. தென்னுடான கடலடையாதிலங்கை கொண்ட சோழ வளநாடு

13. வடகரை இராஜராஜ வளநாடு

14. இராஜாதி ராஜ வளநாடு

15. விக்ரம சோழ வளநாடு

16. விருத ராஜ பயங்கர வளநாடு

17. குலோத்துங்க சோழ பட்டினம்

"மற்றும் எல்லாவிடங்களிலும் உள்ள அறுவகைத் தொழில், நால்வகை ரதகாரர்க்கும் நாடுகளில் சமய சங்கேதிகளுக்கும் அறிவித்த சமயகாரியமாவது" என்று கல்வெட்டுக் கூறுகிறது. இவர்கள் எடுத்த முடிவு சமய காரியம் என அழைக்கப்படுகிறது. இதன்படி இவ் வினத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் ஒரு குறிக்கப்பட்ட காசு தரவேண்டும். அது கொண்டு அக்கோயில் ஆபத்

சகாயப் பெருமாள் என்று பெயர் பெற்ற தெய்வம், திருநீற்றுச் சோழன் திருத்தோப்பில் வருவதற்காக எடுத்து வந்து விழாச் செய்ய அத்தோப்பில் ஒரு மண்டபம் கட்டினர். அம்மண்டபத்தின் பெயர் 'முழு வதும் வல்லவன்' என்பதாம். இவ்விழாவிற்கு வேண்டிய செலவுக்கும் இப்பொருள் வைக்கப்பட்டது. கொடுக்கத் தவறியவர் வீட்டில் வெண்கலங்களை எடுத்துக் கொண்டும், மட்கலங்களை தகர்த்தும் தண்டிக்கப்படுவர் என அத்தீர்மானம் கூறுகிறது. இது எல்லா நாடுகளிலும் இருந்த ரதகாரர்களையும் பிணித்தது.

இதற்கு கையெழுத்திட்டவர்கள் பலர் காணி உடைய வர்களாகவும், உயர் பதவியில் இருந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். சிலர் இரதகார சக்கரவர்த்தி என்று அழைக்கப்படுகின்றனர் (439/6).

## கோயில்களைக் கட்டிய தச்சர்கள்

காஞ்சிபுரத்திலிருந்து சுமார் 20 கல் தொலைவில் உத்தரமேரூர் என்ற ஓர் ஊர் உள்ளது. அது மிகவும் பழம் புகழ்வாய்ந்த ஊராகும். அங்கு பல்லவ மன்னனான நந்தி வர்மன் காலத்தில் சுந்தரவரதப்பெருமாளுக்கு ஒரு கோயில் கட்டப்பட்டது. அதில் உள்ள ஓர் கல்வெட்டு இந்தக் கோயிலினுடைய இலக்கணங்கள் பொருந்திய அலங்காரங்களையும், அளவுகளையும் எவன் அறிகிறானோ அவன் வாஸ்து வித்தையை (கோயிற்கலை) அறிந்தவர் களில் சிறந்தவனாகிறான் என்று குறிக்கிறது. அக்கல் வெட்டில் மேலும் பாடகபுரவாசியும், சிறந்த அறிவாளி யும் எப்பொழுதும் சத்ய சந்தனுமான ஸ்ரீபரமேச்வரப் பெருந் தச்சனால் இந்தக் கிராமத்தில், வாஸ்துக்களில் எல் லாம் சூரியன் போன்ற இக்கோயிலானது ஆகமங்களில் கூறப்பட்டுள்ள பிரயோகங்களுக்கு ஒப்ப கட்டப்பட்டு, ஜாதியாலும் பெயராலும் சிறந்து விளங்கிற்று என்றும்

கூறுகிறது. இது சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு இன்னம் நல்ல நிலையில் நிற்கும் கோயிலாகும். இக்கல்வெட்டிலிருந்து பல்லவர் காலத்தில் ஆலயங்கள் ஆகமரீதியாகக் கட்டப்பட்டன என்று திட்டவட்டமாக அறிகிறோம். அக் கோயில்களைக் கட்டும் கலைஞர்களை தச்சன் என்று தமிழ் நாட்டில் அழைத்தனர் என்றும், இக் கோயிலைக் கட்டியவன் பரமேச்வரத் தச்சன் என்றும் அறிகிறோம்.

இதே போன்று திருவொற்றியூரில் ஆதிபுரீச்வரர் ஆலயத்தைக் கட்டிய சிற்பியின் பெயரும் கல்வெட்டில் கிடைக்கிறது. இக்கோயிலை முதலாம் இராஜேந்திர சோழன், சதுரானனபண்டிதன் என்பவனின் விருப்பத்திற்கு இணங்கக் கட்டுவித்தான். இது கருங்கல்லால் மூன்று தளங்களை உடையதாக பலவித சரணங்கள், கூடங்கள், கோஷ்டங்கள் முதலியவைகளுடன் கட்டப்பட்டது. இதை ரவி என்னும் வீர சோழப் பெருந்தச்சன் கட்டினான்.

தச்சர்கள் சில்பி, சித்ரகாரி, ரதகாரி, ஆசாரி என்றெல்லாம் அழைக்கப்பட்ட போதிலும் பெரும்பாலான கல்வெட்டுக்களில் தச்சன் என்றே அழைக்கப்படுவதைக் காணலாம். இவர்கள் சிற்பங்களைச் செதுக்கினர். கட்டிடங்களை கட்டினர். கல்வெட்டுக்களைப் பொறித்தனர்.

தமிழ் நாட்டில் தலை சிறந்த கலைப் படைப்பாக கருதப்படுபவை மாமல்லபுரத்துச் சிற்பப் படைப்புகளும், தஞ்சைப் பெருங்கோயிலுமாகும். இவை கட்டிட அமைப்பிலும், சிற்ப அழகிலும், கல்வெட்டுகளின் நிலையிலும் மிகவும் சிறந்தவை. மாமல்லபுரத்து சிற்பங்கள் பல்லவ மன்னர்களின் பெருமிதப் படைப்பு ஆகும். தஞ்சைப் பெருங்கோயில் சோழ மன்னர்களில் சிறந்தோனான

இராஜராஜனால் தக்ஷிணமேருவெனக் கட்டப்பட்ட கோயி லாகும். மாமல்லபுரம் தொண்டை மண்டலத்தின் தலை சிறந்த துறைமுகம். தஞ்சை சோழ மண்டலத்தின் தலை நகர். இங்கு பணிபுரிந்த ஒப்பற்ற சிற்பிகள் யார்?

## மாமல்லபுரத்துச் சிற்பிகள் :

மாமல்லபுரத்தின் சிற்பிகளைப் பற்றி குறிப்பது கடினம். எனினும் கீழ்கண்டவற்றால் அச்சிற்பிகள் யார் என்று ஊகிக்கலாம். மாமல்லபுரத்தைச் சார்ந்த பூஞ்சேரி என்ற ஒரு சேரியில், சாலையின் தென்புறம் சில பாறைகள் உள்ளன. அவற்றில் நொண்டி வீரப்பன் குதிரைத் தொட்டி என்று கூறும் பாறையில் சில கல்வெட்டுகள் உள்ளன. இது நடுவில் குழிந்து தொட்டி போல் இருப்ப தால் இதற்கு தொட்டி என்று பெயர் போலும். நொண்டி வீரப்பன் என்பான் ஒருவன் தன் குதிரைக்கு இதில் தண்ணீர் காட்டியிருக்கலாம். எனவே அவன் பெயரால் இது விளங்குகிறது. இக்கல்வெட்டுகள் ஏழு பெயர்களைக் குறிக்கின்றன. அவை (1) கேவாதபெருந்தச்சன் (2) குண மல்லன் (3) பய்யமிழிப்பான் (4) சாதமுக்யன், (5) கலியாணி, (6) நமஹ திருவொற்றியூர் ஆபாஜன் (7) கொல்லன் ஸேமன் என்பவையாகும். இவை பழைய பல்லவ கிரந்த - தமிழ் எழுத்துகளில் பொறிக்கப் பட்டுள்ளன.

கேவாத பெருந் தச்சன் என்ற பெயர் ஒரு சிற்பியைக் குறிக்கும் என்பது வெளிப்படை. 'கேவாத' என்ற சொல்லின் பொருள் தெரியவில்லை. எனினும் பெருந்தச் சன் (மகா தக்ஷன்) என்ற பெயரிலிருந்து அவன் ஓர் தலை சிறந்த சிற்பி என்று அறியலாம். குணமல்லன் என்ற பெயரும் சிறந்ததாக உள்ளது. பண்டைக் காலத்தில் பல மக்கள் அன்றாளும் கோவின் பெயரைத் தாங்களோ, தங்கள் குழந்தைகளுக்கோ வைத்து மகிழ்ந்தார்கள் என்

பது அனைவரும் அறிந்ததே. உத்தமசோழ பல்லவரையன், இராஜேந்திர சோழ மூவேந்த வேளான், குலோத்துங்க சோழ மூவேந்த வேளான் முதலிய பெயர்கள் இதைத்தான் குறிக்கின்றன. தஞ்சைப் பெரும் கோயிலில் நாட்டியமாடிய ஓர் அழகி தன்னை இராஜராஜி என்று அழைத்துக் கொண்டாள். பல்லவ அரசர்களில் பல அரசர்கள் 'மல்லன்' என்ற பட்டப்பெயர் சூட்டிக்கொண்டனர். முதல் மஹேந்திரவர்மன் 'சத்ருமல்லன்' என்று பெயர் கொண்டிருந்தான். முதலாம் நரசிம்மவர்மன் 'மாமல்லன்' என்றும், ராஜசிம்மன் 'அமித்ரமல்லன்', 'அப்பிரதிமல்லன்' என்றும் பெயர் கொண்டிருந்தனர். எனவே குணமல்லன் என்று காணப்படும் பூஞ்சேரிக் கல்வெட்டு பல்லவர் காலத்திய ஓர் சிற்பியைக் குறிக்கும் என்பதில் ஐயமில்லை. மானசாரம் என்னும் நூலில் மரச்சட்டங்களை இழைத்து ஒருவிதமாகச் சேர்ப்பதற்கு 'மல்லபந்தம்' என்று பெயர் காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்றாவதாகக் காணப்படும் 'பய்யமிழிப்பான்' என்ற பெயரும் தொனிக்கும் வகையில் உள்ளது. 'பய்யம்' என்ற சொல் எதைக் குறிக்கிறது என விளங்கவில்லை. பயம்பு என்றால் குழியைக் குறிக்கும். 'பய்யம்' என்பது 'பயம்பு' என்பதின் திரிபோ என ஐயம் எழும். இழிப்பான் என்றால் இடித்து எடுப்பவன், என்று பொருள்படும். பல்லவ கோப்பெருஞ் சிங்கனின் திருவெண்ணைநல்லூர் கல்வெட்டு "இது விமான மிழிச்சு படியெடுத்தபோது" என்று குறிப்பதிலிருந்து இடித்து புதிதாகக் கட்டினன் என்று அறிகிறோம். எனவே பய்யமிழிப்பான் என்பவன் சிறந்த குடைவிப்பவனை குறிக்குமோ என்று தோன்றுகிறது. 'கொல்லன் ஸேமன்' என்பதும் சிற்பியைக் குறிக்கும். இக்கல்வெட்டுகள் பல்லவர் காலத்தவையானதால் இவை இங்கு வேலை செய்த சிற்பக் கலைஞர்களைக் குறிக்

கும் என்று கொள்ளலாம். கேவாத பெருந் தச்சன் என்பவன் இவர்களுக்கு மேற்பார்வையாளனாக இருந்தான் எனவும் கொள்ளலாம்.

## தஞ்சைக் கோயிலைக் கட்டிய தச்சர்கள்

தஞ்சை இராஜராஜேச்வரமுடையார் கோயிலில் இராஜராஜசோழனின் பல கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் கோயிலில் இருந்த செப்புத் திருமேனிகளைப் பற்றியும், கோயில் வழிபாடுகளைப் பற்றியும், மற்றும் கோயிலில் பணிபுரிந்த அனைவரையும் பற்றி குறிப்புகள் உள்ளன. 750—க்கும் மேற்பட்ட பணியாட்களை இக்கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவற்றில் தேவரடியார்கள், பாடுவோர், திருப்பதியம் ஓதுவார், கெட்டி மத்தளம் வாசிப்பார், தைய்யான் நாவிசஞ் செய்வோர் முதலிய அனைவரும் குறிக்கப்பட்டுள்ளனர். இவ்வளவு பெயர்களும் உள்ள இக்கல்வெட்டுகளில் இம்மாபெரும் கோயிலைச் சிருஷ்டித்த சிற்பியின் பெயரும் இருக்கத் தானே வேண்டும். ஆம், அவன் தச்சாசார்யன் என்று குறிக்கப்பட்டிருக்கிறான். அக்கல்வெட்டில் 'தச்சாசார்யம் ஒன்றுக்கு பங்கு ஒன்றரையும் ஆக சோழன் குஞ்சர மல்லனான ராஜராஜப் பெருந்தச்சனுக்கு பங்கு மூன்று, தச்சு ஒன்றுக்கு குணவன் மதுராந்தகனான நித்யவினோதப் பெருந்தச்சனுக்குப் பங்கு முக்கால் இலத்திச்சடையனான கண்டராதித்தபெருந்தச்சனுக்குப் பங்கு முக்கால்" என்று இந்த தச்சாசர்யனுக்கும் அவன் கீழ் வேலை செய்தோருக்கும் கொடுத்த நிலப்பங்குகள் குறிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து தச்சாசார்யன் வீரசோழன் குஞ்சரமல்லனான ராஜராஜப் பெருந்தச்சனுக்கு பங்கு மூன்றும் நித்யவினோதப் பெருந்தச்சனுக்கு பங்கு முக்காலும், இலத்திச் சடையனான கண்டராதித்த பெருந் தச்சனுக்கு முக்காலும் கொடுக்கப்பட்டது என அறிகிறோம். இக்கல்வெட்டை பதிப்பித்த ஆசிரியர் தச்சன் என்பான் மரத்

தொழில் செய்பவன் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், முன் கூறியபடி தச்சன் என்ற சொல் தமிழ் நாட்டில் சிற்பிகளைக் குறிக்கும் என்று கல்வெட்டிலிருந்து மேலே குறிப்பிட்டோம். எனவே வீரசோழன் குஞ்சர மல்லனான ராஜராஜப் பெருந்தச்சன் (சிற்பாசிரியன்) தச்சாசாரியனாக பணிபுரிந்து இருக்கிறான். மற்ற இரு வரும் அவன் கீழ் வேலை செய்தோர் என்று அறிகிறோம். ராஜராஜேச்வரர் ஆலயத்தை எடுப்பித்த பெருந்தகை யான ராஜராஜ சோழரின் பெயரையே இந்த ஆசார்யன் தானும் பூண்டுள்ளது மிகவும் பொருத்தமாகவுள்ளது. இவனுடைய குஞ்சரமல்லன் என்ற பட்டம் இவன்மிகவும் பலம் பொருந்திய சிற்பி என்பதைக் குறிக்கிறது. முன்பே நாம் குறிப்பிட்டதுபோல் தச்சன் மிகவும் பலசாலியாக விளங்க வேண்டும். பலபந்து என்று குறிப்பிடப்படுவது இங்கு நோக்கத் தகுந்தது.

மேலும் இந்த ஆசார்யனுடைய பெயர் வீரசோழன் என்று கல்வெட்டுக் கூறுவதையும் கண்டோம். தஞ்சைப் பெருங் கோயிலைக் கட்டிய வீர சோழனான ராஜராஜப் பெருந்தச்சனும், திருவொற்றியூர் கோயிலைக் கட்டு வித்தவனும் ஒருவரோ என்று ஐயம்கூட தோன்றும். ஆயினும் ஒற்றியூர் ஆலயத்தைக் கட்டியவன் ரவி என்று அழைக்கப்படுவதால் இவனினும் வேறானவன் என்று கொள்ளலாம். தமிழகத்தின் தலைசிறந்த சிற்பப் படைப்புகளைத் தோற்றுவித்த சிற்ப ஆசார் யர்களான மாமல்லபுரத்து 'கேவாத பெருந்தச்சனும், தஞ்சைக் கோயிலைக் கட்டிய 'இராஜராஜப் பெருந் தச்சனும்', போற்றிப் புகழத் தகுந்தவர்கள். இது போன்று தமிழகத்தின் பல கோயில்களைத் தோற்றுவித்த ஆசார்யர்களைப் பற்றி கல்வெட்டுகளில் குறிப்பு உள்ளன.

## எழுத்துக்களைக் காத்துத் தந்தோர்:

தமிழ் நாட்டில் உள்ள கோயில்களில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் உள்ளன. ஒரே வரிசையாகவும், அழகாகவும், சீராகவும் எழுதப்பட்டுள்ள அக் கல் வெட்டுகள் பார்ப்போர் மனதைக் கவரும். இதே போன்று பல பரிசுகளைச் செப்பேடுகளிலும் பொறித்து வைத்துள்ளதை அறிவோம். இவற்றைப் பொறித்தவர்கள் ஆசார்யர் என்றும், தச்சர் என்றும், சில்பி என்றும் குறிக்கப்படுகிறார்கள். இது போன்று பல தச்சர்களின் பெயர்களை அறிகிறோம். நந்திவர்மன் பல்லவமன்னன் என்ற அரசனின் காசாக்குடி செப்புப் பட்டயங்களை எழுதியவன் பரமேச்வர மகா காஷ்டகாரி என்று குறிக்கப்படுகிறான். இங்கு காஷ்டகாரி என்பது தச்சன் என்ற சொல்லேயாகும். பரமேச்வரப் பெருந்தச்சன் என்ற தமிழ்ப் பெயரே வடமொழியில், பரமேச்வர மகாகாஷ்ட காரி எனக் குறிக்கப்பட்டுள்ளது. சிற்பிகளை 'மகா தக்ஷன்' என்று பொருள்படும்படி பெருந்தச்சன் என்று பட்டம் கொடுத்து கௌரவித்தனர். பட்டத்தால் மங்கலம் என்ற ஊரில் கிடைத்த இதே மன்னனின் மற்றொரு செப்புப் பட்டயத்தை "கச்சிப்பேட்டு ஐம்பனைச் சேரி விடேல் விடுகு பல்லவப் பெருந்தச்சன் மகன் ஸ்ரீதந்தி" என்பவன் எழுதினான். அரக்கோணம் தாலுக்கா கீழ்புலம் கிராமத்தில் வைரமேகவர்மன் என்ற பல்லவ மன்னனின் கல்வெட்டு, கற்றளிப் பெருந்தச்சன் மகன் இளங்காவனால் எழுதப்பட்டது. விஜயகம்பவர்மன் என்ற பல்லவ மன்னன் காலத்தில் திருவொற்றியூர் மகாதேவர்க்கு கொடுத்த பரிசை கல்லில் வெட்டியவன் சாமுண்டாசார்யன் மகன் திருவொற்றியூர் ஆசார்யன் என்பவனாகும். இதே கல்வெட்டின் சமஸ்கிருத பகுதியில் இவன் பரமேச்வரன் என்று பெயருடையவன் என அறிகிறோம். கங்காநதியும் கடாரமும் கொண்டு சோழ

சிங்காதனத்து வீற்றிருந்த இராஜேந்திர சோழனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகள் மிகவும் புகழ் வாய்ந் தவை. இவற்றை எழுதியவர்கள் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சிற்பிகள் என்று குறிக்கப்படுகின்றனர்.

ஹாலந்து தேசத்தில் லெய்டன் என்ற நகரில் தற் போது இருக்கும் இராஜேந்திர சோழனுடைய மற்றொரு செப்புப் பட்டயம், நாகப்பட்டினத்தில் கடாரதேச மன்னனால் கட்டப்பட்ட சூடாமணிவர்மன் விஹாரத் திற்கு கொடுத்த பரிசை குறிக்கிறது. இப்புகழ் வாய்ந்த செப்புப் பட்டயத்தை எழுதியவர்கள் காஞ்சியைச் சார்ந்த சிற்பிகள் ஐவர். "இச்சாஸனம் வெட்டினேம் ஜயங் கொண்ட சோழ மண்டலத்து ஸ்ரீகாஞ்சிபுரத்து ஓவியச் சித்ரகாரி கிருஷ்ணன் வாசுதேவனான ராஜராஜப் பேராசார்யன் என்றும் கிருஷ்ணன் திருவரங்கனும், கிருஷ்ணன் தாமோதரனும், வாசுதேவன் கிருஷ்ணனும் ஆராவமிர்துவும் புருஷோத்தமனும்" என்று காணப் படுகிறது. இதே சாஸனத்தில் சம்ஸ்கிருதப் பகுதி இவர்களைப் புகழ்ந்து கூறுகிறது.

பாண்டிய மன்னன் குலசேகர தேவனுடைய விக்ர மங்கலம் கல்வெட்டில் "இவ்வெழுத்து வெட்டின இக் கோயில் சிற்பாசார்யன் சீயனும்வானான சீவல்லப ஆசார்யன் எழுத்து" என்று உள்ளத்திலிருந்து ஒவ் வொரு கோயிலையும் அண்டி சிற்பாசார்யர்கள் வாழ்ந் தனர் என்றும், அவ்வப்போது கொடுக்கப்படும் பரிசு களை இவர்கள் கோயிற் சுவர்களில் பொறித்தனர் என்றும் அறியலாம். இதே ஊரில் உள்ள சுந்தர பாண்டிய மன்னனின் கல்வெட்டு "இவ்வெழுத்து வெட்டினேன் ரதகாரபுரந்தரன் எழுத்து" என்று இருப்பதிலிருந்து இரதகாரன் என்றும் இவர்கள் அழைக்கப்பட்டார்கள் என்பது தெளிவு. சேதுபதி மன்னரான விஜய ரகுநாத சேதுபதி அவர்களின்

கி. பி. 1603 ஆண்டுச் சாஸனத்தை செம்பில் வெட்டி யவன் பட்டயம் எழுதின ஆச்சாரி யிந்தபடி எழுதி னேன் திருப்புவனத்திலிருக்கும் பாண்டி ஆசாரி மகன் பொன்னம்பல ஆசாரி" என்று குறிக்கிறன். பண்டைய எழுத்துகளை அழியாமல் நாம் இன்றும் அறியும் வண்ணம் கல்லில் வெட்டி வைத்தவர்கள் தச்சர்களே.

## சிற்பிகளின் உருவச்சிலைகள் :

சில சிற்பிகளுடைய உருவச் சிலைகளும் பெயர்களும் கல்லில் உள்ளன. சிதம்பரம் வடக்குக் கோபுரத்தை கிருஷ்ணதேவராயர் புதுப்பித்தார். இத்திருப்பணியில் ஈடுபட்ட நான்கு சிற்பிகளின் உருவமும், அவர்களுடைய பெயர்களும் அக்கோபுரத்தின் நிலையை அலங்கரிக்கின் றன. (1) விருத்தகிரியில் சேவகப் பெருமாள் (2) அவன் மகன் விசுவமுத்து, (3) திருப்பிறைக் கோடை ஆசாரி திருமகன் (4) அவன் உடன் பிறந்தான் காரணச்சாரி என்ற நால்வரே இக்கோபுரத் திருப்பணியைச் செய்தவர்.

## கம்மாளர்க்கு அரசு அளித்த அந்தஸ்து :

சமுதாயத்திற்குச் சிறந்த தொண்டு செய்த கம்மாளர் களுக்கு அரசு சில அந்தஸ்துகளைக் கொடுத்துப் போற்றி யிருப்பதைச் சில கல்வெட்டுகள் குறிக்கின்றன. கொங்கு நாட்டில் கம்மாளர்களுக்கு கி. பி. 12-ம் நூற்றாண்டில் அந்தஸ்துகள் கொடுக்கப்பட்டன. இது பல கோயில் களில் கல்வெட்டில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது.

'தென் கொங்கில் கம்மாளர்க்கு தங்களுக்கு 15-வது ஆடி முதல் நன்மை தீமைகளுக்கு இரட்டைச் சங்கும் ஊதிப் பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்ள வும் தாங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்குப் பாதரக்ஷை கோத்துக் கொள்ளவும் தங்கள் வீடுகளுக்குச் சாந்து இட்டுக் கொள்ளவும் சொன்னோம்' என்று கல் வெட்டுக் கூறுகிறது (238/5).

இக்கல்வெட்டிலிருந்து சில உண்மைகள் புலனு கின்றன. கம்மாளர்கள் சமூகத்தில் மிதியடி அணிந்து கொள்ளக் கூடாது. தங்கள் வீட்டுக்குச் சாந்து பூசக் கூடாது. நன்மை தீமைகளுக்கு சங்கு ஊதிக் கொள்ளுதல் பேரிகை கொட்டிக் கொள்ளுதல் முதலிய சாதாரணமாகச் செய்து கொள்ளத் தடை இருந்தது என்றும் அரசின் அனுமதியின் பேரிலேயே இவற்றை இவர்கள் செய்து கொள்ளலாம் என்றும் அறிகிறும்.

இது கம்மாளர்களுக்கு மட்டும் இருந்த தடை என்று எண்ணிவிடக் கூடாது. இடையர்களுக்கும் இதே போன்ற அந்தஸ்து அளித்ததை வேறு ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

கீரனூர் என்னும் இடத்தில் விக்கிரம சோழன் காலத்திய கல்வெட்டு கீழ்வருமாறு குறிக்கிறது.

"இடையருக்கு நம் பேரால் கொடுத்த தர்மமாவது தாங்கள் வீடு எடுக்கும் இடத்து இரண்டு நிலமும்... வாசல் மிதியமும் வைத்து சாந்தும் இட்டு கொள்ளப் பெறுவார்கள் ஆகவும். நன்மைக்கு தண்டேறப் பெறு வார்கள் ஆகவும். தீமைக்குப் பொடை கட்டிக் கொள்ளப் பெறுவார்கள் ஆகவும். பொடை போடுமிடத்து பச்சைப் பட்டு, புலியூர்ப்பட்டு, பட்டாவளப்பட்டு கட்டிக் கொள்ளப் பெறுவார்கள் ஆகவும். பொடை போர்க்கப் பெறுவார்கள் ஆகவும், நன்மை, தீமைக்கு உவச்சு கொட்டப் பெறுவார்கள் ஆகவும். இடையர்கள் போதும் வரிசைகள் எல்லாம் பெற்றுப் போதுவார்கள் ஆகவும்" (283/).

இதிலிருந்து மிதியடி அணிந்து கொள்ளுதல், சங்கு ஊதிக் கொள்ளுதல், பேரிகை கொட்டிக் கொள்ளுதல், வீட்டுக்குச் சாந்து இட்டுக் கொள்ளுதல், ஆகியவற்றிற்கு அரசின் அனுமதி தேவை என்று அறியலாம்.

# 14

# அணியரங்கம் ஆடுதுமோ தோழீ

## நாட்டிய மகளிர் :

*தமிழக வரலாற்றில் நாட்டிய மகளிர் இன்றியமையாத நிலை வகித்து வந்தனர். அவர்களது தகுதிகளையும் குணங்களையும் சிலப்பதிகாரம் சிறப்பாக எடுத்துரைக்கிறது. நாட்டிய மகளிர் அனைவரும் பொது மகளிராக வாழ்ந்தனர் என்று கூறுவதற்கில்லை. சிலர் உயர்ந்த குறிக்கோளை உடையவர்களாக, தாம் காதலித்த ஒருவருடன் வாழ்நாள் முழுவதும் உடன் வாழ்ந்த கற்புடை மகளிராக திகழ்ந்தோர் உண்டு. சிலம்பில் வரும் மாதவியும், பதியிலார் குலத்தில் பிறந்து சுந்தரமூர்த்தியை மணம் புணர்ந்த பரவையையும் இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். பலர் பொது மகளிராகவும், விலை மாதராகவும் திகழ்ந்திருக்கின்றனர் என்பதிலும் ஐயமில்லை.*

## ஆடலும் பாடலும் அழகும் வேண்டும் :

*ஆடலிலும், பாடலிலும், அழகிலும் சிறந்திருப்பவளே நாட்டிய மகள் எனச் சிலப்பதிகாரம் குறிக்கிறது.*

'ஆடலும் பாடலும் அழகு மொன்றிக் கூறிய மூன்றி லொன்று குறை படாமல்' என்று குறிக்கிறது. இவர்கள் ஐந்தாவது ஆண்டிலேயே தண்டியம் பிடித்து, ஏழாண்டு பயின்று, பன்னிரண்டாம் ஆண்டில் அரங்கேற்றம் நடத்துவர் என்று சிலம்பு கூறுகிறது. திறன் பெற்ற மகளிர் அரசனுடைய அரங்கத்தில் அரங்கேற்றம் புரிவதும் உண்டு. மாதவி கரிகால் பெருவளத்தானுடைய அரங்கில் அரங்கேற்றம் செய்தாள் என்று சிலம்பு கூறுகிறது. இவர்கள் பல்வேறு கூத்துக்களிலே சிறப்புப் பெற்று அரங்கேற்றம் நிகழ்த்திய காலை அரசனால் 'தலைக்கோல்' அளிக்கப்பட்டு 'தலைக்கோலி' என்னும் பட்டம் பெறுவர். கூத்துக்களிலே 'சாந்திக் கூத்து', 'விநோதக் கூத்து' என்ற இருவகைக் கூத்துக்களையும் ஆடுவர் என்று அறிகிறோம்.

கூத்துக்கள் :

'சாந்திக் கூத்து' சாந்தமாக ஆடிய கூத்து ஆதலின் அப்பெயர் பெற்றது என்பர். இது சொக்கம், மெய் கூத்து, அபிநயம், நாடகம் என நான்கு வகைப்படும். சொக்கம் என்பது 108 கரணங்களை உடையது. இதை சுத்தநிருத்தம் என்றும் அழைப்பர். மெய்க்கூத்து என்பது அகமார்க்கம் என்றும் அழைக்கப்படும். இது அகச் சுவையின் அடிப்படையிலே ஆடப்படுவது ஆதலின் அகமார்க்கம் என்றும் அழைக்கப்படுகிறது. தேவார, திவ்யப்பிரபந்தங்களைப் பாடி தன்னை தலைவியாகக் கொண்டு நாயகன் பால் ஆராக் காதல் கொண்ட மகளாக ஆடும் கூத்து அகமார்க்கம் எனப்படும். இது தேசி, வடுகு, சிங்களம் என மூன்று வகைப்படும். வடுகு என்பது மார்க்கம் என்றும் அழைக்கப்பட்டது. கதையைத் தழுவாது பாட்டின் பொருளுக்கு கைகாட்டி வல்லபம் செய்வது அபிநயம் என அழைக்கப்படும்,

கதையைத் தழுவி வரும் கூத்து நாடகம் எனப்படும். விநோதக் கூத்து என்பது குரவை, கலிநடம், குடக் கூத்து, கரணம், நோக்கு, தோல்பாவை என்பவை யாகும்.

## கூத்துப் பயிற்சியும் அரங்கேற்றமும் :

இதிலிருந்து சற்றேறக் குறைய கி. பி. 2-ம் நூற் றாண்டிலேயே தமிழகத்து நாட்டிய மகளிர் தமிழ் நாட்டு கூத்துக்களிலும், வடுகு சிங்களக் கூத்துக்களிலும் சிறந் திருந்தனர் என்று அறியலாம். இவர்கள் பல்வேறு கூத்துக்களிலே சிறந்த ஆடல் ஆசிரியர்களிடத்தும், பல தேசாந்திர மொழிகளை அறிந்து கூத்துக்களுக்கு ஏற்ப யாழ், குழல், மிடற்றுப் பாடல் ஆகியவற்றிற்கு ஏற்ப இசை பூணும்படி அமைக்கவல்ல இசை ஆசிரியர்களி டத்தும், கவிஞர்களிடத்தும், பல்வேறு இசைக் கருவி களை இசைக்கத் தெரிந்த வாத்தியம் அறிந்த ஆசிரியர் களிடத்தும் பயின்றார்கள். முதன் முதலில் ஆடலரங்கு ஏறும் போது சிறப்பாக அமைக்கப்பட்ட அரங்கில் வலக்காலை முன்னே வைத்து ஏறுதல் வேண்டும் என்றும் வலப்பக்கத்து தூணின் அருகிலே சென்று நிற்க வேண் டும் என்றும் அறிகிறோம். அப்பொழுது இடது தூணின் அருகில் ஆடி முதிர்ந்த தோரிய மடந்தை நிற்பாள் என்றும் அறிகிறோம். அவள் நன்மை உண்டாகவும், தீமை நீங்கவும் வேண்டியும், தாள இயல்பு பொலிவு பெறவும், அவதாளம் நீங்கவும் வேண்டிப் பாடுவாள். தெய்வப் பாடலின் இறுதியிலே இசைக் கருவிகளெல் லாம் இசைக்கப்படும். பின்னர் நாட்டிய மகள் தேசிக் கூத்தை ஆடிப் பின்னர் வடுகுக் கூத்தை ஆடி, தாண்ட வம், நிருத்தம், நாட்டியம் என்னும் மூன்று வகைப் பட்ட கூத்துக்களையும் ஆடுவாள்.

இவ்வாறு நாடக மகளின் அரங்கேற்றம் கண்ட அரசன் தன்னுடைய மாலையை அளித்து ‘தலைக்கோல்’ அளிப்பதும் மரபு. தலைக்கோல் பெற்றவள் ‘தலைக் கோலி’ என்ற பட்டம் பெற்றாள். இதை ‘தலையரங்கு ஏறல்’ என்று இலக்கியம் குறிக்கும்.

## தலைக்கோல் :

பெரிய புகழுடைய மன்னன் மாற்றரசனை வெற்றி கொண்டு அவனது வெண்கொற்றக் குடையின் காம்பைத் தலைக்கோலாகக் கொள்வது ஒரு மரபு. மாற் றூரது எயில் புறத்தில் வெட்டிக் கொண்டு வந்த மூங்கிலை யும் தலைக்கோலாகக் கொள்வதும் உண்டு. இதில் ஒவ்வொரு கண்ணிலும் நவமணிகளைக் கட்டி இடைப் பகுதியில் தங்கத் தகட்டைப் போர்த்து தலைக்கோலாகச் செய்வர். இது ஏழு சாண் நீளம் இருக்கும் என்று பரத சேனாபதியம் என்னும் நூலிலிருந்து அறிகிறோம். அரச னுடைய மாளிகையில் தலைக்கோலைக் காவலுடன் வைத்து அதை இந்திரனின் மகன் ஜெயந்தனாக நினைத்து மந்திர முறையிலே வழிபடுவர். நாடக மகள் தலைய ரங்கு ஏறும் நாளன்று புண்ணிய நதிகளிலிருந்து பொற் குடத்திலே நீர் கொண்டு வந்து அதற்கு அபிஷேகம் செய்து மலர் மாலைகள் சூட்டுவர். இதை ஆடல் ஆசிரியர் முதலானோர் அரங்கத்தில் வைத்து இவ்வாறு அபிஷேகம் செய்து மலர் மாலை சூட்டுவர் என்று அறிகி றோம். பின்னர் பட்டத்து யானையின் மேல் இதை வைத்து முரசுகள் முழங்க பல வாத்தியங்கள் இசைக்க அரசன், அமைச்சர், புரோகிதர், சேனாபதி முதலிய பலர் உடன் வர, தேரின் மேலே நின்று பாடுகின்ற கவிஞனது கையிலே இத்தலைக்கோலை பட்டத்து யானையால் கொடுக்கச் செய்து, நகரை வலமாக வந்து அரங்கத்தில் புகுந்து தலைக்கோலை எதிர் முகமாக வைத்து அதன்

முன்னர் அரங்கேற்றம் புரிவது வழக்கம் என்று அறிகிறோம். அரங்கேற்றம் கண்ட அரசன் ஆயிரம் பொன் பரிசாகக் கொடுப்பதும் மரபு.

இவ்வாறு தலைக்கோல் பெற்ற நாட்டிய மகள், தான் அரசனிடமிருந்த பெற்ற மாலையை தன் தாதியிடம் கொடுத்தனுப்பி ஊரிலே யார் அதற்கு மிக உயர்ந்த பொருள் விலையாகக் கொடுக்க இசைகின்றாரோ அவரை வரித்து வாழ்வாள். கரிகாலனிடமிருந்து மாதவி பெற்ற மாலையை கோவலன் வாங்கி மாதவியை வரித்தான்.

### தலைக்கோலி

தலையரங்கு ஏறி அரங்கேற்றம் செய்த நாட்டிய மகளுக்கு தலைக்கோலி எனும் பட்டம் கொடுக்கும் மரபு கி.பி. 2-ம் நூற்றாண்டில் இருந்தது என்று சிலப்பதிகாரத்திலிருந்து அறிகிறோம். இம்மரபு சற்றேறக்குறைய 13-ம் நூற்றாண்டு வரையில் வழக்கில் இருந்திருக்கிறது. பல நாட்டிய மகளிர் கல்வெட்டுகளில் 'தலைக்கோலி' என்ற பட்டம் பூண்டு விளங்குவதைக் காண்கிறோம். பராந்தக சோழனுடைய 11-ம் ஆண்டு கல்வெட்டு ஒன்று (283/19) ஆரூர் தேவனார் மகள் நக்கன் பிரமாதேவியாகிய மும்முடிச்சோழ தலைக்கோலி என்பவளைக் குறிக்கிறது. வீர அணுக்க விஜயம் என்னும் நாட்டியத்தை பூங்கோயில் நாயகத் தலைக்கோலி என்பவள் ஆடினாள் என்று மற்றொரு கல்வெட்டு (593/17) கூறுகிறது. திருவொற்றியூரில் உறவாக்கின தலைக்கோலி என்பவள் அகமார்க்கம் என்னும் கூத்தை ஆட அதை சோழ மன்னன் தானே நேரிலிருந்து கண்டான் என்று அவ்வூர் கல்வெட்டு கூறுகிறது.

## தேவதாசி

பிற்காலத்தில் கோயில்களில் பணிபுரியும் தேவதாசிகளைப் பற்றியும், அவர்கள் நாட்டியம் கற்றுக்கொண்டது பற்றியும் குறிப்புக்கள் உள்ளன. அதிலிருந்து தேவதாசி குலத்தில் உதித்த, ஆறிலிருந்து ஒன்பது வயதுக்கு உட்பட்ட பூப்பெய்தாத கன்னிப்பெண்ணை, கோயிலில் உள்ள தேவதாசிகளில் தலைமையானவள் பரிந்துரைப்பாள். நல்ல நாளில் கோயில் பணிமக்கள் முன்னிலையில் வழிபாடுசெய்யும் அர்ச்சகர் அப்பெண்ணை கருவறையின் உள்ளே மூலஸ்தானத்தின் முன்னர் அமர்த்துவார். அவளுக்கு கல்யாணச் சடங்குகள் முற்றிலும் செய்வித்து தெய்வத்தின் காலடியில் தாலியை வைத்து, அதை யெடுத்து தெய்வத்தின் பிரதிநிதியாக அவள் கழுத்திலே கட்டுவார். பின்னர் அப்பெண் தெய்வத்தை வணங்கி அர்ச்சகரையும் வணங்கி வெளி மண்டபத்திற்கு வருவாள். அங்கு மங்கள வாத்தியங்கள் முழங்க நட்டுவரால் நாட்டியம் கற்றுத் தரப்படுவாள். இரண்டு, மூன்று நாட்களுக்கு இது விழாப்போல் நடத்தப்படும். இவ்விழாவிற்கு தேவையான ஒரு குறிப்பிட்ட தொகை கோயிலிலிருந்து கொடுக்கப்படும் என்று அறிகிறோம்.

## புராணக் கதைகள்

மிகவும் தொன்மையான காலத்திலிருந்தே நாட்டிய மகளிர், தாங்கள் தேவ குலத்திலிருந்து பிறந்தவர்கள் என்ற புராணக் கதைகளைக் கூறிக்கொண்டனர் என்று அறிகிறோம். மாதவி தன் முற் பிறப்பில் ஊர்வசியாகத் திகழ்ந்தவள் என்றும், அகத்திய முனிவரது சாபத்தால் மாதவியாகப்பிறந்தாள் என்றும் சிலப்பதிகாரத்தில் கதை காணப்படுகிறது, உமை அன்னைக்குச் சேடியாக விளங்கிய கமலினி என்பவளே ருத்ரகணிகையாக பரவை என்ற பெயரில் ஆரூரில் பிறந்தாள் என்றும், அவளையே

சுந்தரமூர்த்தி புணர்ந்தார் என்றும் பெரிய புராணம் கூறுகிறது. இவற்றிலிருந்து தேவரடியாளாகத் திகழ்ந்த நாட்டிய மகளிர் தாங்கள் உயர் குலத்தில் உதித்தவர்கள் என்று கூறிக்கொள்வதிலே பெருமை கொண்டனர் என்று அறியலாம்.

## பதியிலார், தளியிலார், தேவரடியாள்

இவர்கள் பதியிலார், இஷபத்தளியார் தேவரடியாள், தளிச்சேரிப்பெண்டுகள். கூத்திகள் என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். இவர்களிலே தத்தை, விக்ரிதை, பிருத்தியை, பக்தை, ஹிருதை, அலங்காரை, ருத்ர கணிகை என ஏழு பிரிவுகள் உண்டு என்று ஹிந்து நூல்கள் குறிக்கின்றன. தன்னைத்தானே கோயிலுக்காக அர்ப்பணித்துக் கொண்டவள் தத்தை என்றும், தன்னை கோயிலுக்கு விற்றுக் கொண்டவள் விக்ரிதை என்றும், கோயிலில் பணியாளராகத் தன்னை தன் குடும்ப நலத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டவள் பிருத்யை என்றும், பக்தியினால் கோயிலில் சேர்ந்தவள் பக்தை என்றும், பிறரால் அபகரிக்கப்பட்டு கோயிலுக்கு கொடுக்கப்பட்டவள் ஹிருதை என்றும், அரசனாலோ அல்லது பிறராலோ கூத்திலே சிறந்தமைக்காக கோயிலுக்கு அளிக்கப்பட்டவள் அலங்காரை என்றும், கோயிலிலிருந்து ஊதியம் பெறுபவள் ருத்ரகணிகை என்றும், கோபிதை என்றும் அழைக்கப்பட்டனர் என்று கூறுவர்.

இவர்கள் ஆடலில் வல்ல கலையினாலும், இசைப் பணியினாலும், கோயில்களில் பணிபுரிந்தமையாலும் சமுதாயத்தில் சிறப்பாகப் போற்றப்பட்டனர் என்று அறிகிறோம். 'பஞ்சின் மெல்லடிப் பாவைமார்' என்றும் 'சேயிழையாள்' என்றும் 'அருள் மணித்தடம் பூண்முலை அரம்பையர்' என்றும் இவர்கள் நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் புகழப் பெற்றவர்கள். அப்பெரியார்

களாலே பாடப்பட்டதிலிருந்தே இவர்கள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையை வகித்தனர் என்பது தெளிவு. கோயில் களில் பணிபுரிபவர்களாக இவர்கள் கி. பி. 6–ம் நூற்றாண் டுக்கு முன்பிருந்தே வாழ்ந்திருக்க வேண்டும் என்பது திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர் போன்ற அடியார்களின் பாடல்களிலிருந்து அறிகிறோம்.

கி. பி. 8-ம் நூற்றாண்டில் நந்திவர்மன் பல்லவமல்லன் காலத்திய கல்வெட்டு ஒன்றில் காஞ்சிபுரத்துக் கோயிலில் பணிபுரிந்த பல நாட்டிய மகளிர் குறிக்கப்படுகின்றனர். சோழப் பெருமன்னர்கள் தாங்கள் தோற்றுவித்த கோயில்களில் ஏராளமான நாட்டிய மகளிரை நியமித்து நாட்டியப் பணியில் அமர்த்தியிருந்ததை கல்வெட்டுகளி லிருந்து அறிகிறோம். இராஜராஜன் தான் தோற்றுவித்த தஞ்சைப் பெருங்கோயிலுக்கு சுமார் 400–க்கும் மேற் பட்ட நாட்டிய மகளிரை நாட்டின் பல்வேறு கோயில்களி லிருந்து மாற்றி அக்கோயிலில் நாட்டியப் பணிபுரிய அமர்த்தினன். இவர்களுக்கு உரிய தகுதிகள் இருக்க வேண்டுமென்றும், தகுதியற்றவர்கள் தாங்களே தகுதி உள்ளவர்களை நியமித்து பணி புரியலாம் என்றும் பணித்தான். இவர்களில் சிலர் இறந்துபோனால் அல்லது வேறு இடங்களுக்குச் சென்றால் அவர்களுக்காக அடுத்த முறையுள்ளவர்கள் இப்பணி புரியலாம் என்றும் பணித் தான். அடுத்த முறை வருபவர்களும் நாட்டியத்தில் உரிய தகுதி பெற்றவர்களாகத்தான் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கோயில் நியாயத்தார்களே உரிய தகுதி உள்ளவர்களை நியமிக்க வேண்டும் என்று பணித்தான் இதை அவனுடைய கல்வெட்டு சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

இதிலிருந்து சில உண்மைகள் தெரிகின்றன. தேவரடி யாளாகக் கோயிலில் பணிபுரிவதற்கும் ஆடலிலும், பாட

விலும் உரிய தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதாகும். மேலும், கோயிலிலே பணிபுரிந்தவர்கள் பிற இடங்களுக்குச் செல்வதும் உண்டு. ஆதலின் அவர்கள் நிரந்தர அடிமைகள் அல்ல என்பதும் அறிய முடிகிறது. இவ்வாறு அமர்த்தப்பட்ட தளிச்சேரிப் பெண்டுகளுக்கு இராஜராஜன் வசிப்பதற்கென்றே தெருக்களை அமைத்து வீடுகளை எடுப்பித்து ஒவ்வொன்றிலும் ஒருவர் வசிக்க வகை செய்தான். ஒவ்வொரு நாட்டிய மகளுக்கும் ஓராண்டுக்கு நூறு கலம் நெல் வரும் வகை செய்தான். இதைப் பார்க்கும்போது மற்றபணியாளர்களுக்கு என்ன ஊதியம் கொடுக்கப்பட்டதோ அதுவே இவர்களுக்கும் கொடுக்கப்பட்டது என்று அறிகிறோம்.

இந்நாட்டிய மகளிர் தங்களின் பெயரால் சொத்து கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர். பல கல்வெட்டுகளில் நாட்டியப் பணிபுரிந்த பல மகளிர் கோயில்களுக்காக ஏராளமான பரிசுகளை அளித்திருப்பது குறிக்கப்பட்டுள்ளது.

### சாந்திக் கூத்திகள்

கோயில்களில், சாந்திக் கூத்து ஆடப்படும் என்று முன்னர் குறிப்பிட்டோம். சிலப்பதிகார உரையாசிரியர் சாந்திக்கூத்தை குறிப்பிட்டுள்ளது நினைவிற்கொள்ளல் தகும். பிற்காலக் கல்வெட்டுகளிலும், சாந்திக் கூத்தர் சிலர் குறிக்கப்படுகின்றனர். கி. பி. 1137–ஐச் சார்ந்த வேதாரண்யம் கல்வெட்டு ஒன்றில் (463/17) அவ்வூரைச் சார்ந்த சாந்திக் கூத்திகள் குறிக்கப்படுகின்றனர்.

அவ்வூர் சாந்திக் கூத்திகளில் தேமாங்குடி பெருந் திருவாட்டி கயிலைக் கிழத்தி என்பவள் 30 வேலி நிலம் வாங்கிக் கொடுத்ததை அக்கல்வெட்டு கூறுகிறது. 30 வேலி நிலம் வாங்கித் தானமாகக் கொடுக்கும் அளவுக்கு

அவள் பெரும் பொருள் பெற்றிருந்தாள் என்பது இதனால் விளங்கும்.

## தேவரடியாள் கொடுத்த தானங்கள் :

தேவரடியாள் பலர் கோயிலுக்குப் பொருள் கொடுத்துள்ளதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன என்பதை முன்னர் கண்டோம். திருநெல்வேலி கோயிலில் கி. பி. 13-ம் நூற்றாண்டில் வீரபாண்டியன் காலத்தில் பதியிலார் குடும்பத்தைச் சேர்ந்த நாட்டிய மகள் ஒருத்தி கோயிலுக்குப் பூ எடுத்துவரும் ஒருவருக்கு ஜீவனத்துக்காக நிலம் வாங்கி அளித்ததைக் கூறுகிறது. 'இவ்வூர் பதியிலார் கூத்தன் நம்பிராட்டி ஆன செய்யபெருமாள் சிறு காலைச் சந்திக்கு அருகும் தாளிப் பூவும் சாத்தி பறிக்கிற திருத்தொண்டர்களுக்கு ஜீவனத்துக்கு விற்று விலைப் பிரமாணம் செய்த பரிசாவது' என்று கூறுகிறது. பராந்தக சோழன் காலத்தில் மன்னார்குடி தாலுகா திருவிராமேச்வரம் கோயிலில் சந்தி விளக்குக்கு தேவரடியாள் உழுதன் தேவி என்பவள் இரண்டுகாசு கொடுத்ததைக் கூறுகிறது (228/19).

கோயில்களுக்கு மட்டுமின்றி ஊர்களின் பொது நலத்திற்கும் தேவரடியாள் பலர் பொருள் கொடுத்து உதவியுள்ளனர். சுந்தர பாண்டியன் காலத்தில் ஊர்க் குளம் உடைந்து கரை அழிந்து நாடும் பாழாகக் கிடந்ததால் குளம் வெட்டித் திருத்தி ஆக்கிக்கொள்ள தளியிலாள் நக்கன் நாச்சியாரான தனியானைவிட்ட பெருமாள் தலைக்கோலி என்பவளிடமிருந்து நக்கன் செய்யாளான காளிங்கராய தலைக்கோலி என்பவள் நிலம் வாங்கி வைத்தாள் என்று அறிகிறோம் (169/8).

இவ்வாறு பொதுவாழ்வில் பெரும் பங்குகொண்டு வாழ்ந்த தேவரடியார்களின் வழிவந்தோரும் உயர்குடி

யாக வாழ்ந்திருக்கின்றனர். இராஜேந்திர சோழனுடைய அனுக்கியாகத் திகழ்ந்த ஐயாறன் செம்பொன் தங்கைக் கூத்தன் உத்தமசீலியார் மகன் அரையன் கடக்கங் கண்ட சோழனான இராஜராஜ அணிமூரி நாடாழ்வான் என்பவன் சேனாபதியாகவும், சிறுதனப் பெருந்தரமாகவும் பணிபுரிந்திருக்கிறான் (644/5).

## தேவடியாச் சண்டை :

தேவரடியரில் மூன்று பெரும் பிரிவுகள் இருந்தன என்று அறிகிறோம். இவர்களில் பதியிலார், இஷபத்தளி யிலார், தேவரடியாள் என்ற மூன்று பிரிவுகள் இருந்தன. பதியிலார் என்பவர்கள் உயர்குடிப் பிறந்தவர் என்றும், தேவரடியாள் குடியில் தாழ்ந்தவர் என்றும், தளியிலார் இடைப்பட்டவர் என்றும் கருத்து நிலவி வந்துள்ளது. சுந்தரமூர்த்தி நாயனாரை மணந்த பரவை நாச்சியார் பதியிலார் குடியைச் சேர்ந்தவள் என்று சேக்கிழார் கூறு வதிலிருந்து சுமார் 7-ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இப் பாகுபாடுகள் தோன்றியிருக்கவேண்டும் என்பது தெளிவு. தங்கள் ஆடல் திறனாலும், பலரிடம் செல்லாது ஒரு வரையே விரும்பி வாழ்ந்ததாலும் பதியிலார்குடி உயர்குடி யாகக் கருதப்பட்டது போலும். இம்மூன்று திறத்தாரும் கோயில்களிலே பணிபுரிந்திருக்கின்றனர். சிற்சில சமயங் களில் இவர்களுக்குள்ளே சச்சரவு ஏற்பட்டதையும் கல் வெட்டுகள் குறிக்கின்றன. தெய்வத்தின் முன்னர் இன்ன நேரத்தில் பதியிலார் ஆடவேண்டும், தளியிலார் எப் பொழுது ஆடவேண்டும், தேவரடியாள் எப்பொழுது ஆடவேண்டும் என்ற நியதி இவர்களுக்குள் இருந்தது. இதன் காரணமாக இவர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டு கோயிலில் இவர்கள் இரண்டு முறை வேலை நிறுத்தம் செய்ததை 15-ம் நூற்றாண்டைச் சார்ந்த திருவொற்றியூர் கல்வெட்டு கூறுகிறது.

கி. பி. 13-ம் நூற்றாண்டில் தென்னாற்காடு மாவட்டம் ஜம்பை கிராமத்தில் கோயிலில் அவ்வூர் தேவடியாள் பொற்றொழ்வி நாட்டிய மண்டபம் கட்ட அவளின் தம்பி ஆட்கொண்டான் என்பவன் தன் தலையைத் தானே அரிந்து கொண்டான். அதற்காக அவன் தம்பி அண்ணாமலை என்பவனுக்கு கோயில் தானத்தார் நிலம் அளித்தனர் (178/12).

## பொதுமகளிர்

கோயில்களிலே பணிபுரிந்த நாட்டிய மகளிரைத் தவிர பொது மகளிரைப் பற்றி கல்வெட்டுகளில் ஏதும் காணக் கிடைக்கவில்லை. சங்க இலக்கியங்கள் இவர்களது தன்மையையும், வஞ்சகத் தொழிலையும் தெளிவாக விளக்குகின்றன. "மான் நோக்கினை உடைய அழகு மிக்க மகளிர் விளக்கினை ஏற்றித் தம்மை அழகு செய்து நயப்பவர் எவருடனும் இன்பம் துய்ப்பர். அவர் தம்மை அழகும் மணமும் மிக்க இதழ்கள் சிறந்த கழுநீர் மாலைகளால் அலங்கரித்துக் கொண்டனர்: கூந்தலை விரித்துச் சந்தனத்தின் நறுமணத்தை ஏற்றுவர்; அகிற் புகையினால் ஆடைகளை மணம் பெறச் செய்வர்; நகரத்தின் ஆரவாரம் மிக்க அரவம் நீங்கிய பின் இன்பம் அயர்வர்: ஏழிசை பயிலப்படும் இனிமையான ஓசையை எழுப்பும் நரம்பினையுடைய யாழை எடுத்து இன்பமாகப் பாடுவர்; நறுமணம் வீசும் ஒண்மையும் தண்மையும் மிக்க பூங்கொத்துக்களைக் கூந்தலில் அணிந்து கொள்வர்; கைகளை அசைக்கும் போது அவர் வளைகள் மின்னும். நிலைகுலைந்து அணிகளைத் திருத்தி அமைப்பர்" (தமிழர் சால்பு - 240).

இப்பொதுமகளிரின் வஞ்சகத்தையும் தொழிலையும் அதே நூல் விரிவாக எடுத்துக் கூறும். "தூரத்திலிருந்து தம்மைத் தேடி வரும் இளமையும் செல்வமும் மிக்க

மைந்தரை மாயப்பொய் பல கூறி மயங்க வைப்பர். காதலும் ஆதரவும் உள்ளவர் போலக் காட்டி, நுண்பூண் ஆகம் வடுக்கொள முயங்கி, அவரின் வளத்தை வாங்கிக் கொள்வர். தேனை உண்டு பூவினைத் துறக்கும் வண்டினம் போலத் தம்மிடம் வந்த மைந்தரைத் துறந்து அவரை வருத்தும் இயல்பினர். ஆராய்ந்த பொன்னாற் செய்யப் பட்ட பிரகாசிக்கும் தொடியையும், பாசிழையையும் அணிந்த பொது மகளிரிடம் பழத்தினை நாடும் பறவைகள் போல செல்வரும் பிறரும் வருவர். தம்மைக் கண்டோ ருடைய நெஞ்சை வருத்தம் உறுவித்துப் பொருளைப் பறிக்கும் பண்பினர் இப்பொது மகளிர். இவர் தன்மையும் அழகும் உள்ள நீர்த்துறை மணலிலேயே ஆண்களுடன் சேர்ந்து ஆடுவர். தம்முடனுடைய ஆடவரை விட்டுச் சென்று தளிரையும், குவளை மொட்டுக்களையும் மாலை யாகத் தொடுப்பர். மீண்டும் தம் ஏமாற்றுத் தொழிலைத் தொடங்குவதற்குத் தம் இல்லங்களை நோக்கிப் பெயர்வர் (தமிழர் சால்பு - 240-41)

இவர்கள் பரத்தையர் என்றும், காவற்கணிகையர் என்றும், இராக்கடை வேசியர் என்றும் பூவிலை மடந்தை யர் என்றும் அழைக்கப்படுகின்றனர். வணிகர்களும், உழவர்களும், பிற உயர்குடிகளும் வசிக்கும் பகுதிகளிலே தனித் தெருக்களிலே இவர்கள் வாழ்ந்தனர் என்று சிலப் பதிகாரத்திலிருந்து அறிகிறோம். பூம்புகார் நகரத்தில் இம்மகளிர் பட்டினப்பாக்கத்தில் வாழ்ந்ததாக சிலம்பு கூறுகிறது.

## கலையே வாழ்வு

நாட்டிய மகளிரது வாழ்வைப் பொதுப்படையாக நோக்கும்போது கலைக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு சற்றேறக் குறைய இன்று வரை நாட்டியக் கலையை காத்தளித்த பெருமை இவர்களுக்கு உண்டு.

இவர்கள் அனைவரையும் பரத்தையர் என்றே இன்றுள்ள ளோர் கருதிவிடுதல் கூடாது. உயர்ந்த நோக்குடையோ ராக கற்புடைய மகளிராக கலைக்காகவே வாழ்ந்து, இறந்த ஆயிரக்கணக்கான பதியிலார்கள் இவர்க ளிடையே உண்டு.

கோயில்களில் தெய்வத்தின் திருமுன்பு பணிபுரிந்த தால் இவர்களது கலை அப்பழுக்கற்ற தெய்விகக் கலையாக வளர்ந்தது என்பதில் ஐயமில்லை.

வறுமையின் கொடுமையால் மனித இயல்பில் அவ்வப் போது ஏற்படும் சிறுமையால் உயர்நிலை குன்றி, உடல் விலை கூறி, பொது மகளிராக வாழ்ந்தோரும் இவர்களில் இருந்தது உண்டு. அன்றைய சமுதாயம் இவர்களைத் தகாதவர் என்று ஒதுக்கித் தள்ளாமல் மற்ற குடிகளுக் கிருந்த உரிமையும், உடைமையையும் இவர்களுக்கு அளித்த சமுதாயமாகத் திகழ்ந்தது.

# மேற்கோள் நூல்கள்


(1) தென்னிந்திய கல்வெட்டுகள்தொகுதிகள்

74/19 என்று இருந்தால் 19வது தொகுதியில் 74வது கல்வெட்டு என்று கொள்ளவேண்டும். கல்வெட்டு ஆண்டறிக்கைகள்.

(2) சங்க இலக்கியங்கள்: டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் பதிப்புகள்; சைவ சித்தாந்த சமாஜம் பதிப்பு; கழகம் பதிப்புகள்; மர்ரே ராஜம் பதிப்புகள்.

(3) தொல்காப்பியம் உரையுடன், எஸ். பவானந்தம் பிள்ளை பதிப்பு, சென்னை–1916.

(4) கலிங்கத்துப்பரணி.

(5) மூவர் உலா.

(6) நந்திக்கலம்பகம்.

(7) பாண்டிக்கோவை.

(8) பெரிய புராணம்.

(9) சிலப்பதிகாரம்.

(10) பாண்டியர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை–1967.

(11) பல்லவர் செப்பேடு முப்பது—தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை.

(12) வேளிர் வரலாறு—மு. இராகவ அய்யங்கார், சென்னை–1964,

(13) தமிழர் சால்பு—சு. விமலானந்தம். 1954.

V. R. R. Dikshitar — Studies in Tamil Literature and History — University of Madras-1936.

T. V. சதாசிவப் பண்டாரத்தார் — பிற்கால சோழர் சரித்திரம் — அண்ணாமலைப் பல்கலைக் கழகம்-1967.

அ. இ. பரந்தாமனார் — மதுரை நாயக்கர் வரலாறு சென்னை–1966.

T. V. Mahalingam — South Indian Polity — University of Madras-1967.

K. V. Subrahamanya Iyer — Historical Sketches of ancient Deccan.

N. Subrahmaniam — Sangam Polity, Madras-1966.

R. Gopalan — History of the Pallavas of Kanchi Madras-1928.

T. V. Mahalingam — Administrative and Social life under Vijayanagara, Madras-1940.

C. Minakshi — Administration and Social life under the Pallavas, Madras-1939.

K. A. Nilakanta Sastri — The Colas. Madras 1955.

K. K. Pillai — Suchindram Temple, Madras.

மற்றும் பல.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | சொல் | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 14 | கடந்து | கடைந்து |
| 11 | 16 | ராஷ்டிரகுலத்தில் கூட | ராஷ்டிரகூட குலத்தில் |
| 13 | 24 | ஆரிய | அறிய |
| 27 | 23 | சினிப்புலியும் | சினப்புலியும் |
| 27 | 24 | அணைத்துயிர் | அனைத்துயிர் |
| 27 | 25 | பணியனை | பணியணை |
| 45 | 21 | 462 | 362 |
| 50 | 8 | பாணணை | பாணனை |
| 68 | 6 | சாயல் | கேள்வி |
| 79 | 20 | 29 | 26 |
| 112 | 20 | வேவளிர் | வேளிர் |
| 113 | 9 | முடி சூடுவதற் கன்றே | முடி சூடுவதற் கென்றே |
| 128 | 2 | புறம் | அகம் |
| 128 | 16 | வில்லை | விரலை |
| 130 | 15 | விலையாடுவர் | விளையாடுவர் |
| 144 | 1 | குடபுலிவியனார் | குடபுலவியனார் |
| 145 | 3 | யாணை | யானை |
| 148 | உள் தலைப்பு | திருத்தல் | திருத்துதல் |
| 150 | 11 | எள்று | என்று |
| 150 | 12 | இனப்பண் படுத்தான் | இவ்வைம்பாற் படுத்தான் |

| பக்கம் | வரி | சொல் | திருத்தம் |
|---|---|---|---|
| 154 | 25 | கல்வெட்டி | கால்வெட்டி |
| 175 | 9 | 60 | 61 |
| 166 | 11 | சித்திரையானி | சித்திரையாளி |
| 180 | 4 | கவந்தரு | கலந்தரு |
| 180 | 5 | பெயற்மாக்கள் | பெயர்மாக்கள் |
| 204 | 30 | கணம் | கனம் |
| 205 | 16 | வைகாணச | வைகானச |
| 209 | 30 | பானினி | பாணினி |
| 238 | 2 | மனீ | மணீ |



# வாசகர் வட்டம்

## 1965-ஆம் ஆண்டுப் பிரசுரங்கள்

| | ரூ. |
|---|---|
| சோக்ரதர் & ஆத்ம சிந்தனை—ராஜாஜி | 5.25 |
| புத்ர I—லா. ச. ராமாமிருதம் | 5.00 |
| விஞ்ஞானத்தின் புதிய எல்லைகள் —தொகுப்பு | 5.00 |

## 1966-ஆம் ஆண்டுப் பிரசுரங்கள்

| | |
|---|---|
| மாயத்தாகம்—ஆர். ஷண்முகசுந்தரம் | 5.00 |
| மாஸ்கோ டயரி—கே. பி. எஸ். மேனன் | 5.00 |
| பிரயாண இலக்கியம்—தொகுப்பு | 5.00 |
| அண்டை வீட்டார்—பி. கேசவ தேவ் | 6.00 |
| பூமி எனும் கிரகம்—ஜார்ஜ் கேமாவ் | 5.00 |

## 1967-ஆம் ஆண்டுப் பிரசுரங்கள்

| | |
|---|---|
| இரு நாடகங்கள்—எஸ். பி. மணி & ஆர்வி | 6.00 |
| எல்வின் கண்ட பழங்குடி மக்கள் —வெரியர் எல்வின் | 5.00 |
| மறு கதைகள்—தொகுப்பு | 6.00 |
| நினைவுகள்—டாக்டர் கே. எஸ். சஞ்சீவி | 5.00 |
| அற்ப ஜீவி—ஆர். விஸ்வநாத சாஸ்திரி | 5.00 |
| வ. ரா. வாசகம்—வ. ரா. | 5.50 |

## 1968-ஆம் ஆண்டுப் பிரசுரங்கள்

| | |
|---|---|
| இதோ தேவன்—'தேவன்' | 5.00 |
| புன்னகை பூத்த நாடு—பேராசிரியர் எம். ஆர். பாலகிருஷ்ணன் | 6.00 |
| அறுசுவை—6 குறுநாவல்கள் | 7.00 |
| அக்கரை இலக்கியம்—இலங்கை, மலேசியா எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் | 11.00 |
| ஆத்மாவின் ராகங்கள் —நா. பார்த்தசாரதி | 6.00 |
| சிறிது வெளிச்சம்—கு. ப. ராஜகோபாலன் | 7.00 |

---

BOOKVENTURE

# வாசகர் வட்டம்

## சமீப வெளியீடு

| | | ரூ. |
|---|---|---|
| கடலோடி : | நரசய்யா | 5.25 |
| இந்திய ஓவியம் : | மே. சு. இராமசுவாமி | 6.00 |
| அறிவின் அறுவடை : | லெஸ்டர் ஆர். ப்ரௌன் (தமிழாக்கம் : சிட்டி) | 6.00 |
| பள்ளிகொண்டபுரம் : | நீல. பத்மநாபன் | 6.75 |

## 1969-ஆம் ஆண்டுப் பிரசுரங்கள்

| | | |
|---|---|---|
| மண்ணில் தெரியுது வானம் : | ந. சிதம்பர சுப்பிரமணியன் | 7.50 |
| பூனைக்கண் : | ஸ்ரீமதி திரிவேணி | 8.00 |
| சாயாவனம் : | சா. கந்தசாமி | 5.25 |
| குயிலின் சுருதி : | ந. பிச்சமூர்த்தி | 5.00 |
| வேரும் விழுதும் : | க. சுப்ரமணியன் | 5.00 |
| அபிதா : | லா. ச. ராமாமிருதம் | 5.00 |

(அங்கத்தினர்களுக்கு மட்டும் தபாற்செலவு இலவசம்)

## சிறப்பு நூல்

**நடந்தாய்; வாழி, காவேரி! :**

தி. ஜானகிராமன் & சிட்டி எழுதிய நூல்
கலாசாகரம் ராஜகோபாலின் சித்திரங்களும் ஏராளமான
புகைப்படங்களும் அடங்கியது. விலை ரூ. 10/-
(அங்கத்தினர்களுக்குச் சலுகை விலை ரூ. 8/-)
(தபாற்செலவு கூடுதல்)

## இதர நூல்கள்

| | | ரூ. |
|---|---|---|
| மோகமுள் (நாவல்) : | தி. ஜானகிராமன் | 15.00 |
| உதயநிழல் (கவிதைகள்) : | எஸ். வைத்தீஸ்வரன் | 3.00 |
| வாழ்விலே ஒருமுறை : | அசோகமித்திரன் | 5.00 |
| இன்னும் சில நாட்கள் (சிறுகதைத் தொகுப்பு) | ,, | 4.00 |

(தபாற்செலவு கூடுதல்)

---

BOOKVENTURE

14, Thanikachalam Chetty Road ★ T.Nagar ★ Madras-17